
# சாயி மார்க்கம்

ஆகஸ்ட் - டிசம்பர் 2017




விசேட பதிப்பு

சத்திய சாயி சர்வதேச நிறுவனம் ~ ஸ்ரீலங்கா

தமிழ் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வ புரம் கிராமத்தில் மரநடுகை, மரககன்று விநியோகம்



வீடமைப்பு சேவைகள் - கட்டுடை, பருத்தித்துறை, செல்வபுரம்



இன்பச் சோலையில் கிராம சேவை



கற்கோவளம்- திருமால்புரம் பகுதியில் வெள்ள நிவாரணப் பணிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சாயி மார்க்கம்
# Sai Markam


மலர்: 24
இதழ்: 59

ஆகஸ்ட்
டிசம்பர்
2017


## உள்ளே......


| | |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 02 |
| பொன் விழா உரைகள் (4) | 05 |
| (விசேட அதிதி திரு. வி. விஜயகிருஸ்ணன்) | |
| சேவாதள பயிற்சி முகாம் உரைகள் | 39 |
| பாலவிகாஸ் குருமாருக்கான வலுவூட்டும் பயிற்சி | 49 |
| நவராத்திரி | 52 |
| நவராத்திரி புதிய சிந்தனை | 56 |
| பாலவிகாஸ் மாணவனின் உரைகளில் ஒன்று | 57 |
| எட்டி என்பவனின் திருப்புமுனை | 58 |
| தீபாவளி | 59 |
| வேத உண்மைகளை நிரூபிக்கும் அமெரிக்கா | 60 |
| விதியை மாற்று | 62 |
| நானிருக்கப் பயமேன் | 64 |
| ஆத்ம விசாரணை | 66 |
| அற்புதங்கள் நிகழ்த்தி எம்மை காக்கும் | 69 |
| அனுபவ பகிர்வு | 70 |
| கடமை கட்டுப்பாடு பக்தி | 71 |
| கட்டுப்பாடு | 82 |
| பூரண சரணாகதி | 84 |
| பகவானின் அன்புக் கடிதம் | 85 |
| 33 வருடத்திற்கு முன் | 87 |
| தலைமை அதிகாரியா ? மாமனிதனா? | 89 |
| வற்றாப்பளை சாயி நிலையம் | 90 |
| நிறுவனச் செய்திகள் | 91 |



**ஆசிரியர்:**
Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2832 / 5580
Email:moothy1941@yahoo.com

**துணை ஆசிரியர்:**
திரு.S.R. சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி
தாவடி, கொக்குவில்
தொ.பே - 021 222 5442



இலங்கையில் தனிப்பிரதி ரூபா 60.00
வருடச் சந்தா ரூபா 240.00 (2 பிரதிகள்)

வெளிநாடு:
வருடச் சந்தா 15 அமெரிக்க டொலர்

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்,
சாயி மார்க்கம்,
659, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**காசோலை:**
Sai Markam
Sathya Sai Seva Organisation (NZ)
A/C No: 016010004771
**SWIFT CODE: HBLILKLXXXX**
Hatton National Bank
Jaffna, Sri Lanka.


**ஒரே ஒரு மதம் அது அன்பென்னும் மதம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய தலையங்கம்

# மரணத்தின் மர்மம்

புனரபி ஜனனம், புனரபி மரணம்
புனரபி ஜனனி ஜாதரே ஷயனம்
இஹ சம்சாரே பஹுதுஸ்தாரே
கிருபையா அபாரே பாஹி முராரே

- பஜகோவிந்தம்

திரும்பவும் பிறப்பு, திரும்பவும் இறப்பு திரும்பவும் தாயின் வயிற்றில் வளர்ப்பு மாறிமாறி வரும் சம்சார சாகரம் கடப்பதற்கரிது.

ஓ முராரே எல்லையில்லா நின் கருணையினால் இதனிலிருந்து காப்பாற்றுவாயே.

பிறப்பின் பின் மரணம். மரணத்தின் பின் பிறப்பு. பிறப்பிற்கு முன்பும் இறப்பிற்குப் பின்னும் ஏதோ ஒன்று உள்ளதா? இக் கேள்விக்குப் பல துறையினர் ஆராய்ச்சி செய்துள்ளார்கள். இந்த மர்மத்தை ஓரளவு விளங்கிக் கொண்டால் அது எமக்கு மிகவும் பயனளிக்கும்.

இறப்பு என்றால் என்ன? மனிதனின் மூன்று முக்கிய அவயங் களான மூளை, சுவாசம், இருதயம் செயலிழந்ததும், இறப்பு நிகழ்ந்து விட்டதென நாம் ஏற்றுக் கொள்கின்றோம். விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியினால் அதிதீவிர சிகிச்சை, செயற்கைச் சுவாசம் அளித்து உடலின் இறப்பை நீடிக்கிறார்கள். உயிர் பிரிந்த பின்பும் சில உடற் கலன்கள் சில மணிநேரம் தொழிற்படும். இந்த இடைவேளையில்தான் அவயங்கள் அவயமாற்றுச் சிகிச்சைக்காக எடுக்கப்படுகின்றன. முழுமையாகச் செயலிழப்பு ஏற்பட்டதும் உடல் சிதையத் தொடங்குகிறது. ஏதோ ஒன்று உடலைவிட்டுப் பிரிந்தது. அது எது? அதற்கு இறப்பு இல்லையா? அதன் பயணம் என்ன? என்பதைப் பற்றிச் சிறிது சிந்திப்போமாக.



பகவத் கீதையில் கிருஷ்ண பரமாத்மா போரிடத் தயங்கிய அர்ச்சுனனுக்கு மரணத்தைப் பற்றிப் போதித்தார். இதை அடிப்படையாக வைத்து கவிஞர் கண்ணதாசன் பின்வரும் பாடலை இயற்றியுள்ளார்.

“மரணத்தை எண்ணி கலங்கிடும் விஜயா
மரணத்தின் தன்மை சொல்வேன், மானிடர் ஆன்மா
மரணம் எய்தாது மறுபடி பிறந்திடும்.
மேனியைக் கொல்வாய், மேனியைக் கொல்வாய்
வீரத்தில் அதுவும் ஒன்றே.
நீ விட்டு விட்டாலும், அவர்களின் மேனி
வெந்துதான் தீரும் ஒரு நாள்
என்னை அறிந்தாய், எல்லா உயிரும்
எனதென்றும் அறிந்து கொண்டாய்...
மன்னரும் நானே மக்களும் நானே
மரம், செடி, கொடியும் நானே.
சொல்பவன் கண்ணன், கொல்பவன் கண்ணன்
துணிந்து நில் தர்மம் வாழ
புண்ணியம் இதுவே என்று இவ்வுலகம் சொன்னால்
அந்தப் புண்ணியம் கண்ணனுக்கே
போற்றுவார் போற்றலும் தூற்றுவர் தூற்றலும்
போகட்டும் கண்ணனுக்கே
கண்ணனே கொலை செய்கின்றான்.
காண்டீபம் எழுக நின்கை வல்லமை எழுக”

மரணம் தவிர்க்க முடியாதது. எல்லாம் இறைவனுக்கே என்ற மனப்பாங்குடன் கடமையைச் செய்தால் கர்மம் கர்மயோகமாக மாறிவிடும். அர்ச்சுனன் கீதா உபதேசம் பெற்ற பின்பு. ஓர் தயக்கமுமின்றி தர்மத்தை நிலைநாட்ட உற்சாகத்துடன் போரிட்டான்.

மனிதனில் மூன்று உள்ளன. அவையாவன உடல், உளம் (மனம்), ஆன்மா. ஆன்மாவின் ஆலயமே உடம்பு. மரணத்தின் போது ஆன்மா மனதுடன் உடலைவிட்டு நீங்குகிறது. ஆன்மாவைச் சுற்றி ஐந்து கோசங்கள் உள்ளன என்று வேதம் சொல்கிறது. அவையாவன, அன்னமய கோசம் (உடம்பு), பிராணமயகோசம் (உயிர்), மனோமயகோசம் (மனம்), விக்ஞானமய கோசம் (புத்தி), ஆனந்தமய கோசம் ஆகியவையேயாகும். மரணத்தின்போது பிராமணமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோசம் மனோமய கோசத்தினுள் மறைகிறது. உடல் சவம் ஆகின்றது. அன்னமய கோசத்தைவிட ஏனைய கோசங்களுடன் ஆன்மா வெளியேறுகின்றது. பின்பு என்ன நிகழ்கின்றதைப் பற்றி பலர் ஆராய்ச்சி செய்துள்ளார்கள். சில ஆன்மாக்கள் வெளியேறி சில நிமிடங்களுக்குப் பின்பு அதே உடலில் புகுந்து விடுகிறது. மீள உயிர்ப்பு அடைந்தவர். தமக்கு நடந்ததைத் தெளிவாகச் சொல்லியுள்ளார்கள். இதைத்தான் நாம் உடலிலிருந்து வெளியேறிய அனுபவம் (OUT of Body Experience OBE) என்று சொல்லுகிறோம். இதில்வைத்திய நிபுணர்களும் அடங்குவர். இவர்களின் அனுபவத்திலிருந்து ஆன்மாவின் அடுத்தநிலையைப் பற்றி ஓரளவு அறியலாம்.


இந்த அனுபவத்தைக் கூறிய அனைவரும் உடலைவிட்டேறிய நிலை, ஒரு மிகவும் ஆனந்தமான நிலையாதலால் திரும்பவும் உடலுக்குள் புகுவதை விரும்பாமல் இருந்தபோது ஏதோ ஒரு சக்தியின் உந்துதலால் திரும்பவும் உடலுக்குள் புகுந்ததாகக் கூறியுள்ளார்கள்.

இன்னும் சிலர் ஆவியுலகத் தொடர்பை ஏற்படுத்தி ஆவிகளிடமிருந்து சில அனுபவங்களை அறிந்துள்ளார்கள். ஆவிகள் தங்களை அறிமுகம் செய்து தங்களின் உற்றார், உறவினர்க்குச் செய்தி அனுப்புவதுடன் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் பதில் கொடுத்துள்ளார்கள். இவற்றை நூல்களாக வெளியிட்டுள்ளார்கள். இதில் ஆன்மா அழிவதில்லையென்பதை உறுதி செய்துள்ளார்கள். மேலும் மரணிக்கும்பொழுது மரணித்த உறவினர்களின் ஆவி வந்து கூட்டிச் செல்வதாயும் எல்லாம் ஒளிமயமென்றும் அங்கே ஆன்மீக மேம்பாட்டிற்கு வழிப்படுத்துவோரும் உள்ளார்களென்றும் அறிவித்துள்ளார்கள். ஆன்மாக்கள் தங்கள் ஆசைகள், கர்மவினைக்கேற்ப ஒவ்வொரு நிலையில் சஞ்சரிக்கிறார்கள் என்றும் சொல்லியுள்ளார்கள். அங்கு தங்கியிருக்கும் காலம் மிகவும் குறுகியதாகவும் மிகவும் நீண்டதாகவும் இருக்கலாம். அங்கே துன்பமே இல்லையென்றும் நினைத்ததைப் பெறலாமென்றும் சொல்லியுள்ளார்கள். மற்றைய ஆவிகளுடன் எண்ணம் மூலமாக உடனே தொடர்பு கொள்ளலாம். இடத்திற்கு இடம் தடைகளுடாகவும் செல்லலாமென்றும் சொல்லியுள்ளார்கள். ஆசைகள் இல்லாவிட்டால் அதி உச்ச நிலையை அடையலாம் என்றும் ஆசைகள் இருந்தால் மீண்டும் பூமியில் பிறவி எடுக்கவேண்டுமென்றும் கூறியுள்ளார்கள்.

மறுபிறப்பை இந்து சமயம், புத்த சமயம், சமண சமயம், சீக்கிய சமயம் ஆகியவை ஏற்றுக்கொண்டாலும் யூத சமயம், கிறிஸ்தவ சமயம் இஸ்லாமிய சமயம் ஏற்றுக் கொள்ள வில்லை. மறுபிறப்பு நிகழ்வதை பலவிதமாக உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இதில் முன்னைய பிறப்பும் அடங்கியுள்ளது. இக் கட்டுரையில் இதுவரை கூறப்பட்ட ஆதாரங்களுடன் அறிதுயில் நிலை (Hypnosis) ஆராய்ச்சிகள், சில சிறுபிள்ளைகள் தங்களின் முன்பிறப்பை கூறியுள்ள வையும், ஆன்மீக மகான்கள் கூறியதும், வேதங்கள் சமய நூல்கள் புராணம், இதிகாசங்களும் மறுபிறப்பை உறுதி செய்துள்ளன.

இச் சந்தர்ப்பத்தில் நச்சி கேத்தனுக்கு யமராஜன் சொன்னதை கதோபனிடத்தில் படிக்கலாம். நச்சிகேத்தன் யமலோகத்தில் மூன்று நாள்கள் வரவேற்பின்றிக் கழித்துப் பின் யமராஜனைச் சந்தித்தார். இதற்காக யமராஜன் மன்னிப்புக் கேட்டு மூன்று வரங்கள் கேட்கும்படி நச்சிகேத்தனுக்கு சொன்னார். நச்சிகேத்தன் மூன்றாவது வரமாக மரணத்திற்குப் பிறகு என்ன என்று தெளிவுபடுத்துமாறு கேட்டார். யமராஜன் இக் கேள்வியைத் தவிர்க்க எவ்வளவோ முயற்சித்தும் முடியவில்லை. கடைசியில் மரணத்தைப் பற்றி உபதேசித்தார். உபதேசத்தின் சாரம் பின்வருமாறு,

மனிதனுக்கு இரண்டு பாதைகள் உள்ளன. ஒன்று நல்ல பாதை (சிறேய), மற்றையது சௌகரியமான பாதை. (பிறேய). நல்ல பாதை ஞானத்தையும் முக்தியையும் கொடுக்கும். மற்றைய பாதை மீண்டும் மீண்டும் பிறக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தத்தையே கொடுக்கும். மனிதர்களில் அனேகர் மூடர்கள். இரண்டாவது பாதையையே விரும்புகிறார்கள். சில புத்திசாலிகளே முதலாவது பாதையைத் தெரிவு செய்கிறார்கள். யமராஜன் மேலும், ஆத்ம வித்தியாவைப் போதித்தான்.

ஆத்மா அழிவில்லாதது. ஜோதி மயமானது, ஓம்காரம் (பிரணவமே) அதன் ஒலி. அதன் நிலை நித்திய ஆனந்தம். அது ஒன்றாலும் பாதிக்கப்படாமல் சாட்சியாகவே இருப்பது. புலன்களையும் இச்சைகளையும் கட்டுப்படுத்தி மனதில் உள் வாங்கி மனதைப் புத்தியில் சங்க மிக்க வேண்டும். புத்தி பிரபஞ்சப் பேருணர்வுடன் சங்கமிக்கவேண்டும். முழுமையான பற்றற்ற நிலையே முக்திக்கு வழி.

**மரணம் என்பது அழிவல்ல. ஒரு மாற்றமேயாகும்.** உடல் பல மாற்றங்கள் அடைந்துவிட்டு (குழந்தை, சிறுவன், இளைஞன், முதியோன்) கடைசியில் விடப்பட்டு ஐம்பூதங்களுடன் கலந்து விடுகின்றது. ஆன்மா, மனம், வாசனைகளுடன் இன்னொரு உடலைத் தயாரிக்கிறது. இறுதியில் ஆன்மாவும் பரமாத்மாவுடன் கலக்க வேண்டும். ஆன்மா மரணத்தின்பின் எந்த நிலையை அடையும் என்பது மரணிக்கும் தறுவாயில் என்ன எண்ணம் தோன்றியதோ அதே பெரும்பாலும் நிர்ணயிக்கும். ஆகவேதான் நாம் எப்போதும் இறை சிந்தனையில் இருக்க வேண்டும். இதற்கு நாம் வாழும் பொழுது தொடர்ச்சியான நாமஸ் மரணையில் நிலைத்திருக்கவேண்டும்.

Advent of Love
SRI SATHYA SAI

மகா பாரதத்தில் பாண்டவர்கள் வனவாசத்தின்போது தாகம் தீர்க்க ஓர் குளக்கரையைக் கண்டதும் சகோதரர்கள் ஒவ்வொருவராக நீர் எடுக்கப்போய் திரும்பி வரவில்லை. குளக்கரையில் யட்சன் என்பவன் அன்னம் உருவில் இருந்து சாபமிட்டுள்ளான். காத்திருந்தும் சகோதரர்கள் வராததால் தர்மராஜன் போனார். அங்கே சகோதரர்கள் பிணமாகக் கிடப்பதைக் கண்டார். யட்சன், தான் கேட்கும் கேள்விக்குத் தகுந்த பதில் கொடுத்தால் குளத்தின் நீரையும் எடுக்க அனுமதியும் கொடுத்து சகோதரர்களை மீண்டும் உயிர்ப்பித்துத் தருவதாக சொன்னான்.

**கேள்வி :**
உலகில் மிகவும் அற்புதமான செய்தி எது?

**பதில் :**
உயிர்களை மரணம் ஒவ்வொரு நொடியும் கொண்டு செல்கிறது. இதைப் பார்த்தும் தங்களுக்கு இது நடக்குமே என்பதைப் பற்றி சிந்திக்காமல் பலர் இருப்பதுதான் புதுமையானது எனக் கூறினார்.

யட்சன் திருப்தியடைந்து சகோதர்களை உயிர்ப்பித்தான். தான் தர்மத்தின் உருவமே என்று கூறி மறைந்தான்.

ஓர் ஆவியின் உற்றார், உறவினர்களின் எண்ணம்,மனத்திருப்தி, நன்றியுணர்வு, நம்பிக்கை, தியாகம் ஆகியவை அந்த ஆவிக்கும் பெரும் ஆனந்தத்தை அளிக்கும். உற்றார், உறவினர் துன்பப்பட்டால் ஆவியும் துன்புறும். ஆகவே, நாம் துயரில் துவளாமல் ஆவியின் சாந்திக்காகச் செயற்படுதல் மிகவும் நன்று.

இயற்கை மரணம் ஒரு மகிழ்ச்சியான நிகழ்வேயாகும்.

சோஹம்! சோஹம்!
ஜெய் சாயிராம்.

ஆசிரியர்


உசாத்துணை நூல்கள்:
1. உபநிடதவாஹினி பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா
2. Life Beyond Death Swami Abhe dananda
3. Life after Death Neville Randall
4. Proof of Heaven Dr.Eben Alexander
5. Philosophy of Life and Death M.V. Kamath




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா நிகழ்வு

சத்தியசாயி சேவா நிலையம் யாழ்ப்பாணம், 1967ஆம் ஆண்டு இயங்கத்தொடங்கியது. இவ்வாண்டு (2017) அதன் பொன்விழா ஆண்டாகும். அடியார்கள் பொன்விழாவை 24ஆம் 25ஆம் திகதி ஜுன் மாதம் கொண்டாடினார்கள். ஸ்ரீலங்காவிலுள்ள பல மாவட்டங் களிலிருந்தும் பக்தர்கள் வந்தார்கள்.


விசேட அதிதியாக ஸ்ரீ.வி.விஜேகிருஷ்ணன் அவர்கள் இந்தியாவிலுள்ள தமிழ்நாட்டிலிருந்து வந்தார்கள். சத்திய சாயி சர்வதேச நிறுவனம் ஸ்ரீலங்காவின் நிர்வாகிகள் பலர் வந்தார்கள்.

ஸ்ரீ.வி.விஜேகிருஷ்ணன் அவர்கள் சுவாமியின் கல்லூரியில் பயின்று (1988-1990) சுவாமியின் உயர்நிலைக்கல்வி நிறுவனத்தில் (Sri Sathya Sai Institute of Higher Learning) 1993 ஆம் ஆண்டு B.Com பட்டம் பெற்றார். பின்பு சுவாமியின் பல்கலைக் கழகத்திலேயே 1995ஆம் ஆண்டு MBA பட்டமும் பெற்றார். அவர் தற்போது தமிழ்நாடு மாநில இளைஞர் அணித் தலைவராகவும் பாலவிகாஸ் பயிற்சி யாளருமாகப் பணிபுரிகிறார். இவரை சத்தியசாயி நிறுவனத்தின் மேலதிகாரிகளே இங்கு வருவதற்கு தெரிவு செய்தார்கள். அவரின் வருகை சுவாமியின் விசேட ஆசீர்வாதமாகவே இருந்தது. அவர் பொன்விழா நிகழ்வில் ஆற்றிய உரைகள் அப்படியே (தன்மையில்) பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## திரு. விஜயகிருஷ்ணன் அவர்களது உரை
## - 24.06.2017 காலை



எல்லோருக்கும் சாய்ராம். கடந்த இரண்டு தினங்களாக இலங்கையில் இருக்கிறேன். என்னுடைய தமிழ் உங்களுக்கு வித்தியாசமாக இருக்கலாம். உங்கள் தமிழ் எனக்கு தெரியாததால் என் தமிழிலேயே பேசுகின்றேன். நான் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நிறைய பக்தர்களை சந்தித்தேன். இவர்களை சந்தித்தபோது பாகவதத்தில் ஒரு கதை ஞாபகத்துக்கு வந்தது. கிருஷ்ணர் பிருந்தாவனத்திலிருந்து சென்று மதுரையில் நீண்ட நாள்கள் தங்கியபின் கிருஷ்ணரின் நெருங்கிய தோழரும் பக்தருமாக விளங்கியவரும் எப்போதும் கிருஷ்ணருடன் ஆன்மீகத் தொடர்பு கொண்டவருமான உத்தவர் என்பவரை கோகுலத்துக்கு கோபிகைகளை சந்தித்துவர கிருஷ்ணர் அனுப்ப தீர்மானித்தார். கோபிகைகளுக்கு நிறைய ஆன்மீக விடயங்களை ஒரு மடலாக எழுதி உத்தவரிடம் கொடுத்து இதனை எடுத்துச்சென்று கோபிகைகளுக்கு விளக்குமாறு கூறினார். யாதவ குலத்தைச் சேர்ந்த எளிய கிராமப்புற மக்களான கோபியருக்கு இந்த பெரும் ஆன்மீகதத்துவங்களை விளக்கவேண்டும் என்று நினைத்தபடி உத்தவர் கோகுலத்துக்கு வருகிறார். கிருஷ்ணர் ஒருவரை அனுப்பியுள்ளார் என்று அறிந்தவுடன் கோபிகைகள் எல்லோரும் வந்து கூடிவிட்டனர். உடனே உத்தவர் கிருஷ்ணர் அனுப்பிய மடலை விரித்து அதிலிருந்த ஆன்மீக தத்துவங்களை விளக்க ஆரம்பித்தார். சிறிது நேரத்தில் கோபிகைகளுக்கு பொறுக்க முடிய வில்லை. கிருஷ்ணர் எப்படி இருக்கிறார் என்று கேட்க ஆரம்பித்து விட்டனர்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணர் நன்றாக உள்ளார் என்று சொன்னவுடன் அது போதும், அவர் நன்றாக இருந்தால் நாங்களும் சந்தோசமாக இருப்போம் என்று கூறி கிருஷ்ணருடைய நினைவில் அமைதியடைந்தனர். அதைப் பார்த்த உத்தவர் அவர்களுடைய காலில் சாஷ்டாங்கமாக விழுந்துவிட்டார். உண்மையில் உத்தவர் ஒரு ஞானி. மகாபாரதப்போரில் அவர் கலந்து கொள்ளவில்லை. அவர் கிருஷ்ணருடன் நடத்திய உரையாடல்கள் "உத்தவ கீதை" என்று தனியாக வகுக்கப் பட்டுள்ளன.. அப்படியான உயர்ந்த ஒரு ஆத்மாவான உத்தவர் கோபிகைகளிடம் கண்டது பக்தி மற்றும் இறைவன்மீது கொண்ட பேரன்பு. நாம் இறைவன் மீது கொள்ளும் பேரன்பானது எமக்கு எல்லா வற்றையுமே அளித்துவிடும். இந்த அனுபவம் தான் நான் இப்போது அனுபவிக்கிறேன். அதாவது இங்கு பல பக்தர்களுடைய அனுபவங்களைக் கேட்டேன். எல்லோரும் சுவாமியை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கரையை வாயில் போட்டபின் சுவை என்றால் என்ன என்று நான் சொல்லவேண்டியது இல்லை. இங்கு பஜனை நன்றாகப் பாடி எல்லோரும் இறைநினைவில் நிறைந்து உள்ளீர்கள். இந்நேரம் எனக்குக் கொடுக்கப்பட்ட கடமையின் நிமித்தமாக சிறிது நேரம் சுவாமியையும் அவருடைய போதனை களையும் சிறிது சிந்திக்கலாம்.

பழைய காலத்தில் ஒவ்வொரு வீடுகளிலும் கரி சேர்த்து வைத்திருப்பார்கள். நீண்ட நாள்கள்




அதனை சேமித்து வைக்கும் போது அது ஈரப்பற்று அடைந்துவிடும். அப்படியானால் அதனை நெருப்பு உருவாக்க பயன் படுத்தமுடியாது. அதற்காக அதனை வெயிலில் அடிக்கடி காயவைப்பார்கள். அதைப்போல எப்போதும் உலகியலிலேயே உழன்று கொண்டிருக்கும் எமது மனதை அடிக்கடி இறை சிந்தனையில் ஈடுபடுத்தி வந்தால் மட்டுமே மனம் நினைத்தவுடன் இறை சிந்தனையில் ஈடுபட ஆயத்தமாக இருக்கும். இங்கே நான் உட்கார்ந்திருக்கும் போது உங்களுடைய நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டிருந்தேன். மத்திய சபைத்தலைவர் AUDIO வை இயக்கிக் கொண்டிருந்தார். பஜனை நடைபெற்றுக்கொண்டு இருக்கும்போது ஒரு ஒலிவாங்கி செயலற்றுவிட மற்றைய பாடகர்கள் அதனை பஜனைக்கு ஊறு விளைவிக்காதவாறு மாற்றிக்கொண்டிருந்தனர். பாலவிகாஸ் குழந்தைகளின் நடனம் ஆரம்பிக்கும்போது CD வேலை செய்யவில்லை. அக் குழந்தைகள் மேடையிலிருந்து கொடுக்கும் Signal ஐ CD இயக்குபவர் புரிந்துகொள்ளவில்லை. இவற்றை யெல்லாம் நாம் செய்துள்ளோம் என்பதுதான் நினைவுக்கு வருகிறது.


கிருஷ்ணமூர்த்தி வெங்கட்ராமன் என்பவர் நான் மற்றும் என்னுடன் MBA படித்த சில மாணவர்கள் என ஒரு குழு மாணவர்கள் சுவாமி முன்னிலையில் ஒரு கலந்துரையாடல் நிகழ்வு ஒன்றை நடத்த தீர்மானித்தோம். சுவாமியின் பல்கலைக்கழகத்தில் MBA படிப்பு ஆரம்பித்து 20 வருட நிறைவை ஒட்டி இந் நிகழ்வு குல்வந்த் மண்டபத்தில் நடைபெற இருந்தது. எமது குழுவினரோ படிப்பை முடித்துவிட்டு வெவ்வேறு நாடுகளில் வேலை செய்து வந்தனர். எல்லோரும் மின்னஞ்சல் ஊடாக தொடர்புகொண்டு நிகழ்வை எப்படிச் செய்வது என தீர்மானித்தோம். ஆனால் நிகழ்வு எல்லோரும் இந்தியா வரும்வரை எதுவுமே சரியாக தீர்மானமாகவில்லை. நிகழ்வு ஆரம்பமாக முன் நாம் எமது நிகழ்வுக்காக சுவாமியின் உரைகளில் இருந்து சில பகுதிகளை CD இல் ஏற்றி அதனை அடிப்படையாக வைத்துக்கொண்டு எமது அனுபவங்களை பகிர்வதாக திட்டமிட்டுக் கொண்டோம். 20000 பேர் அமரக்கூடிய குல்வந்த் மண்டபத்தில் மக்களும் சுவாமிக்கும் முன்பாக எமது நிகழ்வு ஆரம்பமாகியது. அப்போது Audio இயக்குபவர் மண்டபத்தின் உட்புறமிருந்து வெளியேவந்து சுவாமிக்குப் பின்னால் நின்று Audio இயங்கவில்லை என்று சைகை காட்டினார். எமக்கு இப்போது எதிலிருந்து ஆரம்பிப்பது என்று புரியவில்லை. சுவாமிக்கு தாமதம் பிடிக்காத விடயம். எந்த நிகழ்வு என்றாலும் அதற்குரிய நேரத்தில் ஒழுங்கு முறையாக ஒரு நிமிட தாமதமுமின்றி நடக்கவேண்டும் என எதிர்பார்ப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அந்நிலையில் சுவாமியின் உரைகள் அடங்கிய CD ஐ அடிப்படையாக வைத்தே எமது அனுபவப்பகிர்வு நிகழ்வை ஒழுங்கு படுத்தியிருந்ததால் எமக்கு என்ன செய்வதென புரியாத நிலையில் ஏதோ எமக்கு தெரிந்த விடயங்களைக்கூறி அந்த நிகழ்வை நிறைவு செய்தோம். நாங்கள் அந் நிகழ்வை எதிர்பார்த்த அளவுக்கு செய்வில்லை என்பது எமக்குத் தெரியும். ஆனால் சுவாமி நிகழ்வு முடிந்தவுடன் எமது குழுவிலிருந்த 6 பேருக்கும் ஜூஸ் கொடுக்கும்படி கூற எமக்கு ஜூஸ் பரிமாறப்பட்டது. பின் தர்ஷன் நிறைவுபெற்ற பின் எம்மை சந்தித்தவர்கள் நிகழ்வை மிகவும் பாராட்டினார்கள். அப்போது தான் எமக்குப் புரிந்தது நாம் நன்றாக செய்தோமா இல்லையா என்பதல்ல. இறைவன் அதை ஏற்றுக்கொண்டு பாராட்டினால் உலகமே பாராட்டும். நாம் ஆத்மார்த்தமாக ஒரு விடயத்தை செய்யும் போது சுவாமியினுடைய அங்கீகாரம் கிடைத்து விட்டால் உலகத்தினுடைய அங்கீகாரமும் கிடைத்துவிடும்.

சுவாமியிடம் ஒரு வேலை செய்யும்போது அதை சரியாக செய்யவேண்டும் என சுவாமி எதிர்பார்ப்பார். அதற்கு உதாரணமாக ஒரு நிகழ்வு சொல்கிறேன். அதிருத்ர மகா யாகம் என்பது ஸ்ரீருத்திரத்தினை 11 ஹோமகுண்டங்களில் 11 தடவை 11 நாள் 11 வேதவிற்பன்னர்களால் செய்யப்படும் யாகம். 1221 தடவைகள் ஸ்ரீருத்திரம் சொல்லப்படும். சைவசமயத்தில் வேதங்கள் என்பவற்றில் அதி உச்சம் ஸ்ரீருத்திரமாகும். அந்த ஸ்ரீருத்திரத்தின் உச்சம் தான் அதிருத்ர மகாயக்ஞம். இது சைவசமயத்தில் சடங்குமுறையாக செய்யக்கூடிய உயரிய சடங்கு. இச் சடங்கு புட்டபர்த்தியில் சுவாமிக்கு முன்னால் 2006 இல் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. இப்போது நான் தமிழ்நாட்டு இளைஞர் அணிக்கு இணைப்பாளராக இருப்பதுபோல் அப்போது திரு.வினேகுமார் என்பவர் கர்நாடக அணிக்கு இளைஞர் இணைப்பாளராக இருந்தார். அவர் புட்டபர்த்தியில் அதிருத்ர மகாயாக முன்னேற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். சுவாமிக்கு சகல ஏற்பாடுகளும் ஒழுங்குமுறையாக நேரம் தவறாமல் நடக்கவேண்டும் என்பதால் அவர் நிறைய கோவைகள் மற்றும் கடதாசிகளுடனே சுவாமியை சந்திக்க வேண்டி யிருந்தது. 3 மாதங்களாக தொடர் கலந்துரையாடல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது சுவாமி ஒருநாள் அவரிடம் கடதாசிகளையும் கோவைகளையும் ஒழுங்காக வைத்திருக்கத் தெரியவில்லை என்று கடிந்து உனக்கு ஒரு கைப்பை தருகிறேன் அதில் இவற்றை ஒழுங்காக அடுக்கி வைத்துக்கொண்டு வர வேண்டும் என்று கூறி ஒரு கைப்பை வழங்கினார். மாலை தர்ஷனுக்கு அவர் அதை கைப்பிடியில் தூக்கிக்கொண்டு வராது கக்கத்தில் வைத்துக்கொண்டு நடந்து வந்து உட்கார்ந்தார். தர்ஷன் முடிந்தவுடன் சுவாமி அவரை நேர்காணல் அறைக்கு அழைத்துச்சென்று நீ ஒரு இளைஞர் அணித்தலைவர் அல்லவா, புறோக்கர் போல நடந்து வருகிறாய். கைப்பிடியில் பையை பிடித்துக்கொண்டு நிமிர்ந்து நேராக ஆணவமின்றி அடக்கத்துடன் நடந்து வரவேண்டும். இங்கே நடந்து காட்டு பார்க்கலாம் என் அவரை அந்த அறையில் தான் தர்ஷனில் பெற்றுக் கொண்ட கடிதங்களை வாசித்து முடியும் வரையும் நடக்கவைத்தார். இது எமக்கு ஒரு ஹாஸ்யமான சம்பவமாகத் தெரியலாம். ஆனால் இதிலிருந்து சுவாமி நாம் செய்யும் ஒவ்வொரு சிறிய செயலும் உலகத்தின் பார்வைக்கு சிறப்பாக இருக்கவேண்டும் என்பதை எதிர் பார்க்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது எமக்கு ஒரு முக்கியமான விடயம். நாம் எல்லோரும் பக்தர்கள் என்ற ரீதியில் சுவாமி எதிர்பார்ப்பதை நாம் செய்யவேண்டும். மேலும் இங்கு பல தலைவர்களும் இருக்கிறார்கள். சுவாமி மாணவர்களுக்கு சொல்லித் தந்த இன்னொரு விடயம், மேடைப் பேச்சின்போது பாரம்பரியத்தின் படி எல்லோருடைய பெயர்களையும் சொல்வதோ அல்லது அரசியல் பேச்சுக்கள் போல சொல்வதோ தேவை யில்லை. மதிப்பிற்குரிய மூத்தோர்களே, சகோதர சதோதரிகளே என்று மட்டும் விளித்தால் போதுமானது என்பது. அதனால்தான் மாணவர்களாகிய நாங்கள் எங்கு சென்றாலும் அதனையே கைக்கொள்கிறோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக ஒவ்வொரு சிறிய விடயங்களையும் சுவாமி சரியாக கையாள்கிறார். ஏனெனில் எமக்கும் சுவாமிக்கும் உள்ள உறவு அப்படிப்பட்டது. நேற்று நான் நல்லூர் ஆலயத்துக்கு சென்றிருந்தேன். முருகக்கடவுளை நன்றாக அலங்காரம் பண்ணியிருந்தார்கள். ஆனால் அவருக்கு அருகில்கூட எம்மால் போகமுடியவில்லை. கடவுளை நாமே அனுமானம் பண்ணிக்கொள்ளத்தான் முடியுமாக இருந்தது. அதாவது உலகியல் ரீதியில் கடவுளுக்கும் எமக்கும் வெகு தூரம். ஆனால் சுவாமியுடனான உறவு அப்படியல்ல. நாம் நினைத்தவுடன் அவரைப் போய்ப் பார்க்கக்கூடியதாக இருந்தது. புட்டபர்த்திக்குப் போகமுடியவில்லை என்றாலும் அவர் நினைத்திருந்தால் இந்த இடத்தில் இப்போதே வந்து அனுபவத்தை தரக்கூடிய கடவுளாக இருக்கிறார். நாம் கேள்விப்படுவது 2000 வருடங்களுக்கு முன்னே கடவுள் வாழ்ந்தார் என்றும் 1300 வருடங்களுக்கு முன்னே கடவுளுடைய தூதர் வந்தார் என்றும் 5000 வருடங்களுக்கு முன்னே அவதாரம் பூமிக்கு வந்தது என்றுமே. ஆனால் நாம் இப்போது நினைத்தால் இங்கே இந்த நிமிடத்தில் கடவுளுடைய அனுபவத்தைப் பெற முடியும் என்பதற்கு பெரிய வித்தியாசம் இருக்கிறது என்பது உங்களுக்கே புரியும். அந்த அனுபவத்தை அளிக்கக்கூடிய உருவமாக சுவாமி இருக்கிறார். இந்த உருவத்தை சுவாமி வந்திருக்கும் இவ் வடிவத்தைப் பார்த்தவுடனேயே எமக்கு ஒரு திருப்தி ஏற்படுகிறது. ஏனெனில் நாம் அவ் வடிவத்தில் கடவுளைப் பார்க்கிறோம்.





சுவாமி எந்த அளவு உச்ச ஆன்மீக உறவை எமக்குத் தருகிறாரோ அதே அளவு இறங்கிவந்து எமக்கு அந்நியோன்யமான உறவையும் தருகிறார். இதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். நான் சுவாமியின் பாடசாலையில் படிக்கும்போது ஒரு விடுதியில் ஆண் மாணவர்கள் 700 பேர் 12 வயதிலிருந்து 25 வயதானவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் உயர் கல்வி கற்போர் தங்கியிருந்தோம். பொதுவாக விடுதி சாப்பாடு எந்த மாணவர்களுக்கும் ருசிப்பதில்லை. ஆனால் ஒரு நாள் எமது விடுதியில் பாயாசம் செய்யப்பட்டது. அன்று அது எங்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனால் விடுதியில் அளவான சாப்பாடுதான். குறிப்பிட்ட அளவு பெற்றுக்கொண்டபின் மீண்டும் கேட்கமுடியாது. அன்று பாயாசம் ருசியாக இருந்ததால் எமது டம்ளர்களை கழுவிவிட்டு நானும் எனது நண்பனான முகர்ஜி என்ற மாணவனும் மீண்டும் வரிசையில் நின்று இன்னொரு டம்ளர் பாயாசம் பெற்றுக்கொண்டோம். அதையும் குடித்துவிட்டு மாலை தர்ஷனுக்கு சென்றோம். சுவாமி வந்து எங்களருகில் நின்றுகொண்டு "என்ன மத்தியானம் விஷேசம்" என்று கேட்டார். உடனே சமையலறைக்குப் பொறுப்பான வெங்கடாசலம் என்பவர் பாயாசம் சுவாமி என்று சொன்னார். உடனே சுவாமி எங்கள் பக்கம் திரும்பி "சாத் பார் கயா" என்று ஹிந்தியில் சொன்னார். அதாவது "7 தடவை ஆச்சுதா" என்பது பொருள். உடனே எங்களுக்கு விளங்கிவிட்டது எம்மைத்தான் சொல்கிறார் என்று. ஆனாலும் நாம் ஏழுதடவை அல்லவே இருவரும் சேர்ந்து 4 கோப்பைகள்தானே குடித்தோம் என்று நினைத்துக்கொண்டு ஆனால் எதுவும் பேசாமல் இருந்துவிட்டோம். பஜனை ஆரம்பித்து சிறிது நேரத்தில் முகர்ஜி எழுந்து சென்று விட்டான். பின்னர் நாம் தர்ஷன் முடிந்து விடுதிக்கு சென்றபோது முகர்ஜி என்ற பையன் இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு மலசல கூடத்திலிருந்து வெளியே வந்தான். என்ன நடந்தது என்றபோது "7 தடவை மலசலகூடத்துக்கு போய்விட்டேன். எனக்கு பாயாசம் ஒத்து வரவில்லை"என்றான். அப்போதுதான் சுவாமி சொன்னதன் அர்த்தம் எமக்குப் புரிந்தது. நாம் கடவுள் என்பவர் பூஜை அறையில் மட்டுமே இருப்பவர். அவர் எங்கேயோ ஒரு தொலை தூரத்தில் எமக்கு எட்டாமல் இருப்பவர் என்றெல்லாம் நினைத்திருப்போம். ஆனால் எமது சுவாமியோ எமக்கருகில் எம்முடனே இருந்து இதுபோன்ற சாதாரண விடயங்களிலும் எமக்கு ஒரு அனுபவத்தைத் தருகிறார். இது மாத்திரமல்ல இது போன்றே பல அற்புதங்கள் செய்கிறார். அற்புதங்கள் எனது அடையாள அட்டைகள் என்கிறார். ஏனெனில் அவர் எங்களுடனே இருந்து ஒரு நண்பன் போல பழகும்போது அவர் கடவுள் என்பதை மறந்துவிடுவோம். அதற்காக ஒரு மேலான சக்தியைக் காட்டவேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை இருக்கிறது. ஆனால் அற்புதங்கள் செய்பவர்கள் எல்லோரும் கடவுளா என்றால் சுவாமி சொல்லும் போதனை நான் கடவுளே. அதேபோல் நீயும் கடவுள்தான் "I'm God. You are also God" எமது ஆன்மீகப் பயணத்திலே "சமத்கார்" எனப்படும் இந்த அற்புதங்களும் காணக்கிடைக்கின்றன. முதன்முதலாக சுவாமியுடன் நாம் உறவாடும்போது எம்மைச்சூழ பல அற்புதங்கள் நடக்கும். இவை சமத்கார். சுவாமி கூறுவது என்னவெனில் நாம் இந்த அற்புதங்களுடன் நின்றுவிடாது அடுத்த நிலைக்குச் செல்லவேண்டும். அடுத்தநிலை "சன்ஸ்கார்" ஆகும். சமத்கார் நடப்பது சன்ஸ்காருக்காகத்தான். "சன்ஸ்கார்" என்பது உயர் மனமாற்றம் எனப்படும். "Transformation" இந்த "Transformation" க்கான உதாரணத்தை நாம் பகவத் கீதையில் பார்ப்போம்.

கிருஷ்ணனால் அருச்சுனனுக்கு பகவத் கீதையில் சொல்லப்பட்ட சந்தர்ப்பத்தை பார்த்தோமானால் மகா பாரதப்போர் நிகழ ஆயத்தமான சந்தர்ப்பத்தில் அருச்சுனன் முன்னே சென்று எதிர்த் தரப்பிலிருந்தவர்களைப் பார்க்கின்றான். அங்கு தனது சொந்த பந்தங்களும் குருமாரும் பெரியவர்களும் தான் நேசித்தவர்களையும் கண்டவுடன் அவனது பந்தம் போர்செய்வதற்கான ஊக்க சக்தியை தடுக்கிறது. அதனால் தனது காண்டீபம் எனும் வில்லை கீழே போட்டு விட்டு தான் போர் செய்யவில்லை. சந்நியாசியாகப் போகிறேன் என கிருஷ்ணனிடம் கூறுகிறார். உடனே கிருஷ்ணர் அவனுக்கு பகவத்கீதை என்ற போதனையை கிட்டத்தட்ட 620 சுலோகங்களில் சொல்கிறார். அதன்பின் போர் புரிகின்றான். இந்த சந்தர்ப்பத்தை நாம் சற்று நோக்கினால், முதலில் அருச்சுனன் போர்செய்யும் குருசேத்திரத்தில் போர் தொடங்குவதற்குமுன் தனது எதிர்தரப்பினரை பார்க்காமல் இருந்திருப்பின் தொடர்ந்து போர் செய்திருப்பான். ஆனால் எதிர்தரப்பினரை பார்த்து மனம்குழம்பி பகவத்கீதை உபதேசிக்கப்பட்டபின்னும் அவன் காண்டீபத்தை தூக்கி போர்தான் புரிந்தான். அப்போது பகவத்கீதை உபதேசிக்கப்பட்டதன் பயன் என்ன? அதுதான் Transformation அதாவது, பகவத்கீதையை கேட்கமுன் அருச்சுனன் போர்புரிந்திருந்தால் கோபத்துடனும் வெல்லவேண்டும் என்ற வெறியுடனும் அதைச் செய்திருப்பான். பகவத் கீதையைக் கேட்டபின் அவனது Intentioin - உள்நோக்கம் மற்றும் Perspective - பார்வை என்பன வேறுபட்டு விட்டன. இப்போது அதை பந்தத்துடன் அல்ல. அவனது தர்மமாக நினைத்தான். காரியம் எதுவும் மாறவில்லை. ஆனால் மனமாற்றம் ஏற்பட்டு விட்டது. சுவாமியுடைய போதனையைக் கேட்ட பின்பும் எமது காரியம் மாறப்போவது இல்லை. நாம் சந்நியாசிகளாகி விடப் போவதுமில்லை. இந்த உலகப் பந்தங்களுடன் தான் இருக்கப்போகிறோம். ஆனால் மனமாற்றம் ஏற்படவேண்டும். சுவாமியுடன் நாம் எவ்வளவு காலம் இருக்கிறோம் என்றால் இந்த உயர்மனமாற்றம் தான் அதற்குப்பலன். இல்லையெனில் எமது செயற்பாடு சுவாமி உருவாக்கிக் கொடுக்கும் மோதிரத்தை அடகு வைத்தது போலவே இருக்கும். அதாவது நாம் உலகியல் காரியங்களில் ஈடுபடும்போது சுவாமியுடைய போதனைகளை மறந்து விடுகிறோம். இளைஞர் தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்று சுவாமி சொன்னால் அப்படி நாங்கள் நடக்கவில்லை என்றால் சுவாமியுடைய போதனைகள் எம்மை வந்தடையவில்லை என்று அர்த்தம். அல்லது அவற்றைப் புரிந்து கொள்ளவில்லை. அல்லது புரிந்து கொண்டு அலட்சியம் செய்கிறோம். ஒரு தடவை சுவாமி நாம் புட்டபர்த்தி மண்டபத்தில் அமர்ந்து இருக்கும் போது நேர்காணல் அறையை திறந்து கொண்டு நேரே எம்மிடம் வந்தார். வருத்தமாக எம்மிடம் "நான் உங்களுக்கு எனது போதனைகள், அனுபவங்கள் மூலமாக இரத்தினங் களைக் கொடுக்கின்றேன். ஆனால் நீங்கள் அவற்றை வெறும் கண்ணாடித் துண்டுகளாக நினைத்து விலக்கி விடுகின்றீர்கள்" என்று கூறினார். மேலும் ஒரு தடவை அவர் "நீங்கள் என்னைப் புரிந்து கொள்ளாவிட்டால் பிரச்சனை யில்லை. ஆனால் நீங்கள் தவறாகப் புரிந்து கொள்வது தான் பிரச்சனை" என்றார். உண்மையில் சுவாமி சொல்கிறார் "நீங்கள் என்னை உடலாக






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறீர்கள். நான் செய்யும் அற்புதங்களைப் புகழ்கிறீர்கள். ஆனால் நான் வந்ததன் நோக்கம் அதுவல்ல." சுவாமி வந்ததன் நோக்கமென்ன? அவர் எம்மை யாகம், தவம், சந்நியாசம் எல்லாம் செய்யச் சொல்ல வில்லை. நாம் செய்யும் இதே காரியத்தை தான் தொடர்ந்து செய்யச் சொல்கிறார். ஆனால் அதில் எமது நோக்கத்தையும் பார்வையையும் ஆன்மீகப் பார்வையாக மாற்றச் சொல்கிறார். அதாவது சன்ஸ்கார் Transformation - உயர்மனமாற்றம் இதைத்தான் சுவாமி எதிர்பார்க்கிறார். **எம்மிடம் உயர் மனமாற்றம் நடை பெற்றுள் ளது என எப்படி கண்டறிவது?** நாம் சுவாமியின் சமித்தியில் 30 வருடங்களாக இருக்கிறோம். புட்டபர்த்திக்கு பலதடவை சென்றிருக்கிறோம். பல சேவைத் திட்டங்களில் பங்கெடுத்துள்ளோம் என்போம். ஆனால் தவறுதலாக யாராவது காலை மிதித்து விட்டால் அவர் மீது சீறி விழுவோம். சனாதானசாரதி புத்தகத்தை எடுத்துப் புரட்டி பார்த்து விட்டு சுவாமி நன்றாகப் பேசியிருக்கிறார் என்போம். ஆனால் நான் நன்றாக ஆகிவிட்டேனா என நினைப்பதில்லை.

நாம் சுவாமியுடன் இவ்வளவு காலமாக இருக்கிறோம் என்றால் நிச்சயமாக எமக்கு இந்த Trans formation ஏற்பட்டிருக்கவேண்டும். நாம் பாடசாலையில் படிக்கும்போது எம்மை வகுப்பேற்றுவதற்காக பரீட்சை வைப்பார்கள். அது நாம் கற்ற கல்விக்கு அளவீடு. அதுபோல நாம் பெற்ற அனுபவங்கள் மற்றும் கேட்ட போதனைகளுக்கும் அளவீடு வேண்டும்.






ஒரு உதாரணம் சொல்கிறேன். சுவாமி 1991 பிறந்ததின விழாவின் போது அடுத்தவருடம் புட்டபர்த்தியில் ஒரு Super Speciality மருத்துவமனை திறந்து வைக்கப்படும் என அறிவித்தார். ஒரு வருட காலத்தில் ஒரு மருத்துவமனை கட்டி முடிப்பது சாதாரணமாக சாத்தியம் இல்லாத விடயம். ஆனாலும் 1992 ஜூன் வரை பெரிய ஏற்பாடுகள் எதும் நடைபெற்றதாக தெரியவில்லை. ஒருநாள் நாம் பஜனை மண்டபத்தில் உட்கார்ந்து இருக்கும்போது சுவாமி நேர்காணலை முடித்து விட்டு ஒரு சிறிய கடிதத்தை எடுத்துக்கொண்டு எம்மை நோக்கி வந்து அதை எம்முன் வாசித்துக் காட்டினார். அது சுவாமியின் முதனிலைப்பள்ளியில் படித்த 10 வயது மாணவன் எழுதிய கடிதம். அவன் சுவாமி கட்டப்போகும் மருத்துவமனைக்காக 100 ரூபாய் காணிக்கை அனுப்பியிருந்தான். மாதாமாதம் விடுதியில் சலவைசெய்பவருக்கு தனது உடுப்பைக் கொடுக்காது கடந்த 5 மாதங்களாக தானே துவைத்து அதனால் மாதம் 20 ரூபாயை மீதப்படுத்தி அதனை சுவாமிக்கு காணிக்கையாக்கி இருக்கிறான். அம் மருத்துவமனை கட்டுவதற்கு இந்திய மதிப்பில் 200 கோடிரூபாய் தேவை. ஆனாலும் சுவாமி அந்த சிறிய பையன் அனுப்பிய 100 ரூபாய் காணிக்கையை பெரிதாக எடுத்து எல்லோருக்கும் சொல்லிக்கொண்டிருந்தார். ஏனெனில் அந்த மாணவனுக்கு Transformation ஏற்பட்டிருக்கிறது. மேலும் இலங்கையில் புத்தமதம் தழைத்திருக்கிறது. உங்களுக்கு புத்தருடைய வாழ்க்கை வரலாறு தெரிந்திருக்கலாம். சித்தார்த்தர் ஒருநாள் நோய், மரணம், மூப்பு ஆகியவற்றை பார்த்தார். உடனே உள்மனமாற்றம் ஏற்பட்டு புத்தராக மாறினார். நாமும் தினமும் இவற்றைப் பார்க்கிறோம். ஆனால் எம்மில் எந்தவிதமாற்றமும் ஏற்படவில்லை. நாமும் சுவாமியோடு பல வருடங்கள் இருந்திருக்கிறோம். இந்த சமிதி பொன்விழா கண்டிருக்கிறது. ஆகவே இதனால் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் என்ன?

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உள் மனமாற்றம் நடக்கவேண்டும். அந்த சன்ஸ்கார் நடைபெற்றுள்ளதா? என அறிய வேண்டுமாயின் அடுத்த படிக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லவேண்டும். அதுவே பரோபகார். இந்தியாவில் சுவாமியுடைய நிறுவனத்துக்கு சத்தியசாயி சேவா நிறுவனம். நாம் சுவாமியுடைய நிறுவனத்தினூடாக சேவை செய்கிறோம். ஆனால் இங்கு அரசசாரா நிறுவனங்கள் இருக்கலாம். அவையும் சேவை செய்கின்றன. நாம் வைத்தியமுகாம் செய்கின்றோம். வெள்ளம் ஏற்பட்டால் நாராயண சேவை செய்கிறோம். NGO களும் இதே போன்ற சேவைகளும் செய்கின்றன. அப்போது நாம் செய்யும் சேவைக்கும் அவர்களது சேவைக்கும் என்ன வித்தியாசம்? அவர்கள் சாதாரணமாக உதவி செய்யும் நோக்கில் செய்கிறார்கள். ஆனால் நாம் சுவாமிமீது வைத்த பற்று காரணமாக அவரது "சமத்கார்" ஐப் பார்த்தால் ஏற்பட்ட உள்மனமாற்ற உந்துதலால் அதை செய்கிறோம். அந்தக் காரியம் எந்த மாதிரியான காரியம் என்றால் "பரோபகார்" - அதாவது "பரா" - எனில் Eternal - அதாவது என்றுமே இருக்கக்கூடிய, "உபகார்" அதாவது அருகாமையில் செல்லல். அதாவது முக் காலத்திலும் இருக்கக்கூடிய ஒன்றிற்கு அருகாமையில் செல்லல் என்பதே. "பரோபகார்" என்பதின் அர்த்தமாகும். இளைஞர்கள் கிராம சேவைக்கு செல்லும்போது சில இளைஞர்கள் ஊக்கமின்றி இருப்பர். அதைநாம் சுவாமியிடம் முறை யிடுவோம். உடனே சுவாமி உண்மையில் உயர் மனமாற்றம் ஏற்பட்ட ஒருவர் எப்படி சேவை செய்வான் என்பதற்கு உதாரணம் சொல்கிறார். ஒரு கன்றுக்குட்டி சேற்றில் அகப்பட்டு வெளியே வரமுடியாது தவித்துக்கொண்டிருந்தது. அந்தவழியால் வந்த பலர் அதற்கு உதவி செய்யப்போனால் நாம் சேற்றுக்குள் அகப்பட்டு விடுவோம் என்று நினைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டுநின்றனர். அந்த வழியால் வந்த ஒரு முதியவர் உடனே அந்த சேற்றில் இறங்கி கன்றுக் குட்டியை வெளியே இழுத்துவிட்டுவிட்டு பிறகு மற்றவர்களின் உதவியுடன் தானும் வெளியே வந்து விடுகிறார். உடனே அங்கு நின்றவர்கள் அவரிடம் எப்படி துணிவுடன் இந்தக் காரியத்தை செய்கின்றீர்கள் என கேட்கின்றனர். உடனே அவர் சொல்கின்றார், "நான் கன்றுக்குட்டிக்கு உதவி செய்கின்றேன் என்ற நோக்கோடு செல்லவில்லை. அந்தக் கன்றுக்குட்டியின் வேதனையைப் பார்த்து என்மனம் வேதனைப்பட்டது. நான் என மனவேதனையைப் போக்கவே இந்தக் காரியத்தை செய்கின்றேன்." உண்மையில் யாரோ ஒருவர் பசியோடு இருக்கிறார் என்னிடம் சாப்பாடு இருக்கிறது. நான் பெரியவன். நான் அவருக்கு உதவி செய்கிறேன் என்று நினைப்பதற்கும், ஒருவர் பசியால் வருந்துகிறார் என அதைப்பார்க்க என் மனம் வாடி வருந்துகிறது என நினைத்து என்னிடமுள்ள உணவை அவரிடம் பகிர்ந்துகொள்வதற்கும் வேறுபாடு உள்ளதல்லவா? இந்த வித்தியாசத்தைத்தான் சுவாமி "பரோபகார்" என்று சொல்கிறார். எம்முடைய சேவையும் இப்படித்தான் இருக்கவேண்டும்.

நாம் சாயி பக்தர்கள் சமிதிக்கு வரும்போது எல்லோரையும் பார்த்து சாயிராம் சொல்கிறோம். அதில் பெரியவர், சிறியவர் வேறுபாடு இல்லை. மேலும் நாம் மற்றவர்களைப்போல் ஆங்கிலத் திலோ அல்லது வேறுவிதமாகவோ காலை வணக்கம் தெரிவிப்பதில்லை. ஏனெனில் அங்கு நாம் எல்லோருக்கும் உள்ளிருக்கும் சாயிராம் ஆகிய அந்த இறைவனையே பார்க்கிறோம். சாயி சமிதியில் தலைவர் அல்லது சபை உறுப்பினர் என்றோ அல்லது அந்தஸ்து பற்றியோ பார்ப்பதில்லை. அவருடைய இறை அனுபவங்களே எமக்கு திருப்தியை அளிக்கின்றன. சாதாரணமாக ஒரு வாங்கினை தூக்குவதற்கு 4 பேர் தேவை. அதேபோல் சமிதியை கொண்டு நடத்து வதற்கு நிர்வாகம் தேவை. ஆனால் எல்லாருமே சாயிராம்தான். அந்த சாயிராமை ஒவ்வொருவரிடமும் நாம் பார்க்கும் போது அங்கு "பரோபகார்" ஏற்படுகிறது. சத்தியசாயி நிறுவனத்தில் இவ்வளவு காலமாக நாம் இருக்கிறோம் என்றால் அந்த பரோபகாரை நாம் அனுபவிக்க வேண்டும். அதை அனுபவத்தில் கொண்டுவரும்போது எமக்கு "சாட்சாத்கார்" கிடைக்கும். அதாவது சுவாமியின் கூற்றுப்படி நாம் எந்த வடிவில் நினைக்கிறோமோ அந்த வடிவில் இறைகாட்சி கிடைக்கும்.

ஆகவே சுவாமி சமத்கார் எனப்படும் அற்புதங்களில் ஆரம்பிக்கிறார். இங்கு எனக்கொரு அன்பர் தனக்கு படை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினரால் ஏற்பட இருந்த ஆபத்தை எப்படி சுவாமி தடுத்து தங்களைக் காப்பாற்றினார் என்று கூறினார். அதன்பிறகு சுவாமியின் முழுமையான பக்தராக மாறிவிட்டார் எனவும் பின் சுவாமியின் போதனைகளைப் பற்றி சிந்திக்கத் தொடங்கியதாகவும் கூறினார். இங்கு சுவாமியின் அற்புதம் அவரை Transformation அடைய வைக்கிறது. இதேபோல் ஒவ்வொரு வருக்கும் நிகழ் கிறது. அற்புதங்கள் மூலம் கிடைக்கும் அறிமுகம் சிலருக்கு சுவாமியின் உரைகளை வாசிப்பதன் மூலம் அடுத்த நிலையான உயர் மனமாற்றத்துக்கு இட்டுச் செல்கிறது. பின் "பரோபகார்" ஏற்பட சேவையில் ஈடுபடு கின்றனர். அதன் பலனாக இந்த நான்கும் எமது ஆன்மீக வாழ்விலே நான்கு நிலைகளாகும். இந்த நான்கும் நடைபெற வேண்டுமாயின் அதற்கு வழிமுறை கொடுக்கப்பட வேண்டுமல்லவா? அதுதான் சுவாமி எமக்கு அளித்துள்ள ஒன்பது ஒழுக்கக் கோட்பாடுகள். ஒருதடவை இந்தியாவில் ஹரியானா மாவட்டத் தலைவராக இருந்த சாயி சகோதரர் ஒருவர் சுவாமியிடம் வந்து தனது நிர்வாகத்தில் பலர் குழப்பங்கள் ஏற்படுத்துவதாக முறையிட்டார். சுவாமி அமைதியாக சொன்னவற்றை கேட்டு விட்டு இறுதியாக அவரிடம் 9 ஒழுக்கக்கோட்பாடு தெரியுமா என்று கேட்டார். அவர் தெரியும் என்று சொன்னதும் முதலாவது ஒழுக்கக் கோட்பாட்டைக் கேட்டார். முதலாவது ஒழுக்கக் கோட்பாடு தினசரி அதிகாலை தியானமும் பிரார்த்தனை என்பதாகும். இந்தப் பிரார்த்தனை என்பது பலவிதங்களில் இருக்கலாம். ஆனால் அதன்மூலம் உயர் மனமாற்றம் ஏற்படும்.

பிரார்த்தனை எந்தவடிவில் இருப்பினும் அதற்கு சுவாமி பதில் தருவார். தொடர்ச்சியாக பிரார்த்தனை செய்யும்போது எமக்குள் ஏற்படும் மாற்றம் தெரியவரும். சுவாமியுடைய கருத்துரைகளை கேட்பீர்களானால் அவர் இரண்டு "I" களைபற்றிக் கூறுவார். ஒன்று "I" அதாவது நான் அல்லது உள்மனம். மற்றையது "Eye" அதாவது கண். இங்கு கண் என்பதற்கு வெளியுலகம் என்பது பொருள் அதாவது வெளியுலகத்திலிருந்து உள்மனத்தை நோக்கி நாம் பிரயாணம் பண்ணுவதற்கு இந்தப் பிரார்த்தனை உதவுகிறது.

எம்மால் எந்த ஒரு காரியத்தையும் செய்ய முடியும். அதற்கு சக்தி எம்முள்ளே உள்ளது. அதை நாம்தான் உணர்ந்து கொள்வது இல்லை. உதாரணமாக திருச்சி எனும் ஊரைச் சேர்ந்தவன். அங்கு பொன்மலை எனும் குன்று ஒன்று உள்ளது. அங்கு கீழே ஒரு சிறிய கோவிலும் மேலே ஒரு முருகன் கோவிலும் உண்டு. நான் சிறுவனாக இருந்தபோது அங்கு செல்வதுண்டு. கிட்டத் தட்ட 50 படிகள் ஏறவேண்டும். நாம் இறங்கும் போது விளையாட்டுத் தனமாக இரண்டு படிகளை விட்டுவிட்டு தாண்டி இறங்கி வருவோம். ஒரு தடவை கோவிலில் வாழைப்பழங்கள் பிரசாரமாகத் தந்தனர். அவற்றை எடுத்துக்கொண்டு நாம் இறங்கிவரும் போது குரங்குகள் துரத்த ஆரம்பித்தன. நாம் பயந்தபோது மிகவிரைவாக பாய்ந்து பாய்ந்து இறங்கி வந்தோம். இறங்கிய பின்னர் திரும்பிப் பார்த்தபோதுதான் நாம் எவ்வளவு விரைவாக 4, 5 படிகள் தாண்டி வந்திருக்கிறோம் என்பது புரிந்தது. சாதாரண நாட்களில் இரண்டு படி தாண்டுவதே கடினமாக இருக்கும். ஆனால் 4, 5 படிகள் தாண்டியுள்ளோம். அப்போது அது எம்மால் முடியும் என்பது தானே அர்த்தம். அதாவது எமக்குள்ளே இருக்கும் திறன் சூழ்நிலையால் தள்ளப்படும்போது மட்டுமே வெளிப்படு கிறது. ஆனால் பிரார்த்தனை செய்து எமது உள்முகப்பார்வையை விருத்தி செய் வதன் மூலம் சாதாரணமாக நாம் நினைத்தவுடன் அந்த ஆற்றலை வெளிக் கொணரமுடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் சுவாமியின் பிருந்தாவன் தரிசன வீடியோக்களைப் பார்க்கும்போது சுவாமிக்குப் பின்னால் ஒரு வயதானவர் இருப்பார். அவர் ஒரு வைத்தியர். பெங்களூரில் இருந்தார். அவருக்கு ஒரு அத்தை இருந்தார். அவர் புட்டபர்தியில் சுவாமியுடன் இருந்தார். ஒருதடவை அவருக்கு கண்பார்வையில் பிரச்சினை ஏற்பட்டது. அதனால் சுவாமி அவரை பெங்களூரில் உள்ள அந்த வைத்திய மருமகனின் வீட்டுக்கு அனுப்பி வைத்தார். அங்கு சென்று அந்த அம்மா வைத்திய சோதனை செய்தபோது அவருக்கு "Cataract" என்பது தெரியவந்தது. உடனே அவரை ஆப்பரேசன் பண்ணும்படி கூறிவிட்டனர். அவரோ தான் சுவாமியிடம் புட்டபர்த்திக்கு சென்று பிரசாதம் வாங்கிய பின்தான் அறுவை சிகிச்சை செய்வேன் என்று கூறிவிட்டார். இந்த நிகழ்வு 1960 - 1970 களில் நடைபெற்றது. அப்போது "Cataract" அறுவை சிகிச்சை என்பது சிறிது பயத்தை தரக்கூடிய விசயம். அத்துடன் பெங்களூரிலிருந்து புட்டபர்த்தி செல்வதென்பதும் மிகவும் கடினமான பிரயாணம். ஆகவே அவரது மருமகன் அவரை சமாதானப்படுத்தி அறுவைசிகிச்சை செய்து வைக்க முயன்று கொண்டிருந்தார். ஒருநாள் மாலைநேரம் அவர்களது வீட்டுக்கு சுவாமி தொலைபேசி அழைப்பெடுத்து கதைத்தார். அப்போது அந்த அம்மா தனது அறுவைசிகிச்சையை பற்றிக்கூறினார். உடனே சுவாமி அவரை தொலைபேசி ரிசீவரை கடதாசி மேலே வைக்கும்படி கூறி அதனூடாக விபூதியை வர்ஷித்தார். அப்போது ரிசீவர் பெரிய குழாய்போன்றது. அதனூடாக விபூதி கொட்டியது. இது அந்த அம்மாவின் பிரார்த்தனைக்கு கிடைத்த பலன்.

இன்றைய உரையிலே சுவாமியுடைய **சமத்கார்** முதலில் ஏற்படும் என்றும் அதை நாம் அனுபவித்து அதைப்பற்றி சிந்திக்கும்போது **சன்ஸ்கார்** ஏற்படும் என்றும் எமக்கு சன்ஸ்கார் ஏற்பட்டுள்ளதை அறிய **பரோபகார்** எனப்படும் சேவையில் ஈடுபடவேண்டும் என்றும் அதனால் எல்லோருக்கும் உள்ளிருக்கும் இறைவனை உணர **சாட்சாத்கார்** கிடைக்கும் எனவும் சுவாமியின் இந்த 4 வழிமுறைகளையும் கடைப்பிடிக்க பிரார்த்தனை எனப்படும் வழியும் எப்படி உதவி செய்கிறது என்பதையும் பார்த்தோம்.

ஜெய்சாயிராம்

## தேசிய சேவைத் திட்டம்




**புற்றுநோயாளர் காப்பகம்**
**ஹன்வல, மகரகம**

வைத்திய சேவையை நோக்காகக் கொண்டு 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் புற்றுநோயாளர் காப்பகம் மகரகமவிலிருந்து 20 கி.மீ தொலைவிலுள்ள ஹன்வல எனும் இடத்தில் அமைந்துள்ளது. இதில் வழங்கப் படும் சேவைகள் அனைத்தும் இலவசம். இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 0094 715 678 332
E mail - info@srisailanka.org
Web: www.srisailanka.org





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திரு விஜயகிருஷ்ணன் அவர்களது உரை 24.06.2017 மாலை -

காலையில் எனது பேச்சு மண்டபத்தினுள் அமைந்தது. தற்போது ஒரு இடமாற்றம் ஏற்பட்டு வெளியே இந்த குளிர்ந்த சூழலில் நிகழ்கிறது. இதே போல் சுவாமியுடன் மாணவர்கள் பயணிக்கும் போது ஒரு இடமாற்றம் வேண்டும் என சுவாமி நினைப்பார். Summer Season க்கு சுவாமி கொடைக்கானல் அல்லது ஊட்டி போவார். சுவாமி பயணம் போகிறார் எனில் ஒரு சிறிய குழுவாக மாணவர்களையும் அழைத்துச்செல்வார். எங்கேயாவது ஒரு குளிர்மையான இடத்துக்கு மாணவர்களை Bus இலும் காரிலும் அழைத்து செல்வார். அவருடன் இருக்கும் நேரங்கள் போதனைகள் நிறைந்ததாக இருக்கும். தான் யார் என்பதை ஒவ்வொரு சமயமும் நினைவுபடுத்திக்கொண்டிருப்பார். இங்கு சுவாமிக்கு போடப்பட்டிருக்கும் கதிரை சாதாரண கதிரையாக இல்லாது உண்மை யிலேயே சுவாமி அதில் இருப்பதாக பாவனை செய்யப்படுவதைப் போல் தான் யார் என்பதை இருக்குமிடம் தோறும் நினைவு படுத்துவார். ஒரு தடவை இப்படியான சூழலில் ஒரு நெல்லிக் காயைப் பறித்து ஒரு மாணவனுக்கு கொடுத்து சாப்பிடுமாறு கூறினார். அவன் சாப்பிடும் போது நெல்லிக்காய் ஸ்ரோபரி யாகவும் உள்ளிருக்கும் கொட்டை சாக்லேட் ஆகவும் மாறிவிட்டிருந்தது. சுவாமியினுடைய பிரதான ஆச்சிரமம் புட்டபர்த்தியில் அமைந்துள்ள பிரசாந்தி நிலையமாகும். பெங்களூரில் White Field






எனும் இடத்தில் பிருந்தாவன் என்ற இன்னொரு ஆச்சிரமம் உண்டு. அங்கு சுவாமிக்கு ஒரு பங்களா உள்ளது. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மாணவர்கள் அங்குசென்று சுவாமியுடன் உரையாடுவர். கேள்விகள் கேட்பர். சுவாமி பதில் கூறுவார்.

ஒரு சமயம் சுவாமி ஒரு உதாரணம் கூறினார். இது 45 வருடங்களுக்கு முற்பட்ட நிகழ்வு. ஒரு பிரபலமான சினிமா பாடகி. அவரது கணவர் ஒரு டாக்டர். அந்த பாடகிக்கு கருப்பையில் கட்டி ஏற்பட்டதால் அறுவை சிகிச்சைமூலம் கருப்பை அகற்றப்பட்டது. அதன்பின் அவர்கள் சுவாமியிடம் வந்தனர். சுவாமி அவர்களுடன் தனியே கதைக்கும்போது அந்தபெண்மணி குழந்தை பெற்றுக்கொள்ளமுடியாத சூழ்நிலையைச் சொல்லி சுவாமியே ஒரே அடைக்கலம் என்று அழுதார். அப்போது சுவாமி ஒரு மாம்பழத்தை வரவழைத்து சுவாமியை நம்பு உனக்கு குழந்தை பிறக்கும் என கூறினார். பெண்ணின் கணவரோ சுவாமி ஏதோ மனஆறுதலுக்காக கூறுகிறார் என்று நினைத்தார். ஆனால் அப்பெண்ணுக்கு விஞ்ஞான விதிகளையும் மீறி குழந்தை பிறந்தது. சுவாமி பிருந்தாவன் மண்டபத்தில் ஊஞ்சலில் அமர்ந்திருப்பார். மாணவர்கள் அவரைச் சுற்றி 150 பேர்வரை அமர்ந்திருப்போம். ஒலிபெருக்கி (Mike) எதுவும் இல்லையாதலால் சுவாமி சொல்வதை அருகே இருந்து கேட்கவே எல்லோரும் முயற்சிப்பர். சுவாமியினுடைய Colleges ஆண்களுக்கு பிருந்தாவனிலும் பிரசாந்தி நிலையத்திலும் உண்டு. அனந்தப்பூரில் பெண்கள் கல்லூரி ஒன்று உண்டு. சுவாமி பிருந்தாவனுக்கு வந்தால் அனந்தப்பூர் பெண்கள் சிலவேளைகளில் சுவாமியைப் பார்க்க வருவதுண்டு. அப்படியான நேரத்தில் அனந்தப்பூர் பெண்கள் கல்லூரி ஆசிரியர்களுக்கும் பிருந்தாவன் ஆண்கள் கல்லூரி ஆசிரியர்களுக்கும் இடையில் பக்தியில் சிறந்தவர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களா? பெண்களா? என்று பட்டிமன்றம் ஒன்றை ஏற்பாடு செய்வார் சுவாமி. அவரே அதற்கு தலைமை வகிப்பார். ஆசிரியர்களானதால் எல்லோருமே நன்றாகப் பேசுவார்கள். ஆனால் எப்போதுமே சுவாமி பெண்கள் பக்கம்தான் தீர்ப்பளிப்பார். பெண்களுடைய பக்தியே சிறந்தது என்பதற்கு சுவாமி ஒரு விளக்கமும் சொல்வார். சமஸ்கிருதத்தில் ஸ்திரீ என்றால் பெண். இந்தப் பெயர் 3 எழுத்துக்களான ஸ,த,ர களால் ஆனது. ஸ - ஸத்வகுணம். அதாவது உன்னதமான குணம். அதுவே பெண்களுக்கு முதலில் இருக்கும். த - தமஸ். அடக்கமாக இருக்கவேண்டியது இரண்டாவதாக அவர்களுக்கு இருக்கும். ர - ரஜஸ். வலிமையாக ஆக்ரோஷமாக இருக்கக்கூடிய தன்மை மூன்றாவதாக இருக்கும். இந்த வரிசையில் இருப்பதால்தான் பெண்கள் சர்வசாதாரணமாக இறைவனுடன் இணக்கமாகி விடுகின்றனர். இதனால்தான் அந்த பிரபலமான பாடகியான பெண்ணும் தனக்கு கருப்பை இல்லையே எப்படி குழந்தை பிறக்கும் என்று எண்ணாமல் சுவாமி மாம்பழம் கொடுத்துவிட்டார். ஆகவே அவரது ஆசீர்வாதத்தால் எனக்கு குழந்தை கிடைக்கும் என நம்பியதால் அவருக்கு குழந்தை பிறந்தது. அந்தப் பையன் எனது சகமாணவன். இந்தச் சம்பவத்தை அந்த தாயாரும் எமக்கு கூறினார். சுவாமியும் வேறொரு சந்தர்ப்பத்தில் கூறியிருந்தார். ஆகவே நாம் எவ்வளவு உன்னதமான அவதாருடன் உறவு கொண்டுள்ளோம் என்பதை சிந்திக்கவேண்டும்.

இங்கு பாலவிகாஸ் மாணவர்கள் ஒரு நாடகம் நடத்தியிருந்தனர். அதில் இறுதியாக Take care of Lord என்று பாராட்டினார்கள். சுவாமியும் சிறுவயதில் நாடகங்கள் அரங்கேற்றியுள்ளார். அவர் எழுதி நடித்த ஒரு நாடகம் செப்பிநட்லு ஸேஸ்தாரா - சொன்னபடி செய்கிறோமா? என்பதாகும். சுவாமியினுடைய கல்லூரி மாணவர்களும் நிறைய நாடகங்களை அரங்கேற்றுவர். ஒரு தடவை பிரசாந்தி நிலைய பூர்ண சந்திரா மண்டபத்தில் ஒத்திகை நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த காட்சியில் யேசுபிரான் வரும்போது கண்தெரியாத ஒருவருக்கு கண்தெரிவது போன்ற காட்சி. அப்போது மேடையின் பின்புறம் இருந்த திரையை விலக்கிக்கொண்டு சுவாமி உள்ளே வந்தார். அந்நேரம் யேசுபிரான் வருகிறார். உடனே நாடகத்தின் நடிகர்கள் யேசு வந்துவிட்டார் கண் தெரிகிறது என்று சொல்கிறார்கள். உடனே சுவாமி கண்தெரியாதவர்போல் நடித்த ரவிக்குமார் என்ற பையனை பார்த்து சுவாமி வந்துவிட்டார் கண் தெரிகிறதே என்று கூறினார். எல்லோரும் அதை நகைச்சுவையாக எடுத்துக் கொண்டனர். இந்த நிகழ்வு முடிந்து 10 நாள்களின் பின் ரவிக்குமார் என்பவர் தனது PhD ஆராய்ச்சிக்காக Lab இல் Chemicals உடன் பரிசோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது வெடித்து அந்த இரசாயனங்கள் தெறித்து அவரது கண்ணில் பட்டுவிட்டது. உடனே முதலுதவி செய்து வைத்தியரிடம் அழைத்துச் சென்றனர். அவருக்கு கண்தெரியவில்லை. வைத்தியர்கள் கண்களில் கட்டுப்போட்டுவிடுகின்றனர். அவர் 3 நாள்களாக சுவாமியின் தர்ஷனுக்கு போகவில்லை. 3 ஆம் நாள் சுவாமியின் அனுமதியுடன் சக்கர நாற் காலியில் அவரை கொண்டுவந்து தரிசன முன்வரிசையில் உட்கார வைத்தனர். சுவாமி வந்து விபூதி உருவாக்கி கண்களில் பூசச்சொன்னார். பின் மெது வாக கட்டை அவிழ்த்து கண்களைத் திறக்கச் சொன்னார். அவர் கண்களைத் திறந்தபோது பார்த்தாயா, சுவாமி வந்து விட்டேன் உனக்கு கண் தெரிகிறதே என்று கூறினார். அப்போது தான் அந்த பையனுக்கு விளங்கியது. சுவாமி சாதாரணமாக நாடகத்தில் சொன்ன வாக்கியம் தனது வாழ்க்கையில் நடை பெற்றுள்ளது என்று அறிந்தான்.

சுவாமியுடன் இருக்கும்போது இப்படியான அனுபவங்கள் கிடைத்துக் கொண்டே இருக்கும். சுவாமியுடன் நாம் இருக்கிறோம் என்பது சும்மா கிடைத்த அதிஷ்டலாபச்சீட்டு அல்ல. அது அவரது பெருங்கருணையால் மட்டுமே கிடைத்த வாய்ப்பாகும். இன்று தத்துவங்களைப் பற்றியல்லாது சுவாமியுடன் இருக்கும் போது நடந்த நிகழ்வுகளைப் பற்றியே பேசுகின்றேன். இந் நேரத்தில் நான் சுவாமியிடம் எப்படி வந்தேன் என்று கூறுகின்றேன். சுவாமியிடத்தில் நாம்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருக்கிறோம் என்றால் **எப்போதும் தயாராக இருக்கவேண்டும்.** முதல் அதிருத்ர மகாயக்ஞம் புட்டபர்த்தியில் நடந்தது. பின்னர் சென்னையில் நடந்தது. அப்போது நான் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கான ஒருங்கிணைப்பாளராக இருந்தேன். அப்போது யாகத்துக்கு சுவாமி வந்து விட்டார். சுவாமிக்கு போடப்பட்ட மேடையின் பின்னாலே இருந்து நாங்கள் வேலை செய்துகொண்டிருந்தோம். மேடையில் ஒரு பேச்சாளர் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேசி முடித்ததும் எமது Trust இனுடைய தலைவரிடம் சுவாமி சொல்கிறார் விஜயகிருஷ்ணனை பேசச்சொல் என்று. உடனே அவர் அடுத்தபேச்சாளர் விஜயகிருஷ்ணன் என்று அறிவித்தவுடன் எல்லோரும் என்னிடம் ஓடிவந்து சுவாமி உன்னைக் கூப்பிடுகிறார் என்று கூறினார்கள். நானும் ஓடிச்சென்று வணங்கியபோது போய்ப்பேசு என்றார். இப்படித்தான் நாம் சுவாமியுடன் இருக்கிறோம் என்றால் எப்போது என்ன சந்தர்ப்பம் வரும் என்று சொல்லமுடியாது. எந்த நேரமும் எதற்கும் தயாராக இருக்கவேண்டும்.

நான் சுவாமியுடைய பள்ளியில் 11-12ஆம் வகுப்பில் முதன்முதல் சேரும் சந்தர்ப்பத்தின் போதும் இதேபோன்ற சந்தர்ப்பம் ஒன்று ஏற்பட்டது. சுவாமி சொற்பொழிவாற்றுவதற்கு முன் யாராவது மாணவர்களை பேசுவதற்கு ஆயத்தப் படுத்த சொல்வது வழமை. அன்று பள்ளி மாணவர்களிடம் ஆயத்தப்படுத்த சொன்னார்கள். நானும் ஒரு பேச்சு எழுதி பேசிக்காட்டினேன். அது நிராகரிக்கப் பட்டது. அதேபோல் 7 நாள்கள் தொடர்ந்து



பேச்சு எழுதுவதும் பேசிக்காட்டுவதுமாக கழிந்தது. ஒன்றும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அந்த வருத்தத்தில் அழுது கொண்டே 8ஆவது நாள் பேச்சு எழுதிக் காட்டும்போது அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதாவது 7-8 நாள்கள் பேசுவதற்காக தயாராகி நிராகரிக்கப்பட்ட சம்பவமும் திடீரென கூப்பிட்டு பேசச்சொன்ன சந்தர்ப்பமும் சுவாமியுடன் இருக்கும்போது எங்களுக்கு ஏற்படலாம். நான் சுவாமியின் பள்ளியில் சேரமுன்பு பாலவிகாஸ் மாணவனாக இருந்தேன். அதனால் சுவாமியின் பள்ளியில் சேரவேண்டுமென்ற ஆசை எனக்கு இருந்தது. 10ஆம் வகுப்பு முடிந்தபின் 11ஆம் ஆண்டில் சுவாமியின் பள்ளியில் சேர Prospectus வாங்கி என்னென்ன Subjects உள்ளது என படித்துப்பார்த்தேன். நான் ஆங்கில மொழியில் படித்ததால் இரண்டாம் மொழியாக தமிழ் கற்றறிந்தேன். அங்கு இரண்டாம் மொழியாக சமஸ்கிருதம், இந்தி, தெலுங்கு மொழிகள்தான் இருந்தன. எனக்கு இந்த 3 மொழிகளும் தெரியாது. அதனால் நான் எனக்கு புட்டபர்த்தி பாடசாலையில் போய் புதிதாக ஒரு மொழி படிப்பது கடினம். ஆகவே இந்த ஆசையை விட்டுவிடுவோம் என்று நினைத்தேன். April 25ஆம் திகதி இறுதி நாளாக இருந்தது. April 10ஆம் திகதியே அப்பா என்னிடம் Application போட்டுவிட்டாயா என கேட்க ஆரம்பித்துவிட்டார். அப்பாவிடம் இந்த விடயத்தை சொல்வதற்கு தயக்கமாக இருந்தது. அதனால் நான் நினைத்தேன் April 24 ஆம் திகதி விண்ணப்பத்தைப் போட்டால் நாங்கள் இருக்கும் திருச்சியிலிருந்து தபால் புட்டபர்த்திக்கு செல்ல ஒருவாரம் எடுக்கும். அதனால் விண்ணப்பம் நேரத்துக்கு கிடைக்காததால் என்னை தெரிவு செய்யமாட்டார்கள். அப்பாவிடமும் விண்ணப்பம் போட்டுவிட்டதாக கூறிவிடலாம். வேறு மொழி படிப்பதிலிருந்தும் தப்பிவிடலாம் என்று நினைத்து 24 ஆம் திகதி விண்ணப்பத்தை தபாலில் சேர்த்தேன். ஆனால் அதிசயம் என்னவென்றால் 26ஆம் திகதி என்னை புட்டபர்த்தி பாடசாலைக்கு தெரிவுசெய்ததாக கடிதம் வந்தது. அதற்குப்பின் அங்கு போய்ச்சேர்ந்து சமஸ்கிருதம் மொழியை 2 ஆம் மொழியாக எடுத்து படித்தேன்.

உண்மையில் நாம் சுவாமியிடம் வருகிறோம். சுவாமியைப் பற்றி நினைக்கிறோம் சுவாமியை போய்ப் பார்க்கிறோம் என்றால் அது எங்களுடைய நிர்ணயமே கிடையாது. நீங்கள் இங்கு கணவன் மனைவியாக இருக்கிறீர்கள் என்றாலும் அது உங்களுடைய முடிவு கிடையாது. **எல்லாவற்றிலும் சுவாமியினுடைய பங்கு அல்லது முடிவுதான் இருக்கிறது.** இப்போது தமிழ்நாட்டில் சாயிநிறுவன உபதலைவர் சுரேஸ் என்பவர் பள்ளியில் எனக்கு ஒரு வருடம் மூத்தவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய தந்தையாரும் சுவாமியினுடைய பக்தர். அவர் படிப்பை முடித்ததும் தந்தையினுடைய தொழிலையே செய்யும்படி சுவாமி சொன்னதால் அவர் அதை ஏற்று சேலம் எனும் இடத்தில் தற்போது இருக்கிறார். அவருக்கு திருமணம் செய்வதற்காக பெண் தேர்ந்தெடுக்கும்போது சுவாமியினுடைய விருப்பத்தை அறிவதற்காக சில ஜாதகங்களை எடுத்துக்கொண்டு சுவாமியிடம் செல்வதற்கு ஆயத்தமானார். சுவாமி கொடைக்காணல் செல்லும் போது சேலத்தில் தெய்வீகம் என்ற கல்யாண மண்டபத்தில் சிறிது இளைப்பாறி செல்வதுண்டு. அப்படி அங்கு சுவாமி வரும்போது இவர் அங்கு சென்று ஒரு தட்டில் 5 ஜாதகங்களை வைத்துக் கொண்டிருந்தார். சுவாமி வந்தபோது சுவாமியிடம் விடயத்தை சொல்ல சுவாமி மேலேயிருந்த ஜாதகத்தில் கையை வைத்துவிட்டு சென்றுவிட்டார். இப்போது இவருக்கு சந்தேகம் வந்துவிட்டது. சுவாமிக்கு எல்லாமே தெரியும் என எமக்கு தெரிந்தாலும் தான் மேலே அந்த ஜாதகத்தை வைத்ததால் தான் அதனை ஆசீர்வதித்தாரோ என அவர் சந்தேகப்பட்டார். அதனால் உடனே அந்த ஜாதகத்தை எடுத்து அடியில் வைத்துவிட்டு சுவாமியிடம் மீண்டும் சென்றார். உடனே சுவாமி என்ன என்று கேட்க அவர் ஒன்றும்சொல்லாமல் தட்டை நீட்டுகிறார். உடனே சுவாமி அந்த தட்டின் கீழே ஒரு தட்டு தட்டுகிறார். உடனே கீழேயிருந்த அந்த குறிக்கப்பட்ட ஜாதகம் மேலே வருகிறது. அதை ஆசீர்வதித்துவிட்டு செல்கிறார். இப்படியான விடயங்கள் சாயிபக்தர்களுக்கு அடிக்கடி நடப்பவைதான்.

சிலவேளைகளில் இப்படியான சிறிய விடயங்களிலும் தான் யார் என்று சுவாமி காட்டிவிடுவார். கொடைக்கானலில் ஒருதடவை காலை உணவுக்காக மாணவர் மேசையில் உட்கார்ந்திருந்தனர். சுவாமி Head Table இல் இருந்தார். வழமையாக இப்படியான நேரத்தில் உணவு பரிமாறியபின் பிரம்மார்ப்பணம் சொல்லப்படும். அந்நேரம் சுவாமி சிறிது உண்பார். சுவாமியின் உணவு அவ்வளவே. பிறகு மற்ற மாணவர்கள் உண்ணும்போது சுற்றிசுற்றிவந்து அவர்களைக் கவனிப்பார்.

அன்று ஒரு விருந்தாளி வந்திருந்தார். அவர் சுவாமியின் பக்கத்தில் உட்கார்ந்து இருந்தார். Gulgas (எண்ணை இல்லாத சப்பாத்தி) பரிமாறும்போது விருந்தினருக்கு வைக்கும்போது அது மேசையில் விழுந்துவிட்டது. சுவாமி அதை எடுக்காதே என பரிமாறியவருக்கு கூறிவிட்டு தான் அதனை எடுத்து தனது கோப்பையில் வைத்துவிட்டார். பின் எழுந்து மற்றவர்களுக்கு பரிமாறப்படுவதை பார்க்க செல்கிறார். அந்நேரம் சுவாமிக்கு பக்கத்தில் இருந்த பையன் மேசையில் விழுந்த சப்பாத்தியை சுவாமி உண்பது சரியில்லை என நினைத்து அதனை எடுத்து புறம்பாக வைத்துவிடுகிறார். அந்நேரம் சுவாமி திரும்ப தனது இடத்துக்கு வருகிறார். அப்போது சுவாமியின் தட்டில் சப்பாத்தி இல்லை. அந்த பையன் மிகவும் பயந்து போய் உட்கார்ந்திருந்தான். ஏனெனில் சுவாமி எப்படி ஹாஸ்யமாக பழகுகிறாரோ அவ்வளவு கண்டிப்பானவரும்கூட. சுவாமி எம்மை பலமாக திட்டுவதும் உண்டு. கடவுள் இப்படி திட்டுவாரோ என்று நினைக்கும் படியாக அந்த திட்டுக்கள் இருக்கும். ஆனால் அவையும் நன்மைக்கே. ஏனெனில் நமது சுவாமி நமது நன்மையைத்தவிர வேறெதை நினைப்பார். அப்போது சுவாமி தனது தட்டுக்கருகில் வந்து அந்த பையன் எடுத்துவைத்த சப்பாத்தியை மீண்டும் தனது தட்டில்வைத்துவிட்டு I have eyes here also என்று தனது பிடரியை தொட்டுக்காட்டினார். எனக்கு பிடரியிலும் கண் உண்டு என்றார். உண்மையில் சுவாமி அந்த சம்பவத்தை கண்ணால் பார்க்கவில்லை. இது ஒரு சாதாரணமான நிகழ்வு அல்ல. **நீங்கள் ஒவ்வொருவரும் சுவாமியால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.**

ஒரு தடவை மதுரையில் நாம் பேசிவிட்டு புட்டபர்த்திக்கு சென்றோம். அப்போது சுவாமி என்ன பேசினீர்கள் என்று கேட்க நாம் பேசியதை கூறினோம். அதன்பின் சுவாமி ஒருவிடயத்தை கூறி அடுத்த தடவை பேசும்போது இதைகூறு என்றார். அது என்னவென்றால் 1950 களின் இறுதியில் சந்நியாசிகளின் மாநாடு ஒன்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றது. அதற்கு Divine life society எனப்படும் சுவாமி சிவானந்தரின் ஆச்சிரமம்தான் தலைமை தாங்கியது. அதில் சுவாமியும் கலந்துகொண்டார். பின் சிவானந்தரின் வேண்டுகோளின் பேரின் எமது சுவாமி ரிஷிகேசத்துக்கு 1965 அளவில் போயிருந்தார். சிவானந்தர் ஒரு Doctor ஆக இருந்து துறவியாக மாறியவர். இன்று இந்தியாவில் இருக்கும் பெரிய யோகிகளெல்லாம் சின்மயானந்தர் உட்பட சிவானந்தரின் வழிவந்தவர்களே. சுவாமி ஒருவாரம் சிவானந்தரின் ஆச்சிரமத்தில் தங்கி அவருடன் கதைத்து உருத்திராட்சம், விபூதி எல்லாம் உருவாக்கி கொடுத்தார். அந்நேரம் சிவானந்தர் தனது இறுதி நாள்களில் நோய்வாய்ப்பட்டு இருந்தார். ஆனால் அவர் சுவாமி யாரென கண்டறிந்துகொண்டார். பின் சுவாமி புறப்பட்ட சிலநாள் கழித்து அவர் இறையடி சேர்ந்தார். சுவாமி அங்கே தங்கியிருந்தபோது அந்த ஆச்சிரமத்தில் சேவைசெய்து கொண்டிருந்த ஒரு சிறுவன் இவற்றையெல்லாம் காண்கிறார். பின் 1980 களில் அந்த சிறுவன் வளர்ந்து துறவியான பின் அவருக்கு புட்டபர்த்தி சென்று சாயிபாபாவை பார்க்க வேண்டு மென்ற ஆசை எழுகிறது. அதனால் மடாதி பதியின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு புறப்பட ஆயத்தமாகிறார். மடாதிபதி உடனே அனுமதி கொடுக்கவில்லை. அவர் தொடர்ந்து கேட்டதன் காரணமாக 2-3 வருடங்கள் கழித்தே அனுமதி கிடைக்கிறது. அன்று இன்றையது போல் போக்குவரத்து வசதிகள் இல்லை. அவர் ரிஷிகேசிலிருந்து ஹரித்துவார் வந்து பின் டெல்லி வந்து பின் தர்மாவரம் வருகிறார். நீண்ட 5 நாள் பயணத்தின் பின் தர்மாவரம் ஸ்டேசனில் விசாரித்த போது நாளை காலை 4.30 மணிக்கு தான் புட்டபர்த்திக்கு பஸ் இருப்பதாக தெரிந்தது. அக்காலத்தில் தற்போது போல் புட்டபர்த்தியில் ரயில் ஸ்டேசனோ விமான நிலையமோ இல்லை. அதனால் அவர் தர்மாவரம் ஸ்டேசனிலேயே இரவை கழிக்கலாம் என நினைத்து தூங்கிவிடுகிறார். மறுநாள் அதிகாலை வழமைபோல் 3.30 மணிக்கு விழித்து பார்க்கிறார். **அவர் தூங்கிய தர்மாவரம் ஸ்டேசனில் அவர் இல்லை. அவர் ரிஷிகேஷ் ஆச்சிரமத்துக்கே திரும்ப போய்விட்டார்.** அப்போது சுவாமி எங்களுக்கு சொன்ன விடயம் "நீங்கள் தர்மாவரம் ஸ்டேசன்வரை வந்தாலும் நான் அனுக்கிரகிக்காமல் புட்ட பர்த்தியில் கால் வைக்கமுடியாது" என்பதுதான்.

நான் என்னென்ன கதைக்கவேண்டுமென ஆயத்தமாகிக் கொண்டு வரவில்லை. எனக்கு என்னென்ன ஞாபகம் வருகிறதோ அதைத்தான் சொல்கிறேன். நாம் இப்போது அன்பைப் பகிர்ந்து கொண்டிருக்கிறோம். நான் இந்த சம்பவங்களை நினைக்கும்போது எனக்கு என்ன சந்தோஷம் கிடைக்கிறதோ அதேபோல் கேட்கும் உங்களுக்கும் கிடைக்கும். இங்கிருந்து போகும் போது நாம் மனநிறைவோடு செல்லவேண்டும். இன்றைக்கு நினைத்துப் பாருங்கள் எங்கள் கவனத்தை சிதறடிக்க எவ்வளவோபேர் இருக்கிறார்கள். அவற்றில் ஒரு சாயி அவதாரம் வந்துள்ளது என்ற செய்தி எமக்கு எட்டி அதை நம்பி நாம் இன்று சாயிபக்தர்களாக இங்கு வந்திருக்கிறோம். இது ஒரு சாதாரணமான அனுக்கிரகமல்ல. ஒரு அவதாரம் நாம் இருக்கும் காலத்தில் வந்ததோடு மட்டுமல்லாது அவரைப்பற்றி எமக்கு தெரியப்படுத்தி அவர்மீது எமக்கு பற்று வரும்வரைக்கும் எமக்கு அனுக்கிரகம் செய்திருக்கிறார். நீங்கள் ராமகிருஷ்ணரின் சரித்திரத்தைப் படித்திருந்தால் தெரிந்திருக்கும். ராமகிருஷ்ணருடைய சீடர்கள் 12 பேர். அதில் முதன்மையான விவேகானந்தரே இராமகிருஷ்ண மிஷனை முதலில் நடத்தினார். பின் பிரம்மானந்தர் வழிநடத்தினார். எல்லோரும் சாரதாதேவியிடம் தான் தீட்சைபெற்றனர். பிரம்மானந்தருக்கு சாரதாதேவி பிருந்தாவனுக்கு சென்று தியானசாதனை செய்யுமாறு பணித்தார். அவர் அங்கு சென்று தியானம் செய்யும்போது இங்குதான் கிருஷ்ணர் ஓடி விளையாடி யிருப்பார் என்று நினைத்து நினைத்து ஒரு பெரும் ஆனந்தநிலையை அடைவார். அந்த சமாதி நிலையில் இருப்பார். அதுவே அவருக்கு கொடுக்கப்பட்ட சாதனை. நினைத்துப்பாருங்கள், நாம் இப்போது எப்போதோ பிறந்த கிருஷ்ணரை நினைக்கத்தேவையில்லை. வேறு சமயங்களானால் எப்போதோ பிறந்த நடந்த விடயங்களைத்தான் இன்று நாம் பேசுகின்றோம். அந்த



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


வார்த்தைகளை நாம் கேட்டதில்லை. ஆனால் நம்புகிறோம். ஆனால் சுவாமியை நாம் பார்த்திருக் கிறோம். இது எவ்வளவு பெரிய கொடை என்பது எங்களுக்கு தெரியவேண்டும்.

சுவாமியினுடைய பள்ளி மற்றும் கல்லூரிகளில் விளையாட்டுப்போட்டி மற்றைய பாடசாலைகளைப் போலவே நடக்கும். ஜனவரி 11 ஆம் திகதி ஆரம்ப வைபவம் நடைபெற்று 14 ஆம் திகதி இறுதி வைபவம் நடக்கும்.

ஆரம்ப வைபவத்துக்காக வித்தியாசமான நிகழ்ச்சிகளை செய்வதற்காக மாணவர்கள் Christmas இற்குப் பிறகு பயிற்சி செய்வதற்கு ஆரம்பிப்பர். அந் நேரம் சுவாமியும் வந்து பார்வையிடுவார். 1983ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 200-300 மாணவர்கள்தான் கல்வி கற்றுக்கொண்டிருந்தனர். ஒருநாள் அவர்கள் இப்படி பயிற்சியில் ஈடுபட்டிருக்கும்போது சுவாமி வந்தார். அவ்வேளை மாணவர்கள் Arm Wrestling எனப்படும் கையை மடக்கி பலத்தைக் காட்டும் ஒரு விளையாட்டை பயிற்சிக்கு இடையில் இடைவெளிநேரத்தில் செய்து கொண்டிருந்தனர். அது ஒரு மலையடிவாரத்திலிருக்கும் பெரிய Stadium. சுவாமி வந்ததை அவர்கள் கவனிக்கவில்லை. சுவாமி காரில் வந்து இறங்கி அருகில் வர எல்லோரும் நகர்ந்து வழிவிட்டனர். சுவாமி என்ன எல்லோரும் சத்தம்போடுகிறீர்கள் என்று கேட்க அவர்கள் Arm Wrestling செய்கிறோம் என்று சொன்னார்கள். சரி, யார் ஜெயித்தது? என்று சுவாமி கேட்க ஒரு பையன் முன்னால் வந்தான். உடனே சுவாமி நீ என்னுடன் Arm Wrestling செய்கிறாயா? என்று கேட்டார். சுவாமியின் உருவம் மிகச் சிறியது. 5' 3" உருவமுடையவர். சாதாரணமாக அவரைப்பார்த்தால் அவ்வளவு பலசாலியாக தெரியாது. அந்த பையன் வாட்டசாட்டமாக இருந்தான். அதனால் எல்லோரும் வேண்டாம் சுவாமி, வேண்டாம் சுவாமி என்று சொல்கின்றனர். சுவாமி விடவில்லை. பரவாயில்லை. என்னுடன் போட்டிக்கு வா என்று கூறிக்கொண்டே தயாராகிறார். போட்டி படைத்தவனுக்கும் படைப்புக்கும் இடையில் நடக்கிறது. சுவாமியே வெற்றிபெறுகிறார். அந்தப் பையன் விட்டுக்கொடுக்கவில்லை. உண்மையிலேயே சுவாமியே ஜெயிக்கிறார். உடனே அந்தப் பையன் உடனே சுவாமி, நீங்கள் கடவுள் உங்களுடன் போட்டிபோடமுடியுமா என்று சொல்லவும் சுவாமி சொன்னார். நான் கடவுள் என்ற எனது சக்தியை நான் இதற்கு உபயோகிக்கவில்லை. நான் எப்போதும் நல்லதையே நினைக்கிறேன் என்பதனால் எனக்கு வரக்கூடிய பலத்தைத்தான் இங்கு உபயோகப் படுத்தினேன். இதன்போது நமக்கு கிடைக்கும் செய்தி என்னவென்றால் நாம் சிறுபிராயத்தில் இருக்கும்போது கேள்விப்ப ட்டிருக்கின்றோம். உண்மையே பேசி வந்தால் அந்நபர் சொல்வது நடக்கும் என்பது போன்ற அறிவுரைகளை. ஆனால் இப்போது சுவாமி அதை Practical ஆக காட்டுகிறார்.

ஆகவே, இந்தக் காலத்தில் நாம் வாழ்கிறோம். சுவாமியினுடைய போதனைகளை கேட்கிறோம் என்பது அவரது பெருங்கருணை அல்லாது வேறென்ன? சுவாமி சொல்கிறார் நீ என்னை நினைக்கவேண்டுமென்றால் என்னைப் பற்றி அறிய வேண்டு மென்றால் நான் அனுக்கிரகம் செய்தாலேயே அது முடியும். நீ புட்டபர்த்தியில் காலடி எடுத்து வைக்கவேண்டுமென்றால் அதுவும் நான் அனுக்கிரகம் செய்தாலேதான் முடியும். அப்படி எல்லாவற்றுக்கும் அவர் அனுக்கிரகம் செய்யவேண்டும் என்றால் நாம் என்ன செய்யவேண்டும்? நாம் ஒரு சிறிய Step எடுத்து வைக்கவேண்டும். அப்போது சுவாமி எம்மை நோக்கி 100-1000 அடிகள் எடுத்துவைப்பார்.

சுவாமியோடு இருக்கும் சந்தர்ப் பங்களில் சுவாமியோடு சேர்ந்து உணவு உண்ணக்கூடிய தருணங்கள் கிடைக்கும். ஒரு தடவை நான் MBA புட்டபர்த்தியில் படித்துக் கொண்டி ருக்கும்போது சுவாமி பிருந்தாவனில் இருந்தார். ஆகவே அவரைப் பார்க்க பிருந்தாவனுக்கு நாங்கள் புறப்பட்டு போனோம். அங்கு பிருந்தாவன் கல்லூரி யில் மதிய உணவு அருந்தினோம். சிறிது நேரத்தில் சுவாமியிடமிருந்து புட்டபர்த்தி யிலிருந்து வந்த மாணவர்களை மதிய உணவு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்த வருமாறு அழைப்பு வந்தது. நாங்கள் ஏற்கனவே நிறைய உணவு உண்டுவிட்டோம். ஆனால் சுவாமியின் அழைப்பை மறுக்கமுடியாது. சுவாமி உணவு உண்ண அழைத் தாரானால் அதற்குரிய விசேட ஏற்பாடுகளையெல்லாம் செய்வார். விதவிதமான உணவுகளை வருவிப்பார். பெங்களூரில் ஒரு கடையில் Tumbler இட்லி என Tumbler வடிவில் செய்வார்கள். அப்படி Special உணவு களை எல்லாம் எடுத்து வைத்திருந்தார். நாங்கள் சென்றவுடன் உணவு பரிமாறி விட்டு எங்களையே கண்காணித்துக் கொண்டிருப்பார். தட்டில் மிகுதியாக உணவு இருந்தால் ஏன் வைத்திருக் கிறாய் சாப்பிடு என்று சொல்லி உண்ணவைப்பார். அன்று நாங்கள் 2 தடவை மதிய உணவு உண்ண வேண்டியதாகிவிட்டது. எல்லோரும் வயிறு வெடிக்கும்வரை உண்டு விட்டுத்தான் வெளியே வரமுடிந்தது. நாம் சிலவேளைகளில் திருமண வீட்டுக்கு வந்தவர்களை இரண்டாவது தடவை சாப்பிட்டாச்சா என நகைச் சுவையாக கேட்போம். ஆனால் சுவாமியிடம் உண்மையாகவே அப்படி எல்லாம் நடக்கும்.

சுவாமியின் மாணவர்களாக இருப்பவர்களுக்கு ஒரு பழக்கம் இருக்கிறது. அதாவது சுவாமி எம்மை எங்கிருந்து வந்துள்ளாய் என கேட்கும்போது எமது ஊரைச் சொல்லாமல் உங்களிடமிருந்தே வந்துள்ளோம் என்று சொல்லுவார்கள். எனக்கும் அப்படிச் சொல்ல வேண்டு மென்ற ஆசை இருந்தது. ஏனெனில் அதுதான் உண்மை என்பதால். நான் மாணவனாக இருக்கும்போது எங்கிருந்து வந்திருக்கிறாய் என சுவாமி கேட்டார். உடனே திருச்சி சுவாமி என சொல்லிவிட்டேன். பின் சிலநாள்கள் கழித்து மீண்டும் கேட்க மீண்டும் அதே பதில்தான் சொல்லமுடிந்தது. எனக்கு மிக சங்கடமாகிவிட்டது. உங்களிடமிருந்து வந்திருக்கிறேன் என சொல்ல வேண்டுமென்று தயார்படுத்திக்கொண்டு சென்றாலும் சொல்ல முடிய வில்லையே என்று மீண்டும் கவலைப்பட்டு மீண்டும் என்னை தயார்படுத்திக்கொண்டு சென்றேன். ஆனால் சொல்லமுடியவில்லை. இப்படியே 7-8 தடவைகள் நடைபெற்றது. பின் நான் என்னை மிகவும் தயார்நிலையில் வைத்துக்கொண்டு சென்றபோது அதன் பின் சுவாமி கேட்கவேயில்லை. அதாவது சுவாமியின் வேலை எம்மைத் தயார் படுத்துவது தான். நாம் தயாராகிவிட்டோமானால் அவரது வேலை முடிந்துவிடும்.




சுவாமி எங்களுக்கு வெள்ளை உடை அணியச் சொல்லியுள்ளார். ஆனால் அது வெளியே தான். உள்ளேயும் நாம் அப்படி இருக்கிறோமா? என்று பார்க்கவேண்டும். பலர் சந்நியாசி உடை உடுத்தி இருக்கலாம். ஆனால் மனம் சந்நியாசியாக மாறிவிட்டதா? நாம் சாயிபக்தன் என்று சொல்லிக்கொண்டு தினமும் பஜனை பாடலாம். ஆனால் மனம் சாயி பக்தனாக உள்ளதா? என்பதுதான் முக்கியம். மனது சாயிபக்தனாக ஆகிவிட்டால் நாம் எங்கிருந்தாலும் சாயிபக்தர்தான். கொழும்பு சாயிமந்திரின் திறப்புவிழாவின்போது சுவாமியை வருமாறு அழைத்தார்கள். அப்போது சுவாமி சொன்னார். மந்திர் அங்கேயா உள்ளது, அது இங்கல்லவா உள்ளது என்று தனது இதயத்தை தொட்டுக்காட்டினார். நமது ஒவ்வொருவர் மனதிலும் சுவாமிக்கு மந்திர் உள்ளது. சுவாமி பலருக்கு அவர்களது வாழ்க்கையின் தனிப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி தனிப்பட்ட முறையில் பேசுவார். ஆனால் என்னுடன் பேசும்போது நான் ஒருநாளும் தனிப்பட்ட பிரச்சினைகளைப்பற்றி சுவாமியிடம் பேசியதில்லை. ஆன்மீக போதனைகள்தான் பெரும்பாலும் சொல்லுவார். ஒரு தடவை சுவாமி சொன்னார். நீ எங்கிருந்தாலும் என்னை நினைக்கும்போது 15 நிமிடங்கள் கண்ணை மூடிக்கொண்டு எனது உருவத்தை தலையிலிருந்து கால்வரை உன் மனதில் வரைபடமாக வரையவேண்டும். அதாவது "சிரசாதி பாதம்" என்பது நாம் சிவனை வழிபடும் முறை. பின் சுவாமி சொல்கிறார் மீண்டும் எனது பாதத்திலிருந்து தலைவரை 15 நிமிடங்கள் வரையவேண்டும். இது "பாதாதி கேசம்" வரை எனப்படும் பெருமாளை வழிபடும் முறை. இப்படி மேலிருந்து கீழாகவும் திரும்பவும் கீழிருந்து மேலாகவும் 30 நிமிடங்கள் வரைந்தாலே அன்றைய உன்னுடைய பிரார்த்தனை முடிந்துவிடும் என்பது சுவாமியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தை. இது அவர் எமக்கு தரக்கூடிய ஒரு தியானமுறை. நாம் யோகநிலையைப் பற்றிப் பேசும்போது 3 கட்டங்களாக பேசுவோம். முதலாவது Concentration, இரண்டாவது Contemplation, மூன்றாவது Meditation. பதஞ்சலி யோகசூத்திரத்திலேயும் இந்த 3 நிலைகளைப் பற்றிப் பேசியிருப்பார்கள். முதல் நிலையான கவனக்குவிப்பு நாம் சாதாரணமாகவே செய்வோம். உதாரணமாக படிக்கும்போது அருகில் ஏதாவது வைபவத்தில் பாடல் போட்டுக்கொண்டிருந்தால் நாம் அதில் கவனம் செலுத்தாமல் படிப்பில் கவனத்தை குவிப்போம். புலன்களின் போக்கிலே மனதை போகவிடாமல் ஒரு முகப்படுத்துவதே Concentration. ஒருமுகப்படுத்தும் நிலையிலிருந்து உயர்நிலை சிந்தனைகளுக்குச் செல்லல் Contemplation. அதிலிருந்து சிந்தனை அற்ற நிலைக்கு செல்லல்தான் சமாதி. நீங்கள் இராமகிருஷ்ணருடைய சரிதத்தை படித்திருந்தால் அவர் அடிக்கடி சமாதி நிலைக்கு போய்விடுவதை கேள்விப்பட்டிருப்போம். சுவாமி சொல்கிறார் நீங்கள் 12 செக்கன்கள் தான் Concentration செய்யமுடியும். ஏதாவது ஒன்றில் 12 செக்கன்கள் Concentrate செய்து பழகினால் உங்கள் மனக்குவிப்பு வளர ஆரம்பிக்கும். இதை செய்து பழகியபின் 12 X 12 செக்கன்கள் செய்தால் அது Contemplation ஆகவும் 12 X 12 X 12 அதாவது கிட்டத்தட்ட 22 நிமிடங்கள் செய்தால் அது சமாதிநிலை. இதனை தினமும் பயிற்சிசெய்யுமாறு சுவாமி கூறுகிறார். இதனை சுவாமி சொன்னவுடன் நாம் கேட்டோம் சுவாமி உங்களை மனதில் வரைந்து Concentration பழகி இப்படி சாதனை எல்லாம் செய்தால் உங்களை அனுபவிக்கலாம் என்று சொல்கிறீர்கள். அப்போது நீங்கள் இருக்கிறீர்கள் என்று நாம் உணர்வது எப்படி? சுவாமி எங்கும் இருக்கிறார் என்று எமக்குத் தெரிந்திருந்தாலும் நாம் சாதனையின் ஆரம்பத்தில் இருப்பதால் எமக்கு பௌதீகமாக ஏதாவது நடந்தால்தான் அவரை உணரமுடியும். உதாரணமாக விபூதி வருதல். தேன்வருதல், மாலை வளருதல் அப்படியானவை. உடனே சுவாமி அதற்குப் பதில் கூறினார். நீங்கள் வீட்டில் உலை வைத்து சோறு ஆக்கி அதனை 12 மணிக்கு வாசலில் சிறிதளவு வைத்தால் அங்கு தெருவில் செல்லும் நாய் வந்து அதனை உண்ணும். மறுதினமும் 12 மணிக்கு வைத்தோமானால் அது வந்து உண்ணும். அதற்கு அடுத்தநாள் நாம் 12 மணிக்கு தெருவுக்கு சென்று பார்த்தோமானால் அந்த நாய் அங்கு வந்து உணவுக்காக காத்துக் கொண்டிருக்கும். அதாவது 2 ஆம் நாள் உணவு போட்டவுடன் 3 ஆம் நாள் அதே நேரம் ஒரு Dog உன் உணவுக்காக காத்துக் கொண்டிருக்கு மானால் நீங்கள் 2 நாள் பிரார்த்தனை செய்தால் 3 ஆம் நாள் உங்கள் பிரார்த்தனைக்காக அந்த God காத்துக் கொண்டிருக்க மாட்டாரா? உன்னுடைய பிரார்த்தனையால் வரக்கூடிய Bliss is my food. இது நிறையபேருக்கு அனுபவமாயிருக்கிறது. தொடர்ந்த ஒரே நேரத்தில் பிரார்த்தனை செய்துவர சுவாமியிடமிருந்து ஏதாவது ஒரு அனுபவம் கிடைக்கும். நம் சுவாமியிடம் 48 நாள் மண்டலம் போன்ற பெரிய சாதனைகள் எல்லாம் இல்லை. எல்லாவற்றையும் சுருக்கிவிட்டார். 'Regularity is a divine grace'. ஒழுங்குமுறையாக நேரந்தவறாமல் செய்தலே இறையருள். அதாவது இன்று ஒரு பிரார்த்தனை நன்றாக செய்திருக்கிறோமா என்பது நாளை எமக்கு தெரியும். உதாரணமாக சாந்திபவன் என்ற உணவகத்தில் நல் வாசனையான அல்வா போடுகின்றார்கள் என்றால் அந்த வழியால் போகும்போது அதன் வாசனையால் கவரப்பட்டு வாங்கி உண்போம். திரும்பவும் வேறொருநாள் அதேவழியால் செல்லும்போது அந்த அல்வா உண்ணவேண்டும் என்ற எண்ணம் தோன்றும். அதாவது அல்வா ருசியாக இருந்ததால்தான் அடுத்ததடவையும் அதை உண்ணத்தோன்றியது. அதேபோல் பிரார்த்தனையை நாம் ஈடுபாட்டுடன் செய்தால் எமக்கு தொடர்ந்து செய்யத் தோன்றும். அதிகாலை 4.30 மணிக்கு நாம் ஒருநாள் பிரார்த்தனை செய்தால் அடுத்தநாள் 4.30 மணிக்கு பிரார்த்தனை செய்யவேண்டுமென்று தோன்றினால் முதல்நாள் பிரார்த்தனையை நாம் ஈடுபாட்டுடன் செய்துள்ளோம் என்று அர்த்தம். **பிரார்த்தனையினது தரம் இப்படித்தான் அளக்கப்படுகிறது.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியினுடைய ஒன்பது ஒழுக்கக் கோவையில் முதலாவது அதிகாலைப் பிரார்த்தனை செய்தல். தினசரி 6 மணிக்குமுன் இந்தப் பிரார்த்தனை முடிக்கப்படவேண்டும் என்று சுவாமி சொல்கிறார். பிரார்த்தனையின் மூலம் சுவாமியுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆன்மீகத்தின் ஆரம்பநிலை சுமுகமாக இருக்கும். ஆனால் Transformation என்று வரும்போது எமது வாழ்க்கையில் நிறைய விடயங்களை எதிர்நோக்க வேண்டிவரும். அப்போது பிரார்த்தனையானது எமது வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளைத் தாங்கும் மனதை உருவாக்கும் என சுவாமி கூறுகிறார்.

நாம் ஆன்மீகத்தில் முன்னேறிச் செல்லும் போதும் எமது வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வுகளைச் சந்திக்க வேண்டிவரும். ஆனால் அப்போது நாம் அவற்றை சுவாமியின் உதவியுடன் ஏற்றுக் கொள்ளப் பழகி விடுவோம். Self Confidence என்பதற்கு சுவாமி சொல்லும் விளக்கம் Faith in God is self Confidence அதாவது எனது அகங்காரத்தின் மீதுள்ள ஆற்றல்மேல் வைக்கும் நம்பிக்கை சுயநம்பிக்கை அல்ல. நான் இறைவன் என்ற எனது இறைதன்மையின் மேலுள்ள ஆற்றலில் வைக்கும் நம்பிக்கையே சுயநம்பிக்கை. முதலில் நாம் சுவாமியின் மேல் நம்பிக்கை வைப்போம். பின் சுவாமி எனக்குள் இருக்கிறார் என்ற நம்பிக்கை வரும். பின் சுவாமிக்கும் எனக்கும் பிரிவு இல்லை என்ற நம்பிக்கை வரும். சுவாமி நிறைய உரைகள் மூலம் எமக்கு பல புத்திமதிகளை கூறியுள்ளார். பின் எமது வாழ்க்கையில் சில சந்தர்ப்பங்களில் வாழ்க்கை எம்மைக் கேள்விகள் கேட்கும். இந்த சந்தர்ப்பத்தில் உன்னால் உண்மைபேச முடியுமா? அன்போடு நடக்கமுடியுமா? அமைதியாக இருக்கமுடியுமா? என்ற தருணங்கள் வரும்போது நாம் சுவாமியை நினைத்து அவரது உதாரணங்களை உரைகளை நினைவுபடுத்தி அந்த சந்தர்ப்பத்தில் எப்படி நடக்கவேண்டுமென்பதற்கு விடைகாணவேண்டும். சுவாமியின் Interview களில் அவர் சொல்வதை நாம் உடனே எழுத ஆரம்பிப்போம். உடனே சுவாமி அதை நிறுத்தச்சொல்லி உன் இதயத்தில் எனது உரைகளை எழுதிவை என்று கூறுவார். அந்த உரைகள் மூலம் எமது வாழ்க்கை கேட்கும் கேள்விகளும் சவால் களுக்கும் எம்மால் முகம் கொடுக்க முடியும்.

ஒன்பது ஒழுக்க கோவைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்றால் அதில் முதலாவதாக உள்ள அதிகாலை பிரார்த்தனை என்பதை கட்டாயம் செய்யவேண்டும். முதலாவது செயற்பாட்டை செய்யாத ஒருவன் மற்றைய செயற்பாடுகளையும் செய்யமாட்டான். ஒன்பது ஒழுக்கக்கோவை என்பது தனிமனிதர், குடும்பம், நிறுவனம் எல்லாவற்றுக்கும் ஒழுக்கசெயற்பாடுகளைக் கொண்டது. எந்தக்குடும்பம் ஒன்றாக பிரார்த்தனை செய்கிறதோ அந்தக்குடும்பம் நெருங்கிய தொடர்பைக் கொண்டதாக இருக்கும். சுவாமிக்கு பிரார்த்தனை அதிகாலையில் செய்யவேண்டியது முக்கியம். அது ஈடுபாட்டுடன் இருக்கவேண்டும். அதற்கான எளிய வழிகளையும் சொல்லியுள்ளார். அதற்கு ஒரு உறுதியும் சுவாமி கொடுக்கிறார். நீங்கள் 2 நாள் ஈடுபாட்டுடன் பிரார்த்தனை செய்தால் 3 ஆம் நாள் நான் அங்கு இருப்பேன். ஆகவே பிரார்த்தனை மூலம் சுவாமியுடன் உறவை ஏற்படுத்திக்கொள்வது மிக முக்கியமாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. விஜயகிருஷ்ணன் அவர்களது உரை 25.06.2017 திகதி காலை :

ஓம் ஸ்ரீ சாயிராம்! அனைவருக்கும் வணக்கம், சுவாமி சொல்லும் ஒரு கதையுடன் இந்த உரையாடலை ஆரம்பிப்போம். ஒரு அரசசபைக்கு பொம்மைகள் செய்யும் ஒருவன் வந்து மன்னனிடம் 3 பொம்மைகளைக் கொடுத்து அதில் ஒன்றைத்தெரிந்து எடுக்குமாறு கூறுகிறான். உடனே மன்னன் மந்திரியை அழைத்து சிறந்த பொம்மையைத் தேர்ந்தெடுக்குமாறு கூற அவரும் ஒரு நூலை எடுத்து 3 பொம்மைகளுக்கும் அவையின் காதுகளில் நுழைத்துப்பார்த்தார். இரண்டு பொம்மைகளில் அவர் நுழைத்தநூல் மற்றைய பக்கத்தால் வெளியே வந்துவிட்டது. ஒரு பொம்மைக்கு மட்டும் அது வெளியே வரவில்லை. உடனே அந்த மந்திரி அப்பொம்மையைத் தெர்ந்தெடுத்துக்கொடுத்து அதற்கான காரணமும் கூறுகிறார். அதாவது மற்றைய பொம்மைகள் தாம் கேட்டதை விட்டுவிடும். இப் பொம்மை மாத்திரமே கேட்டதை மனதில் உள்வாங்கி வைத்திருக்கும் என்று கூறினார். மன்னரும் பாராட்டி பரிசில்கள் வழங்கினார். இந்த பொன்விழா நிகழ்வில் இரு தடவைகள் உரையாடியிருக்கின்றேன். அவை உங்களின் மனதில் தங்கியிருக்கும் என்ற நினைவில்தான் நான் இன்று உங்களுடன் பேச வந்துள்ளேன்.

கடந்த உரையாடல்களில் அன்பான, எப்போதும் இருக்கக்கூடிய எதைக்கேட்பினும் அளிக்கக்கூடிய சுவாமியைப் பற்றியே பேசினோம். ஆனால் சுவாமியுடனான எமது தொடர்பு எப்போதும் இதேபோல் இருப்பதில்லை. பிரார்த்தனை என்பது எமது வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகளை சமமாக ஏற்றுக் கொள்ள உதவும் என்று கூறியிருந்தேன். இந்த சமிதி 1967களில் ஆரம்பிக்கப்பட்டது. எனில் அக்காலத்தில் சுவாமியை அவதாரம் என உணர்ந்து மிகக் கடினமான பிரயாணத்தை மேற்கொண்டு அவரைச் சென்று பார்த்திருக்கிறார்கள். தற்போது நாம் சுவாமியின் உருவத்தைப் பார்த்து அவரை ஒரு அவதாரம் என்று ஏற்றுக்கொள்வது சுலபம். ஏனெனில் அவரொரு பெரியவர் போல காவிபோன்ற அங்கியை அணிந்து காட்சிதருகிறார். ஆனால் 1950 களின் இறுதியிலே அவர் இளைஞர். அப்போதுதான் அவர் நீள அங்கி அணிய ஆரம்பித்தார். தலையை வகிடு எடுத்து வாரியிருப்பார். அப்படியான ஒருவரை அவதாரம் என்று உணர்ந்து தம்மை ஒப்படைப்பது என்பது இலகுவான காரியமல்ல. ஆனால் அந்நாட்களில் இங்கு நடைபெற்றுள்ளது. அப்படியான பெரியவர்கள் வழிகாட்டிய சமிதி இது. அத்துடன் கடந்த 20 வருடங்களாக பல துன்பங்களையும் நேரடியாக சந்தித்துள் ளீர்கள். மகா பாரதப்போர் முடிவுற்றபின் கிருஷ்ணர் குந்திதேவியிடம் அவருக்கு தற்போது என்னவேண்டும் என்று கேட்கிறார். அதற்கு குந்திதேவி தனக்கு மேலும் கஷ்டத்தை கொடுக்குமாறு வேண்டினார். ஏனென்று கிருஷ்ணர் கேட்ட தற்கு துன்பம் இல்லையென்றால் தான் கிருஷ்ணனை மறந்துவிட சாத்தியம் உள்ளது. ஆகவே எப்போதும் அவரை நினைத்துக்கொண்டிருப்பதற்காக தனக்கு துன்பங்களைத் தரவேண்டும் என்று கூறுகின்றார். அந்த வகையில் பார்க்கும்போது நீங்கள் பாக்கியசாலிகள். எப்போது இடர்பாடுகள் இருக்கும்போது நாம் சுவாமியை நினைக்கிறோமோ அப்போது அவர் எம்முடன் மிக நெருக்க மாக இருக்கிறார். இந்தக்காலத்தில் நாம் இலகுவான வசதியான பிரயாணத்தின் மூலம் புட்டபர்த்தியை அடையமுடியும். ஆனால் 1950களில் புட்டபர்த்தி பிரயாணம் என்பது மிகக் கடினமான ஒன்று நீண்ட ரயில் பிரயாணம் ஒன்று மேற்கொண்டு பெனுகொண்டா என்ற நிலையத்தில் இறங்கி பின் பஸ்ஸில் இறங்கி புக்க பட்டினம் சென்று பின் மாட்டு வண்டியில் சித்திராவதி நதியைக் கடந்து செல்ல வேண்டும். அன்றை நாட்களில் பிரசாந்தி நிலைய கட்டடம் கட்டப்படவில்லை. தற்போது கல்யாண மண்டபம் என்று கூறப்படும் பழைய மந்திர் அல்லது பாத மந்திர் எனப்படும் ஒரு மண்டபம் மாத்திரமே இருந்தது. அதில் ஒரு புறம் திரையிட்டு மறைத்து சுவாமியின் தங்கு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடம் அமைக்கப்பட்டிருந்தது. ஏனையவர்கள் அம்மண்டபத்தில் வரிசையாக தமது சமையல்பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களுடன் தங்கியிருப்பார். இப்படியான ஒரு நாளில் இரவு 11 மணியளவில் சுவாமி ஒரு குடும்பத் தலைவியிடம் வந்து தனக்கு பசிக்கிறது என்றும் தோசை வார்த்துக்கொடுக்குமாறும் கேட்டார். அதற்கு அந்த அம்மையார் தற்போது எழுந்து சமைக்க ஆரம்பித்தால் அந்த சத்தத்தில் எழுந்து விடுவார்களே என்று கூறவும் சுவாமி அப்படி நடைபெறாது என்று உறுதிகூறுகிறார். அந்தப் பெண்ணும் தோசை சுடுகிறார். ஆனால் எந்தச் சத்தமும் ஏற்படவில்லை. இப்படியாக ஒரு சிறிய விடயத்திலும் அவர் அற்புதங்களைக் காட்டிக்கொண்டிருந்த காலம் அது. அப்போது துணிமணிகளை எடுத்துச்செல்ல இரும்பு சூட்கேசுகளை பயன்படுத்துவர். அதில் சுவாமி வந்தமர்ந்து அந்த மக்களுடன் அளவளாவிக் கொண்டிருப்பார். அவ்வளவு இலகுவாக சுவாமியின் அணுக்கம் கிடைக்கக் காரணம் அந்த மக்களின் இடர்பாடுகள்தான்.

புட்டபர்த்தியில் சுவாமியின் பிரத்தியேக உதவியாளராக இருந்த சத்யஜித் என்பவரை பலர் அறிந்திருக்கலாம். அவர் சுவாமியின் உதவியாளராகிய ஆரம்ப கட்டத்தில் ஒருநாள் சுவாமியுடன் வெளியே காரில் பிரயாணித்துக் கொண்டிருந்தபோது அவரிடம் சுவாமி அவருக்கு எந்தக் கடவுளின் உருவத்தைப் பார்க்க விரும்புகிறாய் என்று கேட்டார். அவரும் யோசித்துவிட்டு பகவத்கீதையில் 10 ஆம்



அத்தியாயத்தில் கிருஷ்ணர் அருச்சுனனுக்கு காட்டும் பிரபஞ்சத்தை தன்னுள் அடக்கிய விராட்ஸ்வரூபம் எனப்படும் வடிவத்தை காட்டுமாறு கேட்டார். உடனே அவரை யன்னல் வழியாக வெளியே பார்க்கச் சொன்னார். அங்கே சாதாரணமாக தெரியக் கூடிய இயற்கைக்காட்சிகளே தெரிந்தன. உடனே சுவாமி அற்புதம் செய்யாமல் ஒரு போதனையைக் கொடுத்தார். **"நீ பார்க்கும் யாவும் நானே. அது நானே என்று உனக்குத் தெரியவேண்டுமானால் நீ பார்க்கும் பார்வையில்தான் உள்ளது"**என்பதே அதுவாகும்.

மதுரையிலுள்ள சாயி சமிதியை உருவாக்கப் பாடுபட்ட செட்டியார் ஒருவர் இருந்தார். அவர் ஒரு தடவை சுவாமியுடன் காரில் சென்றுகொண்டு இருக்கும்போது சுவாமி திடீரென காரை நிறுத்தச்சொல்லி செட்டியாரை கீழே இறங்கி ஒரு கல்லை எடுத்துவரச்சொன்னார். அவர் இறங்கிச்சென்று எடுத்துவந்தபோது சுவாமி "இந்தக் கல் உன்னுடன் பேசுமா?" என்று அவரைப் பார்துக் கேட்டுவிட்டு "நீ அது பேசும் என்ற நம்பிக்கையுடன் பேசினால் அது உன்னுடன் பேசும்" என்று ஒரு போதனையைக் கொடுத்தார்.


சுவாமி இப்படியான லீலைகள் புரிந்து கொண்டிருந்தாலும் அவர் எப்போதும் அப்படி இருப்பதில்லை. சத்யஜித் 1996இல் தனது MBA பட்டத்தை முடித்துவிட்டு சுவாமியின் பிரத்தியேக உதவியாளராக சேர்ந்தார். ஒரு வருடமாக சேவை செய்துவந்தார். திடீரென ஒருநாள் சுவாமி அவருடன் கதைப்பதை நிறுத்திவிட்டார். சத்யஜித் சுவாமிக்குரிய சேவைகளை தொடர்ந்து செய்துவந்தார். அவருக்கு வெளியுலகத் தொடர்பு எதுவுமே இல்லை. சுவாமியைப் பார்ப்பதற்கு வருபவர்களும் அவருடன் பெரியளவில் கதைப்பதில்லை. சுவாமியுடன் ஒரே அறையில் தங்கியிருந்தார். ஆனால் சுவாமி அவருடன் கதைப்பதில்லை. அவர் சுவாமிக்கு கடிதம் எழுதிக் கொடுத்தாலும் அதை வாங்குவதில்லை. இப்படியாக 3 வருடங்கள் சுவாமி அவருடன் கதைக்காமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கிறார், எனில் அந்த வாழ்க்கையின் கடினத் தன்மையை எண்ணிப்பாருங்கள். சுவாமியுடன் நாம் இணைப்பில் இருப்பதென்பது அவ்வளவு இலகுவான விடயம் அல்ல. கொழும்பிலிருந்து யாழ். வரும் புகைவண்டி என்ஜினுடன் நாம் இணைந்து விட்டோமெனில் அந்தப் புகைவண்டி எவ்வளவு குலுக்கினாலும் நாம் சகித்துத்தான் ஆக வேண்டும். அது கஷ்டம் என நாம் புகைவண்டியை விட்டு இறங்கி விட்டால் நாம் இலக்கை சென்றுசேரமுடியாது. **ஆரம்பத்தில் சுவாமியின் அற்புதங்கள் வாழ்க்கையில் ஆனந்தத்தை தரும். ஆனால் பிறகு எமது வாழ்க்கையை புடம்போடுவதற்காக கடினப்படுத்துவார்.**

கஸ்தூரி என்பவர் சுவாமியின் பிரத்தியேக செயலாளராக இருந்தவர். சுவாமிக்கு அருகிலேயே வாழ்ந்துவந்தார். அவருடைய பெண்பிள்ளைக்கு சுவாமியே மணமகன் தேடி திருமணம் செய்துவைத்தார். ஆனால் திருமணத்தின்பின் அவரது வாழ்க்கை நன்றாக அமையவில்லை. கணவருடன் பிரச்சனை ஏற்படும்போதெல்லாம் கடிதம் எழுதுவார். உடனே சுவாமி அவரை புட்டபர்த்திக்கு அழைத்து சிலநாள் தங்கவைத்து பின் மீண்டும் அனுப்பிவைப்பார். இப்படியாக 30 வருடங்களாக தொடர்ந்துவந்தது. ஒருநாள் அந்தப்பெண் சுவாமியை திட்டி கடிதம் எழுதி விட்டார். தனது பொருத்தமான ஒரு மணமகனை தேர்ந்தெடுக்கவில்லை என்று ஆதங்கப்பட்டிருந்தார். பின்தான் செய்த தவறுக்கு வருந்தி சுவாமியிடம்வந்து பிரசாந்தி நிலையத்தில் சுவாமி அப்போது வாழ்ந்த இடது பக்க அறைக்கு வெளியே இருந்த ஒரு மரத்தின்கீழ் அழுதுகொண்டு இருந்தார். சுவாமி அவரை உள்ளே அழைத்து சுவாமி ஒரு போதனையைக் கொடுக்கிறார். "நீ ஏன் கவலைப்படுகிறாய். என்னுடைய பார்வையிலேயே உனக்கு முன்னால் நான் இருக்கும்போதே உன்னுடைய கர்மாக்களை கழித்து விடு. நான் உன்னைக் கைவிடமாட்டேன்" என்று அவர் உறுதி கூறினார்.

சுவாமி எப்போதும் எல்லோருக்கும் சமமான விடயங்களில்கூட ஒரே மாதிரிப் பதிலளிப்பதில்லை. ஒருவருக்கு கண் சத்திரசிகிச்சை செய்வதற்காக விபூதியை தொலைபேசியினூடாக வர்ஷித்து ஆசீர்வாதம் அளித்ததை முன்பு கூறியிருந்தேன். 1950 களின் இறுதியிலே புட்டபர்தியில் 30 குடும்பங்கள் வரையிலேயே தங்கியிருந்தனர். அப்போது ஒருநாள் அவர்கள் எல்லோரும் இரவு உணவை தமது வீடுகளில் சமைத்து எடுத்துக்கொண்டு பிரசாந்திநிலைய மேல் மொட்டை மாடியில் நிலா ஒளியில் சுவாமியுடன் இரவு உணவு அருந்த ஆயத்தமானார்கள். அப்போது கீழே ஒரு வீட்டிலிருந்து ஒருவர் வயிற்றுவலியால் அலறும் சத்தம் கேட்டது. உடனே கீழே இறங்கிவந்து அவரை தமது காரில் ஏற்றிக்கொண்டு பெங்களூருக்கு புறப்பட்டுப் போய் அங்கு சாயி பக்தரான ஒரு வைத்தியரின் உதவியுடன் வைத்தியசாலையில் நோயாளியைச் சேர்த்துவிட்டு மீண்டும் இரவு 11.30 மணிபோல் பெங்களூரிலிருந்து புட்டபர்த்திக்கு புறப்பட்டு வந்து சேர்ந்தார். கிட்டத்தட்ட 3 மணிநேரம் அந் நோயாளியை துன்பத்தை தாங்க வைத்துள்ளார். எல்லா விதமான அற்புதங் களையும் நொடியில் செய்யக்கூடியவரும் பிரபஞ்சத்தை தன்னுள் அடக்கியவரும் யாருக்கும் எந்நேரத்திலும் எங்கும் தோன்றி என்ன வேண்டுமெனிலும் கொடுக்கக்கூடியவரும் முக்காலத்தையும் கடந்தவரும் எந்த இறைவனின் நாமத்திலும் நாம் அழைத்தாலும் உடனே பிரசன்னமாகக் கூடியவருமான அந்த சாயி அவதாரம் இந்த நோயாளியின் விடயத்தில் உடனே விபூதியை சிருஷ்டித்து குணமாக்க வில்லை. **அவருடைய வழிமுறைகள் தனித்துவ மானவை.** அவற்றை நாம் கேள்விக்குட் படுத்த முடியாது. அதற்கான பதில் சுவாமியிடம் மட்டுத்தான் இருக்கும். ஆனால் **அவர் நம்மை கைவிடப் போவதில்லை என்ற நம்பிக்கை மட்டும் தான் எம்மிடம் இருக்கவேண்டும்.** இதுதான் முக்கியமான விடயம். வாழ்க்கை என்பது எப்போதும் இனிப்பாக இருந்துவிடாது. வாழ்க்கை பலவித சுவைகளையும் எமக்குத் தரும். அவற்றை நாம் ஒரே பக்குவத்துடன் அனுபவிப்பதற்காகத்தான் சுவாமி இப்படி வெவ்வேறு விதமான அனுபவங்களை எமக்குத் தருகிறார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971 இல் அகில உலக சத்திய சாயி நிறுவனங்களுக்கான மாநாடு ஒன்றை சுவாமி நடாத்தினார். அதில் மூன்று விடயங்களை சுவாமி பிரகடனப் படுத்தினார். நிறுவன அங்கத்தினர்களாக உள்ளோர், சத்தியசாயி நிறுவனம் யாருடையபெயரால் உருவாக்கப்பட்டதோ அவருடைய உருவம் மற்றும் நாமத்தின் மேல் முழு நம்பிக்கை இருக்கவேண்டும். அதாவது நாம் பகலில் எங்கு சென்றாலும் இரவு வீட்டுக்கு வருவதைப் போல நிறுவன அங்கத்தினருக்கு வேறு இடங்களுக்கு சென்றாலும் சத்திய சாயியின் உருவத்திலும்: நாமத்திலும் மட்டுமே முழு நம்பிக்கை இருக்கவேண்டும். இந்த நிறுவனத்தின் கோட்பாடுகளில் அங்கத்தவருக்கு முழு நம்பிக்கை இருக்க வேண்டும். அவர்கள் வேறு நிறுவனங் களில் பொறுப்புகள் எடுக்கக் கூடாது. இது ஒரு ஆன்மீக நிறுவனம். சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. அதாவது நாம் சேவையில் ஈடுபடுகிறோம் என்றால் அதன்நோக்கம் ஆன்மீகமாகும்.

நாம் சுவாமியிடம் முழு நம்பிக்கை வைத்து சத்திய சாயி நிறுவனத்துக்கு வந்துவிட்டோம் என்றால் அவருடைய கோட்பாடுகளில் முழு நம்பிக்கைவைத்து ஆன்மீக நோக்கோடு சேவை செய்ய வேண்டும். மற்றைய நிறுவனங்களும் சேவையில் ஈடுபட்டாலும் எமது சேவை நோக்கு ஆன்மீகமே. நமக்கு 5 வயதில் இனிப்புகள் மீது ஆசை இருக்கலாம். 15 வயது வரும்போது கல்வி, 25 வயதில் தொழில், 35 வயதில் குழந்தைகள் 45 வயதில் குழந்தைகளின் தேவைகள் என எமது ஆசை மாறிக்கொண்டே இருக்கும்.





ஆனால் அடிப்படையில் எப்போதும் எமக்கு ஒரு ஆசை இருந்துகொண்டே இருக்கும். அந்த ஆசைதான் எமது 6 எதிரிகளான காம, குரோத, லோப, மோக, மத, மாச்சர்யங்களுக்கு காரணம். நாம் ஏன் சாயி நிறுவனத்தில் இணைந்து இருக்கிறோம் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். சாயி நிறுவனத்தில் நாம் இருக்கிறோம் என்றால் **எமது இலக்கும் நிறுவன இலக்கும் ஒன்றாக இருக்கவேண்டும்.** அப்போதுதான் இந்த நிறுவனத்தில் நாம் இருப்பதற்கான முழு பயனை அடையமுடியும்.

கஸ்தூரி அவர்கள் சுவாமியினுடைய பிரத்தியேக செயலாளராக இருந்த ஒரு காலகட்டத்தில் சுவாமி வழமையாக சித்திராவதி நதியின் மணற் படுக்கைக்கு சென்று அங்கு மணலில் கையை நுழைத்து கடவுள் விக்கிரகங்கள், அமிர்தம் போன்றவற்றை எடுப்பார். அத்துடன் வேறு பல அற்புதங்களையும் நிகழ்த்துவார். அக்காலகட்டத்தில் ஒருநாள் சுவாமியுடன் சித்திராவதி மணற்படுக்கைக்கு செல்ல எல்லோரும் ஆயத்தமாக உள்ளபோதும் அன்று சுவாமி வெளியே வரவில்லை. உடனே பக்தர்கள் கஸ்தூரி அவர்களிடம் சென்று சுவாமிக்கு ஞாபக மூட்டும்படி கோரினர். அவரும் சுவாமியை சித்திராவதி மணற்படுக்கைக்கு அழைக்க சென்று கேட்டபோது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ஏன் சித்திராவதிக்கு செல்வவேண்டும் என்று கேட்டார். கஸ்தூரி அவர்களுடைய மனதில் சுவாமி யுடன் மணற்படுக்கைக்கு சென்றால் அற்புதங்களைப் பார்க்கலாம் என்ற நினைவு இருந்தபோதும் அதைக்கூறாது பிரசாந்தி நிலைய முற்றத்திற்கோ அல்லது மொட்டைமாடிக்கோ செல்லலாமே என்று மீண்டும் கோருகிறார். உடனே சுவாமி "எனக்கு அற்புதங்கள் செய்வதற்கு சித்திராவதி மணலோ பிரசாந்தி நிலைய மொட்டை மாடியோ தேவை என நீ நினைக்கிறாயா? அப்போது இவ்வளவு நாட்களாக நான் ஏன் அற்புதங்கள் செய்கிறேன் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவில்லை அல்லவா?'' என்று ஆதங்கப்பட்டார்.

மேலும் சுவாமி சொல்கிறார், **"நீங்கள் ஆசைப்படுவதை நான் உங்களுக்கு தருகிறேன். ஏனெனில் ஒருநாள் நான் கொடுக்கவந்ததை நீங்கள் ஆசைப்படுவீர்கள்''** அதாவது நாம் இப்போது அற்புதங் களுக்காக ஆசைப்படுகிறோம். ஆனால் என்றோ ஒருநாள் பக்குவம் அடைந்து சுவாமி எதைக் கொடுக்க வந்தாரோ அதைக்கேட்க நாம் தயாராவோம். சுவாமி எதைக்கொடுக்க வந்தார்? சுவாமியின் உரைகளை கேட்போமானால் அவர் அடிக்கடி சொல்வது இந்த வாழ்க்கைக்குப் பின் உனக்கு வேறோர் வாழ்க்கை அமையக்கூடாது என்பதே. உனது நோக்காக அது இருக்கவேண்டும் என்று சுவாமி கூறுகிறார். இனிப் பிறவாத நிலையை வரமாக சுவாமியிடம் வேண்ட நாம் இப்போது பக்குவப்பட்டு இருக்கிறோமா எமது தற்போதைய தேவை அல்லது ஆசை அதுவாக உள்ளதா? இந்த Self Realization எமக்கு ஏற்பட்டுள்ளதா **எனது இலக்கும் சுவாமியின் இலக்கும் ஒன்றாக உள்ளதா என அடிக்கடி பரிசோதிக்கவே நாம் சாயி நிறுவனத்தில் இருக்கிறோம்.** இங்கு இருக்கும்போது பலரது பேச்சுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளில் பங்குபற்றும் போது எமது அகங்காரத்தின் மேல் விழும் ஒவ்வொரு அடிகளாக அவை அமையும். அதனால் ஒருநாள் அந்த அகங்காரம் உடைந்து உள்ளிருக்கும் ஆன்மதத்துவம் வெளியே வரும். சாதாரணமாக அற்புதங்களைப் பற்றி உரையாடும்போது நாம் ஆர்வமாக கேட்போம். ஆனால் ஆன்மதத்துவங்களைப் பற்றி பேசும்போது அவ்வளவு ஆர்வம் இருப்பதில்லை.

ஒரு தடவை நாம் புட்டபர்த்தியில் மாணவனாக இருந்தபோது இந்துலால்ஷா அவர்கள் ஒரு மத்தியான நேரம் வந்து எமக்கு 50 நிமிடங்கள் ஆன்மதத்துவத்தைப்பற்றி பேசினார். எமக்கு அது உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்க வில்லை. ஏனெனில் நாம் அப்போது அதற்கு பக்குவப் பட்டிருக்கவில்லை. ஆனால் சுவாமி மறுதினமும் அவரை அழைத்து மீண்டும் எம்முன் ஒருமணிநேரம் ஆத்ம தத்துவத் தினைப் பற்றி விளக்குமாறு கூறினார். சுவாமி தனது நோக்கில் மிக உறுதியாக இருக்கிறார். நாம் அவரை நம்பி வந்து விட்டால் அவர் தனது இலக்குக்கு எம்மை அழைத்துச்சென்றே தீருவார். எமது காலில் நூலைக் கட்டி வைத்து எங்கு சென்றாலும் இழுத்து தனது நல்வழியல் எம்மை அழைத்துச் செல்வார். ஒரு தடவை புட்டபர்த்தியில் ஒரு பையனுக்கு சுவாமி விபூதி சிருஷ்டித்துக் கொடுத்து அபிஷேக நீரையும் கொடுத்து அவனது தாய்க்கு கொண்டுசென்று கொடுக்கும் படியும் அவர் விரைவில் அவரது நோயிலிருந்து விடுபடுவார் என்றும் கூறியனுப்புகிறார். பின் எங்களைப் பார்த்து "அந்த மாணவன் என்மீது வைத்த நம்பிக்கையால் நான் அவனை மட்டுமல்ல அவனது தாயையும் காப்பாற்றுகிறேன்'' என்று கூறினார். அத்தோடு மேலும் **"நீ என்மேல் நம்பிக்கை வைத்தால் உன்னை மட்டுமல்ல உன் சந்ததிகளையும் நான் காப்பாற்றுவேன்"** என்று உறுதி கூறுகிறார். இப்படியான சம்பவங்களைக் கேட்கும் போது அதன் முக்கியத்துவம் புரிவதில்லை. ஆனால் வாழ்க்கையில் இப்படியான தேவை ஒன்று வரும்போது தான் சுவாமியின் அனுக்கிரகத்தின் பூரணத்துவம் புரியும். பேராசிரியர் அனில்குமார் அவர்கள் ஒருதடவை சுவாமியிடம் இந்த உலகிலே பல இடங்களில் பல பிரச்சினைகள், போர்கள் எல்லாம் நடைபெறுகின்றனவே அவை எல்லாம் எதற்காக? என்று கேட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு சுவாமி உலகிலே எந்த ஒரு பிரச்சினையும் இல்லாவிட்டால் என்னை நீ மறந்துவிடுவாயே என்று கூறினார். இறைவன் வெயிலை கொடுத்ததாலேயே மரநிழலின் அருமை எமக்கு புரிகிறது. அதேநேரம் சுவாமி எமக்கு கூறுவது நீங்கள் என்னிடம் வரும்போது **உங்களது கர்மங்களை நாணயங்களாக சுமந்துகொண்டு வருகிறீர்கள். நான் அதை உங்களுக்கு ஒரு தாள் காசாக மாற்றி வழங்குகிறேன்.** ஒரு ரூபாய் நாணயங்கள் 1000 த்தினை சுமந்துவந்த நீங்கள் தற்போது 1000 ரூபாய் தாள் காசினை என்னிடமிருந்து பெற்றுக்கொள்கிறீர்கள். உங்களிடம் இருப்பது அதேயளவு கர்மாவே. ஆனால் அதன்சுமை உங்களிடம் இல்லை. எமது வாழ்க்கை யில் இடர்பாடுகள் பல வரலாம். ஆனால் அவற்றின் சுமை எம்மை பாதிக்கா திருக்குமாறு சுவாமி எங்களைக் காப்பாற்றிக் கொண்டிருப்பார். உலகியல் ஏற்றத் தாழ்வுகளைப் பற்றி சுவாமியை அணுகி கேள்விகேட்கும் போது அதை அவர் கவனிப்பதில்லை. ஆனால் ஆன்மீக விடயங்களைப் பற்றிய எமது சந்தேகங் களை சுவாமி கட்டாயம் தீர்த்துவைப்பார். உலகியல் விடயங்களை அவர் பொருட்டாக மதிப்பதில்லை. ஆனால் நாம் எமது உலகியல் ஆசைகளைத் தீர்த்து வைக்குமாறு அவரிடம் கேட்கிறோம். அவரும் அதை தீர்த்துவைக்க அற்புதங்கள் புரிகிறார். ஏனெனில் அவர் எமது கொடுக்க வைத்திருக்கும் பிறவாத வரத்தை நாம் அவரிடம் கேட்கவேண்டும் என்பதற்காகவே. ஆகவே நாம் சத்திய சாயி நிறுவனத்தில் இருக்கின்றோம் என்றால் சுவாமியுடைய இலக்கும் எமது இலக்கும் ஒன்றாக இருக்க வேண்டும். நாம் இலக்கை அடைவதற்காக தேர்ந்தெடுத்த இந் நிறுவனத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும்.

கொடைக்கானலில் சுவாமி ஒரு தடவை வந்து தங்கியிருந்தபோது மாணவர்கள் அவரைச் சுற்றி உட்கார்ந் திருந்தனர். அப்போது மாணவர்கள் சுவாமியிடம் "பகவத் கீதையை கிருஸ்ணர் ஏன் அருச்சுனருக்கு சொன்னார்?" என்று கேட்டனர். உண்மையில் பாண்டவர்களில் சிறந்தவர் யார் என்றால் அனேகருடைய பதில் தருமன் என்பதாகத்தான் இருக்கும். சிறந்த ஒருவருக்குத்தானே ஆன்மீக உபதேசமான பகவத்கீதை சொல்லப் பட்டிருக்க வேண்டும். ஏன் அதை அருச்சுனனுக்கு சொல்லப்பட்டது என்பதுதான் அவர்களது கேள்வி. அதற்கு சுவாமி "அர்ச்சுனன் பூர்வாதாபி, தருமன் பஸ்யாதாபி" என்று பதில் கூறினார். அப்படியானால் அருச்சுனன் முன் யோசனையோடு நடப்பவன். தர்மன் செய்தபின் யோசிப்பவன் என்பதே பொருளாகும். அதாவது அஸ்வத்தாமன் இறந்து விட்டான் என்று கூறிவிட்டு அதன்பின் தான் கூறியது சரியா பிழை என்று தருமன் யோசிப்பான். ஆனால் அருச்சுனனோ ரதத்தில் ஏறமுன்னரே ஏறலாமா? வேண்டாமா? என்று யோசிப்பவன். **முன்யோசனை உள்ளவனுக்குத்தான் ஆன்மீகம்.** நாம் பஸ் தரிப்பு நிலையத்துக்கு சென்று கொழும்புக்கு செல்ல வேண்டுமெனில் கொழும்பு செல்லும் பஸ்ஸில்தான் ஏறவேண்டும். அதேபோல் எமது இலக்கு பிறவாமை எனில் சத்திய சாயி நிறுவனத்தின் இலக்கை நாம் பார்க்கவேண்டும். அப்போதுதான் சத்தியசாயி நிறுவனத்தினூடாக நாம் எமது இலக்கை அடைய முடியும். இது ஒரு ஆன்மீக நிறுவனம். சேவைப்பணியில் ஈடுபடுகிறது. அதாவது இந் நிறுவனம் எமது இலக்கை அடைய எம்மை அழைத்துச் செல்லும் பாதை சேவையாகும். நாம் எப்படி சேவைசெய்ய வேண்டும் என்பதையும் சுவாமி சொல்கிறார். அதாவது **ஏனையவர்களின் துன்பங்களைப் பார்த்து எமது மனம் இளகி அந்த எமது வேதனையைப் போக்குதவற்காக நாம் சேவை செய்ய வேண்டும்.** நாம் இன்னும் அத்வைத நிலைக்கு போகவில்லை. துவைதநிலையிலேயே இருக்கிறோம். ஆகவே சேவையில் ஈடுபடுகிறோம். ஆகவே சுவாமியால் வகுக்கப்பட்ட இலக்கை அடைவதற்கே நாம் இந்த நிறுவனத்தில் இருக்கிறோம்.

சுவாமியினுடைய வரலாறான 'சத்யம் சிவம் சுந்தரம்' என்ற நூலைப் படித்திருந்தால் அதில் கர்ணம் சுப்பம்மா என்பவரைப் பற்றிய குறிப்புகளை நீங்கள் பார்த்திருக்கலாம். அவர் புட்டபர்த்தி கிராமதலைவரின் இரண்டாவது மனைவி. அவர் சுவாமியை சிறுவயதி லேயே அவதார சொரூபம் என்று உணர்ந்து விட்டார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி தனது 14ஆம் வயதில் அவதாரம் என்று பிரகடனப்படுத்தியபின் அவரைப் பார்க்க வருபவர்கள் யாவருக்கும் உணவு சமைத்து வழங்குவது சுப்பம்மாவே ஆவார். பெரும்பாலும் அவர் சமைத்த உணவு போதாமல் இருக்குமோ என்ற அளவுக்கு மக்கள் வருவர். அதை சுவாமியிடம் சொன்னால் அவர் அதனைப்பற்றிக் கவலைப்படாமல் பரிமாறுமாறு கூறுவார். அதன்பின் மக்கள் எவ்வளவுபேர் உணவருந்தினாலும் உணவுகுறைவு ஏதும் ஏற்படாது. சமைத்த உணவுப் பாத்திரங்களிலிருந்து உணவு பெருகிக்கொண்டே இருக்கும். இப்படியாக சேவை செய்துவந்த சுப்பம்மா ஒருதடவை சுவாமியிடம் தனக்கு மோட்சம் அருளவேண்டுமென்று கேட்டார். அதற்கு சுவாமி சுப்பம்மா இறக்கும்போது அவரது வாயில் தான் கங்கை நீர் வார்த்து மோட்சம் அளிப்பேன் என்று உறுதி கூறினார். 1960 களின் இறுதியில் சுவாமி பிருந்தாவனுக்கு சென்றிருந்தவேளை கர்ணம்சுப்பம்மா இறந்துவிட்டதாக தந்தி வருகிறது. சுவாமி உடலை தகனம் செய்யவேண்டாம் என்று கூறிவிட்டு மூன்றாம் நாள் புட்டபர்த்திக்கு செல்கிறார். அங்கு சுப்பம்மாவின் உடல் வைக்கப்பட்டிருக்கிறது. சுவாமி சுப்பம்மா என்று அழைக்க இறந்துபோனதாக தீர்மானிக்கப்பட்ட சுப்பம்மா 'ஆ' என வாயைத்திறக்கிறார். உடனே சுவாமி கங்கை நீரை அவர் வாயில் வார்த்து மோட்சமளிக்கிறார். சுவாமியின் இலக்கும் எமது இலக்கும் ஒன்றாகிவிட்டால் அவர் எப்போதும் எம்மை அக்கறை எடுத்துக் காப்பாற்றுவார். மீண்டும் பிறவாமை என்ற வரத்தை தருவார். அற்புதங்கள் என்பவை பாலவிகாஸ் குழந்தைகளுக்கு இனிப்பு கொடுத்து கதை கேட்க வைப்பது போன்றவை. ஆனால் சுவாமியினுடைய இறுதி இலக்கை நாம் தொடவேண்டும்.

சாயி நிறுவனத்தில் நாம் இணைந்திருப்பதால் எமக்கு கிடைக்கக்கூடிய நன்மைகளுக்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். T.G.கிருஸ்ணமூர்த்தி என்பவர் ஒருதடவை புட்டபர்த்திக்கு காரில் சென்று கொண்டிருக்கும் போது ஒரு பெரிய விபத்து ஏற்பட்டு விடுகிறது. கார் நொருங்கிப் போனாலும் அவருக்கு சிறிய சிராய்ப்புகள் மட்டுமே ஏற்பட்டு அவர் உயிர் பிழைத்து விடுகிறார். பின் அவர் புட்டபர்த்திக்கு சென்று சுவாமியைப் பார்த்தபோது அந்த விபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றியதற்காக சுவாமிக்கு நன்றியைத் தெரிவித்தார். உடனே சுவாமி அதில் உன்னைக் காப்பாற்றுவதற்காக நான் எனது தெய்வத்துவத்தை உபயோகிக்க வில்லை. நீ சாயி நிறுவனத்திலிருந்து பல சேவைகள் செய்கிறாய். அவற்றுக்கு மற்றவர்கள் சொல்லும் நன்றியை நீ ஏற்றுக்கொள்வதில்லை. அவற்றை சாய்ராம் என்று சொல்லி எனக்கு சமர்ப்பித்து விடுகிறாய். அந்த பலனில் சிறிய பகுதியை தான் நான் உன்னைக் காப்பாற்ற பயன்படுத்தினேன் என்று சொன்னார்.

நான் பாலவிகாஸ் படித்த காலத்தில் ஒரு தடவை ஒரு பேச்சுப் போட்டியில் முன்னாயத்தம் இல்லாமல் கலந்துகொண்டு வெற்றியீட்டினேன். அதனால் பின் பாடசாலையில் நடைபெற்ற பேச்சுப் போட்டியிலும் கலந்து கொள்வதற்காக முன்னாயத்தப் படுத்திக் கொண்டு சென்றபோதும் போட்டியின் போது ஆயத்தப் படுத்தியது மறந்துபோய் விட்டதால் பேச முடியவில்லை. சுவாமியின் மாணவனாக சேர்ந்தபின் சுவாமி சொல்வது போல அவரது கருத்துக்களை கடதாசியிலல்ல மனதில் பதித்துக் கொள்வதால் அவை எப்போதும் மறப்பதில்லை. ஆகவே சுவாமியினுடைய நிறுவனத்தில் நாம் சேர்ந்திருக்கிறோம் என்றால் உண்மையில் நாம் ஏன் சேர்ந்தோம் என்பது எமக்கு தெளிவாக விளங்கவேண்டும். நிறுவன இலக்கும் எமது வாழ்க்கையின் இலக்கும் ஒன்றாக இருக்கவேண்டும். அந்த இலக்கை அடைவதற்கான பாதை சேவை என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இவற்றை உணர முதலில் சுவாமி கடவுள் என்பதில் நாம் பரிபூரணமாக நம்பிக்கை கொள்ள வேண்டும். பாகவதத்தில் ஒரு உதாரணம் சொல்கிறேன். தத்திபாண்டு என்று ஒருவர் பிரம்மச்சாரியாக கோகுலத்தில் இருந்தார். குழந்தை கிருஸ்ணர் யாதவ சிறுவர்களோடு விளையாடும்போது அவர் வீட்டுக்கு யாராவது ஒளித்து விளையாட சென்றால் அவர் குழந்தைகளை பயமுறுத்தி விரட்டிவிடுவார். ஒருதடவை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஸ்ணர் வெண்ணெய் திருடி தின்றதால் கோபிகைகள் அவரை விரட்டிக்கொண்டு வருகின்றனர். அவர் தத்திபாண்டு வீட்டுக்கு வந்து ஒளிந்து கொள்ள இடம்கேட்கிறார். உடனே தத்திபாண்டு அவரை தூக்கி குதிர் எனப்படும் நெல்சேமித்துவைக்கும் பெட்டகம் போன்ற ஒன்றுக்குள் போட்டு விடுகிறார். சிறிது நேரத்தில் கலைத்து வந்தவர்கள் யாரையும் காணாததால் கிருஸ்ணர் தன்னை அந்த பெட்டகத்தி லிருந்து வெளியே எடுக்கும்படி தத்தி பாண்டுவை வேண்டுகிறார். அவர் அதனை மறுத்துவிட கிருஸ்ணர் அவர் என்ன சொன்னாலும் கேட்பதாகவும் தன்னை வெளியே எடுத்துவிடும்படியும் கேட்கிறார். உடனே தத்திபாண்டு "கிருஸ்ணா நீ கடவுள் என்பது எனக்குத் தெரியும். நீ எனக்கு மோட்சத்தை தரவேண்டும்" என்று கேட்கவும் கிருஸ்ணர் அவருக்கு இன்னும் சிலகாலம் வாழ்க்கை இருப்பதாகவும் தான் மதுரைக்கு போகும் போது அவருக்கு மோட்சம் அளிப்ப தாகவும் உறுதி கூறியபின் தத்திபாண்டு அவரை விடுவிக்கிறார். இதேபோல் சாயி பாபாவினுடைய தாத்தா கொண்டமராஜு என்பவரும் சுவாமி அவதாரம் என சிறு வயதிலேயே உணர்ந்து விட்டார். அதனால் சாயி சிறுவனாக இருந்தபோது இரவில் அவரை தனது கட்டிலில் படுக்க வைத்து தான் அவரது காலை பிடித்து விட்டு சேவை செய்வார். ஏனெனில் அவரது குறிக்கோள் மோட்சமாக இருந்தது. சுவாமி சொல்வார் மழை பெய்யும் போது உனது பாத்திரம் கவிழ்ந்திருந்தது என்றால் பிரயோசன மில்லை. அதே போல் உனது பாத்திரத்தில் ஆசை என்ற நீரை நிறைத்திருப்பினும் பெய்யும் மழையால் பிரயோசனமில்லை. ஆகவே சுவாமியின் அருள் கிடைக்கவேண்டுமென்றால் சுவாமி நினைப்பதற்கு ஏற்ப எமது இலக்கை உருவாக்கி அதன்படி நடக்கவேண்டும். சத்திய சாயி சேவா நிறுவன நிகழ்வுகள் அவ் இலக்கை அடையவே எமக்கு வழிகாட்டுகின்றன. சுவாமியிடம் முழு நம்பிக்கை வைத்து சுவாமியின் நிறுவனமாகிய இந்த ரயிலில் ஏறி சுவாமி என்ற சாரதியுடன் உடன் நாம் இணைந்தோமானால் அவர் சரியான இலக்குக்கு எம்மைக் கொண்டு சேர்ப்பார்.

Advent of Love
SRI SATHYA SAI


## தேசிய சேவைத் திட்டம்

2




**சாயி சிறுவர் இல்லம் - கூமாங்குளம் - வவுனியா**

**நாட்டில் அனாதரவான சிறுவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இச் சிறுவர் இல்லம் மிகவும் சிறப்பாக கடந்த 15 வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது. வழங்கப்படும் சேவைகள் அனைத்தும் இலவசம். இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 0094 242222492
E mail - shanthamvavuniya@yahoo.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. விஜயகிருஷ்ணன் அவர்களது உரை 25.06.2017 திகதி மாலை :

திரு. விஜயகிருஷ்ணன் அவர்களது 25ஆம் திகதி மாலைப் பேச்சானது ஒரு உரையாடலாக அதாவது கேள்விபதில் பகுதியாக அமையப்பெற்றது. அவ்வேளை அவர் கூறியதாவது.


நான் மேடையில் நிற்பதால் நான் பேசுகிறேன். நீங்கள் கேட்பதல்ல. நானும் உங்களுடன் ஆன்மீகப்பயணத்தில் பயணிக்கும் ஒரு சக பயணியே. நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு எனக்கு தெரியுமெனில் பதில் கூறுவேன். அல்லது தெரியாது என்று கூறுவேன். நாம் ஆன்மீகப்பயணத்தில் எந்த இடத்தில் உள்ளோம் என்பதை சுவாமி பார்த்துக் கொண்டிருக்கிறார்.

இந்த சூழ்நிலை மிதமாக உள்ளது. சாதாரணமாகவே மனதை அடக்குவது மிகவும் கடினம். அதில் சூழல் சலசலப்பாக உள்ளபோது மனதை ஒருநிலைப்படுத்துவது மிகவும் கடினமாகும். ஆன்மீக நூல்களிலே சொல்லப்பட்டுள்ளது என்னவெனில் சிரவணம், மனனம், நிதியாசனம். நிதியாசனம் என்றால் நாம் ஏற்கனவே கேட்டதையும் ஏற்கனவே சிந்தித்ததையும் மீண்டும் அசைபோடுதலாகும்.

**கேள்வி :**
பகவத் கீதையில் அருச்சுனனுடைய மனமாற்றத்துக்கு ஆன்மதத்துவம் எவ்வாறு பங்களித்தது?

**பதில்:**
சுவாமியை நாம் நெருங்கவிடாமல் செய்வது எது என்று தெரியுமா, சீர்டி சாயியை நாம் பார்க்கிறோம். புத்தரை பார்க்கிறோம். அவர்களுக்கு கிடைத்த அனுபவங்கள் எமக்கும் கிடைத்திருக்கின்றன. சித்தார்த்தர் தனது அனுபவங்களால் புத்தரானார். அதேபோல் திரிசூலி என்ற நகரில் பிறந்த ரமணர் ஒருதடவை தான் இறந்துவிட்டதாக கற்பனைசெய்து பார்த்தார். அதனால் கிடைத்த அனுபவங்களால் திருவண்ணாமலைக்கு சென்று ரமணமகரிஷி ஆனார். எமது சுவாமியும் மரணத்தைப் பற்றி பலதடவைகள் பேசியுள்ளார். நாமும் பல மரண சம்பவங்களைப் பார்த்துள்ளோம். ஆனால் நமக்கு அந்த வைராக்கியம் வருவதில்லை. வைராக்கியம் 3 வகைப்படுகிறது. ஒன்று மாஷான வைராக்கியம். வைராக்கியம் என்றால் Detachment. அதாவது விலகி இருந்து வாழ்க்கையை அனுபவித்தல். மாஷான வைராக்கியம் என்பது உதாரணமாக யாருடைய மரண வீட்டுக்கு சென்று வந்தபின் இது தானா வாழ்க்கை என்பது போன்ற எண்ணம் வருவது. ஒரு விடயத்தில் ஈடுபாடாக இருப்பதற்கும் விலகி இருப்பதற்கும் வித்தியாசம் உண்டு. உதாரணமாக ஒரு வீட்டில் மாமியார் மருமகளை பார்க்கும் விதம். பந்தம் என்பது இல்லாது இருக்கும். ஈடுபாட்டுடன் பார்க்கமாட்டார்கள். ஆனால் அதே மாமியார் தனது மகளை பார்ப்பது ஈடுபாட்டுடனாகும். ஈடுபாட்டுடன் இருப்பதற்கும் விலகி இருப்பதற்கும் ஒரு சிறிய வித்தியாசம்தான். இந்த பந்தம் என்பது உடல் சார்ந்தது. இதுவே அகங்காரம். அகம் என்றால் உடல். நான் உடல் என்று சிந்திக்கும் போதுதான் எமக்கு பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றன. நாம் தானே இந்த உடல் என்று உடல் சார்ந்த அடையாளங்களை வைத்திருக் கின்றோம். அதேபோல் எம்மைப்பற்றிய மனம் சார்ந்த உ-ம்: நான் பணக்காரன் போன்ற அடையாளங்களை வைத்திருக் கிறோம்.

எப்போதும் நாமஸ்மரணை செய்து கொண்டே இருக்க வேண்டும். எமது மனத்தின் ஒரு Track இல் நாமஸ்மரணை ஓடிக் கொண்டிருக்க வேண்டும். அப்போது தான் எமது கடைசி நேரத்திலும் நாமஸ்மரணை செய்யமுடியும். அதனால் அதற்குரிய பலனை அடையமுடியும். இதுதான் செயல்முறை. இப்படி நாமஸ் மரணை செய்யும் போது எமது ஒவ்வொரு வருக்கும் அது அதீத பலத்தை தரும். சங்கடங்கள் வரும் போது மின்சார ஒழுக்கு ஏற்படும்போது Fuse விழுவது போல நாமஸ்மரணை சங்கடங்களைத்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தவிர்க்கும். அதேபோல் நம்மை தவறுகள் செய்யவிடாது தவிர்க்கும். எமது மூச்சு எமது கட்டுப்பாட்டில் இல்லாததுபோல் அது எப்போது எம்மைவிட்டுபோகும் என்பதும் எமது கட்டுப்பாட்டில் இல்லை. ஆகவே நாம் ஜீவிக்கும் காலத்தில் நாமஸ்மரணையை தொடர்ந்து செய்யவேண்டியது கட்டாயமாகும்.

**கேள்வி:**
சில சாயி இளைஞர்கள் சுவாமியின் பணியில் கிரமமாக ஈடுபடுவதில்லை. அவர்களை எவ்வாறு சுவாமியின் பணியில் ஈடுபடவைப்பது?

**பதில்:**
அதிருத்ர மகாயக்ஞம் நடைபெற இருந்தபோது வேலைகள் நிறைய இருந்தன. அவற்றிற்கு பொருத்தமான இளைஞர்களை எப்படி தெரிவுசெய்வது என்று கேட்டபோது சுவாமி சொன்னார். Compaassion, Commitment, Capability என்ற இந்த மூன்றும் உள்ளவர்களை தெரிவுசெய்யும்படி. கருணை/ அன்பு/ இரக்கம் (Compassion), எடுத்த காரியத்தை செய்து முடிக்கும் உறுதி (Commitment), செயற்றிறன் (Capability) என்ற இந்த 3 குணங்களும் சாயி இளைஞர்களுக்கு மட்டுமல்ல அடியார்கள் எல்லோருக்கும் முக்கிய மானவை. சாயி நிலையத்திற்கு வந்தபின் படிப்படியாக இந்த குணங்களை கற்றுக் கொள்ள வேண்டும். நாம் இளைஞர் களுக்கு இவற்றைப் பற்றி அறிவுறுத்தலாம். ஆனால் அதற்குரிய ஈடுபாட்டை சுவாமிதான் வழங்கவேண்டும். ஒருவர் மேடையில் பேசும் போது மைக் இனூடாகவே மின்சாரம் மூலமாகவே அது மற்றவர்களுக்கு கேட்கிறது. தொடர்பு ஏற்பட காரணம் மின்சாரம். அதுபோல்தான் சுவாமியினுடைய கிருபை (Grace) இருந்தால்தான் அவரது பணியில் ஈடுபடமுடியும். ஆனால் நாம் எமக்கு கொடுக்கப்பட்ட பணியை எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்துகொண்டே இருக்க வேண்டும். மற்றவர்களை அப்பணியில் இணைப்பது சுவாமியின் கருணையே. சில சமயங்களில் நாம் கிராமத்தை தத்து எடுத்து சேவை செய்யசெல்வோம். ஆனால் அங்கு ஏற்கனவே சிலர் சுவாமியுடைய பக்தர்களாக இருப்பர். ஆகவே தேர்ந்தெடுப்பது சுவாமியே. நாம் இணைப்பாளர்களாகவே செயற் படுகிறோம். நாம் சாயிநிலையத்தில் மன மாற்றத்துக்கான அடித்தளங்களை அமைத்துக் கொடுக்கலாம்.
உ-ம்: பேச்சு, பாலவிகாஸ், கல்விவட்டம் போன்றவை. ஆனால் மனமாற்றத்தை ஏற்படுத்துவது சுவாமியே.

**கேள்வி:**
சுவாமி மாணவர்களுடன் சினந்த மறக்கமுடியாத சம்பவத்தை கூறமுடியுமா?

**பதில்:**
சுவாமி கோபப்படுவதுண்டு. ஆனால் அது எமது கோபம் போன்றது அல்ல. எமக்கு அலட்சியம் என்ற ஒரு குணம் உண்டு. யாரும் அருகில் இருக்கும்போது அவர்களது அருமை தெரிவதில்லை. ஆனால் விலகிப் போன பின்தான் நாம் அவர்களுடைய அருமையை உணர்வோம். இதற்குக் காரணம் அலட்சியப் போக்குதான். சுவாமி சொல்வார், இளைஞராக இருக்கும் போது நான் சொல்வதை செயற்படுத்த ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில் அப்போது உடலில் வலு இருக்கும். சுவாமி எம்முடன் கோபப்படுவது எமது அலட்சியப் போக்குக்காகத்தான். சிலவேளை விடுதி மாணவர்களுடன் சுவாமி பேசமாட்டார். உடனே அவர்கள் பெரியளவில் பிரார்த்தனை, பஜனை எல்லாம் செய்து அழுது சுவாமியை பேசவைத்துவிடுவார்கள். ஒரு தடவை சுவாமி குளியலறையில் வழுக்கியதால் சிறிய காயம் ஏற்பட்டது. எமக்கு காயம் ஏற்பட்டால் சுவாமியிடம் பிரசாதம் வாங்குவோம். சுவாமிக்கு காயம் ஏற்பட்டால் என்னசெய்வது? அவரிடம்தான் பிரார்த்திக்கவேண்டும். ஒருதடவை இதேபோல் பக்தரின் துன்பத்தை தான் ஏற்று பின் தன்னைத்தானே குணப்படுத்திய சந்தர்ப்பமும் உங்களுக்கு தெரிந்திருக்கும். ஆகவே சுவாமி கோபப்பட்டால் சுவாமியிடம்தான் பிரார்த்திக்க வேண்டும். சுவாமி யினுடைய கோபம் அவரது மாணவர்களாக இருந்தவர்களுக்கு தான் நன்றாகப் புரியும். ஆனால் அது எங்களுடைய அலட்சியத்துக்காக மட்டும்தான். அது நம்மை திருத்துவதற்காகத்தான். வேறொன்றுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல. அந்த தருணங்களை எமது பிழைகளை திருத்திக் கொள்வதற்கு பயன்படுத்தவேண்டும்.

**கேள்வி :**

இறைநாமத்தை மூச்சுடன் இணைப்பது எப்படி? நடைமுறை குறிப்புக்கள் தருக?

**பதில்:**


கிரமமாக நாமஸ்மரணை செய்தால்தான் நாமத்தை மூச்சுடன் இணைக்கமுடியும். இது ஏற்கனவே சொல்லப்பட்டதுதான். இதைவிட வேறுவிதமாக எனில் "ஹம்ஸ காயத்திரி" என்பதைத்தான் சொல்லவேண்டும். மூச்சை உள்ளே இழுப்பது ஸோ எனவும் வெளியே விடுவது ஹம் எனவும் கொண்டு ஸோஹம் என்பதை ஹம்ஸோ என்றால் ஹம்ஸ காயத்திரி எனப்படும். நான் அது என்பதே இதனது தமிழாக்கம். இதன்போது மூச்சிலே கவனத்தை செலுத்தி அதற்கான சில நடைமுறைகள் மூலம் இந்த ஹம்ச காயத்திரியை சாதகம் பண்ணவேண்டும். ஆனால் சுவாமி எமக்கு மிக இலகுவான வழியைக் காட்டியிருக்கிறார். அதுதான் நாமஸ்மரணை. ஒரு நோய்க்கு சில மருந்துகளை எடுத்தால் குணமாக்கமுடியும் என்றால் அதை விட்டு விட்டு அறுவைசிகிச்சைக்கு செல்லவேண்டியதில்லை அல்லவா? அதே போல் நாமஸ்மரணையை செய்ய ஆரம்பிப்பது, வேறு விடயங்களை தேடி அலைவதை விட மேலாகும். கிருஷ்ணன் சொல்லுகிறார் நான் சொல்வதை கேட்கும் தகுதியை ஒருவன் பெற்றிருக்க வேண்டும் என்று. இதற்காக நாம் எமது காதுகளையும் மனதையும் தயார்படுத்தவேண்டும். சுவாமி சொல்லுகிறார் தனக்காக ('Single Sofa'வை) தனிக்கதிரையை உனது இதயத்தில் போட்டுவை என்று. அதாவது சுவாமியை மட்டும் எமது மனதில் இருத்தி அவர் சொல்வதை நம்பிக்கையுடன் கேட்கவேண்டும். ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கு தேவையான விடயத்தை சுவாமி சொல்வார். நாம் எமது இதய வாசலை சுவாமிக்காக திறந்துவைக்கவேண்டியது முதல்படியாகும்.

**கேள்வி :**

ஆன்மீக சாதனையில் சுயநலத்தின் பங்கு என்ன? எமது ஆன்மீக சாதனையா? பொதுநலத்தொண்டா? என்ற சந்தர்ப்பத்தில் எது முக்கியம்?

**பதில்:**

நீங்கள் பரீட்சையில் தேர்ச்சி பெற வேண்டுமாயின் சாப்பிடவேண்டுமா? படிக்கவேண்டுமா? என்று கேட்டால் என்ன பதில் சொல்வது? இரண்டுமே தேவை. காலையில் பிரம்மமுகூர்த்தத்தில் பிரார்த்தனை செய்யும்போது பொதுநலசேவை செய்யமாட்டோமல்லவா. அதே நேரம் சுனாமி போன்ற அனர்த்தங்கள் வரும்போது 24 மணி நேரமும் சேவை செய்யவேண்டி வரலாம். அதற்கு அந்நேரம் தேவை இருக்கிறது. இதை இரண்டையும் நாம் குழப்பிக் கொள்ள வேண்டியதில்லை. பஜனுக்குப் பின் 5 நிமிடம் தியானம் செய்கிறோம். அப்போது யாராவது சத்தமாக பாடல் பாடமுடியாது. ஏனெனில் அது தியானத் துக்குரிய நேரம். சுவாமி சொல்கிறார் பத்தியமும் தேவை வைத்தியமும் தேவை என்று. நாம் கஷ்டப்பட்டு Complicated சங்கடமானதாக சுவாமியை யோசிக்க தேவையில்லை. அவர் எல்லாவற்றையும் Simplify சுலபமாக்கி எமக்கு தந்திருக்கிறார். மகாபாரதப்போர் முடிந்தபின் கலியுகம் ஆரம்பித்தபோது வியாச மகரிஷிக்கு கிருஷ்ணர் கூறுகிறார். "கலியுகமக்கள் எல்லோரும் மிகவும் பாக்கியசாலிகள். ஏனெனில் மற்றைய யுகங்களைப்போல் பல்வேறு கடினமான ஆன்மீக சாதனைகள் அவர்கள் செய்யத் தேவையில்லை. நாமஸ்மரணை செய்தாலே நான் அவர்களுக்கு மோட்சம் கொடுப்பேன்" என்று. உதாரணமாக உங்கள் வீட்டுக்கு அருகில் ஒரு அமைச்சர் இருக்கிறார் என்றால் நீங்கள் அவரிடம் சென்று உங்கள் தொகுதிப் பிரச்சினைகளை கதைக்க முடியும். அதற்கு உங்களுக்கும் அவருக்கும் ஏதோ ஒரு உறவு தேவை. அதேபோல் இவ் உலகத்திற்கு அவதாரம் வந்திருக்கிறார். அவருடன் நாம் உறவை ஏற்படுத்திக் கொண்டால் அவர் எமது பிரச்சினைகளை எல்லாம் பார்த்துக் கொள்வார். ஒரு பையனிடம் அவனது தந்தை உல்லாசப் பயணம் (Tour) செல்லலாம் என்று சொன்னால் அவன் உடனே ஆயத்தமாகிறான். அவன் உணவு, உடை,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்குமிடம், போக்குவரத்து எதைப் பற்றியும் சிந்திப்பதில்லை. அவற்றை யெல்லாம் தந்தையே பார்த்துக்கொள்வார். அதேபோல் எமது வாழ்க்கைப் பிரச்சினைகள் எல்லாம் சுவாமியுடையதே. சுவாமி எமக்களித்த 9 ஒழுக்கக் கோவையைப் பற்றி இந்நேரத்தில் குறிப்பிட வேண்டும். அவை ஒரு மாபெரும் தவத்திற்கு ஒப்பானவை. மிகப்பெரிய விடயங்களை மிகச் சுலபமாக்கி சுவாமி எமக்கு தந்துள்ளார். அவற்றை இலகுவாக நாம் கடைப்பிடிக்கமுடியும்.

**கேள்வி:**
நாம் மிகவும் கஷ்டப்பட்டு மனதை இறைவனை நோக்கி திருப்பி ஆன்மீக சாதனைகள் செய்ய முயற்சிக்கிறோம். ஆனால் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் நிகழும் நிகழ்வு ஒன்றினால் எல்லாம் தலைகீழாக மாறி விடுகிறதே. அப்படியானால் ஆன்மீக சாதனையின் பயன் என்ன?

**பதில்:**
இதற்கு நான் ஏற்கனவே பதில் கூறிவிட்டேன். உங்கள் மனம் சுவாமியுடன் உறவை ஏற்படுத்தினால் கேள்விக்கான பதில்கள் அங்கிருந்தே கிடைக்கும். நாங்களாக உருவாக்கிய Identity எங்களுக்கு உண்டு. நான் தமிழன் என்பது ஒரு Identity. இந்தியாவில் சித்தூர், நெல்லூர் என்ற 2 கிராமங்களுக்கு இடையில் ஆந்திரா, தமிழ்நாடு எல்லை (Border) 1956 இல் உருவாக்கப்பட்டது. ஒருவர் எங்கு பிறப்பார் என்பதை கர்மாவே முடிவுசெய்கிறது. அவர் நெல்லூரில் பிறந்தால் தமிழனாகவும் சித்தூரில் பிறந்தால் ஆந்திரா காரராகவும் ஆகிறார்.




50 Km இடைவெளியில் எம்மால் உருவாக்கப்பட்ட எல்லையால் இது நிகழ்கிறது. இந்த அடையாளங்கள் அல்லது அகங்காரம்தான் சுவாமியை நாம் நெருங்குவதை தடுக்கிறது. சுவாமி ஒரு தடவை மாணவர்களுக்கு கூறினார். நீ ஒரு பெண்ணை பார்த்து கல்யாணம் செய்கிறாய். அவளுடன் ஒரு பந்தம் ஏற்படுகிறது. திடீரென அவள் இறந்து போய் விட்டாள். உடல் அங்கேயே உள்ளது. ஆனால் ஏதோஒன்று உடலை விட்டு போய்விட்டது. உனது பந்தமும் போய்விட்டது. அந்த உடலுக்கு அடித்தளமாயிருந்த அந்த ஏதோ ஒன்று என்ன? அதுதான் ஆன்மா. இங்கு உள்ள எல்லோருடைய ஆன்மாவும் வேறானதா என்றால், இல்லை. ஆன்மா ஒன்றுதான். இதனை பாலவிகாஸிலும் படித்திருப்பீர்கள். இந்த ஆன்மா சத் சித் ஆனந்தம் என விளக்கப்படுகிறது. இந்த ஆன்ம ஒற்றுமையை சுவாமி கூறும்போது 'Brotherhood of man, Fatherhood of God' என்கிறார். இந்த தத்துவத்தையே பகவத்கீதையில் இரண்டாம் அத்தியாயத்தில் 16 ஆம் சுலோகத்திலிருந்து 64 ஆம் சுலோகம் வரை கிருஷ்ணன், உடையை மாற்றுவதுபோல ஆன்மா இந்த உடலை மாற்றுகிறது. உடலின் அடிநாதமான ஆன்மதத்துவத்தை புரிந்து கொள் என்கிறார். நாம் செய்ய வேண்டிய காரியங்களை செய்து கொண்டிருக்கவேண்டும். ஆனால் பந்தம் இல்லாமல் இன்னொருவருக்கு துன்பம் ஏற்படும்போது அது எமக்கு கஷ்டமாக இருக்கும். அந்த மனமாற்றம் தான் ஆன்மதத்துவத்தின் புரிதல். இது சத்தியசாயி நிலையங்களில் செய்யப்படுகிற விடயம் தான். ஆனால் தனிப்பட்ட முறையில் செய்வதில்லை. சத்தியசாயி நிறுவனங்களில் சேவை செய்யும் போது வேற்றுமை பார்ப்பதில்லை. இது எல்லோரும் சமம் என்ற புரிதல்தான். உண்மையிலேயே ஆன்மதத்துவத்தை உணர்ந்தவர்களுக்கு வேற்றுமையே கிடையாது. நாம் உலகியல் காரியங்களை செய்து கொண்டிருக்கிறோம். உலகைவிட்டு ரமண மகரிஷி போல் துறவறம் மேற் கொள்வது என்பது வேறு நிலை. அது பிரயாணத்திலே கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருகிறோமெனில் யாழ்ப்பாணம் வந்தபின் அடையக்கூடிய நிலை. அதனைப்பற்றி இப்போது கதைக்கவில்லை. நமக்கு Action without attachment அதாவது பற்றற்ற நிலையில் செயல்களை புரிதல்.

**கேள்வி:**
நாம் மனமாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் போது மற்றவர்களின் சில வன்சொற்கள் எம்மை பாதிக்கின்றன. அந்நிலையில் எப்படி நம்மை அச் சூழ்நிலையிலிருந்து விடுவிப்பது / எமது செயற்பாட்டை மாற்றியமைப்பது?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதில்:**
இதற்கு ஒரு உதாரணம், நன்றாக படிக்கவிருப்பமுள்ள பிள்ளைக்கு வீட்டில் பாட்டு போட்டாலும் அது காதில் விழுவதில்லை. ஆனால் படிக்க விருப்பமில்லாத பிள்ளை வீட்டில் ஒரு டம்ளர் விழுந்து சத்தம் கேட்டாலும் அதனால்தான் படிக்கவில்லை என்று சொல்லும். நமது நோக்கம் ஆணித்தரமாக ஸ்திரமாக திடமாக ஒரே ஒரு நோக்கமாக மட்டுமே இருக்குமாயின் வெளியே உள்ள இடர்பாடுகள் நமக்கு தோற்றாது. இடர்பாடுகள் வரும். நாம் இன்னும் முழுமை பெறவில்லை. ஆகவே அவற்றை நீக்கி முன்செல்ல வேண்டும். ரமணமகரிஷிக்கு புற்றுநோய் வந்தது. அதற்கு அறுவைசிகிச்சை செய்யும்போது மயக்கமருந்து கொடுக்காமலே செய்யப்பட்டதாம். அது அவர் தான் உடலே அல்ல என்ற நிலையை அடைந்ததால் ஏற்பட்டது. தற்போது Local anasthesia என்று அறுவைசெய்வேண்டிய இடத்தில் மட்டும் மயக்கமருந்து கொடுக்கப்படுகிறது. அதனால் அவ்விடத்தில் என்ன நடக்கிறது என்ற உணர்வு இருக்கும். ஆனால் வலி இருக்காது. ரமண மகரிஷியும் தனது சாதனை மூலமாக இந்நிலையை அடைந்திருக்கிறார். உடலில் எது நடந்தாலும் அது அவரைப் பாதிக்காது. மனப்பிறழ்வு உள்ளவர்களிடமும் இப்படியான நடத்தையை பார்க்கலாம். Spastic Children என்பவர்களுக்கு மூளை சொல்லும் கட்டளைகளை கை ஏற்காது. உதாரணமாக நாம் அவர்களுக்கு Chocolate கொடுத்தால் அவர்களுக்கு அது புரியும். ஆனால் அதனை வாங்க கை செயற்படாது. ஆகவே நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எம்மை அறியாமலே எமக்குள் எத்தனை பணிகள் நடக்கின்றன என்று. சூடான பொருளை தொட்டுப்பார்க்க கை போகும்போது மூளை தொடவேண்டாம் என்று சொல்ல கை பின்வாங்குகிறது. இதே விடயத்தை எமது சாதனைகள் மூலமாக செய்து சித்திகளைப் பெறுகிறார்கள். எமது இந்திரியங்களின் கட்டுப்பாடுகள் பற்றிய Exercises உள்ளன. அவற்றை செய்து பார்க்கும்போது எமது இந்திரியங்களின் செயற்பாடு பற்றிவிளங்கும் Transformation - மனமாற்றம் என்பது ஒரு தொடர் செயன்முறை. அதில் முன்செல்வதும் பின்வருவதும் சகஜம். இறுதியில் பார்க்கும்போது முன்னேறி யிருப்போம். அதற்கு ஏற்படும் இடையூறுகளை சமாளிக்க பிரார்த்தனை ஒன்றுதான் வழி. சாயி நிலையத்துக்கு வருவதால் என்ன நன்மை என்றால் Transformation க்கு awareness - விழிப்புணர்வு, Active Consiousness அதாவது எமது இலக்கை ஞாபகப்படுத்தும் விழிப்புணர்வையும் நாம் தவறுசெய்யும் இடத்தை சுட்டிக்காட்டும் உள்உணர்வையும் சாயி நிலையங்கள் தருகின்றன. ஒரு திருடனுக்கு இந்த சரி பிழையை பிரித்தறியும் உள்உணர்வு மழுங்கியிருக்கும். ஆனால் சாயி நிலையத்தில் இவ் உணர்வு தீட்டப்படுகிறது. ஆசை, பொறாமை, குரோதம் என்பவை பிரித்தறியப்பட எமக்கு கற்றுத்தரப்படுகின்றன. அதனால் மனமாற்றத்துக்கு ஏற்படும் தடைகள் விலக்கப்படுகின்றன. Football என்ற விளையாட்டைப் பார்த்தோமானால் ஒரு Ball ஐ ஒரு பக்கத்திலிருந்து மற்றைய பக்கத்துக்கு கொண்டுபோக வேண்டும். அதனை 11பேர் தடுப்பார்கள். Life is a game play it என்பது இதனையே. வாழ்க்கையில் இறைவனை அடைவதே Goal. அதனை அடைய பல்வேறு தடங்கல்கள் ஏற்படும். இதனை வெற்றிகொள்ள பிரார்த்தனை மற்றும் சத்தியசாயி நிறுவனங்களுடன் ஈடுபாட்டுடன் இருத்தல் என்பனவே வழியாகும்.

**கேள்வி:**
மனிதனிடம் இருக்கும் 6 எதிரிகளை எப்படி களைவது?

**பதில்:**
இதற்கு ஏற்கனவே பதில் சொல்லப்பட்டது. கிரமமாக சத்தியசாயி நிறுவனத்துக்கு வந்து நிகழ்வுகளில் ஈடுபடவேண்டும். கிரமமாக ஆன்மீக சாதனை செய்ய வேண்டியது அவசியமாகும். சுவாமி கேட்கிறார் நீ நோய் வாய்ப்பட்டிருக்கும் போதும் உணவு அருந்துகிறாயல்லவா? அப்போது ஏன் ஆன்மீக சாதனைக்கு Prayer க்கு மட்டும் Excuse கேட்கிறாய்? வாழ்க்கை எனும் விளையாட்டில் நாம் அடைய வேண்டிய இலக்கை இந்த 6 பேர் தடுக்கிறார்கள். இந்த 6 பேரையும் கடந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் செல்ல சத்தியசாயி நிறுவனங்களில் ஈடுபாட்டுடன் இருந்தாலே போதும். நாம் சில சமயங்களில் சுவாமியிடம் சென்று நாம் இந் நிறுவனத்தில் விருப்பமுடன் சேவை செய்ய வந்திருக்கிறோம். ஆனால் அதற்கு பெரியவர்கள் விடுகிறார்களில்லை என்று கூறுவோம். அதற்கு சுவாமி, எப்போது நீ Co-op அதாவது எல்லோரையும் ஒன்று சேர்க்கிறாயோ அதுதான் உனது வெற்றி. உனது வேலையை செய்துகொண்டு மற்றவர்களையும் நாசூக்காக அதற்குள் உள்ளீர்த்துக் கொள்ளவேண்டும். மேலும் நாம் கிராமசேவை செய்யும்போது சுவாமியிடம் கூறுவோம் நாம் விரயமாக கிராமசேவை செய்கிறோம். மக்களிடம் மனமாற்றம் இல்லையே என்று. உடனே சுவாமி சொன்னார் அவர்கள் எப்படி Response கொடுப்பார்கள், நீங்கள் கொடுக்கிறீர்கள் என்ற நினைப்பில் கொடுக்கிறீர்கள் அவர்கள் வாங்குகிறோம் என்ற நினைப்பில் வாங்குகிறார்கள். நீங்கள் பகிர்தல் என்ற எண்ணத்தில் கொடுக்கவேண்டும். கிராம சேவை செய்ய செல்வதற்கு முன்னரே மனதளவில் உங்களை தயார்ப்படுத்த வேண்டும். **அந்த மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற நினைப்பில் உருகி கண்ணீர் வரவேண்டும்.** அப்படியான ஒரு நிலையில் நீங்கள் கிராமசேவை செய்யச்சென்றால் அந்த மக்களும் அதற்கு Response செய்வார்கள். ஆகவே நாம் கிராமசேவை செய்யும் போது இப்படித்தான் செய்தல் வேண்டும். இதேபோல் சாயிநிறுவனத்தின் வேலைகளில் ஈடுபடும்போது 6 எதிரிகளையும் வெல்லலாம்.

**கேள்வி:**
சுவாமி மரண வேதனை மிகவும் கொடியது என்று கூறுகிறார்கள், மரணத்தறுவாயில் நாம் இறைநாமத்தை சொல்லவும் இறைவனிடம் மனதை ஒருமுகப்படுத்தவும் முடியுமா?

**பதில்:**
சுவாமி இதற்கு ஒரு கதை சொல்லியிருக்கிறார். ஒருவர் ஒரு சந்நியாசியினுடைய சொற்பொழிவை கேட்கும்போது அந்த சந்நியாசி கூறினார். நீங்கள் மரணத் தறுவாயில் இறைநாமத்தை உச்சரித்தால் இறைவனை அடையலாம் என்பதைக் கேட்ட அந்த நபர் 4 மகன்களுக்கும் ராமா, கிருஷ்ணா என்று இறை நாமங்களை பெயராக வைத்தாராம். ஏனெனில் இறுதிக்காலத்தில் எப்படியும் பிள்ளைகளின் ஞாபகம் வரும். அப்போது இறைநாமத்தை என்னையறியாமலே கூறலாம் என்பதே அவர் நினைப்பு. மரணத்தறுவாயில் 4 மகன்களையும் கூப்பிட 4 பேரும் வந்தனர். ஐயோ, 4 பேரும் இங்குவந்தால் கடையை யார் பார்ப்பார்? என்று கூறிக்கொண்டிருக்கும்போது உயிர் பிரிந்துவிட்டது. ஆகவே எப்போது மூச்சு நிற்கும் என யாருக்கும் தெரியாது. அதற்குத்தான் எப்போதுமே நாமஸ்மரணை செய்யுமாறு சுவாமி சொல்கிறார். மனதை பகுதிகளாகப் பிரித்து ஒரு Track இல் இறைநாமத்தை சொல்ல விடவேண்டும். பெண்கள் சமையல் செய்து கொண்டிருக்கும் போது சுவாமியின் பாடல்களை CD இல் கேட்டுக்கொண்டிருப்பார்கள். பின் வெளியே செல்லும்போது அப்பாடல்களை அவர்களை அறியாமலே அவர்களது வாய் உச்சரிக்கும். அப்போது மனதின் ஒரு பகுதி பௌதீக வேலையில் ஈடுபட்டிருக்கும்போது மறுபகுதி பாடலைக் கேட்டுக்கொண்டிருந்திருக்கிறது. ஆகவே இதனைத்தான் தொடர்ந்து செய்யும்படி சுவாமி கூறுகிறார். தொடர்ச்சியான நாமஸ்மரணை.

**கேள்வி:**
வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும்போது சுவாமியைவிட்டு விலகாதிருக்க என்ன செய்யவேண்டும்?

**பதில்:**
வாழ்க்கையிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை சமநிலையில் பார்க்க உதவுவது தான் பிரார்த்தனை. வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகள் கட்டாயம் இருக்கும். அதுதான் வாழ்க்கை. பிரார்த்தனை செய்து கொண்டிருந்தால் எப்படி விலகுவது? நீங்கள் உங்கள் தாயாரிடம் கோபப்படலாம். ஆனால் திரும்ப வீட்டுக்குத்தானே வரவேண்டும். அப்படி வராவிட்டால் உண்மையிலேயே உங்கள் தாயாரிடம் உங்களுக்கு அன்பு இருந்ததா என சந்தேகப்பட வேண்டியிருக்கும். கோபப்படுவதே தவறு. அத் தவறை செய்தபின் மீண்டும் வீட்டுக்கு வரத்தானே வரவேண்டும். வராமலிருக்க முடியாது. சுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உங்களை எப்போதும் கைவிடமாட்டார். நீங்கள் எங்கு சென்றாலும் அவர் உங்களது கயிற்றின் நுனியை பிடித்தபடி தான் இருப்பார். பாகவதத்திலே கிருஷ்ணன் மாடு மேய்க்கும் போது மாடுகள் விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் செல்லுமாம். பின் கிருஷ்ணன் குழல இசைக்கும்போது எல்லாம் அவரருகில் வந்து விடுமாம். நாம் சுவாமியிடம் வந்துவிட்டோம். இனி விலகிப்போதல் என்பது கிடையாது. சுவாமி எப்போது எமது கேள்விகளுக்கு பதிலளிக்கிறார் என்பது அவரைப் பொறுத்தது. இன்றும் சொல்லலாம். 40 வருடங்கள் கழிந்தபின்னும் சொல்லலாம். ரவிக்குமார் என்று ஒருவருக்கு 10-15 Cancer Operation செய்து வைத்தியர்கள் முடியாது என கைவிட்டுவிட்டனர். பின் அவர் சுவாமியைப்பற்றி கேள்விப்பட்டு 1965 ஆம் ஆண்டு சுவாமியிடம் வந்தார். அவர் அங்கு சென்ற போது சுவாமி தர்ஷன் முடித்து சென்றுவிட்டிருந்தார். ஆனால் சிறிது நேரத்தில் திரும்பி அவரிடம் வந்து 'Your cancer is cancelled' என்று கூறினார். அதன்பின் 35 வருடங்கள் அவர் உயிருடன் வாழ்ந்தார். வாழ்க்கையில் பிரச்சினைகள் வரும். நானும் எனது வாழ்க்கையில் பல பிரச்சினைகளை சந்தித்தேன். பெரிய இழப்பு ஒன்று Business இல் ஏற்பட்டது. நான் இங்கு வருவதற்கு 35 நாள்களுக்கு முன் எனக்கு செங்கண்மாரி. இங்கு வர புறப்படும்நாள் ஒரு மணிக்கு விமானப்பயணம் 10 மணிவரை நான் கட்டிலில் படுத்திருந்தேன். எப்படி இங்கு வந்து பேசுகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை. இதைப்பற்றி சுவாமியிடம் கேட்டபோது நீ போ வேண்டுமானால் குடும்பத்தாரையும் கூட அழைத்துக்கொண்டுபோ என கூறினார். சுவாமி எப்படி கதைத்தார் என கேட்காதீர்கள். அவர் கதைப்பார். உங்களுடனும் கதைப்பார். ஆகவே வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளால் மனது சஞ்சலப்படாமல் இருக்க கிரமமான பிரார்த்தனை அவசியம்.

**கேள்வி:**
தினசரி பிரார்த்தனை எப்படிச் செய்யவேண்டும்? எந்த மந்திரங்கள் உச்சரிக்கவேண்டும்?

**பதில்:**
நான் குரு அல்ல. சுவாமி சொன்னதை சொல்கிறேன். தினசரி ஓம்காரம், சுப்ரபாதம், அஷ்டோத்திரம் ஆகியவை செய்யச்சொல்கிறார். நேரமிருக்குமானால் 108 தடவை சொல்வதை 1008 தடவை செய்யலாம். இதை ஆரம்பித்து கொஞ்சநாள் செய்யும்போது உங்களுக்கான பதில் சுவாமியிடமிருந்து கிடைக்கும். நீங்கள் GYM க்கு போயிருக்கலாம். அங்கு பெரிய பெரிய திணிவுகளையுடைய உருளைகள் போன்றவை இருக்கும். சென்ற உடனேயே பெரிய கட்டைகளை தூக்கக்கூடாது. முதலில் Warmup செய்யவேண்டும். பின் சிறிய உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும். பின் சிறிய சிறிய பாரங்களை தூக்க வேண்டும். இதற்கு 3-4 மாதங்கள் செல்லும். Warmup என்பது ஓம்காரம், சுப்ரபாதம், அஷ்டோத்திரம். இதனை 6 மணிக்கு முன்னர் காலையில் செய்ய வேண்டும். இதற்குப்பின் GYM Trainer வருவார். அதுதான் சுவாமி. அவர் அடுத்த படியை சொல்வார். நான் திரும்ப திரும்ப ஒரே விடயத்தைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். சுவாமியுடன் ஒரு தொடர்பை - உறவை ஏற்படுத்துங்கள். அவ்வளவே. வேறு பிரச்சினைகள் இல்லை.

**கேள்வி:**
சாயி நிறுவனத்தில் வேலை செய்யும் போது வேறு ஆன்மீக நிலையங்களினால் சில தொடர்புகள் இடையூறுகள் ஏற்படலாம். அவ்வேளை எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

**பதில்:**
எமது வீட்டுக்கு ஒரு உபாசகர் வந்தார். மந்திரதீட்சை தருவதாக சொன்னார். எனக்கு அது குழப்பமாக இருந்ததால் சுவாமியின் பதிலை எதிர்பார்த்து சத்தியசாயி வாஹினி என்ற புத்தகத்தை எடுத்து பிரித்தேன். அதில் "I am your only God" என்று பதில் வந்தது. அப்படி சுவாமியிடம் கேட்டால் ஏதோஒருவகையில் பதில்வரும். ஷீர்டிஸாயி தனது முதல் அவதாரம் என்று சுவாமி சொல்லி யிருக்கிறார். ஆனால் அவர் உடலில் இருக்கும் போது ஷீர்டிஸாயி ஸன்ஸ்தான் நிர்வாகிகளிடம் சென்று அவர்களது நிர்வாகத்தில் தலையிடவில்லை. அந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமத்தையும் உருவத்தையும் வணங்குபவர்கள் அதை தொடர்கின்றனர். சத்ய சாயியை ஆராதிப்போர் அதனை செய்கின்றனர். நீங்கள் அரசகாணியில் பல காலமாக குடியிருந்தீர்கள் எனில் அதனை உங்களுக்கு பட்டா (Permit) போட்டுக் கொடுப்பார்கள். ஆனால் ஒரு இடத்தில் அல்லாது பல்வேறு இடங்களிலிருப்பின் அந்த இடமெல்லாம் உங்களுக்கு கிடைக்காது. சுவாமி சொல்கிறார். Come, Examine, Experience அதாவது தன்னிடம் வந்து தன்னைப் பரிசோதித்து அனுபவித்து ஏற்றுக்கொள் என்கிறார். அதன்பின் விலகக்கூடாது. ஒரு வீட்டில் தகப்பனும் மகனும் பயணம் போகிறார்கள். பயணப்பையை மகனிடம் கொடுத்துவிட்டு தந்தை நடந்துசெல்வார். அதேவேளை மருமகனுடன் தந்தை சென்றால், அவரின் பயணப்பையினை அவர் சுமந்துசெல்வார். அதேபோல் அந்நியோன்யமான உறவு அதாவது தந்தை - மகன் உறவில் இப்படி நடக்கும். அதேபோல் ஒரு விருந்தில் மருமகனுக்கு முதலில் உணவளிக்கும் மாமனார் தனது மகன் உண்ணாமல் தான் உண்ணமாட்டார். அந்த 2 உறவுகளிடையேயும் வித்தியாசம் உண்டு. சுவாமியுடனான உறவு இந்த தந்தை - மகன் உறவு போல் ஆத்மார்த்தமானது. ஒரு தடவை சுவாமியுடன் உணவருந்த அமர்ந்திருக்கும்போது வழமையாக பிரம்மார்ப்பணம் சொன்னபின் உணவருந்தும் சுவாமி அன்று சாப்பிடவில்லை. ஏன் என்று கேட்டபோது என் பக்தன் ஒருவன் தவறு செய்து விட்டான். அதனால் நான் சாப்பிடாமல் இருக்கிறேன் என்று சொன்னார். ஒரு அவதாரம் எம்மைப்பற்றி எப்போதும் நினைத்துக்கொண்டிருக்கிறார்.

எமக்கு தேவையானது ஸ்ரத்தா, ஸபூரி அதாவது, Faith Patience சந்தேகப்படுபவர்களுக்கு விளக்கம் கொடுக்கமுடியாது. பெண்களுக்கு தெரியும் திருமணமாகி கணவன் வீட்டுக்கு செல்லும்போது அங்கு சில நடைமுறைகள் வேறுவிதமாக இருக்கும். அதேபோல் நிறுவனங்களில் வெவ்வேறு நடைமுறைகள் இருக்கும். அதற்காக மற்றவர்களை வெறுக்கக்கூடாது. அவர்கள் அவர்களது நடைமுறையில் செல்கின்றனர். நாம் எமது நடைமுறையீல் செல்கிறோம். நல்லூர் முருகன் கோவிலில் முருகன் நல்லஜோடனைகளுடன் இருக்கிறார். அதைப்பார்ப்பவர்களுக்கு சந்தோஷம். கீரிமலையில் சிவன் எளிமையாக இருக்கிறார். அதைப்பார்க்கும் மக்களுக்கு அது சந்தோசம். இரண்டு தரப்பையும் மாற்றிவிட்டால் இருவரும் சந்தோசம் அற்று இருப்பர். இங்கு எமது சுவாமியின் நடைமுறைகளை நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்டபின் சந்தேகப்பட்டு சஞ்சலப்படக்கூடாது. உங்கள் பிள்ளைகள் வெளிநாட்டில் இருந்தால் அவர்கள் அங்கு நிம்மதியாக உள்ளார்கள் என்ற நினைவில்தான் நீங்கள் நிம்மதியாக இங்கு உள்ளீர்கள். சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தால் நிம்மதியாக இருக்கமுடியுமா?

**கேள்வி:**

ஒருவர் தனக்கு சுவாமி கனவில் வந்து இப்படித்தான் செய்ய சொன்னார் என்று சாயிநிலையத்துக்கு வந்து சொன்னால் அதை நம்பலாமா?

**பதில்:**

உதாரணமாக பாண்டிச்சேரியில் ஒரு சமிதி உள்ளது. நீங்கள் அதற்கு தலைமை வகிக்கிறீர்கள். அப்போது ஒருவர் வந்து எனக்கு சுவாமி சொல்கிறார். இந்த சமிதியை கலைக்குமாறு என்று கூறினால் என்ன செய்வது? ஒன்றும் செய்ய முடியாது. ஏனெனில் அவருக்கு கனவில் வந்து சொன்ன சுவாமி சமிதி தலைவருக்கு கூறியிருக்கலாம் அல்லவா? ஏனெனில் சுவாமியே சொல்லியிருக்கிறார் **நான் பக்தர்களுடன் நேரடித் தொடர்புதான் வைப்பேன். எனக்கு தொடர்பாளர் யாரும் தேவை இல்லை** என்று. ஆகவே சுவாமியுடன் நேரடித் தொடர்பு வைத்துக் கொள்வதே பொருத்தம்.

ஜெய் சாயிராம்

இந்த உரைகளை தொகுத்தவர்
செல்வி அகல்யா செகராஜசிங்கம்
யாழ் நிலையம்

Advent of Love
SRI SATHYA SAI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவாதள பயிற்சி முகாம் உரைகள்

சேவாதள பயிற்சி முகாம் - வடபிராந்தியத்தால் சத்தியசாயி நிலையம் யாழ்ப்பாணத்தில் 26ஆம், 27ஆம் திகதி ஆகஸ்ட் மாதத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிகழ்விற்கு வடபிராந்தியத் தலைவர் ஸ்ரீ K.V.சிவநேசன் அவர்கள் தலைமை தாங்கினார். 150 அடியார்கள் இவர்களுக்குள் இருவர் கிழக்கு மாகாணத்திலிருந்தும் மூவர் தண்ணீரூற்றில் இருந்தும் பங்குபற்றினார்கள். தேசிய உபதலைவரான ஸ்ரீ ஹரிதர்சன், தேசிய ஆன்மீக இணைப்பாளர் டாக்டர் சி.சிவகோணேசன், தேசிய சேவை இணைப்பாளர் ஸ்ரீ மு.லோகிதகுமார், தேசிய இளைஞர் இணைப்பாளர் டாக்டர் J.தனேஸ்குமார், வட மத்திய பிராந்தியத் தலைவர் ஸ்ரீ தவராசா அவர்களும் வட பிராந்திய சாயி நிலையத் தலைவர்களும் அடியார்களும் பங்கு பற்றினார்கள். உரைகள் யாவும் ஒளிப்படத்திரையில் காட்டப்பட்டு கையேடுகளும் கொடுக்கப்பட்டன.


**இப் பயிற்சி முகாமில் சுவாமி எவ்வளவு முக்கியம் கொடுத்துள்ளார்கள் என்பதை ஆன்மீகப்பரிணாமம் என்ற தலைப்பில் டாக்டர் இ.கணேசமூர்த்தி அவர்களால் கொடுக்கப்பட்டது.**

மக்கள் முதலில் சாயியின் அடியார்களாகுதல்
பின்பு சத்திய சாயி சேவா நிலையத்தில் அங்கத்தவராகுதல்
பின்பு பணியாளராகுதல்
பின்பு தீவிர பணியாளராகுதல்
பின்பு தான் சேவாதளத் தொண்டராகுதல்
இறுதியில் ஜீவன் முக்தராகுதல்.

சாயியின் நாமத்தையும் ரூபத்தையும் ஏற்றுக்கொண்டவர்கள் சாயி அடியார்கள். நிறுவன அங்கத்தவராவதற்கு மூன்று அடிப்படைக் கோட்பாடுகளுண்டு. அவையாவன:

1. ஆன்மீக முன்னேற்றத்தில் தீவிர நாட்டம்.
2. சத்தியசாயி பாபாவின் நாமத்தில் முழு நம்பிக்கையுடன் அந் நாமத்திற்கு பங்கம் விளை விக்காது, செய்தியையும் புகழையும் வாழ்க்கைமூலம் பரப்ப வேண்டும்.
3. சமூகத்தில் நல்லவர் என்ற பெயர் எடுத்திருக்க வேண்டும். என்பனவையாகும். இவற்றிற்கு மேலாக, பகவான் கொடுத்த 9 ஒழுக்கக்கோட்பாடுகளையும், 10 அன்புக்கட்டளைகளையும் கடைப்பிடிக்கவேண்டும். நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளிலும் பங்குபற்றிப் பணியாளர்களாக மாறவேண்டும். ஒரு கிழமையில் குறைந்தது 4 மணித்தியாலங்கள் சமூகசேவைப் பணியிலீடுபட்டால் தீவிரப்பணியாளராக உயரலாம். இத்துடன் சகல ஆன்மீக சாதனைகள், அறிவுத் தெளிவு, மனிதவிழுமியங்களை வழுவாது வாழ்க்கையில் பின்பற்றி இறுதி நோக்கை அடைய தீவிரமாக செயற்பட்டால் 'சேவாதள்' என்ற உயர்நிலையை அடையத் தகுதி யாவீர்கள். இந்நிலையில் உங்களுக்கு அடையாளமாக சின்னமும் (Badge) கழுத்துப் பட்டிகையும் (Scarf) கொடுக்கப்படும். முன்னைய காலத்தில் பகவானே இவ்விரண்டையும் தொண்டர்களுக்கு அளித்தார்.

சுவாமி சேவாதள் என்பதை 24.04.1967 இலும் 19.05.1969 இலும் அளித்த கருத்துரைகளில் விளங்கப்படுத்தியுள்ளார். 'தள' என்றால் இதழ். தாமரைப்பூவில் எவ்வாறு பல இதழ்கள் நடுத்தண்டுடன் ஒன்றியிருக் கிறதோ அதே போல தொண்டர்களும் சாயியின் இலட்சியத்தில் ஒன்றியிருக்க வேண்டும். நடுத்தண்டிலிருந்து விலகினால் இதழ்கள் வாடிப்போய் விழுந்து விடுவதைப் போல தொண்டர்களும் சாயியி லிருந்து விலகினால் உயர் அந்தஸ்திலிருந்து விழுந்து விடுவார்கள். 'தள' என்பதற்கு படையணி என்ற அர்த்தமும் சுவாமி கொடுத்தார்கள். அதாவது படையணியைப்போல் கடுகதியில் ஊடுருவி, பரவி ஆதர வற்றவர்களைப் பராமரிக்க வேண்டும் என்று விளக்கமளித்தார்கள்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

06.03.1977 இல் அளித்த அருளுரையின் போது சேவாதள தொண்டர் எல்லோரும் ஒன்றே என்ற சிந்தனையுடன் வாழவேண்டும். சேவையை விடச் சிறந்த சாதனையில்லை. எண்ணம், சொல், செயலில் இசைவும் தூய்மையும் கடைப்பிடிக்க வேண்டும். இன்னா செய்யாமை வேண்டும். சிறுபிள்ளையின் உணர்வுக்கும் தீங்கு இழைக்கக்கூடாது. 'சேவாதள்' நிறுவனத்தின் முதுகெலும்பு. அதி உன்னத அந்தஸ்து.

மேலும், மார்ச் மாதம் 1988 இல் சுவாமி 'Sevadal' என்ற சொல்லிலுள்ள எழுத்துக்களை வைத்தே விளக்கம் கொடுத்தார்.

S - Sacrifice தியாகம்
E - Eagerness ஆர்வம்
V - Vigour விறுவிறுப்பு
D- 5D's அர்ப்பணிப்பு, பக்தி, கட்டுப்பாடு, பகுப்பாய்வு, மனஉறுதி
A - Alertness - இடையறா விழிப்பு
L - Love அன்பு

மேலும் தொண்டர்கள் :

- சக்தி முழுவதையும் பணியில் செலவிடவேண்டும்.
- உடலின் தேவைகளைச் சில சமயங்களில் புறக்கணிக்கவேண்டும்.
- நான் என்ற அகங்காரத்தைவிட்டு, பலனகள் யாவற்றையும் ஆண்டவனுக்கு அர்ப்பணிக்கவேண்டும்.
- கடவுள் தன்னுள்ளே இருப்பதை உணரவேண்டும்.
- செல்வம், பலம் எல்லாம் ஆண்டவனே என்பதை உணரவேண்டும்.



இவைதான் சேவாதள் தொண்டரின் மகத்தான அர்த்தம்.

ஆன்மீக முன்னேற்றத்தில் மனப்பாங்கு மாற்றத்தின் நிலைகளாவன:

நான் → நாங்கள் → எல்லாம் அவனே
எனது → எமது → அவனது
தூதன் → மகன் → நானே அவன்
துவைதம் → விசிஷ்டத்வைதம் → அத்வைதம்
கர்மம் → பக்தி → ஞானம்
ஜீவன்முக்தர் - ஆத்ம உணர்வுடன் பற்றின்றி வாழ்தல்

இப்பயிற்சியின்போது அவதார நோக்கைப்பற்றி மேலோட்டமாகக் கூறப்பட்டது:

1. உள்ளுறையும் தெய்வீகத்தை வெளிக்கொணரவே நான் வந்துள்ளேன்."
2. தர்மத்தை நிலைநாட்டுதல்
3. அறநெடுஞ்சாலையைத் திருத்தியமைத்தல்
4. வேத போஷணா
5. கல்விச் சீர் திருத்தம்
6. சத்திய அல்லது இராம இராச்சியத்தை ஏற்படுத்தல்
7. சர்வ மத ஒற்றுமையை ஏற்படுத்தல்
8. உன்னதமான மாற்றத்தை ஏற்படுத்தல்

**டாக்டர் R.சிவசங்கர் ஆன்மீகத்தில் ஏற்படும் சவால்களும் அவற்றை எதிர்கொள்ளலும் என்ற தலைப்பின் உரையாற்றலின் சாராம்சம்**

- உபநிடதங்களின் சாராம்சமே 9 ஒழுக்கக் கோவைகள்.

சவால்களாவன :

- சுவாமியில் இருக்கும் விசுவாசம் போதாமை
- ஆன்மீக ஈடேற்றத்தில் அக்கறையின்மை
- சத்தியத்தில் (உண்மை, உண்மைப்பொருள், உண்மைநிலை) தெளிவு, உறுதி, பற்று இன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ○ சீடத்துவம் போதாமை
- ○ ஆசைகளை ஆசைகளாக இனம் காணாமை
- ○ ஆசைகளை அகற்றவேண்டும் என்பதில் தெளிவின்மை, விருப்பமின்மை.
- ○ ஆசைகளுக்கு வரம்பிடாமை. காலநேரம் வீணாக்குதல். பணம், உடல் உள சக்தி வீணாக்குதல்.
- ○ சுயநலம் (ஆணவம்)
- ○ நாங்கள், மற்றையோர், இறைவன் என்ற நிலை மாறாமை.

அதாவது, இறைவன் மற்றையோர் நாங்கள் என்ற நிலையில் இல்லாமை

எதிர்கொள்ளத் தேவையானவை:

- நேர முகாமைத்துவம்
- விடாமுயற்சி
- இலக்கில் நிலைத்திருத்தல்

**தியானத்தைப்பற்றி, வீடியோ படத்தின் உதவியுடன், டாக்டர் சி.சிவகோணேசன் அவர்களின் உரையின் சாராம்சம் :**


தியான படிமுறைகளிலே மூன்று நிலைகள் காணப்படுகின்றன. அவையாவன:

- ○ மன ஒருமுகப்படுத்தல் - Concentration
- ○ ஆழ்ந்த சிந்தனை - Contemplation
- ○ தியான நிலை - Meditation

ஒரு பெரிய பூந்தோட்டத்தில் ஒரு ரோசாக் கண்டில் நோக்கத்தை வைப்பது மனஒருமைப்படுத்தல் ஆகும். பின்பு அந்த ரோசாச்செடியில் பூவை மாத்திரம் நோக்கி முள்ளு இலைகளை மறப்பது ஆழ்ந்தசிந்தனை ஆகும். பின்பு ரோசாப்பூவே மறைந்துவிடும் நிலையே தியானமாகும்.

**ஜோதி தியானம்**

- ஜோதி எல்லா மதங்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.
- இறைவன் நாம ரூபங்களக்கு அப்பாற்பட்டவர்
- ஜோதி இறைவனின் அடிப்படை இயல்பு. பேரொளி தான் இறைவன்
- ஒரு சுடரிலிருந்து எத்தனையோ சுடர்களை ஏற்றலாம். இதனால் முதற்சுடரின் பிரகாசம் குறை வதில்லை
- ஜோதி ஒளி வடிவற்றது. முடிவற்றது. தெய்வீகமானது. பரபிரம்மத்தை குறிக்கிறது.
  நேரம் : அதிகாலைப்பொழுத்து (4.00 6.00am)
- அமைதியான இடம் தேவை.
- விரிப்பின் மேல் முள்ளந்தண்டு தலையை நேராக வைத்திருக்கவேண்டும்.
- நேரான, அசைவில்லாத சுடரை முன்வைக்கவும்.
- மனதை ஒருமுகப்படுத்த இறை நாமத்தை உச்சரிக்கலாம்.
- கண்களைத் திறந்து முன்னால் உள்ள ஜோதியை உற்றுநோக்கவேண்டும். (குறைந்தது 12 வினாடிகள்)
- பின்னர் கண்களை மூடி ஜோதியை புருவ மத்தியில் நிறுத்தவும். (கற்பனை செய்யவேண்டும்)
- புருவ மத்தியிலிருந்து பின்சென்று கீழிறங்கி தாமரை மொட்டுப்போல் உள்ள ஆன்மீக இதயத்தை அடையட்டும்.
- உடனே தாமரை மொட்டின் 5 இதழ்கள் (சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை) விரிகின்றன.
- இதயத்திலிருந்து பிரகாசம் உடலெங்கும் பரவுவதாக மனதால் நினைக்கவேண்டும். ஒவ்வொரு அங்கமும் தூய்மைப்படுவதாக மனதில் இருத்தவேண்டும்.
- எம்மிலிருந்து எம்மைச்சுற்றி எங்கும் பரவட்டும். இதனால் எமது மனம் விரிவடைகின்றது.
- ஒளி எம்முன் இருந்தது அடுத்து ஒளி என்னுள் இருந்தது. இப்போது நாமே ஒளி
  நாமே ஒளி என்ற உணர்வில் திளைத்திருக்கவேண்டும்.
  முழுத்தியானமும் 2 - 5 நிமிடத்திலும் முடிக்கலாம் மணித்தியாலங்களிலும் இருக்கலாம்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜோதி தியானத்தின் பயன்களாவன :

- ஞாபக சக்தி அதிகரிக்கும்
- மன ஒருமுகப்படுதல் அதிகரிக்கும்
- ஆக்கத்திறன் அதிகரிக்கும்
- தன்னம்பிக்கை அதிகரிக்கும்.
- நல்ல உணர்வுகள் சூழலைத் தூய்மைப் படுத்தும்.
- பிறருடன் இசைந்து வாழும் பண்பு அதிகரிக்கும்
- மனஅழுத்தம் குறையும்.
- கவலைகள், பயம், உணர்ச்சி வசப்படுதல் ஆகியவை குறையும்.
- உள்ளுணர்வு விருத்தியடையும்.




**ஸ்ரீ.V.T.சிவோதயன் - ஆன்மீக சாதனைகளை விளக்கி, அதற்குதவியாக கையேடு கொடுத்தார்.** அது இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**உன்னதமான ஆன்மீக சாதனை**

- "மனிதப்பிறவி மிகவும் அரிதானது" - பாபா
- எங்களுக்கு முன்னால் ஐந்து மிகச் சிறந்த தெரிவுகள் உள்ளன.

1. இறைவனின் உலகை அடைதல் (சாலோக்கியம்)
2. இறை உலகில் இறைவனின் அருகாமையை அடைதல் (சாமீப்பியம்)
3. இறைவனின் உருவ அமைப்பைப் பெறல் (சாரூப்யம்)
4. இறைவனுடன் இரண்டறக்கலத்தல் (சாயுஜ்ஜியம்)
5. பூமியில் வாழும்போதே ஆத்ம சாட்சாத்காரம் அடைதல் அது ஜீவன்முக்தி (மிகமிக உன்னதமான நிலை)

Advent of Love
SRI SATHYA SAI

- இதற்கு வழி என்ன?

"முள்ளை முள்ளால் எடுப்பதுபோல கர்மத்தை கர்மத்தாலேயே அகற்றவேண்டும்." - பாபா

- மிகச் சிறந்த கர்மம் எது?

"இறைவன் திருநாமத்தை உச்சரிப்பது மிகச் சிறந்த கர்மம்" - பாபா

"சகல விழுமியங்களும் இறைநாமத்தை ஓதுபவரிடம் நாளடைவில் வந்துசேரும்" - பாபா

- விடுதலையின் ரகசியம் என்ன?

"இறைநாமத்தைத் தொடர்ச்சியாக ஞாபகத்தில் வைத்திருப்பதே" - பாபா

ராம, ராம, ராம என்று 3 தடவை உச்சரிக்கும்போது 1000 தடவை ஹரி நாமம் சொன்ன புண்ணியத்தை நாம் அடைகின்றோம்.

இறை நாம ஸ்மரணம் கலியுகத்தின் மிகச் சிறந்த ஆன்மீகச் செல்வம்.

இறைநாமம் (உதாரணம் - சாயிராம்) சர்வசக்தி வாய்ந்தது.

நினைத்துப்பார்க்கமுடியாத நல்லதிர்ஷ்டத்தைத் தருகின்றது.

இறைநாமத்தின் இயல்பு என்னவென்றால் அது ஒருவரை தெய்வீக ஆனந்த நிலைக்கு உயர்த்துகின்றது.

இறைநாமத்தை உச்சரிப்பவர் சாதாரண மனிதர் அல்லர். அவர் முழு உலகத்தினதும் மெச்சுதலுக்குத் தகுதியானவராகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுண்ட ஜீவன்கள் விடுதலையடைய உதவும் ஒரே வழி இறைவனின் திருநாமமே. (உதாரணம் : சாய்ராம்)

இறைநாமம் மிகவும் விரும்பப்படும் முக்தியைத் தரும். உன்னதமான இறையுலகிற்கு ஒருவரை உயர்த்தும். மனவாசகம் கடந்த உன்னதமான இறையன்பை ஒருவரிற்கு ஆசீர்வதிக்கும். இறைநாம உச்சரிப்பு பக்தித்தொண்டின் உன்னதமான நிலை. இறை நாமம் சகல பாவங்களையும் அழிக்கும். ஜட உலகத் துன்பங்களிலிருந்து ஒருவரை விடுவிக்கும்.

- இறைவன் என்ன நினைக்கிறார்?

இந்த மனிதன் எனது புனித நாமத்தை உச்சரித்தபடியால் எனது கடமை இவனைக் காப்பதே - ஸ்ரீமத் பாகவதம்


- இறை நாமத்தை உச்சரிப்பவர், கீர்த்தனம் செய்பவர், தியானிப்பவர் காலதேவனின் தண்டனை யிலிருந்து தப்புகின்றார்.
- இறைநாமமே ஒருவருடைய உண்மையான நண்பன்.
- சகல நோய்களையும் தீர்க்கும் மருந்து இறை நாமமே. (உள்ளம் உருகி உச்சரிக்கவேண்டும்)
- மனக்கவலையாலும், பயத்தாலும், நோயாலும் பீடிக்கப்பட்ட மனிதனுக்கு நம்பிக்கை ஒளிக்கீற்றாக வருவது இறைவன் திருநாமமே.
- இறைநாம உச்சாடனம் தீய சக்திகளையும், அமங்களத்தையும் துன்பம், பசி, தாகம், மதி மயக்கம் என்பவற்றையும் விரட்டுகின்றது.
- இருண்ட கலியுகத்தின் பயங்கள், தாக்கத்திலிருந்து தப்ப ஒரே வழி இறைநாம உச்சாடனமே.
- ஹரியினுடைய நாமத்தை ஒரு தடவை ஒருவன் உச்சரித்தாலே, அவன் முக்திக்குத் தகுதி யுடையவனாகின்றான்.
- மிகக்கடுமையாகப் படித்து வேதங்களைக் கற்பதனைக்காட்டிலும் மிக இலகுவாக இறை நாமத்தை உச்சரிப்பதன்மூலம் இக் கலியுகத்தில் மனிதன் முழுமையடையலாம் என்று கந்தபுராணம் முறையிடுகின்றது. ஸ்ரீ ஹரியின் நாமம் முழுவேதங்களைக் காட்டிலும் மிக உயர்ந்தது என்றும் மிகவும் சக்திவாய்ந்தது என்றும் பத்ம புராணம் இடித்துரைக்கின்றது. "வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது நாதன்நாமம் நமச்சிவாயவே" - சம்பந்தர் தேவாரம்.

- ஆன்மீக வாழ்வின் உன்னத மற்றும் முழுமைத்தன்மை இறைநாம உச்சாடனத்தால் ஒருவரிடம் வந்தடைகின்றது. கோதானம், சுவர்ணதானம், யாகங்கள், தீர்த்தயாத்திரை, ஸ்நான புண்ணியங்களை விட இறைநாம ஸ்மரணத்தினால் ஒருவர் கோடி மடங்கு புண்ணியங்களை அடையமுடியும் என்று புராணங்கள் முழங்குகின்றன.

- கோடிக்கணக்கான பசுக்களை சூரியகிரகண வேளையில் தானம்செய்யும் மஹா புண்ணியம், பிரயாகை தீர்த்தத்தில் மார்கழிமாதம் தங்கியிருக்கும் புண்ணியம், எண்ணற்ற யாகங்களை செய்யும் புண்ணியம், மலைபோல் பொன்னைத் தானம் செய்யும் புண்ணியம், எண்ணற்ற யாகங்களை செய்யும் புண்ணியம் எதுவுமே இறைநாம உச்சாடனத்தால் அடையப்பெறும் ஆன்மீக சக்திக்கு கோடியில் ஒரு பங்குகூட ஈடாகாது. - லகு பாகவதஅமிர்தம்

- மிகவுயர்ந்த ஆன்மீக சாதனை, இறைநாம உச்சாடனம் இறைநாம மகிமையுடன் ஒப்பிடும்போது முக்திகூட மிகவும் எளிதாகப் பெறக்கூடியதே. ஒருவர் தன்னுடைய முந்திய பல ஜென்மங்களில் செய்த புனித தலயாத்திரைகள், புனித நதிகளில் ஸ்நானம் செய்தல், வேதமுடிவுகளை ஆழமாக கற்றுணர்தல் ஆகியவற்றின் பின்னரே ஒருவருக்கு மிகப் புனிதமான இறைநாமத்தை சொல்லும்பேறு வாய்க்கின்றது.

- "உடலைத் துறந்து செல்லும்போது எவனொருவன் இறைநாமத்தை உச்சரிக்கின்றானோ அவன் சகல பாவங்களும் ஒழியப்பெற்று முக்தி அடைகின்றான்." - ஸ்ரீமத் பாகவதம். இதற்கு ஒவ்வொருநாளும், ஒவ்வொரு





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நிமிடமும் இறைநாமம் சொல்லி பயிற்சி எடுக்க வேண்டும்.

- இறைநாமத்தை தொடர்ச்சியாக உச்சரிப்பவரை நான்கு வேதங்களிலும் பாண்டித்தியம் பெற்றவராகவே கருத வேண்டும். - விஷ்ணு தர்மோத்தார

- இறைநாமத்தை தொடர்ச்சியாக உச்சரிப்பதால் ஆறு உள் எதிரி களையும் (காம, குரோத, மத, மார்ச்சரிய, மோஹ, லோபம்) முற்றாக கட்டுப்படுத்த முடியும்.

- ஒருவர் இறைநாமத்தை உச்சரித் தவுடன் இறைவன் அவர்பால் ஈர்க்கப் படுகின்றார். - வராஹபுராணம். ஏனெனில் இறைநாமம் நான்கு வேதங்களினதும் சாரமாகும்.

- பக்தியின் மூன்று அங்கங்களான சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம் என்ற மூன்றும் இறைநாமம் உச்சரித்தவுடனே பூர்த்தி செய்யப்படுகின்றது. (ஸ்மரணம் = நினைத்தல்)

"கலியுகத்தில் இறைநாம கீர்த்தனத் தாலேயே இறைவன் திருப்திப் படுத்தப் படுகின்றார்."- ஸ்ரீமத் பாகவதம்

"மிருகங்கள், பறவைகள், பூச்சிகள் இறை நாமத்தை உச்சரிக்க முடியாதுள்ளது. ஆனால் இறைநாமம் உச்சரிக்கப்படும் போது அதனைக்கேட்டு அவை பெரு நன்மை அடைகின்றன." உரத்த இறை நாம சங்கீர்த்தனத்தால் எல்லா உயிர்களும் நன்மையடைகின்றன."






சைத்தனிய பாகவதம்

ஆகவே நாம் அனைவரும் செய்ய வேண்டியது என்ன?

1. தினந்தோறும் ஒவ்வொரு மணித்தி யாலமும் இறைநாம உச்சரிப்புச் செய்யப் பழகுதல்வேண்டும். உதாரணம் - ஓம் ஸ்ரீ சாய்ராம்/ இஷ்டமந்திரம் உச்சரிப்பு
2. சாயி பஜனைகளில் தவறாது கலந்து கொள்ளவேண்டும்.
3. சேவைகளில் ஈடுபடும்போது தவறாது இறை நாமத்தை உச்சரித்துக்கொண்டு இருக்கவேண்டும்.
4. இறைநாம, ரூப, ஒளித்தியானத்தை தினந் தோறும் செய்யவேண்டும்
5. சாயி கூட்டங்கள் அனைத்தையும் சாயி போதனை களுடன் நடத்தல் வேண்டும்.
6. சாயி நூல்களையும், ஆன்மீக நூல்களையும் ஆழ்ந்து பயிலுதல் வேண்டும்.
7. வீண் விவாதங்களிலும் தர்க்கங்களிலும் உரை யாடல்களிலும் ஈடுபடுதலைக் குறைத்து இறைநாம ஸ்மரண பயிற்சியில் உயர்ச்சியடைய முழு முயற்சி செய்ய வேண்டும்.
8. ஆகவே ஓங்கார, காயத்திரி மந்திர இறை நாமஸ் மரணத்தினால் உன்னதமான முக்தி நிலைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவது ஒன்றையாவது அடைய இப்போதே முயற்சி செய்வோம்.

9. நாம மகிமையிலுள்ள நம்பிக்கையும், திடஉறுதியும் நாம சாதனையில் வெற்றிக்கு அடிப்படை ஆகும்.
10. ஓங்கார மந்திர உபாசனை, காயத்திரி மந்திர உபாசனை, இறைநாம ஸ்மரணம் என்பவற்றின் முறையான, விசுவாசமான பயிற்சியால் நாம் மேற்சொன்ன உன்னதமான முக்தி நிலைகளை எட்டிப்பிடிக்க முடியும்.

- சைவ உணவுப்பழக்கம், சாயி இலக்கியத்தை கிரமமாக ஆழ்ந்து படித்தல், புனித ஆன்மீக நூல்களை கற்று ஒழுகுதல் என்பன நிரந்தரமான விடுதலைக்கு எம்மை இட்டுச் செல்லும் பயணத்திற்கு பெரிதும் உதவுகின்றன.

**ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறியது:**
"அன்பான அர்ஜுனா! எவரொருவர் என் நாமத்தை எனக்கு முன்னால் பாடியும், ஆடுகின்றாரோ நான் உண்மையைச் சொல்கின்றேன். அவர்கள் என்னை (விலைக்கு) வாங்கிவிட்டார்கள். எவரொருவர் என்முன்னால் எனது நாமத்தைப் பாடி அழுகிறார்களோ, நான் அவர்களின் அடிமையாகின்றேன். ஏனென்றால் நான் ஜனார்த்தனன்" ஆதிபுராணம்
ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறியது:
"ஓ அர்ஜுனா! கவனமாகக்கேள்! என்னுடைய நாமங்களால் ஆக்கப்பட்ட மஹா மந்திரத்தை ஒருவர் சொல்வாராயின், நான் அந்தச் செயலை ஒருபோதும் மறக்கமாட்டேன். நான் அந்த மனிதரிடம் மிகவும் கடன்பட்டவனாக உணர்கிறேன். அந்த மனிதனுக்கு பட்ட கடனை தீர்க்க வேறு வழி கண்டுபிடிக்காததால். அந்த மனிதனின் பெயரை நான் உச்சரிக்கத் தொடங்குகின்றேன்." ஆதிபுராணம்.

**சாயி நிறுவனத்தில் இளைஞர் பங்கு என்ன? தலைப்பில் டாக்டர் T.தனேஸ்குமார் ஆற்றிய உரையின் சாராம்சம்**
பிரபஞ்ச சக்தியுடன் இணைப்பை ஏற்படுத்த
- தினசரி சாதனை
- சமய நூல் வாசித்தல்
- ஒளி தியானம்
- காயத்திரி ஜெபம்
- நாமஸ்மரணை ஆகியவையே உதவும்.


"இப்புவிக்கு நல்ல ஒரு எதிர்காலம் உண்டெனில் அது இளைஞர்களின் உயர்மனமாற்றத்தால் மட்டுமே சாத்தியம்" - சுவாமி

இளைஞர் அணியை வளர்த்துக் கொள்ளுதல் ஒரு சாயி நிறுவன வளர்ச்சிக்கு மிகவும் அவசியம்

இளைஞர்களுக்கான நன்மைகள் :
- கடவுளால் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனத்தில் பங்குகொள்ளல்
- மனதைச் சீரான வழியில் கொண்டு செல்ல பயிற்சிகள் கிடைக்கப்பெற்று வாழ்க்கையில் வெற்றிபெற உதவி செய்கிறது.
- ஆன்மீக நாட்டமுடையவர்களின் தொடர்பு கிடைக்கப்பெற்று சரியான வழியில் நிதானமாகச் சென்று இலக்கை அடைய உதவுகிறது.
- சமூக சேவை செய்ய ஒரு சர்வதேச அங்கீகாரமுள்ள நிறுவனத்தின் பாதுகாப்பும், உறுதியும் கிடைக்கிறது.
- நேரத்தை வீண் விரயம் செய்யாமல் நல்ல வழியில் செலவிடப்பெரும் வாய்ப்புக் கிடைக்கிறது.
- கலாச்சார கலைவளர்ச்சிக்கு உதவிசெய்கிறது.
- பல்வேறு திறன் உள்ளவர்களின் நட்பினால் தங்களது திறனை விருத்தி செய்யலாம்.
- இறைவன் ஒருவனே. அவன் எங்கும் உள்ளான். எல்லா மதங்களும் ஒன்றே என்ற நற்செய்தி இதயத்தில் பதியும் வாய்ப்பு ஏற்படுகிறது.

இளைஞர்களால் நிறுவனமும் நன்மையடைகிறது. அவர்களே வருங்கால நிர்வாகிகள். நிறுவனத்தின் சகல பலங்களுக்கும் உறுதுணையாக நிற்பார்கள்.

**சாயி சேவை என்ற தலைப்பில் ஸ்ரீ K.லோகிதகுமார் தேசிய சேவை**





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**இணைப்பாளர் ஆற்றிய உரையின் சாராம்சம் பின்வருமாறு:**

வரைவிலக்கணம் :

- சேவை பக்தியின் அடையாளம்
- எல்லா உயிரினங்களும் இறைவனது குழந்தைகள் எனும் பக்தர்களின் உணர்வால் ஏற்பட்ட விளைவே சேவையாகும்.
- சேவை ஆன்மீக சாதனையாகும்.
- சேவை குழுவாக செய்யப்படும்போது மிகவும் திறமையாகச் செயற்படலாம்.
- "சர்வஜீவ நமஸ்காரம், கேசவம் பிரதிக்சதி" உயிருள்ளனவற்றிற்கு நீங்கள் வழங்கும் கௌரவமும், சேவையும் கேசவனாகிய கைவஸ்துவை சென்றடையும். - சுவாமி

தத்துவம் :

- ஆன்மீக ஈடேற்றத்திற்காகவும் கர்மாவை அழிப்பதற்காகவும் பலனை எதிர்பாராமல் செய்யப்படுவது.
- பலனை எதிர்பாராது செய்வதால் கர்ம யோகமாக மாறுகிறது.
- சேவையின் போது நிலையத்தின் சட்ட திட்டங்கள் பரிமாணங்கள் உள்ளடக்கப்படவேண்டும்.
- சேவையின்போது பரயோகம் (பிறருக்கு சேவை செய்தல்) ஆத்மயோகம் (தமக்குச் சேவை யாற்றுதல்) ஆகியன முன்பின் சந்திக்கும் போது ஆனந்தம் ஏற்படுகின்றது. கவலை, அங்கலாய்ப்பு கஷ்டம் அழிந்துவிடுகின்றன.

சேவையைச் செய்யும்போது கடைப்பிடிக்க வேண்டியவை.

- ஆண்களும் பெண்களும் வெவ்வேறாக செயற்படவேண்டும்.
- உடை எளிதானதாகவும், தூய்மை யானதாகவும் உடம்மை மூடி மறைத்தும் இருக்கவேண்டும்.
- சுவாமியை பிரார்த்தித்துத், தொடங்கி, முடியும் போதும் பிரார்த்திக்க வேண்டும்.

சாயி சேவை ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் எங்களை உன்னதமாக மாற்றிக் கொள் வதற்காகவும் ஆன்மாவை உணர்ந்து கொள்வதற்காகவும் பிறப்பை அழிப்பதற் காகவும் செய்யப்படுகிறது. ஆடம்பரம் விளம்பரம் தவிர்க்கப்படவேண்டும்.

திட்டமிடல் :

எடுத்தகாரியத்தை செவ்வனே குறித்த நேரத்தில் செய்து முடிக்கப்படவேண்டும். தேவையானவற்றை முற்கூட்டியே சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அனுமதி:

இரண்டுவகையான அனுமதிகளைப் பெறவேண்டியது அவசியம்.

1. சுவாமியிடம் ஆத்மார்த்தமான பிரார்த்தனை
2. கட்டுப்பாடாகவும் நிறுவன விதிகளை மீறாமல் கலந்தாலோசித்தும் செயற்படவேண்டும்.

அகங்காரம் அழிக்கப்படவேண்டும்.

மீளாய்வு :

இரண்டுவகையில் பார்க்கவேண்டும்.

1. செய்த சேவை முழுமையாக முடிந்ததா? பயனாளி திருப்தி அடைந்தாரா?
2. சேவை செய்தவரின் அகங்கார உணர்வு குறைந்து மனமகிழ்ச்சி ஏற்பட்டதா என சுய பரிசோதனை செய்யவேண்டும்.

ஆவணப்படுத்தல் :

செய்த சேவைகளை திகதி ஒழுங்கு முறைப்படி குறைநிறைகள் இருந்ததையும் ஆவணப்படுத்தி மேலிடத்திற்கு அனுப்பவேண்டும்.

சேவையே சிறந்த சாதனை : சுவாமி கூறியது,

- தன்னலமற்ற சேவை கலப்படமற்ற தங்கத்திற்கு ஒப்பானது
- மானுட சேவையே மாதவசேவை
- பிரார்த்தனை செய்யும் உதடுகளைவிட சேவை செய்யும் கரங்களே புனிதமானவை.
- மாதா பிதாவிற்கு செய்யும் சேவையே ஈசனுக்கு செய்யும் பூசை.
- காவி உடுத்தி காசிக்கு செல்வதைவிட ஆவி துடிக்கும் நோயாளர்களின் அருகில் சென்று உதவுதல் மேலானது.
- ஆடை அழுக்கை நீக்க சோப்பும், நீரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுவது போல மனஅழுக்கை நீக்க அன்பும் சேவையும் அவசியம்.

- சேவை என்பது ஏதோ பெரிய காரியமல்ல. பிறர் துன்பம் கேட்டு ஆறுதல் கூறுவதும் சேவைதான்.
- உடல் நோய்க்கு பல மருந்துகள் உண்டு. உளநோய்க்கு தன்னலமற்ற சேவையே மருந்து.
- வீட்டிலுள்ள பெரியோர்களுக்கு சேவைசெய்த பின்பு நாட்டிற்கும் சேவை செய்யுங்கள்.
- சாதனையின் முதற்படி வாக்குச்சுத்தம். சினம் நீங்கி இனிமையாகப் பேசவேண்டும்.

சின்னம் (Badge), கழுத்துப்பட்டி (Scarf) பற்றி சுவாமி கூறியவை:

- இவை சுவாமியின் அன்புக்கும் கருணைக்குமான அடையாளங்கள்.
- இவை உங்கள்மேல் பெரும் பொறுப்பை அளிக்கின்றன.
- இவை எல்லோருக்கும் எளிதில் கிடையாதவை.
- இவை உயர்ந்த ஒழுக்க சீலங்களுக்கும் தாராள மனப்பான்மைக்கும் தளராத முயற்சிக்குமான அடையாளங்கள்.
- மதுபானம், புகைத்தல், மாமிசம் புசித்தல், சூதாடல் தவிர்க்கப்படவேண்டும்.
- இவை கழுத்திலும் நெஞ்சிலும் தொங்குகின்ற படியால் சுவாமி எப்போதும் உள்ளே இருக்கும் உணர்வையும் ஆறுஉள் எதிரிகளை வெளியேற்றும் உணர்வையும் கொடுப்பனவாகும்.
- இவை மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தத் தரப்பட்டவையல்ல.
- உங்கள் கடந்தகால நல்வினையின் பயனால் கிடைத்த மரக்கன்று போன்றது. இதை நேர்மையான சேவை எனும் நீரால் வளர்க்கவும்.
- பிரசாந்தி நிலையம் உனது வீடு என்று கூற உரிமை அளிக்கின்றது.

**ஸ்ரீ S.ஹரிதர்சன், மத்தியசபை உப தலைவர் சத்தியசாயி நிறுவனத்தின் அமைப்பைப் பற்றி விளக்கினார்.**

அனர்த்தங்கள் இல்லாதபோது சாதாரண சூழ்நிலையில் ஏனைய நிறுவனங்களுடன் சேர்ந்து சேவை செய்வது பிழை என்று சொன்னார். பகவானின் பெயரைச் சொல்லி அங்கத்தவர்கள் அல்லாதவரிடமிருந்து நிதி சேகரிக்கக்கூடாது. நிதி அறிக்கை மத்திய சபைக்கு அனுப்பவேண்டும் என்றும் சொன்னார்.

**ஸ்ரீ சி.சிவபாலன் நித்திய சாதனைகளான ஓம்காரம், காயத்திரி ஜெபம், சுப்ரபாதம், ஆராத்தி ஆகியனவற்றைத் தொடர்புபடுத்தி விளக்கம் கொடுத்தார்.**

**ஸ்ரீ A.ஜெகநாதன், மனித விழுமியங்கள் பற்றியும், பின்பற்றுவதற்குள்ள தடைகள் பற்றியும் மனிதத் தொழிலகம் பற்றியும் ஆற்றிய உரையின் சாராம்சம்.**

மனிதவாழ்வை மேம்படுத்தும் குணாதி சயங்களே மனித விழுமியங்கள். சகல விழுமியங்களையும் பகவான் 5 அடிப்படை விழுமியங்களுள் அடக்கியுள்ளார்.

அவையாவன : சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்பனவாகும்.

சத்தியம் - எண்ணம், சொல், செயலில் ஒருமையும் தூய்மையும். உண்மை பேசுதல். தன்னை அறிதல். என்றும் மாறாதது ஒன்றே சத்தியம்.

தர்மம் - மனிதனாக வாழ்தல், அறநெறி வாழ்வு, தத்தம் கடமைகளை செய்தல், பொறுப்புடனும், அர்ப்பணிப்புடனும் செய்தல், பிறருக்கு சேவை செய்தல்.


சாந்தி - திருப்தி, தன்னடக்கம், சமநிலை.

பிரேமை - அன்பு ஓர் மகா சக்தி, அன்பே சிவம், எல்லாவற்றிற்கும் அடிப்படை. மன்னிப்பு, தியாகம் என்பன அடங்கும்.

அகிம்சை- எண்ணம், சொல், செயலால் சகலருக்கும் சகலதிற்கும் இன்னா செய்யாமை.

ஏன் ஒருவர் விழுமியங்களைக் கைக்கொள்ளவேண்டும்?

- இதுதான் மனித தர்மம்
- இறைவனின் விருப்பம்
- நற்பிரசையாக வாழ்வதற்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- மனச் சாந்தி பெற்று ஆனந்தமாக வாழ்வதற்கு.
- உலகியலில் வெற்றிபெற
- பாதுகாப்புக் கவசமாக இருக்கும்.
- சித்தசுத்தியடைந்து இறைவனை அடைவதற்கு.

விழுமியங்களைக் கடைப்பிடிப்பதில் ஏற்படும் தடைகள்?

- ஆறு உள் எதிரிகள் - காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம்
- உடற்தடை வியாதி, சோம்பல்
- தேகாபிமான வாழ்வு
- ஆன்மீக அறிவின்மை
- கர்மவினை

மனதைப் பற்றிய அறிவும் வேண்டும்.
புலன்கள் மூலம் அறிமனத்திற்குத் தகவல்கள் சென்று அடிஅறி மனதில் பதியப்பட்டு செயலில் முடிகிறது. '

அடிஅறிமனதில் 6 உள்எதிரிகளும் கர்மவினைகளும் பதியப்பட்டுள்ளன. இவற்றை 5 அடிப்படை விழுமியங்கள் மூலமே தூய்மைப்படுத்தி உயர் அறி மனதை மிளிரச் செய்யலாம். இதற்கு ஆன்மீக சாதனைகள் அவசியம்.




**வேதத்தின் மகிமை**, சர்வமத ஒற்றுமை, ஆத்ம விசாரணை, அனர்த்த மேலாண்மை, சேவைக்குரியவர் களை எப்படி இனங் காண்பது. மனித விழுமியங்கள் இணைந்த தலைமைத் துவம், பாலவிகாஸ் கல்வி, சேவையின் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய கட்டுப்பாடுகள் ஆகிய தலைப்புகளில் உரைகள் நிகழ்ந்தன.

தொடர்ந்து **குழுக் கலந்துரையாடல்**

1. நீ எனது பணியைச் செய்தால்
   நான் உனது பணியைச் செய்வேன்.
2. உன்னால் இயன்றதைச் செய், மிகுதியை நான் செய்வேன்.
3. அனைவரையும் நேசி
   அனைவருக்கும் சேவை செய்.
4. சுவாமியின் போதனைகளைப் பின்பற்றல்.

என்ற தலைப்புகளில் நடைபெற்றன

ஜெய்சாயிராம்

## தேசிய சேவைத் திட்டம்




**சத்திய சாயி பாடசாலை -மானிப்பாய் - யாழ்ப்பாணம்**

**கல்வி சேவைத்திட்டத்தை நோக்காக கொண்டு இலங்கையின் முதலாவது சத்திய சாயி பாடசாலை யாழ்ப்பாணத்தில் மானிப்பாயில் சுவாமியின் ஆசியுடன் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.**

**இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: +94 21 225 5086
E mail - saischoolmail@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலவிகாஸ் குருமாருக்கு வலுவூட்டும் மறு பயிற்சி

இப் பயிற்சி வடமாகாண பாலவிகாஸ் குருமாருக்கு 16.09.2017 அன்று ஸ்ரீ நா.புவனேந்திரன் (தேசிய கல்வி இணைப்பாளர்), யாழ். சத்திய சாயி நிறுவனத்தில் நடத்தினார். இப் பயிற்சியை வடபிராந்திய இணைப்புக்குழுத் தலைவர் ஸ்ரீ K.V. சிவநேசன் அவர்கள் பகவானின் ஆசீர்வாதத்தை வேண்டியபின் தொடக்கி வைத்தார். அவர் கூறியதன் சாராம்சம்.

இன்று காலை என்னத்தை குருமாருக்கு சொல்லலா மென்ற சிந்தனையுடன் எழுந்தேன். எதைச் சொல்ல வேண்டு மென்று சுவாமியைப் பிரார்த்தித்தேன். வீட்டிற்குள்ளே திரியும்போது திடீர் என ஒரு பழைய புதினப்பத்திரிகையின் துண்டு காலில்பட்டது. எடுத்துப் பார்த்தால் அது 1981ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில் சுவாமி பாலவிகாஸ் குருமாருக்கு கூறியவை பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதில் சுவாமி குருமாருக்கு இருக்கவேண்டிய தகைமைகளை முக்காலிக்கு ஒப்பிட்டுக் கூறியிருந்தார். முக்காலியின் மூன்று கால்களான பணிவு, அறிவு, அர்ப்பணம் என்பனவாகும். மேல்தட்டு பிரேமையைக் குறிக்கின்றது. இத் தட்டுடன் கால்களை இணைப்பதற்காக அடிக்கப்பட்ட ஆணிகள் நம்பிக்கையைக் குறிக்கின்றது என்று விளங்கப்படுத்தி னார். என்ன அற்புதம் தேவையானதை தேவையான நேரத்தில் தந்து உதவினார். பின் பயிற்சியாளரை வரவேற்று நிகழ்வை அறிமுகம் செய்துவைத்தார்.

ஸ்ரீ புவனேந்திரன் அவர்கள் நம்பிக்கைபற்றிக் கூறத் தொடங்கினார். நம்பிக்கைக்கும் ஆண்டவனின் கிருபை அவசியம் என்றார். இதை நாம் இதய பூர்வமான பிரார்த்தனை மூலம் பெறலாம். நாம் இதயத்தால் சிந்தித்து மூளையால் உணர்ந்தால் (வழக்கத்திற்கு மாறாக) தெய்வீகத்துடன் இணையலாம். நாம் வெறுப்பை அன்பின் மூலமே எதிர் கொள்ள வேண்டும். வெறுப்பு எனும் அக்கினியை அன்பு எனும் நீரினால்தான் அணைக்கமுடியும்.

உதாரணமாக எம்முடன் வாழ்ந்த தலைவர் களான மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா, தெரேசா அம்மையார் ஆகியோரை எடுத்துச் சொன்னார். வெறுப்பிற்கு வெறுப்பைக் காட்டினால் அது ஒரு ஸ்பிரிங் போல சுற்றிச் சுற்றி அதிகரித்து விடும். இதைச் சமாளிக்க இதயத்தில் புனித எண்ணங்களைப் புகுத்தவேண்டும், விதைக்கவேண்டும்.

**கேள்வி :**
பிள்ளைகளுக்கு என்ன செய்கிறீர்கள்?

**பதில் :**
படிப்பிக்கின்றோம்.
படிப்பிக்கக்கூடாது. அது உலகியல். தலையிலிருந்து தலைக்கு தகவல் பரிமாற்றல் நடப்பது. நாம் தெய்வீகப் போதனைகளை விதைக்க வேண்டும். எப்படி விதைத்தல்? பகவானின் போதனையை இதயத்தில் உள்வாங்க வேண்டும். வயலைப் பயன் படுத்துவது போல மனதைப் பயன்படுத்த வேண்டும். மண்ணைப் பதப்படுத்தல், நீர் ஊற்றி பசளை போட்டு களைகளைப் பிடுங்குதல், விதைத்தல் அறுவடையைத் தரும். நாம் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டல் வேண்டும். உந்து சக்தி பணமாக (சம்பளம்) இருக்கக்கூடாது. பிள்ளையின் உன்னத மாற்றமே உந்துசக்தியாக இருக்க வேண்டும். குருவின் பணியில் வேலையுடன் சேவையும் பிணைகின்றது. இதை மனதில் பதிக்கவேண்டும். பிள்ளைகள் பெற்றோர் மூலமாக கடவுளால் கொடுக்கப்பட்ட அருட்கொடை யாகும். அவர்கள் எமது சொத்தல்ல. நாம் கடவுளால் தெரிந் தெடுக்கப்பட்ட பராமரிப் பாளர்களே ஆகும். மண்ணைத் தயார் செய்யவேண்டு மென்றால் ஆன்மீக சாதனைகள் மூலம் இதயத்தை தூய்மை யாக்க வேண்டும். அன்பு எனும் நீரைப் பாய்ச்ச வேண்டும். பசளை போடுவது என்பது கட்டுப்பாடு, அர்ப்பணம் என்பவற்றைக் குறிக்கின்றது. களைகளை அகற்றுவதென்பது எமக்குள்ளே இருக்கும் 6 எதிரிகளை அகற்றுதலே ஆகும். எம்மைத் தயார் செய்ய மன உறுதி வேண்டும். சூழல் சவால்கள் நிறைந்துள்ள தாக இருப்பதால் பகவானைச் சிக்கெனப் பிடிக்க வேண்டும். விடா முயற்சி அவசியம். நாம் ஒழுங்காக மீளாய்வு செய்ய வேண்டும். அகப் பார்வையை விருத்தி செய்ய வேண்டும். இதைச் சாகும் வரை செய்யவேண்டும். சுய விசாரணை மிகவும் அவசியம். அகப் பார்வையும் தியானமும் வேறானவை. (இச் சந்தர்ப் பத்தில் குருமார் தமது கணவர்மாருக்கும் ஒரு பயிற்சி முகாம் வைக்க வேண்டும் என்று கோரிக்கையை விடுத்தார்கள்) தேனீர் இடைவேளைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் பயிற்சி முகாம் தொடங்கும் போது ஸ்ரீ சிவநேசன் தாய்லாந்தில் நிகழ்ந்த நிகழ்வைச் சொன்னார். டொக்டர் ஆட் ஒங் யும்சாய் அப்பாடசாலையின் அதிபர். ஆசிரியரைத் தெரிவு செய்வதற்காக நேர்காணல் முடிவில் 5 பேரைத் தெரிவுசெய்து இவர்களில் ஒருவரை தெரிவு செய்வதற்கு இடைவேளை மணி அடித்தபொழுது பிள்ளைகள் மைதானத்தில் ஓடி விளையாடத் தொடங்குகிறார்கள். 5 ஆசிரியர் களையும் ஒவ்வொருவராக ஒவ்வொரு இடத்தில் நிற்குமாறு சொன்னார். சிறிது நேரத்தில் பிள்ளைகள் ஆசிரியர்மாரைச் சூழ்ந்தார்கள். எந்த ஆசிரியரைச் சுற்றியிருந்த பிள்ளைகளின் எண்ணிக்கையை வைத்து தெரிவு செய்தார். எமக்குள்ளே இருக்கும் அன்பு அதிர்வலைகள் வெளியே எந்நேரமும் சூழ்ந்திருக்கும். இதனால் பிள்ளைகள் இழுக்கப்படுகிறார்கள். குரவிலிருந்து எப்போதும் அன்பு பரிணமிக்க வேண்டும்.


தாய்லாந்து சத்திய சாயி பாடசாலையில் நடந்த இன்னுமொரு நிகழ்வைக் குறிப்பிட்டார். பாடசாலைப் பணிப்பாளரான டாக்டர் யும்சாய் விடுதியில் உணவு நேரத்தில் பிள்ளைகளுடன் வரிசையில் நின்றே உணவை எடுத்துக் கொண்டார். பணிப்பாளரான நீங்கள் ஏன் இப்படி செய்கிறீர்கள்? நேராகப் போய் எடுத்திருக்கலாமே என்று நாம் கேட்டதற்கு "நாம் எப்போதும் முன்மாதிரியாக இருக்கவேண்டும்." என்று கூறினார். குருமார் எப்போதும் முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்றார். குழந்தைகள் குருமாரின் கற்பித்தலைவிட நடத்தையையே உன்னிப்பாக அவதானிப்பார்கள். ஸ்ரீ புவனேந்திரன் தொடர்ந்தார்:

**கேள்வி :**
கணவனுக்கும் மனைவிக்கும் முரண்பாடு எழுந்தால் நேரம்தாழ்த்தாது சமரசம் ஏற்படுத்தவேண்டும். யார் முதலில் மன்னிப்புக் கேட்பார்கள்?

**பதில் :**
யாரிடம் கூடிய அன்புள்ளதோ அவரே மன்னிப்புக் கேட்பார்.

குருமார் பிள்ளைகளின் நடத்தையில் உன்னத மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். எப்படி?


- எண்ணங்களில் மாற்றம் ஏற்படுத்தவேண்டும்.
- நல்லதை திரும்பத்திரும்ப செய்தால் பழக்கமாக மாறிவிடும்.
- பெற்றோர்களின் ஒத்துழைப்பைப் பெறவேண்டும்.
- அடியறிமனத்தை தூய்மைப்படுத்துவதன்மூலம்.




முதலில் நாம் எண்ணங்களை அவதானிக்கவேண்டும். சுவாமி இதை WATCH என்ற சொல்லிலுள்ள எழுத்துக்களை உபயோகித்து விளக்கம் கொடுத்துள்ளார்.

W - Watch - சொல் அவதானிப்பு
A - Action - செயலவதானிப்பு
T - Thoughts - எண்ணங்களைப் பரிசீலிக்கவேண்டும்
C - Charactor - ஒழுக்கம்
H - Heart - இதயம்

சுவாமி சென்னதை அடிக்கடி பின்பற்ற வேண்டும். எண்ணம் சொல்லாக வெளிவர முன்பு ஆலோசிக்க வேண்டும். செயலாக மாற முன்பு ஆராய வேண்டும். அடி அறி மனதில் பதிவுகளை மாற்றம் செய்தல் வேண்டும்.





அடிஅறிமனதில் நிறைந்திருப்பதே செயலில் பரிணமிக்கும். உபமேம்பாடுகளால் அடி அறிமனதை நிரப்பினால் அங்குள்ள எதிரிகள் அகன்று விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்புலன்களூடாக உபமேம்பாடுகள் தொடர்ச்சியாக உள்ளிட்டால் அடிஅறிமனம் தூய்மை யாகிவிடும். இது தூய்மையடைந்ததும், உயர்அறிமனம் ஒருதடையுமின்றி பரிணமிக்கத் தொடங்கும். அதாவது அடிப்படை ஐந்து மனித மேம்பாடுகளான சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை, என்பன எண்ணம், உணர்வு, சொல், செயலில் பரிணமிக்கத்தொடங்கும்.
உதாரணமாக:




நேரத்தை கையாண்டால் அது தர்மமாக வெளிப்படும். தியாக மனப்பாங்கினால் அன்பு விரிவடையும். நேர்மையைப் பின்பற்றினால் சத்தியம் வெளிப்படும். சம மனப்பாங்கினால் அகிம்சை நிலைநாட்டப்படும். அத்துடன் சாந்தியும் நிலவும்.

சுவாமியின் போதனையான நல்லதையே பார், நல்லதையே கேள், நல்லதையே எண்ணி, நல்லதையே செய் என்பதைப் பின்பற்றவேண்டும்.

குருமார்கள் செய்யவேண்டியவை :

1. பிள்ளைகளின் அடிஅறிமனதை அறிந்து கொள்ள முயலவேண்டும்.
   ஏனைய பிள்ளைகளுடன் நடமாடும் பொழுது குழு முயற்சிகளின் போதும் முகபாவனை மூலம் அறிய வேண்டும். ஒவ்வொரு பிள்ளையின் இயல்பைப் பதிந்து வைத்திருக்க வேண்டும். இத் தரவை ஆராய்ந்து, செயன்முறையைத் திட்டமிடவேண்டும். கூடாததை வலுவிழக்கச் செய்து நல்லவற்றை வலுவாக்கவேண்டும்.
   குருமார் Teddy Stoddard அவரின் ஆசிரியை Thompsan அவர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்வைத் தெரிவது நன்று. ஆசிரியர் தமது கற்பனா சக்தியை மிகைப்படுத்தவேண்டும். சுலோகம் பிரார்த்தனை, பகவானின் கிருபை இம்முயற்சியை இலகுவாக்கு வதுடன் துரிதப்படுத்தியும் விடும்.
2. ஐந்து கற்பிக்கும் முறைகள் மூலம் மேற்கூறப்பட்ட தூய்மையாக்கும் முயற்சியைத் துரிதப்படுத்தலாம். இது பகவானால் தரப்பட்ட உன்னத மாற்றத்தை ஏற்படுத்தும் தொழில்நுட்பம்.
3. பிள்ளைகளைத் தாம் பிரித்து A,B,C,D என மனதிலோ அல்லது குறிப்புப் புத்தகத்தில் பதிய வேண்டும். சாதாரணமாக ஒரு பிள்ளை இன்னொரு பிள்ளையை இலேசாக மாற்றலாம். இதில் இரகசியப் பண்பைப் பாதுகாக்க வேண்டும். நிகழ்வுகளின் போதும் வகுப்பிலும் பிள்ளையின் முக பாவனையை அவதானிக்க வேண்டும்.
4. தரத்தின்படி பிள்ளைகளை ஒன்றுசேர்த்து மனத் தூய்மை முயற்சியில் ஈடுபடலாம். சுவாமி உதவிசெய்வார்.
5. பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியம். அவர்களுடன் தகுந்த முறையில் உறவுவைத்து உரையாட வேண்டும்.
   இங்கே காயத்திரி மந்திரத்தின் சக்தியை அறிவித்து ஒழுங்காக கிரம மாக உச்சாடனம் செய்ய வைக்க வேண்டும். பெற்றோரும் பிள்ளையுடன் வீட்டில் உச்சாடனம் செய்யவேண்டும். யாருடன் சேருகிறார்கள் என்பதை அவதானிக்க வேண்டும். மின்ஊடக சாதனங்களை எவ்வாறு உபயோகிக் கிறார்கள் என்பதை அறியவேண்டும்.
6. ஆசிரியர் ஒழுங்குடனும் கட்டுப்பாடுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டும். சுவாமி தந்த 5Dக்களைப் பின்பற்றவேண்டும்.
   கடமை (Duty),
   அர்ப்பணிப்பு (Devotion),
   கட்டுப்பாடு (Discipline),
   பகுப்பாய்வு (Discrimination),
   மனஉறுதி (Determination) இவையே 5Dக்களாகும். தொடர் சுய விசாரணை யில் ஈடுபடவேண்டும்.
7. உயர் அறி மனத்தைத் தடையின்றிப் பரிணமிக்கும் வகையில் செயற்பட பழக்கவேண்டும். ஆசிரியர்களுக்கு இரு வகையான பிள்ளைகள் தங்களது சொந்தப் பிள்ளைகள், இவை காம புத்திரர்கள். ஏனைய பிள்ளைகள் பிரேம புத்திரர்கள் என்று சுவாமி சொல்லியுள்ளார்.

**பாலவிகாஸ் - குருவிகாஸ் - லோகவிகாஸ்**

ஜெய் சாயிராம்
தொகுப்பு : ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி

விழாக்கள் கலாசாரத்தைப் பேண வும் மக்களை நல்வழிப்படுத்தவும் சிறார் களுக்கு ஆன்மீக உணர்வைக் கொடுக்க வும் உண்டாக்கப்பட்டன. விழாவுக்கு உரித்தான நாள் அல்லது காலம் முன்னோர்களினால் நிர்ணயிக்கப்பட்டு ள்ளது. விழாவில் எவ்வாறு வழிபட வேண்டும், அதற்குரிய புராணக் கதை களும் வழக்கத்தில் உள்ளன. எல்லா வற்றிற்கும் மேலாக அதன் உள்ளார்த்த மான கருத்தை விளங்கி வாழ்க்கை யில் பின்பற்றி முக்தி பேறு அடை வதை நோக்கமாகக் கொள்ள வேண்டும். இந்துக் களுக்கு நவராத்திரி விரதம் முக்கியம் வாய்ந்தது. படைத்தவன் படைப்பு இவ் விரண்டிற்கும் இடையே மனிதனின் நிலை, தொடர்பு, தர்மம் ஆகியவை இவ்விழாவில் அடங்கியுள்ளன.

**விழாவின் காலம்:**
புரட்டாதி மாதம் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி முடியவரும் 9 நாளும் கும்பத்திலே பூசைசெய்து தேவியை அனுஷ்டிக்கும் விரதமாகும்.

**வழிபாட்டு முறை:**
முதல் மூன்று நாள்களும் வீரத்தை வேண்டி துர்க்கையையும் அடுத்த மூன்று நாள்கள் செல்வத்தை வேண்டி திருமகளையும் இறுதி மூன்று நாள்கள் கல்வியை வேண்டி கலைமகளையும் பூசிப்பர். இவ் விரதம் அனுஷ்டிப்போர் முதல் எட்டு நாள்களும் ஒரு பொழுது உணவு உட்கொண்டு ஒன்பதாவது நாள் மகா நவமியில் உபவாசம் இருத்தல் உத்தமம். இந் நோன்பு நாள்களில் மதுபானம் அருந்துதல், புனர்தல், மாமிசம் புசித்தல், சூதாடி களியாட்டங்களில் ஈடுபடுதல் ஆகிய வற்றை அறவே விடவேண்டும். வழக்கத்தின்படி ஒவ்வொரு நாளுக்குமுரிய இராகம், பிரசாதம், பழம், புஷ்பம், பத்திரம், நிறம் (உடை கறிவகை) ஆகியவை பின்வரும் அட்டவணையில் உள்ளன.

| இல. | இராகம் | பிரசாதம் | பழம் | புஷ்பம் | பத்திரம் | நிறம் (2017) |
|---|---|---|---|---|---|---|
| 01. | தோடி | அவல், பொங்கல், சுண்டல். | வாழை | மல்லிகை | வில்வம் | மஞ்சள் |
| 02. | கல்யாணி | புளியோதரை | மாம்பழம் | முல்லை | துளசி | பச்சை |
| 03. | காம்போதி | சர்க்கரைப் பொங்கல் | பலாப்பழம் | சம்பங்கி | மரு | சாம்பல் |
| 04. | பைரவி | சறிச்சாதம், பொரியல் | கொய்யா | ஜாதி மல்லிகை | கதிரப்பச்சை | செம்மஞ்சள் |
| 05. | பந்துவராணி | தயிரச் சாதம் | மாதுளை | பவள மல்லிகை | விபூதிப் பச்சை | வெள்ளை |
| 06. | நீலாம்பரி | தேங்காய்ச் சாதம் | நாரத்தை | செம்பருத்தி | சந்தன இலை | சிவப்பு |
| 07. | பிலகரி | எலுமிச்சம்பழம் | பேரீந்து | தாழம்பூ | தும்மை இலை | நீலம் |
| 08. | புன்னாக வராளி | பாயாசம், முறுக்கு | திராட்சை | ரோஜா | பன்னீர இலை | இளஞ் சிவப்பு |
| 09. | வசந்தா | திரட்டுப்பால் | நாவல் | தாமரை | மருக்கொழுந்து | ஊதா |
| 10. | வழக்கத்தின்படி - விஜயதசமி | | | | | |

இந் நோன்பு நாள்களில் அபிராமி அந்தாதி, குமர குருபரரின் சகலகலாவல்லி மாலை போன்ற பாடல்கள் பாராயணம் செய்யவேண்டும். நிறங்கள், பிரசாதம் என்ன நாள் என்பதிலும் தங்கியுள்ளன. ஆகவே புத்தகத்திற்குப் புத்தகம் மாறுபடலாம்.

**கொலு வைத்து வணங்குதல்:**
இதில் 9 படி வரிசையில் களிமண்ணிலிருந்து செய்யப்பட்ட பொம்மைகளை சக்தியின் அம்சங்களாக எண்ணி நவராத்திரியைப் பூசித்தால் சகல நன்மைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கு மென்பது ஐதீகம். 9 படிகளும் அதில் வைக்கப்படவேண்டிய பொம்மைகளின் விவரம் பின்வருமாறு :

1 ஆவது படி - ஓரறிவுள்ள உயிர்கள் - உ ம் : புல், செடி, கொடி போன்ற வடிவில் செய்த பொம்மைகள்.

2 ஆவது படி - ஈரறிவுள்ள உயிர்கள் - உ ம் : நத்தை, சங்கு ஆகியவை

3 ஆவது படி - மூவறிவு உயிர்கள் - உ ம் : கறையான், எறும்பு

4 ஆவது படி - நான்கறிவு உயிர்கள் - உ ம் : நண்டு, வண்டு

5ஆவது படி - ஐந்தறிவு உயிர்கள் - உ ம் : பறவைகள், மிருகங்கள்

6 ஆவது படி - ஆறறிவு உயிர்கள் - உ ம் : மனிதன்

7ஆவது படி - ஏழறிவு உயிர்கள் - உ ம் : மகா மனிதர்கள், சித்தர்கள், மகாரிஷிகள்

8 ஆவது படி - எட்டறிவு உயிர்கள் - உ ம் : தேவர்கள், அஷ்டதிக் பாலர்கள்

9ஆவது படி- தெய்வங்கள் - பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்

இவற்றிற்கும் மேலாக
ஆதி பராசக்தி - மேலானது
சிவன் பார்வதி - மேலானது
பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா - மேலானவர்
(தானே என்று பாபா சொல்லியுள்ளார்.)

மனிதன் படிப்படியாக தன் ஆன்மீக சிந்தனைகளை வளர்த்து இறுதியாக இறைவனுடன் கலக்கவேண்டுமென்ற தத்துவத்தை உணர்த்தவே கொலு அமைப்பு உண்டாக்கப்பட்டது.

**உள்ளார்த்தம் :**

நவராத்திரியை வெறும் பொம்மைக் கொலு விழாவாகப் பார்க்காமல் தத்வார்த்தமாகப் புரிந்து கொள்ள வேண்டும். கொலுவின் பொம்மைகளை தொட்டு ஆட்டுவார்கள். இது எதை உணர்த்துகிறது? "ஆடத்தான் பிறந்திருக்கிறாய் ஆனால் ஆண்டவன் ஆட்டுவித்தபடி நீ ஆடவேண்டும்" என்பதையே உணர்த்துகிறது.

ஐம்புலன்களின் சக்திக்கெல்லாம் ஆதாரம் தேவர்கள். தேவர்களுக்கு ஆதாரம் மும்மூர்த்திகளான தெய்வங்கள். இம் மும்மூர்த்திகளுக்கும் ஆதாரம் மூல சக்தியான பராசக்தி. ஆதி பராசக்தி நமக்கு வழங்கியுள்ள ஆற்றலைக் கொண்டு உலகக் கடமைகளைச் செய்ய வேண்டும். செய்து முடித்தபின்பு அந்த ஆற்றலை தேவிக்கு அர்பணிக்கவேண்டும். அர்ப்பண புத்தியோடு நாம் இருக்க வேண்டும் என்பது தான் நவராத்திரி தரும் முக்கிய செய்தி.


தியானம், பாராயணம், பூசை, விழிப்புணர்வு நிலைகளில் நம் புத்தியை இணைக்கும் போது ஆதிபராசக்தியிடம் இருந்து சக்தி வருகிறது. தீய சக்திகள் ஜெயிக்காது. நல்ல சக்திகளே ஜெயிக்கும். இதுவும் முக்கிய செய்தி.

உயிர்கள் எங்கு தோன்றி, வளர்ந்து தேய்ந்து எங்கு மறைகின்றன என்பது ஒரு கேள்வி. இச் சிக்கலான கேள்விக்கு விடைகாணும் முயற்சியில் இந்துக்களின் தியான முறைகளின் பயனாக மனிதனின் இறையனுபவங்களின் வடிவாகப் பிறந்ததே துர்க்கை எனும் கருத்து. இயற்கையுடன் ஒன்றிய இறைவிளையாட்டு 'தேவி', 'அன்னை' என்ற கருத்தின் மூலமாகும். சிருஷ்டியாக வெளிப்பட்ட முழு வடிவமே துர்க்கா எனும் இறைநிலை.

**ஏன் ஒன்பது இராத்திரிகள்?**

ஜீவனைப் பிணைக்கும் ஒன்பது விதத் தளைகள் சத்தியத்தைக் காணமுடியாமல் குருடாக்குகின்றன. அவை இரவின் இருளுடன் ஒப்பிடப்பட்டு ஒன்பது இராத்திரிகளாக வர்ணிக்கப்படுகின்றன. அவையாவன :-

1. தமஸ் - சோம்பல்
2. துவேஷம் - வெறுப்பு
3. மமத்துவம் - தன்முனைப்பு
4. போக இச்சை - புலனின்பங்களில் நாட்டம்
5. அகங்காரம் - தற்பெருமை
6. அஜ்ஞானிதா - ஆன்மீக அறிவின்மை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



7. மோஹராத்ரி - உலகமே நிலையான தென்ற மன மயக்கம்.
8. காலராத்ரி - தன் உண்மை நிலையை அறியாதிருத்தல்
9. மகாராத்ரி - உண்மையான இறை நிலையை அறியாதிருத்தல்.

முதல் 6 இரவுகளும் மனிதன் தன் முயற்சியால் கடக்க வேண்டியவை. கடைசி மூன்று இரவுகளும் இறை அருளால் மட்டுமே கடக்கக்கூடியவை. முயற்சியும் திருவருளும் கைகூடி முக்தி பெறும் நாளே விஜயதசமியாகும். ஒன்பது எதிர்மறைக் குணங்களைக் கடப்பதுதான் நவராத்திரி பூசையின் குறிக்கோள். இந்த நவராத்திரிகளைக் கடந்தால் விடியும் ஒன்பது பகல்களாவன :

1. ஸ்மிருதி - இடையறா இறை சிந்தனை

2. ப்ரீதி - உலகளாவிய அன்பு
3. ஆர்ஜலம் - கள்ளம் கபடமற்ற எளிமை

இவை மூன்றும் தமோ குணத்தைக் கடப்பதால் வரும் நன்மைகள்.

4. பாவித்ரியம் - உலக வாசனை களிலிருந்து விடுபட்டு தூய்மை அடைதல்
5. வினயம் - எளிமை
6. பக்தி - இறைவனுடன் தூய அன்புடன்கூடிய உறவு

இவை மூன்றும் ரஜோ குணத்தைக் கடப்பதால் ஏற்படும் நன்மைகள்

7. ஞானம் - நல்லறிவு
8. பிரக்ஞா - தன் ஆன்ம நிலையை அறிதல்
9. பூர்ணத்துவம் - பரம்பொருளை அறியும் முழுமை

இந்த மூன்றும் சத்வீக குணத்தைக் கடப்பதால் ஏற்படும் நன்மைகள்.

கடைசி இரவுகளான மஹாராத்ரி, மோஹராத்ரி, காலராத்ரிகளையும் மகா மாயையான அன்னையின் பேரருள் ஒன்றால் மட்டுமே கடக்க இயலும். தினமும் பக்தியுடன் பூஜை, தியானங்கள் புரிந்தால் ஒருவன் நிச்சயமாகக் கடத்தற்கரிய இருள்சூழ்ந்த இரவுகளைக் கடந்து தேவியுடன் ஒன்றிவிடலாம்.

அதி சக்திவாய்ந்த தெய்வத்துவம் துர்க்கா, இலட்சுமி, சரஸ்வதியாகப் பரிணமிக்கிறது.

துர்க்கா -
எமக்கு பௌதீக, மனோ ஆன்மீக சக்தியைத் தருகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்குமி -
பணம், புத்தி, ஒழுக்கம், ஆரோக்கியம் போன்ற சகல செல்வங்களையும் தருன்றாள்.

சரஸ்வதி -
புத்திக்கூர்மை, பகுப்பாயும் ஆற்றல், ஆத்ம விசாரணை ஆகிய ஆற்றலைத் தருகின்றாள்.

நவராத்திரி சக்திகளின் தன்மையை உலகுக்கு காட்டவே கொண்டாடப்படுகிறது. துர்க்கா இச்சா சக்தியையும் இலக்குமி கிரியா சக்தியையும் சரஸ்வதி ஞானசக்தி, வாக்சக்தியையும் வெளிக்கொணர்கிறது. எமது தாயிடம் எல்லாத் தெய்வீக சக்திகளும் உண்டு. தாயைத் தெய்வமாக வணங்கினால் மூன்று சக்தி களையும் வணங்குவதற்குச் சமமமாகும். இதுதான் நவராத்திரியின் செய்தி என்று சுவாமி சொல்லியுள்ளார். (14.10.1988)

27.09.1992 இல் சுவாமியின் அருளுரையின் சாராம்சம் பின்வருமாறு :


நவராத்திரி வழிபாட்டின் நோக்கம் மனிதன் தன்னுள் உள்ள 9 வகையான இருள்களை அகற்றுவதேயாகும். தேவி என்ற வார்த்தை துர்க்கா, இலக்குமி, சரஸ்வதி ஆகிய மூவரையும் ஒன்று சேர்த்துள்ளது. இம்மூன்றும் சேர்ந்த தேவி சக்தியைக் குறிக்கின்றது. சக்தி பிரகிருதி (இயற்கையை) யிலுள்ள சகல இயக்கங்களுக்கும் ஆதாரம். இயற்கையே சக்தி. சக்திக்கு மேலானவர் ஆதிபுருஷர் அல்லது ஆதிசக்தி. பிரகிருதி மூன்று குணங்களான தமஸ், ரஜஸ், சத்வ ஆகியவற்றை அடக்கியுள்ளது. துர்க்கா தமஸ் குணத் தையும், இலக்குமி ரஜஸ் குணத்தையும் சரஸ்வதி சாத்வீக குணத்தையும் பிரதிநிதிப்படுத்துகின்றன. பிரபஞ்சப் படைப்பிற்கு பரமாத்மாவும் பிரகிருதி என்ற சக்தியும் ஒன்றிணைய வேண்டும். மனிதன் படைத்தவனை மறந்து படைப்பை அனுபவிக்க முயன்று தன்னைத் தானே அழித்துக்கொள்கின்றான். ஆண்டவனின் அருளைப் பெறுதற்கு நாம் திரிகரண சுத்தியை ஏற்படுத்த வேண்டும். திரிகரண சுத்தியைக் குறிப்பவளே திரிபுரசுந்தரியாவாள். மனதை ஒரு நிலைப்படுத்தித் தொழ வேண்டும். தேவி பூதேவியைக் குறிக்கிறது. தேவையான தெல்லாம் பூமியிலுள்ளது. நவராத்திரியின் நோக்கம் இயற்கையை பய பக்தியுடன் வழிபட்டு அதன் வளங்களை மாசுபடுத்தவோ வீணாக் கவோ மாட்டோம் என்று உறுதி பூணுவதற்கேயாகும்.

விஜயதசமி 10ஆவது நாள் வெற்றித் திருநாளாகும். இதற்கு வரலாற்று உண்மைகள் பல உள்ளன. இராமர், இராவணனை வீழ்த்துவதற்கு வன்னி மரத்தடியில் சென்று துர்க்காதேவியை வழிபட்ட தினம். கிருஷ்ணபரமாத்மா சியமந்தகமணியைத் தேடிப்போய் பல நாள்களாக வரவில்லை. தந்தை வாசுதேவர் தேவி பகவத்தயாக யக்ஞம் செய்து தேவியை வணங்கியதும் கிருஷ்ணர் திரும்பி வந்த தினமும் இதுவேயாகும். பாண்டவர்கள் போரிட்டபோது ஆயுதங்களை வணங்கிய தினமும் இதுவேயாகும். தேவி மகிஷாசுரனைக் கொன்ற தினமும் இதுவேயாகும். துர்க்கா, இலக்குமி, சரஸ்வதி விஜயதசமியன்று சிவசக்தி ஸ்வரூபமாகக் காட்சி கொடுத்தார்கள். இந்நிலையில் வித்தியாரம்பம், ஆயுத பூசை, வானிபம் தொடங்கல் ஆகியன இடம்பெறும்.

ஜெய் சாயிராம்

தொகுப்பு - ஆசிரியர்

உசாத்துணை நூல்கள் :
1.சுவாமியின் தசரத தின அருளுரைகள். 14.10.1988 S.S.S.V 21
2. இராமகிருஷ்ண விஜயம் செம்டெம்பர் 2017 - ஒக்டோபர் 2010
3. அகில இலங்கை இந்து மாமன்ற பொன்விழா வெளியீடு. (2012)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி - ஒரு புதிய சிந்தனை



நவராத்திரி காலத்தில் நாம் சிவலிங்க வழிபாட்டையே செய்கிறோம். சிவலிங்கத்தின் மேற்பாகத்தில் உருத்திரர் வீற்றிருக்கிறார். நடுப் பாகத்தில் மகாவிஷ்ணு அமர்ந்துள்ளார். அடிப்பாகத்தில் பிரம்மா அமர்ந்துள்ளார். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் செய்பவர்கள் இவர்கள். இவர்களின் சக்திகளே முப்பெரும் தேவியர் என்று போற்றப் படுகின்றனர். உருத்திரரின் சக்தி துர்க்கை, மகா விஷ்ணுவின் சக்தி மகாலஷ்மி, பிரம்மதேவரின் சக்தி சரஸ்வதி.

இந்த உலகத்துமக்கள் அனை வரையும் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. உடல் உழைப்பை ஜீவனமாகக் கொண்டவர்கள்
2. பணத்துடன் சம்பந்தப்பட்ட தொழிலில் உள்ளவர்கள்.
3. அறிவைப் பயன்படுத்தி தொழில் செய்பவர்கள்.

இவ்வாறு இந்த மூன்று வகுப்பினருக்கும் சக்தி வழங்குவது இந்த முப்பெரும் தேவியர்களே! தொடர்ந்து வரும் ஆண்டு இந்த மூன்று வகை மனிதர்களுக்கும் மிருகங்கள், பறவைகள் ஆகிய எல்லோருக்கும் உணவு உற்பத்தி ஆரம்பிக்கும் காலத்தை இந்த நவராத்திரி குறிக்கிறது.

புரட்டாதி மாத அமாவாசைக்கு அடுத்தநாள் நவராத்திரி பூசை ஆரம்பிக்கிறது. ஒரு வருடத்தை உத்தராயாணம் - தெட்சணாயணம் என இரண்டாகப் பிரித்துள்ளனர். உத்தராயணம் 6 மாதமும் (தை - ஆனி). தேவர்களுக்கு பகல் பொழுதையும் தெட்சணாயனம் (ஆடி - மார்கழி) 6 மாதமும் இராப்பொழுது ஆகும். தை மாதம் முதல் ஆனி மாதம் வரை மங்களகரமான செயல்களுக்கு உகந்த காலமென கொள்ளப்படுகிறது. இந்த வகையில் புரட்டாதி மாதம் தேவர்களுக்கு நடு இரவுகாலம். புரட்டாதி மாதத்தில் மழைகாலம் ஆரம்பமாகும். உழவர்கள் வயல்களை உழுது பண்படுத்தி விதைப்பதற்கு ஆயத்தமாக இருப்பர். அடுத்த வருடத்திற்கு தேவையான உணவை தயாரிக்க பூமித்தாய் ஆயத்தமாகிறாள். அதனால்தான முப்பெரும் சக்தி தேவிகளை கும்பத்தில் எழுந்தருளச் செய்து நவதானியம் விதைக்கிறோம். பூமித்தாய் நவதானியங் களையும் விளைவித்து அடுத்த வருடம் தேவையான உணவைத் தரவேண்டும் என்பதை பிரார்த்திக்கிறோம். தை மாத பௌர்ணமி தைப்பூசத்தில் பயிர்கள் தயாராகி அறுவடைக்கு ஆயத்தமாகிவிடும்.

இந்த உணவு தயாரிப்புக் காலம் ஆரம்பமாவது தான் நவராத்திரிவிழா.

ஜெய்சாயிராம்
திரு. S.R.சரவணபவன

Advent of Love
SRI SATHYA SAI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலவிகாஸ் மாணவர்களின் உரைகளில் ஒன்று.

சுவாமியின் பொற்கமலப் பாதங்களை பணிந்து கொண்டு சுவாமியின் அருளினால் நான் இன்று உங்கள் முன்னிலையில் நவராத்திரி பற்றி பகிர வந்துள்ளேன்.

எமது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் ஏழு உலகங்களில் பூமியை மிகவும் அழகாகவும் எல்லா வளங்கள் நிறைந்ததாகவும் படைத்து அதில் உயிரினங்களையும் படைத்துள்ளார். அவற்றில் மனிதப் பிறவியாக பிறந்த நாம் எவ்வாறு வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தினுள் வைக்கப்படும் என்னும் திருக்குறளுக்கு அமையவே எம்மை வழிநடத்தவே இவ் விழாக்களும் வழிபாடுகளும் மேற்கொள்கின்றோம்.

நவராத்திரியின் மகிமையும் அவற்றின் விரத நோன்பு பற்றியும் எல்லோருக்கும் தெரிந்த தொன்று. சிவபெருமானின் வல்லமையாக விளங்குபவர் சக்தி. இச் சக்தியை கொண்டே சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களையும் புரிகின்றார். இவ்வாறு படைக்கப்பட்ட ஆன்மாக்களில் உள்ள தீய குணங்களை மறைப்பதற்கு துர்க்கை விளங்குகிறாள். தீய குணங்களை களைந்து நற்குணங்களை ஆன்மாக்களுக்கு வழங்கவே இலட்சுமி விளங்குகிறாள்.

உதயலட்சுமி, வீரலட்சுமி, ஜெயலட்சுமி, விஜயலட்சுமி என்னும் 8 இலட்சுமிகளின் கடாட்சம் எமக்குக் கிடைக்கின்றன. அவையாவன நோயின்மை, தன, தானியம், அழகு, புகழ், பெருமை, இளமை, அறிவு, சந்தானம், துணிவு, வாழ்நாள் வெற்றி, ஆகுநல் ஊழ் நுகர்ச்சி என்னும் 16 பேறுகளையும் எமக்கு அள்ளி வீசியவாறு செந்தாமரையில் வீற்றிருப்பவர் லக்சுமி ஆகம்.


எம் கள்ளமில்லாத உள்ளத்தில் கனிவு எனும் தீபத்தை ஏற்றுகிறார். இத் தீப ஒளியின் பிரகாசத்தில் சரஸ்வதி குடி கொள்கிறார். இவ்வாறு ஆன்மாக்களுடன் ஏழேழு பிறப்பிற்கும் நிலைத்து நிற்கும். அழிவில்லாத கல்விக்கு இலட்சுமி பெரும் துணை புரிகின்றார். ஏன் எம்மை எடுத்துக் கொண்டால் எம்முன் அன்னையாக துணைவியாக மகாலட்சுமி தனது கடாட்சத்தை வழங்குன்றார். ஆனால் இன்று நாம் சரஸ்வதியின் பேரொளியான ஞானத்தைப் பெற்று அதனூடாக ஒரு பட்டத்தையும், பதவியையும், பணத்தையும் பெற்று ஆறுவகை தீய குணங்களான காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்ச்சரியம் என்னும் குணங்களுக்கு அடிமையாகி மனிதன் தன்னையும் உலகையும் அழித்துவருகின்றான். இவற்றைக் காப்பாற்றத்தான். சுவாமி அவதாரம் எடுத்து அழிவிலிருந்து எம்மைக்காப்பாற்றி இலக்குமி தேவியின் அன்புதான் உலகில் மிகவும் மேலானது என்றும் அவதார நோக்கத்தை வித்திட்டுள்ளார். எனவே நாம் நவராத்திரி நிகழ்வை கொண்டாடி, நிகழ்ச்சி செய்வதில் மட்டும் நின்றுவிடாமல் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி என்று தேவியரின் அருளை தினம் பெறுவதற்கு காலை எழுந்தவுடன்

கராக்ரே வஸதே லக்ஷ்மி
கரமத்யே சரஸ்வதி
கரமூலேது ஸ்திதா கௌரி
பிரபாதே கர தர்ஷனம்

என்னும் மந்திரத்தை ஜெபித்து அதனூடாக சுவாமியின் போதனைகளுக்கு அமைய வாழ்வோம் என்று கூறி இந் நன் நாளில் இலட்சுமி தேவி எமக்கு வழங்கும் அன்பைப் பெற்று பெரும் வாழ்வு வாழ்வோமாக.

ஜெய்சாயிராம்

க.துவாரகன்.
பாலவிகாஸ் பிரிவு 2
யாழ்ப்பாணம். 25.09.2017





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எட்டி (Eddy) என்பவரின் திருப்புமுனை

இவர் 4 வயதில் அநாதையானார். எட்டு வயதில் குற்றங்கள் செய்யும் கும்பலுக்குத் தலைவன் ஆனான். அவன் வங்கிக் கொள்ளைகளிலீடுபட்டான். கொலைகளும் செய்தான். கடைசியாக ஒரு மூதாட்டியை கொலை செய்ய முயற்சித்த போது பொலிசாரிடம் அகப்பட்டான். அவனை ஒரு சீர்திருத்த முகாமில் அடைத்தார்கள். அங்கேயும் அவன் யாரின் சொல்லையும் கேட்க மாட்டான். பொலிசிற்கோ, அதிகாரிகளுக்கோ பயப்படவும் மாட்டான். மிகவும் குழப்படி செய்தான். தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தான். அங்குள்ள சாமான்களை அடித்து உடைத்தான். அங்கேயுள்ள சிறுவர்கள் பாதிரியார் விலநாகன் (Father Flanagan) என்பவரை மதித்தார்கள். இவனோ பாதிரியாரை அவமதிப்புடன் வெறுத்தான். அவன் விடுதியில் இருந்த 6 மாதங்களில் ஒருவரிடமும் சிரிக்கவில்லை. ஒருவருடனும் சிநேகிதம் கொள்ளவுமில்லை. வெறுப்பு மிகுந்தவனாகவே காணப்பட்டான். பாதிரியார் மிகவும் பொறுமையானவர்.

ஒரு இரவு இவன் தூங்கும் பொழுது அனுங்கினான். பாதிரியார் கிட்டப்போய்த் தொட்டுப் பார்த்தால், காய்ச்சல் கடுமையாகக் காய்ந்ததை உணர்ந்தார். அந் நிமிடம் இருந்து அவனை அன்புடன் பராமரித்தார். ஏனைய சிறுவர்களும் அன்புடன் உதவி செய்தார்கள். அன்பையே அனுபவிக்காதவனுக்கு இது ஒரு பாசாங்கு என்று நினைத்து வெறுப்புக் கொண்டான்.

ஒரு நாள் வெறுப்பின் மேலீட்டால் பாதிரியாரின் அறைக்குள் நுழைந்து, அவரைப் பார்த்து "நீ என்னை ஒரு நல்லவனாக ஆக்கலாமென நினைக்கிறாய். இதில் வெற்றி அடைவாய் என நினைக்கிறாயா? இப்ப தான் இங்கு வேலை செய்யும் தாதிக்கு காலால் உதைத்து விட்டு வந்துள்ளேன். இப்ப என்ன சொல்லப்போகிறாய்?" என்று கத்தினான்.

பாதிரியார்: "நீ நல்லவன் என்பதிலேயே நான் நம்பிக்கை வைத்துள்ளேன்" என்றார்.

எட்டி : " நீ ஒரு பொய்க்காரன். நான் கெட்டவன் என்று எனக்குத் தெரிந்தும் அப்பட்டமான பொய்யைச் சொல்கிறாயே" என்றான்.

பாதிரியார் சாந்தமாக மிகவும் பொறுமையுடன் ஒருவன் நல்லவனென்று எப்படி இனங்காணலாம்? அவன் பெரியோர்களின் சொல்லைக் கேட்பான் இல்லையா? எட்டி ஆம் என்று தலையாட்டினான். அவன் தனது ஆசிரியர் சொல்வதைக் கேட்பான் இல்லையா? எட்டி ஆம் என்று தலையாட்டினான்.

நீ இவ்வளவு காலமும் இதைத்தானே செய்துள்ளாய். உனக்கு நல்ல ஆசிரியர்கள் கிடைக்கவில்லை. தெருவிலுள்ள போக்கிரிகள் சொல்லைத் தானே கேட்டு நடந்தாய். அவர்கள் உன்னைப் பிழையான வழியில் இழுத்துச் சென்றுள்ளார்கள். அவர்களைப் போல் உன்னையும் ஒரு கெட்டவன் என்றே எண்ணத்தில் இருந்துள்ளாய். நல்லவர்களைப் பின்பற்றியிருந்தால் நீ நல்லவனாகவே வாழ்ந்திருப்பாய். பாதிரியார் சொன்னது எட்டியின் இதயத்தைத் தொட்டது. அவன் பாதிரியாரை அன்புடன் கலங்கிய கண்களுடன் தழுவினான். பத்து வருடங்களுக்குப் பின்பு எட்டி படிப்பில் அக்கறைகொண்டு பரீட்சைகளில் சித்தியடைந்து தேசியப் படையில் சேர்ந்தான். போர்களில் பங்குபற்றி பல விருதுகளைப் பெற்றான். சிநேகிதர்கள் சேர்ந்தார்கள். அவன் இப்போது நம்பகரமான நேர்மையான ஒரு மேதகு மனிதனாக மாறினான்.

பாதிரியாரின் திடகாத்திரமான இதயபூர்வமான மாறாத வார்த்தைகளே அவனின் அடிஅறிமனதை மாற்றியது. தான் கெட்டவன் என்ற எண்ணம் ஆழப் பதிந்திருந்தது. பாதிரியாரின் அன்பும் நம்பிக்கையும் அவன் மனதில் அவன் ஒரு நல்லவன் என்ற எண்ணத்தை விதைத்தது. அது பெரிய மரமாக வளர்ந்தது.

"நாம் யாருடன் சேருகிறோமோ அதுவே எமது நடத்தையைத் தீர்மானிக்கும்." "Avoid bad Company"

"நீ எதுவாக நினைக்கிறாயோ அதுவாகவே இருப்பாய்"

- பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா -

நன்றி: இணையத்தளம்

Advent of Love
SRI SATHYA SAI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி

**திருவிழா எப்போது?**
அமாவாசையன்று ஐப்பசி மாதம் தீபாவளித் திருநாள்

**எப்படி வழிபடுவது?**
காலையில் எண்ணெய் தேய்த்துக் குளித்தல்
லட்சுமி பூஜை செய்தல்
புத்தாடை அணிதல்
பட்டாசு கொளுத்துதல்

**புராணக் கதை** :
வட இந்தியா :
1. கோபிகள் விடுதலை பெற்றநாள்.
அவர்களின் பிரார்த்தனை : நாம் ஞானம் பெற்ற நாளில் எல்லாவிடத்திலும் ஒளி மிளிர வேண்டும். பலவிதமான விளக்கேற்றி பட்டாசு கொளுத்தி அமாவாசையை பூரண தினமாக கொண்டாடவேண்டும்.

2. இராமபிரான் அயோத்திக்கு திரும்பிய நாள். மக்கள் தீபமேற்றி மகிழ்ந்தார்கள்.
தென் இந்தியா :
கண்ணன் சத்தியபாமா மூலம் நரகாசுரனைக் கொன்ற திருநாள். நரகாசுரனின் வரம்: இந்நாளில் மக்கள் விளக்கேற்றி வழிபடவேண்டும்.

**உள்ளார்த்தம் :**
தீபங்கள் வரிசையாக ஏற்றுவது - தீப - அவாலி. பரபிரம்மம் ஒலியும் ஒளியும் சேர்ந்தது. ஒரு ஜோதி பரபிரம்மம். அதிலிருந்து ஏற்றப்படும் ஏனைய ஜோதிகள் எல்லாம் ஜீவாத்மாக்கள். எத்தனை விளக்குகள் ஏற்றினாலும் பரம்ஜோதி குன்றுவதில்லை. ஏற்றப்பட்ட ஜோதிகளும் பரம் ஜோதியின் தன்மையைக் கொண்டுள்ளவை. ஒன்று பலவாகப் பிரிந்த தத்துவத்தைக் குறிக்கின்றது. பலவாகப் பிரிந்தாலும் எல்லாமே பூரணமே.

ஓம் பூர்ணமத : பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதச்யதே!
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமே வாவசிஷ்யதே!!
இறைவன் பூரணமானவன் - உலகம் பூரணமானது.
பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்தபின்னும் பூர்ணமே எஞ்சியுள்ளது.

சுடர் எப்போதும் மேலேயே போகும். அதே போல ஞானம் என்கின்ற ஒளி, நம்மை தர்மத்தினூடாக உயர் நிலைகளுக்கு எடுத்துச்செல்லும்.
ஒளி ஏற்றுவதற்கு 4 சாமான்கள் தேவை.
பாத்திரம், நெய், திரி, தீப்பெட்டி. இந்த ஒளி புற இருளைத்தான் நீக்கும்.
அக இருளை ஞான ஒளியால் தான் அகற்ற முடியும். இதை எவ்வாறு ஏற்றலாம்?

- வைராக்கியம் - பாத்திரம் - தேகாபிமானமின்மை
- பக்தி - நெய் - நான் என்ற அகங்காரமின்மை
- மன ஒரு முனைப்பு - திரி - சுய விசாரணை
- பரஞானம் - தீக்குச்சி - பரோபகாரம்


ஆன்மீக அறிவு, ஒளி, மேற்கூறிய நான்கும் இல்லாது மிளிராது.

09.11.1988 சுவாமி கூறியது :
நரகாசுரன் எம்மிலுள்ள தீய குணங்களைக் குறிக்கின்றான். இவை எமது ஆத்ம பிரகாசத்தை மறைக்கின்றன. தீய எண்ணங்களும் தீய பழக்க வழக்கங் களும் அகல வேண்டும். நரகாசுரனைக் கொன்றது, தீய சக்திகள் அழிப்பதையே குறிக்கின்றது. உள்ளார்த்தம் தெரிந்து கொண்டாடவேண்டும்.

Science ; மழைகாலம், நீர்த்தேக்கத்தினுள் நுளம்பு, பூச்சிகள் பெருகும் காலம். பட்டாசுகள் கொழுத்துவன் மூலம் இப் பூச்சிகள் கொல்லப்படுகின்றன.

நாமும் ஆன்மீக ஒளியை ஏற்றுவோம் ஆன்மீக சாதனைகள் மூலம்.

ஜெய் சாயிராம்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேத உண்மைகளை நிரூபிக்கும் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி

இறைவன் ஆதி அந்தம் இல்லாதவர். எங்கும் நிறைந்தவர். எல்லாம் வல்லவர். ஒவ்வொரு அணுவிலும் உள்ளவர். அவனின்றி ஓரணுவும் அசையாது என பலவிதமாக புகழப்படுகிறார். இவை வெறும் புகழ் வார்த்தைகள் அல்ல. உண்மையானது. எமது சமயத்திற்கு ஆரம்பம் என்பது இல்லை. அது அநாதியானது. என்பவற்றை நிரூபிக்கும் விதத்தில் அமெரிக்காவில் ஒரு ஆய்வு நடந்துள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான நாசா (NASA), விஞ்ஞானிகள் சூரிய மண்டலத்தை ஆய்வு செய்வதற்காக ஒரு செயற்கைக்கோளை அனுப்பினர். சூரியனை யாரும் நெருங்க முடியாது. ஆனால் எவ்வளவு தூரம் சமீபத்திற்கு செல்ல முடியுமோ அவ்வளவு சமீபத்திற்குச் சென்று ஆய்வு நடத்தி பூமிக்கு அந்த தகவல்களை அனுப்பி அதனை NASA விஞ்ஞானிகள் பெற்றுக்கொண்டுள்ளனர். அவைகளில் சிலவற்றை இன்ரநெற்றில் வெளியிட்டுள்ளனர். அதில் சூரியனிலிருந்து "ஓம்" என்ற ஒலி வருவதாக கூறி அந்த சத்தத்தையும் பதிவு செய்துள்ளனர். நீங்களும் அதனைப் பார்வையிடமுடியும். கூகிளுக்கு சென்று NASA SUN OM என்ற விலாசத்தை ரைப் செய்வதன்மூலம் உங்கள் கைத்தொலைபேசியிலேயே பார்வையிடமுடியும். மேலும் "ஓம்" என்ற மந்திரம் இந்துக்களின் மூல மந்திரம்



என்றும் விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

"ஓம்" என்ற ஒலி சூரியனிலிருந்து வருவதானால் இது எப்போது வரத் தொடங்கியிருக்கலாம்? என்ற கேள்வியை நாம் கேட்டுப் பார்க்கவேண்டும். இந்த ஒலி இடையிட்டு வரத் தொடங்குவதற்கு வாய்ப்புகள் இருக்கமுடியாது. சூரியன் எப்போது தோன்றியதோ அன்றே இந்த ஒலியும் ஆரம்பித்திருக்கவேண்டும்.

வான்வெளியில் காணப்படும் நட்சத்திரக் கூட்டமெல்லாம் ஒன்றாக இருந்து ஒரு பிரமாண்ட கோளாக இருந்தது எனவும் பலகோடி வருடங்களுக்கு முன் இது ஒரு பெரிய எரிமலை போன்று வெடித்துச் சிதறியது என்றும் வேதத்தில் அது "ஓம்" என்ற சத்தத்துடன் வெடித்தது என்றும் அது "பாங்" (BANG) என்ற சத்தத்துடன் வெடித்தது என்றும் மேல்நாட்டு விஞ்ஞானம் கூறுகிறது.(Big Bang Theory)

"ஆதியில் சத்தம் இறைவனோடு இருந்தது" என்று பைபிளில் கூறப்பட்டுள்ளதும் சிந்திக்கத்தக்கது. ஆகவே எமது சமயத்தின் மூலமந்திரமான "ஓம்" என்பது பலகோடி வருடங்களுக்குமுன் சூரியனிலிருந்து ஆரம்பித்தது என்பதை நம்பக்கூடியதாக உள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்திரி மந்திரத்தில் இதையே "சவிதுர்" என்ற பதத்தால் குறிப்பிடப்பட்டிருக்கிறது என அனுமானிக்க முடியும். "ஓம்" என்ற ஒலியும் சூரிய ஒளியும் சேர்ந்ததுதான் "சவிதுர்". அதற்குத்தான் தாவரங்களை வளர்க்கவும் படைப்புக்களை ஏற்படுத்தக் கூடிய சக்தியும் உண்டு என ரிஷிகளும் முனிவர்களும் உணர்ந்துள்ளனர். காயத்திரி மந்திரத்தில் ஓம்காரத்தைப் பற்றி மூன்று விடயங்கள் சொல்லப்பட்டுள்ளது.

1. ஓம் - பூர், புவ, ஸ்வ: - ஓம்காரம்தான் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் செய்கிறது.
2. அந்த ஓம்காரம்தான் சவிதுர். அது வர்ணிக்கமுடியாது - படைப்புக்குக் காரணமான ஓம்கார ஒலியை உண்டாக்கிறது. அதன்மூலம் இந்த பிரபஞ்சத்திற்கு தேவையான உணவைப் படைக்கிறது. இந்த ஒலியைத்தான் அமெரிக்க விஞ்ஞானிகள் கருவிகள் மூலம் கேட்டுள்ளனர்.
3. பர்கோ தேவஷ்ய - அதன் ஒளி தெய்வீகமானது. உலகின் வெளிச்சத்திற்கும் தாவரங்களைப் போசிப்பதற்கும் அத்தியாவசியமானது.

எமது சமயத்தின் மூல மந்திரம் சூரியனிலிருந்து பலகோடி வருடங்களாக வெளிவருகிறது என்பதை எமது ஆத்மீக விஞ்ஞானிகளான முனிவர்களும் ரிஷிகளும் எவ்வளவு காலத்திற்கு முன்பாக கண்டுபிடித்துக் கூறியுள்ளனர் என்பது வியப்பிற்குரியது.

இப் பிரபஞ்சம் முழுவதும் ஓம்கார ஒலியினால் நிரம்பியுள்ளது. அதுதான் உலகத்தை இயக்குகிறது என்று வேதத்தில் கூறப்பட்டிருப்பது முழுவதும் உண்மை. இதனால்தான ஆலயங்களில் தீபாராதனை செய்யும்போது ஒருகையில் மணியும் ஒரு கையில் தீபத்தையும் ஏற்றி சிவாச்சாரியார் தீபாராதனை செய்வதை அவதானித்திருப்பீர்கள். ஒலியும், ஒளியும் சேர்ந்தால்தான் படைப்பு இடம்பெறுகிறது என்பதை இது காட்டுகிறது. அதேபோல் நாம் எழுத ஆரம்பிக்கும்போது பிள்ளையார் சுளி போடுவது வழக்கம். ஒலி அலை அலையாகச் செல்லும். ஒளி நேர்கோட்டில் செல்லும். ஒரு அலையும் ஒரு நேர்கோடும் சேரும்போது பிள்ளையார் சுளி. (உ)

இவற்றையெல்லாம் எவ்வளவு துல்லியமாக அறிந்து எமது நாளாந்த செயற்பாட்டில் வைத்துள்ளனர் என்பது எமது சமயத்தின் ஆழத்தையும் தொன்மையையும் புலப்படுத்துகிறது. இந்து சமய கிரியைகள் வேதங்கள், உபநிடதங்கள் எல்லாம் விஞ்ஞான ரீதியானவை. அவற்றை இப்போதுதான் விஞ்ஞானிகள் ஆராய்ந்து உணர்ந்து வருகின்றனர்.

ஜெய்சாயிராம்

திரு. S.R.சரவணபவன்

## தேசிய சேவைத் திட்டம்




**சத்திய சாயி முதியோர் இல்லம் - மீகொட - கொழும்பு**

**இது 32 கி.மீ கொழும்பிலிருந்து அமைந்துள்ளது. ஆரம்பத்தில் 20 பெண்களும் 20 ஆண்களும் பராமரிப்பதென திட்டமிடப்பட்டு கட்டிடத்திற்கான பூமி பூஜை 28.05.2015 இல் மேற்கொள்ளப்பட்டது. இந்த முதியோர் இல்ல கட்டிடம் 2017.04.30 திகதியன்று இலங்கை அரசின் சபாநாயகர் கௌரவ கரு ஜெயசூரியா அவர்களால் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இச் சேவைப் பணியிலும் நீங்கள் இணைந்து கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 0094 114239827,
0094 777316935
E mail - info@srisailanka.org
website: www.srisailanka.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியை மாற்று



கிருஷ்ண பரமாத்மாவும் அர்ஜுனனும் உலாவிக் கொண்டு வரும்போது பிச்சை எடுக்கும் பிராமணனைச் சந்தித்தார்கள். அர்ஜுனா இரக்கம் கொண்டு ஒரு கையளவு பொற் காசுகளைக் கொடுத்தான். பிராமணன் குதூகலத்துடன் பாட்டும் பாடிக்கொண்டு வீட்டுக்கு போனான். போகும் வழியில் ஒரு கொள்ளைக்காரன் அவனது பொற் காசுகளைக் கொள்ளையடித்தான். பிராமணன் திரும்பவும் பிச்சை கேட்டு திரிந்தான். இவனைப் பார்த்த அர்ஜுனன் ஆச்சரியப்பட்டு பின்பு இரக்கம் கொண்டு மாணிக்கக்கல்லைக் கொடுத்து பொக்கற்றில் கவனமாக வைத்திருக்கும் படி சொன்னான். பிராமணன் வீடு சேர்ந்ததும் பாவனையில் இல்லாத பழைய பானையில் மாணிக்கக்கல்லைப் போட்டு பவுத்திரமாக இருக்கும் என்று நினைத்து மன மகிழ்வுடன் நித்திரையாகினான். மனைவி தண்ணீர் எடுக்கப்போய்த் திரும்பும் வழியில் தடக்குப்பட்டு விழுந்தாள். விழும் போது பானை உடைந்து நீரும் சிந்தப்பட்டு விட்டது. மனைவி வீட்டுக்கு போய் அந்த பழைய பானையை எடுத்துக் கொண்டு போய் நீர் நிரப்பித் திரும்பினாள். நீர் நிரப்பும்போது பானையிலுள்ள மாணிக்கக்கல் ஆற்றினுள் விழுந்துவிட்டது. இதை அறிந்த பிராமணன் தனது விதியை நொந்து கொண்டு மீண்டும் பிச்சை எடுக்கப் போனான்.

"நாங்கள் ஒருவருக்கு உதவி செய்தாலும் அவனது விதியை மாற்ற முடியாது. ஆனால் தெய்வத்தினால் முடியும்."

கிருஷ்ணனையும் அர்ஜுனனையும் சந்தித்த பொழுது பிராமணன் தனது பரிதாபக் கதையைக் கூறினான். கிருஷ்ணன் உடனே இரண்டு பைசாவைக் கொடுத்தார். அர்ஜுனன் கிருஷ்ணனிடம் "கிருஷ்ணா நான் எவ்வளவோ பொற்காசுகளையும் மாணிக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும் கொடுத்தும் அவனது வறுமை தீரவில்லை. நீங்களோ இரண்டு பைசாவைத்தானே கொடுத்தீர்கள். அவனுக்கு எவ்வாறு வறுமை தீரப்போகிறது?' என்று கேட்டான். கிருஷ்ணர் சிரித்தார். பிராமணனும் கிருஷ்ணர் கொடுத்த 2 பைசாவால் என்ன பயன் என்று நினைத்து பகவானின் செயலுக்காக வியந்தான்.

வீடு திரும்பும்பொழுது ஒருவன் ஆற்றங்கரையில் மீன் பிடித்துக் கொண்டிருந்தான். ஒரு மீனைப் பிடித்து துடிக்க துடிக்க கூடையில் போட்டான். மீன் மூச்சுக் காகத் துடிப்பதைப் பார்த்து துயரமடைந்து தனக்கு ஒரு நேர சாப்பாடு வாங்கவே இரண்டு பைசா போதாது. ஆனால் இதைக் கொண்டு மீனை வாங்கி துயரத்தை தீர்க்கலாம் என்று நினைத்தான். உடனே மீனை வாங்கி ஒரு பாத்திரத்தில் போட்டு நீரும் நிரம்ப ஊற்றினான். மீன் துடித்து மூச்சு விட்டதில் தனது வயிற்றிலிருந்த மாணிக்கக்கல்லைக் கக்கியது. இதைக் கண்ட பிராமணன், கண்டுவிட்டேன்! கண்டுவிட்டேன்! என்று மகிழ்ச்சியுடன் கத்தினான். இதைக் கேட்ட மீன்பிடித்தவன் பீதி கொண்டு தான் தான் அவரின் பொற் காசுகளைக் களவெடுத்ததாகவும் அரசனிடம் பிடித்துக் கொடுக்க வேண்டாமென்றும் கெஞ்சினான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அர்ஜுனனுக்கு அதிசயமாக இருந்தது. நான் எவ்வவோ பெறுமதியான பொற் காசுகளையும் மாணிக்கக்கல்லையும் கொடுத்து வறுமையைத் தீர்க்க முடியவில்லை. நீங்கள் இரண்டு பைசாவைக் கொடுத்ததே இழந்ததையெல்லாம் திரும்பப் பெற்று வறுமையிலிருந்தும் நீங்கினான். இதன் மர்மம் என்ன என்று கிருஷ்ணனிடம் கேட்டான்.

கிருஷ்ணர் தனக்கேயுரிய சிரிப்புடன் "இரண்டு தடவையும் உன்னிடம் இருந்து பெற்றதும் அவன் தனது சுகத்தைப் பற்றியே நினைத்தான். நான் கொடுத்ததும் அவன் இன்னொரு பிராணியின் துன்பத்தைத் தீர்க்க முயற்சித்தான். யாராவது துன்பத்திலுள்ளவனுக்கு இரக்கம் காட்டி உதவி செய்தால் அவன் எனது பணியைச் செய்கிறான். ஆகவே நான் அவனது பணியை அல்லது அவனுக்கு உதவி செய்யாமல் எப்படி இருப்பது" என்று பகவான் விளக்கினார்.


"தேகாபிமானத்தை விட்டு ஆத்மாபிமானத்தில்
செயற்பட்டால்
தெய்வீகக் குணங்களான பிரேமை, தயவு, பொறுமை,
இதயஉணர்வு
ஆகியன வெளிப்படும்."
- பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா

நன்றி: Radiosai 16.08.2017



## நாமஸ்மரணை

நீங்கள் சிறிய சொல்லாகிய ராமா, சாயி, கிருஷ்ணா எவ்வாறு சம்சாரக் கடலைக் கடக்க உதவுமென்று சந்தேகிக்கலாம். மக்கள் ஒரு சிறிய கட்டு மரத்தைக் கொண்டு பெரிய சமுத்திரத்தைக் கடந்துள்ளார்கள். சிறிய விளக்குடன் இருள்சூழ்ந்த பெரிய காடுகளைக் கடந்துள்ளார்கள். இந்த நாமங்கள் எவ்வளவோ சக்தி வாய்ந்தவை. கடப்பதற்கு சமுத்திர அளவான கப்பல் தேவையில்லை. இறைநாமம் குழாய்க்கிணற்றின் மூலம் தண்ணீரைக் கொண்டுவருவது போலாகும். சிற்பியின் உளி எவ்வாறு அழகிய சிலையை பெரிய பாறைக் கல்லிலிருந்து வெளிப்படுத்தப்படுகிறது? பிரகலாதன் நாமத்தைச் சொல்லியே நரசிம்ம அவதாரம் தூணிலிருந்து வெளிப்படச் செய்தார். பாலைக் கடைந்து வெண்ணையை வரச் செய்வதுபோல எம்முள் உள்ள தெய்வீகத்தை வெளிக் கொணரலாம்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நானிருக்கப் பயமேன்



**"நானிருக்கப் பயமேன்"** என்பது சாயி கூறும் வைரம் போன்ற வாக்கியம் இது. இவ் வாக்கியத்தை நாம் அடிக்கடி ஸ்மரணை செய்து கொண்டு இருக்கிறோம். பாபா அவர்களின் உருவப் படங்களிலும் இந்த வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன.

பாபா அவர்களின் முன் அவதாரமான சீரடி அவதாரத்திலும் கூட, **"நீ என்னைப் பார்த்தால் நான் உன்னைப் பார்க்கிறேன்"** எனக் கூறி வந்துள்ளார்கள். இது சீரடி அவதாரத்தில் கூறப்பட்ட வைரம் போன்ற வாக்கியமாகும். இந்த இரண்டு வாக்கியங்களையும் பஜனைக் கூடங்களில் எழுதி வைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

இந்த இரண்டு வாக்கியங்களை அடிக்கடி சிந்தித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நாம் மானிடத் தன்மையிலிருந்து மாதவத் தன்மைக்கு உயரமுடியும். நம்மிடம் இந்த மாறுதலை ஏற்படுத்துவதன் பொருட்டே தாம் மானிட உருவில் அவதரித்து வந்திருப்பதாகப் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்கள் கூறிவருகின்றார்கள்.

"பயம் எதற்கு?" என்பது தவிர்க்க முடியாத கேள்வி. எப்பொழுது பயம் நம்மைத் துன்புறுத்துமோ அப்பொழு தெல்லாம் நமக்குள் நாம் இந்தக் கேள்வியைப் போட்டுக் கொள்ளவேண்டும். நம்முடைய அன்றாட வாழ்க்கையில் இந்தப் பயத்திற்கு நாம் இலக்காகிக் கொண்டு வருகிறோம்.

நாம் வேதனையில் மூழ்கியிருக்கும்பொழுது பாபா அவர்களைத் தியானிக்கிறோம்.

"எங்களுக்குப் பாதை காட்டுங்கள் சுவாமி" எனப் பிரார்த்தித்துக் கொள்கிறோம். "நானிருக்கப் பயமேன்?" என்கிற அபய வாக்கியத்தைக் குறிப்பறிந்து கொள்கிறோம். அப்பொழுது நம்மிடம் துணிவு ஏற்படுகிறது. நாம் துணிவோடு செயல்படுகிறோம்.

பாபா நம்மைக் காப்பாற்றுவார்கள் என்கின்ற நம்பிக்கையோடு நாம் மன அமைதி அடைகின்றோம்.

பயம் எதற்கு? இது அனைவரும் எதிர்நோக்கவேண்டிய பிரச்சினை. கஷ்ட சமயங்களில் இந்தக் கேள்வியை நமக்கு நாமே போட்டுக் கொள்ள வேண்டும். அப்பொழுது நம் உள்ளக் கோவிலில் குடி கொண்டிருக்கும் சாயி நமக்கு அபயமளிப்பார்கள்.

இந்தளவு அக்கறையும் நம்பிக்கையுமிருந்தால் நாம் தைரியமாகப் பேசிக்கொண்டு நம் விதியை நாம் தைரியமாக சமாளிக்கலாம். பயனைப் பற்றி பயப்பட வேண்டிய அவசியமும் ஏற்படாது. எப்பொழுதும் சாயி நம்மோடு இருந்துகொண்டிருக்கிறார் என்கின்ற நம்பிக்கையும் அனுபவமும் நம்மிடம் விலை மதிப்பற்ற பணிகளைச் செய்விக்கின்றன.

அதன் காரணமாகவே "பயப்படாதே" எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறாமல் "பயம் எதற்கு?" என்கின்ற கேள்வியோடு பாபா அவர்கள் போதிக்கின்றார்கள்.

நமக்குள்ளே விவேக திருஷ்டியோடு காலை விழித்தெழுந்தது முதல் இரவு உறங்கச் செல்லும்வரை இந்தக் கேள்வியைப் போட்டுக்கொண்டு தைரியமாகச் செயல்பட்டால் இந்த நமது தேசம் இந்த மனித சமுதாயம் நாம் பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில் இராது.

ஒரு சாதாரண மானிடனுக்கு இத்தகைய துணிவும், ஊக்கமும் இல்லையெனில் அவன் பயத்தோடுதான் வாழ வேண்டியதாக இருக்கும். ஆனால் இந்த நம்பிக்கை நம்மிடம் ஏற்பட்டு விட்டால் நாம் எவருக்கும் பயப்படவேண்டிய அவசியம் இல்லை.


பாபா அவர்களும் கூட முன் அவதாரமான சீரடி அவதாரத்திலும் கூட "நீ என்னைப் பார், நான் உன்னைப் பார்த்துக்கொண்டிருப்பேன்" எனக் கூறியுள்ளார்கள். நாம் சுவாமியின் பக்கம் நமது திருஷ்டியைச் செலுத்தக் கற்றுக்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் சுவாமியின் கிருபை நம்மீது திரும்பும்.

மானிடன் எப்பொழுதும் இறைவனைப் பயத்தோடுதான் பார்க்கிறான். ஆனால் நமது பவித்திர தேசத்தில் நமது நாகரீகம் ஆரம்பமானது. முதல் மகரிஷிகள், தவசிகள் "அபீ:", "அபீ:", "அபீ:"அதாவது "பயப்படாதே", "பயப்படாதே", "பயப்படாதே" என்று எச்சரிக்கை செய்து கொண்டு வந்துள்ளார்கள்.

நாம் நம்மை மனிதர்கள் எனப் பாவிக்காமல் மாதவர்கள் எனப் பாவித்துக் கொள்ள வேண்டும். பயமற்ற தன்மை என்கின்ற பெருநிதிக்குச் சுவாமி மாதவன். இது பாபா அவர்களால் அருளப்பட்ட சாதன மந்திரம். "நானிருக்கப் பயமேன்?" இம் மந்திரத்தை நம்பிக்கையோடு உச்சரித்துக் கொண்டு தைரியமாகச் செயற்பட்டால் தவறாமல் காரியசித்தியை அடையலாம்.

மூலம் : சனாதனசாரதி
ஒக்டோபர் - 1981
நன்றி: தினக்குரல் - 23.11.2002




**எங்கும் நிறைந்தவர் எல்லாம் அறிபவர்**

1995 ஆம் ஆண்டு யாழ். இந்துக்கல்லூரியில் பகவானது பிறந்த நாள் விழாவின் போது முன்னைய வருடப் பிறந்தநாள் நிகழ்வு திரைப் படமாகக் காண்பிக்கப்பட்டது. அப்பொழுது தவறுதலாக பக்கம் மாறி (வலப்பக்கம் இடப்பக்கமாக) காட்டப்பட்டு பின்னர் சரிசெய்து காட்டப்பட்டது.

அதன் பின்னர் அந்நாள் யாழ்.சத்திய சாயி நிலையத் தலைவர் உ.கந்தசாமி அவர்கள் புட்டபர்த்தி சென்று பகவானைத் தரிசித்தார். அப்போது பகவானிடம் "பிறந்தநாள் கொண்டாட்டம் யாழ்ப்பாணத்திலும் சிறப்பாகக் கொண்டாடினோம்" என்று சொன்னார். அப்பொழுது பகவான் "நீங்கள் எனது பிறந்தநாள் திரைப்படத்தை பக்கம் மாறிக் கொண்டாடினீர்கள்தானே" எனக் கூறிச் சிரித்தார்.

பாபா எங்கும் நிறைந்தவர் எல்லாம் அறிபவர்.

நன்றி :தினக்குரல் 25.11.2002





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம விசாரணை

ஆத்ம சொரூபிகளே! என சுவாமி நம்மை நோக்கி அழைப்பதன் மூலம் எம்மை நாம் தகுதி நிலைப்படுத்திக் கொள்ள வேண்டியதற்கு "நான் ஆத்மா" என்பதும் அதற்கான அகம் நோக்கிய ஆத்ம விசாரணையும் அவசியம் ஆகும்.

ஆத்ம விசாரணை என்பது பிரம்ம சங்கற்பத்தினால் நிகழ்ந்த படைப்பில் தனித்துவமான மனிதன் தன் பகுத்தறியும் ஆற்றலால் படைப்பில் செறிந்த ஐந்து மூலங்களினால் ஆன பிரபஞ்ச காட்சி ஒவ்வொன்றிலும் அதன் கருவான படைப்பின் ஆதாரத்தோடு ஒன்றித்து தன் பஞ்ச பொறி புலன்களையும் சரியாக ஆளுமை செய்வதன் மூலம் பஞ்ச கோசங்களால் தன்னை தன்னால் அறியும் அகம் நோக்கி பயணிக்கும் ஆற்றல், இவற்றில் எண்ணம், சொல், செயல், உணர்ச்சி, அன்பு என்னும் ஐந்து ஆளுமைத் திறன்களின் விருத்தி மூலம் மனத்தை வெளிவிடாமல், இதயத்தில் வைத்து 'நான் யார்?' 'நான் ஆத்மா' என சாதனைப் படுவதே ஆத்ம விசாரணை யாகும். அப்போது எல்லாவித நினைவு களுக்கும் மூலமான தோற்ற ரீதியான "நான்" படிப்படியாக கழன்று விடுகின்றது.

பகவான் பாபா ஞான வாஹினியில் "ஆத்மா" என்னும் சொல் "ஆப்" என்ற வார்த்தையில் இருந்து தோன்றியதையும் "ஆப்" என்றால்,

தேடுதல்
பெறுதல்
வெற்றிகொள்ளல்
மீளுதல்

என்று விளக்குகிறார். ஆத்மாவை அகமுகமாக தன்னுள் தேடுபவன், பிரம்ம சொரூபத்தின் சத், சித், ஆனந்த மாகிய எல்லாவித ஞானத்தின் சாரங்களையும் முக் குணங்கள் கடந்து பெறுதல், இவ் ஞானத்தால், தன்னை அறிதலில் வெற்றி கொள்ளல் மூலம், மீண்டும் நாம் எங்கிருந்து வந்தோமோ அந்த பிரம்மத்தை நோக்கி மீளுதல் என்பதை விளக்குகிறார்.




மேலும் சுவாமி 'சத்ய உபநிஷத்தில்' பக்தர் ஒருவர் கேட்ட வினாவிற்கு விடையாக 'ஆத்ம விசாரணை' பற்றி இவ்வாறு விளக்குகிறார்.

**பக்தர்** - சுவாமி! உடம்பே நான் என்ற அனாத்ம பாவமே மாயை. நான் எதுவல்லவோ அதை நானாக கருதுவது. நான் என்பது ஆத்மா மட்டுமே. இதை எப்படி புரிந்துகொள்வது? எப்படி உணர்வது?

**சுவாமி** - 'உண்மையில் நான் என்பது உள் நிறைந்த ஆத்மாவே, இதை புரிந்து கொள்கின்ற சாதனையை 'ஆத்ம விசாரம்' (Self Enquiry) என்பர். காலத்தை புனிதமாக பயன்படுத்த பூஜை, நாமஸ்மரணம், ஜபம், தியானம் போன்றவை அவசியம். இவை அனைத்தின் இறுதி இலக்காக "ஆத்ம விசாரணை" மட்டுமே உண்மையான ஆன்மீகம் " என்கிறார்.

மேலும், "நீ யார் என்று கேட்கும்போது 'நான் பாரதீயன்' என்றால் அது உனது நாட்டை குறித்து வருவது. அது நீயல்ல. 'நான் டாக்டர்' என்றால் அது கல்வி தொழில் குறித்து வருவது. அது நீயல்ல. 'நான் வெங்கடேஸ்வரன்' என்றால் அது பெற்றார் வைத்த பெயர் குறித்து வருவது. அதுவும் நீயல்ல. 'நான் உடம்பு' என்றால் அது கனவு நிலையில் இல்லை (ஸ்வப்பன). எனவே அதுவும் நீயல்ல. 'நான் மனம்' என்றால் ஆழ்ந்த உறக்கத்தில் (சுஷிப்தி) அது எங்கே போனது. அதுவும் நீயல்ல. 'நான் புத்தி' என்றால் ஆழ்ந்த உறக்கத்தில் அதுவும் இல்லை. எனவே எஞ்சி நிற்கும் 'நான் ஆத்மா' என்பதே சரியான பதில்" என்கிறார்.

எனவே மேற்குறிப்பிட்ட எல்லா நிலைகளிலும் 'ஆத்மா இருக்கின்றது' அந்த அறிவே நான். அந்த அறிவின் சொரூபமே சத்... சித்... ஆனந்தம். இதனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர்,
"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுள்ளே உறுபொருள் கண்டேன்.
உடம்பினுள்ளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யான் இருந்தோம்புகின்றேனே!"என்றார்.

எனவே, உடம்பு, மனம், புத்தி ஒன்றும் நான் அல்ல என்கிறார். "நான் ஆத்மா. அந்த ஆத்மாவிற் குரியதே உடம்பு மனம், புத்தியெல்லாம். எனவே இவற்றை உள்நோக்கி திருப்புவதன்மூலம் மட்டுமே ஆத்மாவிற்குள் சஞ்சரிக்கமுடியும்.

அறிவு அறியாமையாலும், ஞானம் மாயை என்னும் அஞ்ஞானத்தினாலும் மூடப்பட்டுள்ள நிலமைகள், அறிவும் விவேகமும் சத்வகுணம் சார்ந்தததாக உயர்வடையும்போதே சாதகனுக்கு சாதனைகள் சாத்தியமாகின்றன. இதனை திருமூலர்,

"அறிவு அறிவு என்றரற்றும் உலகம்
அறிவறியாமை யாரும் அறிகிலார்
அறிவறியாமை கடந்த அறிவானால்
அறிவறியாமை அழகியவாறே!" என்கிறார்.

அதாவது அறிவு அறிவு என்று ஓயாது ஓலமிடுவோர் கருதுவது நான் எனது என்னும் பற்று, பாச அறிவையே! என்பதை அவர்கள் அறியவில்லை. ஞான அறிவு கைகூடும் போதே இந்த பற்றின் போலித்தன்மை புலனாகும் என்பதும்.


இதனையே திருமூலர் மேலும்
"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம்" என்கிறார்.

அதாவது மரத்தால் செய்யப்பட்ட பொம்மை உருவைப் பார்க்கும்போது மூலமரம் பற்றிய காட்சி இல்லை. ஞான அறிவால் மூலமரம் புரியும்போது யானை பொம்மை உரு இல்லை. அதேபோல் பரம்பொருளை மறைத்து நிற்கும் பஞ்சபூதங்கள், ஞான அறிவால் படைத்தவரை அணுகும் போது மறைந்து விடுகின்றன. காட்சிக் கருவை அடையும் போது, காட்சி மறைந்து விடுகின்றது. "நான் ஆத்மா" என்பதை உணர்ந்து அனுபவிக்கும்போது ஏனையவை யெல்லாம் மறைந்து விடுகின்றன.

"ஆத்ம விசாரணையை" எப்படி சாதனைப் படுத்துவது? உடம்பு அனித்தியமானது, அதனை சுகபோகங்கள் என்னும் தளைக்குள் தள்ளாமல் நித்தியத்தை நாடும் கருவியாக்கவேண்டும். உடம்பு ஆத்மாவை காவும் வாகனம் என்பதை உணர வேண்டும். "நான் யார்" என்னும் சுய விசாரணைக்குள் உட்படுத்தி வாழும் பயிற்சி மூலம் மனிதன் தனக்கு தரப்பட்டிருக்கும் ஐந்து கோசங்களாலும் அகம் நோக்கி பயணிக்கவேண்டும். அன்னமய கோசத்தால் பொறி, புலன் இச்சைகளை கட்டுப்படுத்தி பிராணமய கோசத்தால் பிராணன் பிரம்மம் என ஒன்றித்து மனோமய கோசத்தால் தாமச, ராஜச குணங்களைக் கடந்து சத்வகுணத்தை மேலோங்கச் செய்து பின்பு அதையும் கடந்து விஞ்ஞானமய கோசத்தில் அறிவும், விவேகமும் ஞானமயப்படுதல் மூலம், ஆனந்த மயகோசத்தால் 'நான் ஆத்மா' என்பதில் லயிக்க முடியும் என்பதை ஞானியர் தம் அனுபவ சித்தத்தில் வெளிப்படுத்தி யுள்ளனர்.

பிரசாந்தி வாஹினியில் "இதற்குரிய உண்மையான உபாயம் பக்தியே" என்பார் பாபா. பக்தி என்னும் கதவு திறந்தே இருக்கிறது. அதனூடே பயணிப்பதற்கு "ஆர்வம்" என்னும் பாஸ் போட்தான் தேவை. "பக்தியும் ஞானமும் ஒரு வண்டியின் இரண்டு காளைகள், இரண்டும் சீராக பயணிக்கும்போதே ஒன்றுக்கொன்று உதவும் போதே அகமுகமாக ஆத்ம விசாரணையும் சாத்தியமாகின்றது" என்கிறார்.

இதனையே கீதையில் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு இவ்வாறு போதித்தார். "யார் எனக்குள் ஐக்கியமாகி என்னைத் தியானிக்கின்றானோ அவனே என்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர்ந்த பக்தன்'' என்றும் 'என்பக்கம் திரும்பு, என்னை நோக்கி வா, என்னுள் பிரவேசி, என் தன்மையாகு' என்றும் அர்ஜுனனை வழிப்படுத்துகின்றார் கிருஷ்ணர்.

"நான் ஆத்மா'' என்னும் சரியான முகவரியை அறிய வைப்பதே, ஆத்ம விசாரணை என்றும், மனம் வாசனைகளின் பொதி, நான் யார் என்ற விசாரணையை செய்யத் தொடங்கிய வினாடியிலேயே சலனங்கள் மறைந்துவிடும். இந்தவிதமான சாதகத்தில் வெற்றி பெற்றவர் "ரமண மகரிஷி'' என ஞான வாஹினியில் குறிப்பிடுகின்றார் பகவான் பாபா.

ஆத்ம விசாரணை எது வரையில் வேண்டும்? என ரமண மகரிஷியிடம் பக்தர் ஒருவர் கேட்ட வினாவிற்கு "மனதின் கண் எதுவரையில் விஷய வாசனைகள் இருக்கின்றனவோ, அதுவரையில் 'நான் யார்? என்னும் விசாரணை வேண்டும். அதன் மூலம் அந்நினைவுகளை அதன் உற்பத்தி ஸ்தானத்திலே நசிப்பிக்க வேண்டும்' என்றும் அந்த வைராக்கியம் ஒரு சாதகனுக்கு அவசியம் என்றும் "நான் யார்'' என்னும் நினைவு, மற்ற நினைவுகளையெல்லாம் அழித்து பிணம் சுடு தடிபோல் முடிவில் தானும் அழியும், அதன் பிறகே ஆத்ம தரிசனம் உண்டாம்'' என விளக்குகிறார் ரமண மகரிஷி.

இதனையே இராமகிருஷ்ண பரமஹம்சர் "நான் ஆத்மா'' என்னும் விசாரணையில் வெங்காயத்தின் தோலை உரிக்க உரிக்க மேலும் தோல்தான் காணப்படும். இவ்வாறு நான் என்னும் தோற்ற அகங்காரம் படிப்படியாக அழியும்போது, எஞ்சி நிற்பதே ஆத்மா'' என்றும் இதனையே சுவாமி விவேகானந்தர் "அதுவே மனிதனது நிஜ சொரூபம்'' என்கிறார்.

சிவயோகசுவாமிகள் ஆத்ம விசாரணைக்கான வழிமுறையினை..

"தன்னை தன்னால் அறிந்திடவேண்டுமே
தானாயெங்கும் செறிந்திட வேண்டுமே
பொன்னை, மாதரைப் போக்கிடவேண்டுமே
புவியின் ஆசையை நீக்கிடவேண்டுமே
கண்ணைப் போல் அறம் காத்திடவேண்டுமே
கமல பாதம் தொழுதிடவேண்டுமே
எண்ணம் யாவுமே இறந்திட வேண்டுமே'' என்கிறார்.

இவை மனத்தை உலகியல் சுகங்களின் இருந்து விடுவித்து பகிர்முக மனத்தை ஒரு முகமாக்குவதன் மூலம் ஆத்ம விசாரணைக்கு அந்தர் முகமாக பயணிக்க உதவுகின்றன.

மேலும் பகவான் பாபா ஞானவாஹினியில் ஆத்ம விசாரணையின் போது "அகம் பிரஹ்மாஸ்மி'' என்ற மகா வாக்கியத்தில்கூட அஞ்ஞானத்தின் சாயல் ஒட்டிக் கொண்டிருப்பதை விளக்குவார். அகம் தனியாகவும் பிரம்மத்தைப் போன்றது என்றும் கூறப்படுவதால் மேலும் மேலும் தியானிக்கும் போதே "தத்துவம் அஸி'' என் மகாவாக்கியத்தின் படி "எல்லாம் ஆத்மாவே'' என்ற நிலை எட்டப்படுகின்றது.

ஸ்ரீ ரமண மகரிஷி இதனை "சத் சித் ஆனந்தம் என்னும் அனுபூதி நிலையிலேயே ஆத்ம விசாரணையிலும் ஒட்டிக்கொண்டிருக்கும் மனம் கழன்று தியானத்தில் ஒன்றித்து தன் யதார்த்த சொரூபத்தை தெரிந்துகொள்ளும் ஜீவன் முக்தி கை கூடுகின்றது'' என்கிறார்.

ஜெய் சாயிராம்

செ.தங்கராசா
பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்,
கோண்டாவில்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அற்புதங்கள் நிகழ்த்தி அனைவரையும் காக்கும் எம் இறைதூதன்!

1962ஆம் வருடம் எனது சிறுநீர்ப் பையில் ஏற்பட்ட கான்சருக்காக எனக்கு ஒரு அறுவை சிகிச்சையும் செய்துகொண்டேன். கதிர்வீச்சும் கொடுத்தார்கள்.

நான்கு வருடங்கள் கழித்து மீண்டும் அந்தத்தொல்லை நேரிட்டபோது, மருத்துவர்கள் என்னை லண்டனுக்கு மேற்கொண்டு சிகிச்சைக்கு அனுப்பினார்கள். அங்கிருந்த பின்பு எனது சிறு நீர்ப்பையை எடுத்துவிடவேண்டும் என்று கருத்து தெரிவித்தனர்.

எனக்கு அது ஒப்புதல் இல்லை. அதனால் சுவாமிக்கு ஒரு கடிதம் எழுதி உதவி கோரினேன். அடுத்து நடந்த அறுவைசிகிச்சையின்போது டாக்கடர்கள் ஆச்சரியப்படும்படி கான்சரின் சுவடே காணப்படவில்லை.

எங்களுக்குள் ஒரு ஒப்பந்தம். கான்சர் இல்லாமல் போனால் சிறுநீர்ப்பையை எடுக்கக்கூடாது என்று. அதனால் சிறுநீர்ப்பையை உள்ளேயே வைத்து மூடித் தைத்துவிட்டனர். மும்பை வந்தபிறகு நானும் எனது மனைவியும் புட்டபர்த்திக்குச் சிலமுறை சென்றோம். அப்படிப்பட்ட ஒரு நாளில் சுவாமி எனது மனைவியிடம் இனிமேல் எனது ஆரோக்கியத் தைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்றும் அவரே என்னைக் கவனித்துக் கொள்வதாகவும் உறுதி அளித்தார். அதற்குப் பிறகு 30 வருடங்களாக எனக்கு எந்தவிதமான பரிசோதனையும் மருந்தும் தேவைப் படவில்லை. சுவாமி முழுமையாக எனது கான்சரை கான்சல் செய்துவிட்டார். எனது ரிடையர்மெண்ட் 1973 இல்: ஆர்த்ரடிஸ் விபூதியால் குணமாயிற்று.


அடுத்த அனுபவம் என் மகள் சூரியகுமாரி (68 வயது) பற்றியது. என் மனைவி, பகவானின் பரம பக்தை. ஏப்ரல் 1976 இல் அவர் பாதங்களிலேயே கலந்துவிட்டாள். சுவாமி மே 1976 இல் ஊட்டியில் நடைபெற்ற சம்மர் கோர்ஸில் கலந்து கொள்ள அனுமதி தந்தார். அதன்மூலம் நான் துக்கத்திலிருந்து விடுபட வழி செய்தார். பிறகு நான் பெங்களூர் திரும்பி வந்தபோது என் மகள் தரையில் தவழ்ந்தவாறு நடப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். அவளால் எழுந்திருக்கவோ முடியவில்லை. அவள் "ருமடாய்ட் ஆர்த்ரடிஸ்" என்ற நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். நான் அவளை உடனே புட்ட பர்த்திக்கு அழைத்து வந்தேன். சுவாமியிடம் பிரார்த்தனை செய்தேன். என் மனைவி இறந்து சில வாரங்களே ஆகியிருந்தன. அதற்குள் இன்னுமொரு துன்பத்தைத் தாங்க சக்தியில்லையே சுவாமி என இறைஞ்சினேன்.

என்னுடைய மகள் தொடர்ந்து எழுதுகிறாள், இன்டர்வியூவின் போது சுவாமி என்னைப் பார்த்த பார்வையில் அன்பும், இரக்கமும் இருந்தன. நான் அவர் முன்னிலையில் மெதுவாக நொண்டி நடந்தேன். அவர் இதமாகச் சொன்னார். "இதோ பார் பங்காரு, என்னை முழுதாக நம்பு. மருந்துகளை எல்லாம் தள்ளிவை. நீ நன்றாக நடந்து உன் வீட்டு வேலையை எல்லாம் செய்வாய் இன்னும் ஒரு வாரத்துக்குள்ளாக. நான் உனக்கு பிராமிஸ் செய்கிறேன். அவர் எனக்காக விபூதி சிருஸ்டித்துக் கொடுத்தார். எனக்கு பாத நமஸ்காரம் தந்தார்."

நான் நிச்சயம் ஒரு வாரத்துக்குள் நடந்தேன். எனது ஆர்த்தரிடிஸ் போன இடம் தெரியாமல் மறைந்துபோயிற்று. எல்லாம் கனவில் நடந்தன போல இருந்தது. பிறகு அந்தத் துன்பம் எனக்கு ஏற்படவே இல்லை. அவரது அருகாமையை அதிகம் உணர நான் பாலவிகாஸ் குருவானேன். இந்தச் சேவை எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கடந்த 35 வருடங்களாக தந்து வருகிறது.

\- கோபால்ராவ்.

நன்றி: தினக்குரல் 23.11.2002





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவப் பகிர்வு



பிறக்கும் போதே எனது இரு கண்களுக்கும் பார்வை இல்லை. 1993ஆம் ஆண்டில் வைத்தியரிடம் சென்று கண்ணை பரிசோதனை செய்தபோது எதுவும் செய்ய முடியாது எனக் கூறிவிட்டார். அம்மா, அப்பா முகத்தைக்கூட பார்க்க முடிய வில்லை.

10 வயதில் மீண்டும் கண் பரிசோதனை செய்யப்பட்டு வலது கண்ணில் சத்திரசிகிச்சை மேற் கொள்ளப் பட்டது. பின்னர் ஓரளவு வெளிச்சம் தெரிந்தது. 2004 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருட முடிவிலும் அடுத்த வருடம் எனக்கு பார்வை கிடைக்கும் என எதிர்பார்ப்பு இருந்துகொண்டே இருந்தது.

நான் 2007 ஆம் ஆண்டு சுவாமியை வழிபடத் தொடங்கினேன். அப்போது நம்பிக்கை பெரிதாக இல்லை. 2010 ஆம் ஆண்டின் பின்னர் சத்திய சாயி நிலையத்திற்கு வந்த பிறகு தான் நம்பிக்கை ஏற்பட்டது. சுவாமி ஆரம்பத்தில் காட்சியளித்தார். எனக்கு கண்ணில் வலி ஏற்படும் போது "சாயிராம்" என்று சொல்லி விபூதியை தரித்துக் கொள்வேன். சாயி சகோதரிகளிடம் "சுவாமி எனக்கு கண்களை சுகமாக்கி விடுவாரா?" எனக் கேட்பேன். அவர்கள் நம்பிக்கையோடு சுவாமியை வழிபட்டால் நிச்சயமாக சுகமாக்கி விடுவார் என கூறுவார்கள்.

2009 ஆம் ஆண்டில் மீண்டும் கண்ணில் வலி ஏற்பட்டது. வைத்தியரிடம் சென்று கண்ணை பரிசோதனை செய்த போது கண்ணில் குருதியமுக்கம் ஏற்பட்டிருக்கிறது என கூறிவிட்டனர்.

2011 ஆம் ஆண்டு எனது கண்ணில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப் பட்டது. அதன்பிறகு எனது கண்ணுக்கு பார்வை கிடைத்தது. இது சுவாமியின் அருளாலேயே நடைபெற்றது. இடது கண்ணுக்கு வெளிச்சம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. தற்போது வலக்கண்ணில் வலி ஏற்படுவதில்லை. வலது கண்ணில் வெளிச்சம் அதிகரிப்பதை உணரக்கூடியதாக உள்ளது. இது சுவாமியின் அருள்தான்.

2012 ஆம் ஆண்டில் சுவாமியின் சமாதியை தரிசிக்க கிடைத்தது. சுவாமி எனது கண்ணிற்கு வெளிச்சத்தை தந்து பின் புட்டபர்த்திக்கு அழைத்தார். 2013ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சையில் பல பிரச்சினைகளுக்கு முடிவு தந்தார். அதாவது வாசித்து விடுவதற்கு யாரை கேட்பது என்று தெரியாமல் இருந்தது. அதற்குரிய ஆசிரியரைத் தந்து குழப்பம் இல்லாமல் பரீட்சை செய்வதற்கு அருள்புரிந்தார். விடை எழுதுவதற்கான தாள்களை பெற்றுத் தந்தார். எனது வாழ்க்கையில் நம்பிக்கையை ஏற்படுத்தினார். தற்போது சுவாமி மீது நம்பிக்கை அதிகமாக உள்ளது. சுவாமி எனது குறைகளை தீர்ப்பார் என்ற நம்பிக்கை உள்ளது.

ஜெய் சாய்ராம்

செல்வி அ.காயத்திரி
சத்தியசாயி நிலையம், யாழ்ப்பாணம்.(2014)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடமை, கட்டுப்பாடு, பக்தி

புட்டபர்த்தி மண்ணிலே புனிதமாக மலர்ந்தவர், அன்பு என்ற சொல்லையே அமுதமாக வகுத்தவர், பெற்றோரின் பெருமையை பெரிதாக மதித்தவர், பண்புமிக்க மாணவராய் பாரினில் உயர்ந்திட கல்விக்கூடம், கலைக்கூடம் என்ற பல அமைத்திட்டார், சேவை பல செய்திடடா என்ற புத்தி புகட்டினார், ஏழைகட்கு இரங்கிவிடு, ஏழ்மையாய் வாழ்ந்துவிடு, ஊனம் உற்றவர்க்கு நீ உதவிக்கரம் நீட்டிவிடு என்று கூறும் எந்தன் சாயியின் இளைஞர்களாகிய நாம் சாயியின் ஒழுக்க நெறிக்கோவைகளை பின்பற்ற வேண்டும்.


அதாவது தினமும் தியானம், ஜபம் செய்வது கிழமையில் ஒரு நாளைக்கு குடும்ப அங்கத்தவர்களோடு ஒன்று கூடி பஜனை நடத்துவது, தமது குடும்பத்தின் சிறுவர்கள் பாலவிகாஸ் நிகழ்ச்சிகளில் பங்குகொள்வது, நிறுவனத்தின் சமூக வேலைத் திட்டங்களிலும் ஏனைய செயற்பாடுகளிலும் பங்குகொள்வது, நிறுவனத்தினால் ஒழுங்குசெய்யப்படும் பஜனை அல்லது நகரசங்கீர்த்தனத்தில் மாதத்தில் ஒரு முறையாவது பங்குபற்றுவது, சாயி இலக்கியங்களைக் கிரமமாக படித்துவருவது, எவருடனும் மிருதுவாகப் பேசுவது, புறங்கூறாதிருப்பது. நாராயண சேவை ஆகிய ஒன்பது ஒழுக்க கோட்பாட்டையும் நாம் கடைப்பிடிக்க வேண்டியது ஆகும்.

இவ் ஒழுக்க கோட்பாடு அனைத்தையும் உள்ளடக்கியதாகவே கடமை, கட்டுபாடு, பக்தி என்பவை காணப்படுகின்றது. அந்த வகையில் ஒவ்வொரு மனிதனுக்கும் கடமை, கட்டுப்பாடு, பக்தி என்பது அத்தியாவசியமானதொன்றாக உள்ளது. அதாவது பிறவிகளிலேயே மனிதனாகப் பிறவி எடுப்பது மிக அரிது. மனித வடிவை அடைவது மிகக் கடினமானது. மனிதன் என்பவன் சாதாரணமான பிறவி அல்ல. அவன் அழிவற்றவன், அவன் நிச்சயம் தெய்வ வடிவமே. அதைத்தான் தெய்வம் மானுஷ ரூபனே எனக் கூறியிருக்கிறார்கள்.

நீ ஏதாவது தவறு செய்வதிலும் அல்லது எண்ணுவதிலும் ஈடுபட்டாலும் நீ நிச்சயம் தெய்வீகம் ஆக முடியாது. முதன் முதலில் நீ நல்ல மனிதனாக வேண்டும் என சுவாமி கூறுகின்றார். (Be Good, Do Good and See Good, This is the Way to God) நல்லவனாக இரு நல்லவனவற்றைச் செய், நல்லதைப் பார். இதுதான் இறைவனைக் காணும் வழி. இதுவெ எமது முதற்கடமையாக காணப்படுகிறது.

அந்த வகையில் கடமை பற்றி சுவாமி கூறுகின்றார், உங்கள் கடமைகளை அக்கறையுடனும் இறைவன்மேல் பக்தியுடனும் செய்து முடியுங்கள், உங்கள் அறிவுத்திறனை நடைமுறைப்படுத்தி நல்லபெயரெடுங்கள். நான் எவரையும் மேலே படிக்கத் தடுப்பதில்லை. ஆனால் உலகியலான அறிவோடு நீங்கள் ஆன்மீக அறிவையும் பெறவேண்டும். அதற்கு மனதிற்குள் தீர விசாரிக்கும் பக்குவமும் தூய்மையான இதயமும் மிக அவசியமான தேவைகள் என கடமைகளின் அவசியத்தை கூறுகின்றார்.

இளைஞர்களாகிய எமக்கு முக்கியமான கடமைகளில் ஒன்றாக கல்வி கற்பது என்பது விளங்குகின்றது. அதாவது நாம் படிக்கவேண்டியது நேர்மறையான விஷயங்களை. எங்கள் கல்வி எங்களைச் சுற்றியிருக்கும் சமுதாயத்திற்கு பயன்படவேண்டும். மற்றவருக்கு உதவி செய்யும்போது தூய்மையானவனாக நாம் மாறுகின்றோம். நாம் கற்கின்ற கல்வியானது நல்ல முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனாலும் ஒருவன் எவ்வளவுதான் படித்திருந்தாலும் தனது உண்மையான இயல்பான ஆத்மாவை உணராதவரை அவன் வெறும் முட்டாள்தான். ஆகவே வெறும் உலகியல் கல்வி கற்பதனால் மட்டும் மனிதன் தன் வாழ்வின் உயர்நிலையை அடையமுடியாது.





noolaham.org | aavanaham.org



இதனாலேயே எமது கடமையில் முக்கியமானதொன்றாக கல்வி கற்பது விளங்குகின்றது.

எமது கடமையில் இன்றியமையாததாக தாய் தந்தையரை மதித்தல் காணப்படுகின்றது இதனையே சுவாமி கூறுகின்றார். தாய தந்தையரை எக் காலத்திலும் வெறுக்கக்கூடாது. தூஷணை செய்யக் கூடாது. அவர்களை கேலி செய்யக் கூடாது. தாயின் மகாசக்தி அவளது இருதயத்தில் நிறைந்திருக்கிறது. தாயை மாத்ருமூர்த்தியாக மதித்து வாழ வேண்டும். அவளது பெருமையே உன்னை சமூகத்தில் உயர்ந்த நிலையில் வைக்கும் என கூறுகின்றார். அந்த வகையில் இளைஞர்களாகிய நாம் தாய் தந்தையரை மதித்து நடப்பது எமது கடமை ஆகும்.

ஆகவே நாங்கள் வாழ்க்கை பற்றியும் அது தரும் இன்பங்களைப் பற்றியும் ஒரு சிறிதும் நினைத்துப் பார்ப்பதுகூட கிடையாது. எதைச் செய்தாலும் நாம் கடமைகள் என்ற எண்ணத்தில் செய்ய வேண்டும். இதனாலேயே சுவாமி கூறுகின்றார், காலம் கனியும் போது நீங்கள் காப்பாற்றப் படுவீர்கள். உங்கள் தேவைகள் எல்லாம் கடவுளின் பரிசாக பரீட்சையின் மூலம் உங்களை வந்துசேரும். எல்லாம் இறைவனின் சங்கல்ப்பம். அவரது சங்கல்ப்பத்தை உடைக்க எந்த சக்தியும் இல்லை என சுவாமி கூறுகின்றார்.




அடுத்ததாக நாம் கட்டுப்பாட்டை எடுத்து நோக்கும்போது முதலில் எமது மனம்தான் எமக்கு அவசியமானதொன்றாக காணப்படகின்றது. அதாவது எவன் ஒருவன் மனதை கட்டுக்குள் வைத்திருக்கிறானோ, அவன்தான் உண்மையான மனிதனாவான். மனதை கட்டுக்குள் வைக்காதவன் மனிதனாக மாட்டான். அற்ப துன்பங்களை சமாளிப்பதில் சலன சித்தத்துடனும் மனச்சோர்வு கொண்டவனாக இருந்தால் எவ்வாறு மனிதன் என்று கூறிக்கொள்ளமுடியும். ஆகவே நாம் மனக் கட்டுப்பாடுடன் இருப்போமானால் நாம் ஒரு சிறந்த மனிதனை எம்முள் உருவாக்கமுடியும்.

இதைவிட எம்மிடம் சுய கட்டுப்பாடு (Self Control) காணப்படவேண்டும். அதாவது எம் வாழ்க்கையை நாம் ஒரு நல்ல நிலையில் நிர்ணயிக்க எமக்குள் சுய கட்டுப்பாடு தேவை. உதாரணமாக நாம் ஓர் குழவாக தொழிற்படும் சந்தர்ப்பத்தில் எப்போதும் குழுத்தலைவர் சுயகட்டுப்பாடும் நல்லொழுக்கம் உடையவராயிருத்தல் அவசியம். அப்போதுதான் குழுவில் உள்ள மற்ற அங்கத்தவர்களுக்கு முன்மாதிரியாக இருந்து அவரையும் சுய கட்டுப் பாடுடனும் நல்லொழுக்கத்துடனும் செயற்படுவதற்கு ஊக்குவிக்கமுடியும்.

கட்டுப்பாடானது ஒவ்வொருவருக்குள்ளேயும் காணப்படவேண்டும். ஒருவன் கெட்ட செயல்களை அல்லது கெட்ட வழிக்கு செல்லாமல் இருப்பதற்கு அவனுக்குள் ஒரு கட்டுப்பாடு இருக்கவேண்டும். அதாவது நாம் இந்த வழியில் செல்வது தவறு இதில் செல்லக்கூடாது என்ற ஒரு மனக் கட்டுப்பாடு ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டும். இவ்வாறு ஒவ்வொருவரும் தங்களுக்குள் கட்டுப்பாடுகளை விதித்திருந்தால் இவ்வுலகில் இடம்பெறும் குழப்பங்கள் அழிவுகள் என்பதை குறைக்கலாம்.

ஒருவன் மிகுந்த புத்திசாலியாக இருந்தாலோ அல்லது நல்ல உயர் குணநலன்கள் உடையவனாக இருந்தாலும் அவனுக்கு இன்றியமையாத ஒன்றாக கட்டுப்பாடு காணப்படுகின்றது. கட்டுப்பாடானது எமது நாவில், உணவில், பேச்சில், செயலில் போன்ற பலவற்றில் இருக்கவேண்டும். இவ்வாறு நாம் ஒவ்வொன்றிலும் கட்டுப்பாடாக இருந்தால்தான் நாம் ஒரு பூரண மனிதப் பண்பை அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக நாம் பக்தியை எடுத்து நோக்குவோமானால் இறைவனை விட்டுப் பிரியாதிருப்பதே பக்தி என்கிறார்கள். உலகியல் அன்பு காலப்போக்கில் வெறுப்பாக மாறலாம். இன்று விருப்பமானது நாளை பிடிக்காமல் போகலாம். ஆனால் தெய்வீகமான அன்புக்கோ எவ்வித விருப்பு வெறுப்புகளும் இல்லை. அன்பைத் தவிர வேறெந்த தெய்வீகமும் இல்லை. நாம் சுவாமியை ஜீஸஸ், ஜோராஷ்டிரர், அல்லா, ராமா, கிருஷ்ணா, புத்தா என்றெல்லாம் அழைத்துப் போற்றிப் பாராட்டலாம். நாம் இறைவனை எந்தப் பெயரிட்டும் அழைக்கலாம். இதெல்லாம் வைத்த பெயர்கள். ஆனால் பிரேமை மட்டுமே இயல்பாக பிறந்த பெயர். வைத்த பெயர்கள் மாறலாம் ஆனால் அன்பு மட்டும் மாறாதது. அதுவே உண்மையான பக்தி, பற்றற்ற தன்மை, முக்தி ஆகியவை பிறக்கின்றது.

இறைவன்பால் உறுதியுடன் ஒருமைப்பட்ட பக்தி செலுத்தவேண்டும். எமது நம்பிக்கை முழுமையானதும் நிபந்தனையற்றதாக இருக்கவேண்டும். எமது நம்பிக்கை நிலையற்றதாக இருந்தால், நாம் குழப்பத்திற்குள்ளாகி நிலை தடுமாறி இருப்போம். எமது ஆசைகள் எம்மை ஆண்டவனிடம் இருந்து விலகி விடச் செய்து விடும். படித்தவர்கள் படிப்பில்லாதவர்களை கீழ்த்தரமாகப் பார்க்கக் கூடாது. அவர்கள் உண்மையிலேயே கல்வி கற்றவர்களானால் அனைவரையும் சமமாக பாவித்து ஒற்றுமையை வளர்ப்பார்கள். ஒற்றுமை எங்கு உள்ளதோ. அங்கு தூய்மை இருக்கும். நம்மிடம் தூய்மை இருந்தால் நாம் தெய்வத்தை உணர்ந்து அனுபவிக்கலாம். அன்புதான் ஒற்றுமைக்கு ஆதாரம். அன்பு இல்லை என்றால் வேற்றுமைகள் நிச்சயமாக உருவாகும். இத்தகைய அன்பேதான் பக்தி ஆகும்.

இறைவனுக்கு எங்களிடம் இருந்து எதுவும் தேவையில்லை. காரணம் எல்லாவற்றினதும் மூலம் அவரே. அவர் எங்களிடம் இருந்து எதிர்பார்ப்பது சுயநலமற்ற அன்பு மட்டுமே. இந்த சுயநலமற்ற அன்பே சேவையாக பரிணமிக்கிறது. சேவை ஆணவத்தை அழித்து சகிப்புத் தன்மையையும் சகோதரத்து வத்தையும் வளர்க்கிறது. சேவை மூலம் அனைத்துயிர் களிலும் இறைவனைக் காணும் தெய்வீகப் பண்பு வளர்கிறது. ஆகவே இளைஞர்களாகிய நாம் கடமை, கட்டுப்பாடு, பக்தி என்பவற்றை கடைப்பிடித்து சுவாமியின் அன்பை பெறுவோம்.

ஜெய் சாயிராம்

புவிராஜசிங்கம் கம்சத்வனி


கிழக்கு பிராந்தியம், தாமரைக்கேணி.(2014)



**நற்சிந்தனை**

கழுகின் அலகில் மீன் இருக்கும்வரை காகங்கள் அதைச் சுற்றி சுற்றி தொல்லை கொடுத்தன. அதை ஓரிடத்தில் அமரவும் விடவில்லை. கடைசியாக மீனிலுள்ள ஆசையைக் கழுகு விட்டவுடன் காகங்களின் தொல்லையும் நின்றுவிட்டது. நாமும் புலனின்ப நாட்டத்தை விட்டால், பெருமை, பொறாமை, வன்மை, பகைமை என்ற காகங்கள் எம்மை அணுகமாட்டா. பற்றின்மையை இக் கணத்திலிருந்தே பின்பற்றவேண்டும். அப்படியாகில் எமது பயணம் அழைப்பு வந்தவுடன் தொடங்க இலேசாகும். அழைப்பு எப்போது வரும் என்று தெரியாது. இதற்குத் தயாராக இல்லாவிடில் அழைப்பு வரும் நேரம் வீடு, செல்வம், அந்தஸ்து விட்டு போகின்றோமேயென்று அழ நேரிடும். இந்த செல்வமெல்லாம் கலையும் கணங்களேயாகும். ஆண்டவன்மீது பற்றை வைத்துக்கொள்ளவேண்டும். அவர் எப்போதும் எங்கேயும் உங்களுடனே இருப்பார். ஆண்டவனுடன் ஒன்றிணைந்து வாழ்ந்த நாள்களே நாள்களாகும். ஏனைய நாள்கள் வீணான நாள்களேயாகும்.

அருளுரை 10.10.1964





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை, கட்டுப்பாடு, பக்தி

இன்றைய உலகில் எங்கு பார்த்தாலும் ஒரே பதற்றமும், குழப்பமுமே நிலவுகிறது. பெரியோரிடம் மரியாதை மற்றும் நல்ல அறவொழுக்கப் பண்புகள் என்பவை அறவே இல்லாது போய் விட்டன. அடிப்படை மனித நேயமும் தொலைந்துவிட்டது. மரியாதைக்குறைவும் ஒழுங்கற்ற நிலையும் இன்று ஒவ்வொரு துறையிலும் பரவிவிட்டது. சேவை என்று சொன்னால் பெரும்பாலானோர் தூரத்திற்கு விலகிச் சென்று விட்டனர். அவர்களுடைய செயற்பாடுகள் உண்மையில் அர்த்த மற்றதாகவும் மிகவும் வெறுப்பானதாகவும் இருப்பதைக் காணலாம். இத்தகு சூழலை சீர்படுத்த இளைஞர்களே ஆர்வத்துடன் முன்வருதல் வேண்டும்.

சமூகத்தை நல்வழிப்படுத்தவும் மாற்றங்களை ஏற்படுத்தவும் பொருத்த மானவர்கள் இளைஞர்களே. இதற்கு இளைஞர்கள் தமது 'புலன்களின் வலிமை, மனதின் சக்தி, உடலின் சக்தி, புத்திக்கூர்மை மற்றும் ஆன்ம பலத்தை இச் சமுதாயத்திற்காக பயன் படுத்து வோம்'' என உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

முதலில் இறைவன் மீது தீவிரமான நம்பிக்கை கொண்டு பக்தி செலுத்த வேண்டியது எம்முடைய தலையாய கடைமை. இறைவன் மீது ஆன்மாக்கள் கொள்ளும் அன்பும், மரியாதையுமே பக்தி எனும் புனிதமான சொல்லாகத் தோன்றி மிளிர்கிறது. நாம் இறைவன் மீது கொண்ட பக்தியின் நிமித்தம் பிரார்த்தனைகள், சாதனைகள் என்பவற்றை மேற்கொள்ளவேண்டும். பக்தியானது ஒன்பது வகையில் இருப்பதால் "நவவித பக்தி'' என வகுக்கப்பட்டுள்ளது. இறைவன் புகழ் கேட்பது (சிரவணம்), இறைவன் புகழ் பாடுவது (கீர்த்தனம்). இறைவனைப் பற்றி நினைத்திருப்பது (விஷ்ணுஸ்மரணம்), இறைவன் பாதத்துக்கு சேவை செய்வது (பாதசேவனம்), வணங்குதல் (வந்தனம்), அர்ச்சித்து வழிபடுவது (அர்ச்சனம்), சேவகனாக சேவை செய்வது (தாஸ்யம்), நண்பனாக அவரை நேசிப்பது (ஸக்யம்), தன் ஆத்மாவை இறைவனிடம் சரணாகதி செய்வது (ஆத்ம நிவேதனம்) என்பவையே இந்த நவவித பக்திகளாகும். இந்த நவவித பக்திகளில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றினாலும் கூட எம்முள் தெய்வத்துவம் ஊற்றெடுக்கும்.

Advent of Love
SRI SATHYA SAI

கலியுகத்தில் பக்தியை மேம்படுத்துவதற்கான இலகு வழியாக "நாமஸ்மரணை''யினை சுவாமி எமக்கு கற்றுக் கொடுத்துள்ளார். உள்ளத்தில் தூய்மையுடன் இறைவன் உருவத்தை ஒரு முனைப்பாட்டுடன் துதித்து நாவில் உச்சரித்துக் கரங்களினால் எழுதவேண்டும். அப்போதுதான் அதனுடைய பலனைப் பூரணமாக அனுபவிக்க முடியும். இப்படிப்பட்ட கடவுள் பக்தி எனும் பைத்தியம் எமக்குப் பிடிக்க வேண்டும். அப்போதுதான் இந்த உலகில், மனிதர்களின் பைத்தியக்காரத்தனமான எண்ணங்கள் விலகிப் போகும். பக்தியின்மூலம் எம் இயல்பான இயற்கையான ஒளிர்வைப் பிரகாசம் அடையச் செய்தால் இறைவன் எமது தூய உள்ளத்தில் வந்து குடியமர்ந்துகொள்வார். பிறகு மனதையோ அல்லது புலன்களையோ அடக்கி ஆள்வது மிகவும் இலகுவானதொன்றாகிவிடும்.

இன்றைய இளைஞர்கள் சிறிய ஈர்ப்புகளுக்கு மயங்கி பலவீனம் அடைந்துவிடுகின்றார்கள். இளமையான வயதை உடையவனும் உடல் சோர்ந்து காணப்படுவது போஷாக்கான உணவின்மையினால் அல்ல. புலன்களைத் தகாத வகையில் பயன்படுத்துவதாலேயே ஆகும். இதன் காரணமாகவே அவன் பலவீனமடைகின்றான். இன்றைய இளைஞர்கள் தமது புலன்களின் ஜீவ சக்தியினைத் தவறாகப் பயன்படுத்து கின்றனர். இவையெல்லாவற்றையும் நிறுத்து வதற்குத் தமது புலன்களைத் தாமே கட்டுப் பாட்டினுள் வைத்திருத்தல் வேண்டும். இப்படி நம் மனதைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரே வழியாக அமைவது பக்தி ஆகும். பக்தியோடு செய்யப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தனைகள், சாதனைகள் என்பவற்றின் மூலம் அலைபாயும் மனதினால் அங்கலாய்க்கும் புலன்களைக் கட்டுப்படுத்தி வைக்க முடியும். இப்படி நம் புலன்களை நாமே கட்டுப்படுத்திக் கொண்டோமானால் நாம் அன்றாடம் விரயப்படுத்திக் கொண்டிருக்கும் செல்வம், உணவு, காலம் என்பவற்றைக்கூடப் பாதுகாத்துக கொள்ளலாம்.

பகவான் பாபா கூறுகின்றார், "உன் கடமைகளை நீ சரிவரச் செய்தால் உன் உரிமைகள் உனக்குத் தானாக வந்துசேரும். கடமையைச் செய்யுங்கள் (Duty is God, Work is Worship) கடமையே கடவுள். வேலையே ஆராதனை, மனிதனுக்கு வேலை எனும் கர்மா அவசியமானது. கடமைதான் நம் யோகம், கடமைதான் நமது போகம், கடமைதான் நம் தியாகம். கடமையைச் செய்வதுதான் எல்லாவற்றுக்கும் மூலமான ஆதாரம். அவரவர்களுக்கான கடமைகளை அவரவர் முழுவதுமாக நிறைவேற்றும்போதுதான் உலகின் தர்மம் பேணப்படும். எப்பொழுதும் தன் கடமையை மறந்து மற்றவர்களைப் பற்றிப்பேசுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். சுவாமி கூறுகின்றார், "நீ எங்கு சென்றாலும் உன் கடமையைச் செய், உன்னுள் இருந்து நான் வழிகாட்டிக் கொண்டிருக்கின்றேன். வர இருக்கும் வருடங்களில் என்னைப் பல வடிவங்களில் உன்னால் உணரமுடியும். நான் உன்னை என்றும் விட்டு விலக மாட்டேன். நீயும் என்னை விட்டு விலகமுடியாது. இந்த நிமிடத்தில் இருந்து எதையும் எதிர்பார்த்துச் செயற்படாதே. மாறா அன்புடன் உன் கடமையைச் செய். பொறுமையுடன் இரு. மகிழ்ச்சியாய் இரு. எது நடந்தாலும் எதை அனுபவித்தாலும் என் சங்கல்ப்பத்தாலேயே நடைபெறு கின்றது என்பதைப் புரிந்துகொள். வர இருக்கும் பொற்காலத்தில் புனித ஆத்மாவாகிய நீ ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம் இருக்கின்றன. அதைப் புரிந்து கொள்." எனவே சுவாமி கூறியதைப் போலவே பலனை எதிர்பாராது எம் கடமையைச் செய்து கொள்வதே சாலச் சிறந்தது ஆகும் என்பதைப் புரிந்து செயல்படுதலே நன்று.

எனவே இறைவன் மீது பக்தி கொண்டு அதன்மூலம், அதன் உதவியுடன் புலன்களை இலகுவாக அடக்கி எம் ஒவ்வொருவருக்குமான கடமையைப் பயன்கருதாது செய்து வாழ்வாங்கு வாழக் கடவோம்.

ஜெய் சாய்ராம்

செல்வி ஆரபி உமாசங்கர்
யாழ். மத்தி சாயி சேவா நிலையம்
2014

"பண்பாடற்ற மனிதன் எப்பொழுதும்
பிறரைக் குறை கூறுவான்.
பகுதி பண்பட்டவன் தன்னைத் தானே
குறை கூறிக் கொள்வான்
முழுக்கப் பண்பட்டவன் யாரையும்
குறை கூற மாட்டான்"

-- முதமொழி


"பிறரை குற்றம் காண்பது எளிது - அரிதேயாம்
தன் குற்றம் தான் காண்பது"

-- தம்மபதம்

மிகவும் சோதனையான சூழ்நிலையிலும்கூட முக மலர்ச்சியோடு பணியாற்ற முயலுங்கள்

அறிவில்லாத அன்பும் அன்பில்லாத அறிவும்
ஒரு நல்ல வாழ்க்கையைத் தர முடியாது

-- பேர்ட்ரண்ட் ரஸ்ஸல்
(Bertrand Russel)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மேன்மையான வாழ்வுக்கு...;; கடமை, கண்ணியம் மற்றும் இறைபக்தி அவசியம்"
## "Lead an Ideal Life..." Duty, Discipline & Devotion

"ஆர் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆர் அறிவார் அவ் அகலமும் நீளமும்
வேர் அறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேர் அறியாமை விளம்புகின்றேனே!"

வேர் அறியாத பெருஞ்சுடரான பகவானைப் பற்றி அவர் அகலமும் நீளமும் அறியாத நான் என்ன எழுதிவிட முடியும்! முடியாது தான்... சாயித்தாய் தன் மழலைச் செல்வங்கள் உளறுவதையும் அன்பாக ஏற்றருள்வான் என எண்ணித் துணிகின்றேன்.

அனைத்து சாயி பஜனைகளும் விநாயகரைப் போற்றும் பாடலுடனேயே ஆரம்பமாகும். விநாயகரைப் பற்றி சுவாமி கூறும் கருத்தாவது.

"விநாயகரை மூஷிக வாகனன் என்போன். எலி அறியாமையை ஆசைகளை இருளைக் குறிப்பது. எனவே அவர் எலியைத் தனது ஊர்தியாக ஏற்று அடியார்களின் அறியாமை என்னும் இருளைப் போக்குகிறார். விநாயகரின் களிறு போன்ற தலை விவேகத்தை நினைவூட்டும். யானை வேறெந்த மிருகத்திலும் பார்க்க பெரியது. யானையின் பாதங்களைப் போன்று வேறெந்த மிருகங்களுக்கும் பாரிய பாதங்கள் இல்லை. விவேகத்தைப் போன்று நன்றியுணர்ச்சி உடையது யானை. தனது பாகனை எந்த சூழ்நிலையிலும் மறவாப் பண்புடையது." இதுவே பாபாவின் அருள் மொழியாகும். இளைஞர்களாகிய நாம் அஞ்ஞான இருளில் இருந்து நீங்கி ஆசைகளைக் கட்டுப்படுத்தி நன்றியுணர்வுடனும் நாவடக்கம் பேணி இறைவனை வழிபட்டு உயரினங்களை வெறுக்காது எமக்கு கிடைத்துள்ள வாழ்க்கையை சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்னும் கோட்பாட்டைக் கடைப்பிடித்து வாழவேண்டும். இதுவே சுவாமிகளின் விருப்பமாகும். "வாழ்வில் இடறித் திசைதவறிச்செல்லும் இளைஞர்களுக்கு கைகொடுத்து அவர்களை நல்வழிப்படுத்தவேண்டும். இளைஞர்களாகிய நாம் ஏழைகளின் துயர் களைந்து அவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்யவேண்டும். இதுவே என் கடன்." இது 21 வயது இளைஞன் ஒருவனின் மடல், சபதம். இப்படி அந்த இளைஞன் சபதம் எடுத்தது தனது 21ஆவது வயதில் மே மாதம் 25ஆம் திகதி 1947ஆம் ஆண்டு. அப்படி தனது இளமைப் பருவத்தில் சமுதாயப் பார்வையுடன் ஆன்மீக வேட்கையுடன் இப்படி ஒரு சபதம் எடுத்த இளைஞன் வேறுயாருமல்ல. நமது அவதார புருஷர் சாயிபாபாவேதான்! அவர் அன்று வரைந்த மடல் வரலாற்று முக்கியத்துவம் பெற்றுவிட்டது. "என்கடன் பணி செய்துகிடப்பதே." என்ற தன் கனவை நனவாக்கிக்கொண்டிருக்கிறார் பாபா.

14 வயதில் பாபா "நான் இனி உங்களுக்கு உரியவன் அல்ல, எனக்குப் பாரிய பணி உண்டு, எனது சலனம் மாயை நீங்கிவிட்டது, நான் சாயிபாபா" என தனது அண்ணனுக்கு உரைக்கிறார். இவ்வாறு கூறிவிட்டு அங்கிருந்து சென்று ஒரு தோட்டத்தில் ஒரு மரத்தடியில் அமர்ந்தவாறு தியானித்து தனது முதலாவது பஜனைப் பாடலைப் பாடினார். இதோ அப்பாடலின் தொடக்கம் "மானச பஜரே குரு சரணம்". பாபாவின் நடவடிக்கைகளை அவதானித்த அவரது அண்ணன் பதட்டமடைந்து அவருக்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் தனது ஐயங்களை வெளியிட்டார். ஊராரின் பழிச்சொல்,அவர்களை எள்ளி நகையாடல், இகமுறை இப்படி அனைத்தையும் கோடிட்டுக் காட்டினார். தமையனார் இப்படிக் கவலையுற்ற அண்ணனுக்கு தம்பி பாபா எழுதிய மடலிலே தான் இச்சபதத்தைக் கூறியிருந்தார். இக் கடிதத்தில் சில பகுதிகளை பார்ப்போம்.

"ஞானிகளை மக்கள் அறியமாட்டார்கள், மகாத்மாக்களைப் பற்றி பல புனை கதைகள் கூறப்பட்டன. உண்மைக்குப் புறம்பான பல பழிகள் சுமத்தப்பட்டிருக்கின்றன."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"காய்க்கும் மரம்தான் கல்லடிபடும்" இவர்கள் அறியாமல் பேசுகின்றார்கள். இகழ்ச்சியும் புகழ்ச்சியும் உலகத்து இயற்கை. அவை ஆத்மாவை என்றும் பாதிப்பதில்லை. அவை புறவுடலை மட்டுமே சீண்டிவிடலாம்.

சூது சத்தியத்தை வெல்லுமாப்போல் தோன்றலாம். ஆனால் ஈற்றில் சத்தியமே வெல்லும். நான் என்றுமே எனது இலட்சியத்தை கைவிடமாட்டேன். இது எனது உறுதியுரை. இது 21 வயது இளைஞனின் மடல் என்று நம்பமாட்டார்கள். வாழ்வின் விழுமியங்களை இக் கடிதத்தில் காண்கிறோம். சாயி பக்தர்களாகிய இளைஞர்களாகிய நாம் சுவாமியின் வாழ்க்கைப் பாதையை கடைப்பிடித்து அவரின் விழுமியங்களைக் கடைப்பிடித்து வாழவேண்டும் என்றே பாபா விரும்புகின்றார்.

"மாத்ரு தேவோ பவ
பித்ரு தேவோ பவ
ஆச்சார்ய தேவோ பவ
அதிதி தேவோ பவ"


முதலில் தாய்க்கு முதலிடம் வழங்குகின்றது புராணங்களும் இதிகாசங்களும். இளைஞர்களாகிய நாம் நமது பெற்றோரை வணங்கவேண்டும். பெற்றோரை வணங்கும்போது இது வரை நேரிடையாக வராத இறைவன் பிரத்தியட்சமாவார். பெற்றோருக்குரிய கடமைகளை சரிவரச்செய்பவனே சாயி பக்தன். பின் குருவின் உபதேசத்தின் படி நடக்கவேண்டும். பாபாவின் அருள்மொழிகளைப் பின்பற்றி நடந்தால் நிச்சயமாக சமுதாயத்தில் சிறந்த ஒழுக்கமுள்ள சாதனையான இளைஞனாக நீ மிளிர்வாய் என்பதில் எந்த வித ஐயமுமில்லை.

மனிதன் நேர்வழியில் நடக்கவேண்டும். முதலில் இளைஞனாகிய நாம் நல்ல பார்வையை வளர்த்துக்கொள்ளவேண்டும். கெட்ட எண்ணங்கள், கெட்ட உணர்வுகள், கெட்ட நடத்தைகள் இவற்றின் அடிப்படையிலான பார்வைகளை வளர்க்காதே. See No Evil, See What is Good, தீயதைக் காணாதே நல்லதைப் பார்.

எங்கு தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்குகின்றதோ, அப்போது அதர்மத்தை அழித்து தர்மத்தை காப்பதற்கு நான் யுகம்தோறும் அவதாரம் எடுப்பேன் என்று பகவான் கிருஷ்ணர் பகவத்கீதையில் கூறுகின்றார். கிருஷ்ணராக இருந்தாலும் சரி சற்குருவாக இருந்தாலும் சரி அவர்களின் அவதார நோக்கமே வழிமாறி நடக்கும் மக்களை நல்வழிப்படுத்துவதாகும்.

பாபாவின் சற்சரிதத்தில் எப்பொழுது மனிதன் நித்திய கடமைகளைச் செய்யாமலும் பிராமணர் கள் தங்கள் ஆசார அனுட்டானங்களைச் செய்யாமல் வரும் போதும் பிற ஜீவராசிகளை போசிப்பதற்கு தவறும் பொழுதும் அவர்களை நற்பாதையில் இட்டுச்செல்ல ஞானிகளும் மகான்களும் புவியில் தோன்றுகிறார்கள் எனக் கூறப்படுகின்றது.

பொதுவாக மனிதர்கள் எவ்வாறு வாழவேண்டும் என்ற இரண்டு முறைகளில் கற்பிக்கிறார். ஒன்று அவன் கற்ற கல்வியும் அனுபவங்களும் மற்றையது பொதுவாழ்வில் வாழ்ந்த உதாரண புருஷர்கள். பகவானின் வாழ்க்கையானது தெளிந்த நீர்போன்றது. களங்கமற்ற பால் போன்றது. பரிசுத்தமானது. பொழிகின்ற மழைபோன்றது. எல்லார் மீதும் களங்கமற்ற அன்பைப் பொழிகின்ற சுரங்கம். பகவான் கூறுகின்றார், எனக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையல் போடுவதைவிட பசித்தவனுக்கு உணவு கொடுப்பதையும் ஆதரவில்லாத வர்களுக்கு உதவி செய்வதையுமே நான் விரும்புகின்றேன். எல்லா இளைஞர்களும் உதவி செய்யும் மனப்பக்குவத்தை அடையவேண்டும். தீய நடத்தையிலிருந்து விலகி நடக்கவேண்டும். இவ்வாறு நடப்பதே உண்மையான சாயி பக்தனின் அறிகுறி.

தூய்மை, சகிப்புத்தன்மை, முயற்சி யாகிய மூன்று குணங்களை யுடையவன் நல்ல சாயி பக்தனாகின்றான். நீர், காற்று ஏனையவை மாசடைந்துள்ளன. அதுபோல் இளைஞர்களின் மனமும் மாசடைந்துள்ளது. இறை நாமத்தை உச்சரித்து பஜனை பாடி நல்ல செயல் களைச்செய்து மனித சேவையிலீடுபட்டு அன்பு செய்யுங்கள். இறைவன் தண்டனை தருபவன் என்று அஞ்சவேண்டாம். இறைவன் உங்கள் காவலன் என்று உணருங்கள் இதுவே பாபாவின் அருள்மொழி. இவ்வாறு இருந்தால் பாபாவின் அருள் நிச்சயம் கிட்டும் என்பதில எள்ளளவும் சந்தேகமில்லை.

மனிதன் சம்பாதிக்கவேண்டியவை சொத்து, சுகம், நண்பர்கள், புகழ் போன்றவை அன்று. அவை மனதிற்கு அமைதியைத் தரமாட்டாது. அவை இறைவனிடத்து பூரண சரணாகதிக்கு உதவமாட்டாது. மாறாக செருக்கடை வோம். சரணடைய மாட்டோம். பாபா மூன்று சொத்துக்களை சம்பாதிக்க சொல்கிறார். அவர் சம்பாதிக்க சொல்வது மூன்றே மூன்று பூச்யங்கள் தான். நாம் நமது உடமைகள் மீது நாம் கொண்டுள்ள ஆசைகளை துறத்தல் வேண்டும். இது நாம் தேடவேண்டிய முதல் பூஜ்யம். நமது நண்பர்கள், குடும்ப அங்கத் தவர்களிடமிருந்து நாம் வைத்துள்ள பற்றினைத் துறக்கவேண்டும். இது நாம் சம்பாதிக்கவேண்டிய இரண்டாவது பூஜ்யம். இதுவரை நமக்கு கிடைத்துள்ள புகழையும் துறக்கவேண்டும். இது நாம் தேடவேண்டிய மூன்றாவது பூஜ்யம். இளைஞர்களாகிய நாம் இம் மூன்று பூஜ்யங்களையே சம்பாதிக்கவேண்டும். இத்தகைய பூஜ்ய தோட்டம் இறை நாட்டத்திற்கு இறைவனை சரணடைய வழிவகுக்கும். இது சாயி தத்துவம். இறையருள் என்பது மழை, சூரிய ஒளி போன்றது. இவ் அருளை பெறவேண்டுமானால் நீங்கள் சாதனை செய்யவேண்டும். ஆன்மீகப் பாதையில் காலடி வைக்கவேண்டும். மழைநீரைப் பெற மட்பாண்டங்களை நிமித்தி வைப்பதில்லையா? சூரிய வெளிச்சம் உள்ளே வருவதற்காக கதவு, சாளரங்களை நீங்கள் திறந்துவைப்பதில்லையா? வானொலி ஒலிபரப்பும் இசைபோன்று இறையருள் எங்கும் எப்போதும் பரவியிருக்கின்றது. ஆனால் அதை கேட்டு இன்புற உரிய அலைவரிசையை நாடவேண்டுமல்லவா? அது போல இறையருள் நாட்டமுள்ளவர்கள் சிறிதளவு ஆன்மீக சாதனையில் ஈடுபட்டால் நம் வாழ்வில் மகிழ்ச்சி நிலவும், துணிவு பிறக்கும், சலனமடைய மாட்டோம். சாந்தி நிலவும். இதுவே பாபாவின் கருத்து. இளைஞர்களாகிய நாம் சுவாமியின் அருள்மொழிகளை மனம், மொழி, மெய்யிலே இருத்தி நல்வாழ்வு வாழ்வோமாக!

சுவாமி, நீர் பூவென மலர்ந்தால், உமை நாடும் தும்பி யான்!
நீர் மரமென வளர்ந்தால் உமைப் படரும் கொடி யான்!
நீர் ஆழ்கடலாய் பரவ நினை சேரும் சிற்றாறு யான்!
நீர் மலையென ஓங்கிட அங்கே துள்ளும் அருவி யான்!
நீர் வானென விரியின் கண்சிமிட்டும் தாரகை யான்!
இப்படி சாயிபகவானை ஏத்துவோம் நாம்!

ஜெய் சாயிராம்

செல்வி தாரணி.நா
பார்ண்ஸ் பிளேஸ், கொழும்பு சாயி நிலையம்
2014.

Advent of Love
SRI SATHYA SAI



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடமை, கட்டுப்பாடு, பக்தி




இன, மத, கலாசார பேதங்களும் இல்லாத நிலையில் மனித பண்பான அன்பை அடிப்படையாகவும், அடித்தளமாகவும் கொண்டு பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா இவ் உலகை ஒருமைப்படுத்தி நிலை நாட்டி இருக்கிறார். புத்த பெருமான், நபிகள் நாயகம், ஜேசு கிறிஸ்து போன்ற மகான்களின் புகழும் அவர்கள் கூறிய நெறிமுறைகளும் அவர்கள் மறைந்து அவர்களுடைய வாழ்நாளின் பிற்பகுதியிலே மக்களால் பேசப்பட்டன. ஆனால் பகவான் பாபாவின் புகழ் அப்படியானதல்ல. பகவான் வாழ்ந்துகொண்டே அவர் வாழ்நாளில் அகில உலகத்தையும் கவர்ந்து கொண்டார்.

சுவாமி எங்களுக்கு கூறிய அறிவுரைகளுக்கு அளவே இல்லை எனலாம். சுவாமியால் பிரகடனப் படுத்தப்பட்ட பல கோட்பாடுகள் உண்டு. அவை அனைத்தையும் நம் வாழ்நாளில் அன்றாட கடமையாகவும் கொள்ளவேண்டும். நாம் பிறந்தோம். வாழ்ந்தோம் இறந்தோம். என்ற இராமல் வாழ்நாளில் செய்யவேண்டிய சாதிக்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன. இவ்வாறு இருக்கையில் பகவானால் கூறப் பட்ட பல கோட்பாடுகளிலும் வேதங்களிலும் கூறப்படும் முக்கிய கருத்துக்களை எமது கடமையாக ஒவ்வொரு வரும் கொள்ள வேண்டும். தாய், தந்தை, குரு ஆகிய மூவரையும் கடவுளாக கொள்ளவேண்டும். இந்த கட்டளையை மனதில் கொண்டு செயற்படுவது ஒவ்வொருவரதும் கடமையாகும். பெற்றோருக்கு நன்றி உடையவர்களாக இருப்பதே முதல் கடமையாகும். நாம் இன்று எத்தனையோ நண்பர்களையும், உறவினர்களையுமே நட்புடையவர் களாகவும் சொந்தமானவர் களாகவும் நினைக்கிறோம். ஒவ்வொரு வரும் நல்ல பண்புகளையே உறவினராக கருத வேண்டும். இன்று நீ மிகவும் கடமைப் பட்டிருக் கின்றாய். அவர்களுக்கு நன்றியுடையவனாக இல்லாவிட்டால் நீ மனிதனே இல்லை. ஒரு மலர் மலர் வதற்கு சூரியனின் கதிர்கள் எவ்வாறு அவசியமா கின்றதோ அவ்வாறே பெற்றோரின் அன்பும் பிள்ளை களுக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

அடுத்து தான் பிறந்த இந்த தாய் நாட்டை பெற்ற தாயை போல நேசிக்க வேண்டும். தாய் இல்லாமல் யாரும் பிறப்பதில்லை. ஒருவர் இப் பூமியில் வாழக் காரணமானவளே தாய் தான். என்பதால் பிறந்த நாட்டையும், பெற்ற தாய் போல் நேசித்து மரியாதை செலுத்துவதே உண்மையான மானிடனின் கடமையாகும்.

அது மட்டுமன்றி சுவாமி கூறிய போதனைகளுள் "சர்வ மதமும் சம்மதம்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பரந்த கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும். எல்லா மதங்களும் சமமே என்ற உணர்வுடன் எல்லா மதத்தின ரையும் சகோதரர்களாக நேசிக்க வேண்டும். அத்தோடு "மனித குலம் ஒன்றே" என்ற பரந்த மனோ பாவத்துடன் பழக வேண்டும். சாதி, சனம், குலம், இனம் போன்ற பேதங்களைவிடுத்து அனைவருமே சமமே என்ற நோக்குடன் வாழவேண்டும். அத்தோடு நாட்டின் சட்டங்களை பின்பற்றி முன்னுதாரணமான குடி மகனாக இருக்க வேண்டும். கடவுளை போற்றி பாவங்களை விலக்குதல், பொறாமை, வெறுப்பு, கோபம், போன்ற தீய குணங்களை ஒதுக்கி கொள்ளல் போன்ற பல போதனைகளை பகவான் கூறியுள்ளார். இவற்றை சாயி அன்பர் களான அனைவரும் கடைப்பிடித்து எமது வாழ்நாள் கடமையாக கொண்டு வாழவேண்டும்.

இவையெல்லாம் அடுத்து நாம் அன்றாட கடமையை செய்வது எப்படி? நாம் அன்றாடம் அதிக வேலைகளைச் செய்கின்றோம். இவ்வாறு இருக்கும்போது பக்தியை செய்து கொண்டிருந்தால் மற்றைய வேலைகளை எப்படி சமாளிப்பது என்று பலரும் கேட்கலாம். சந்தேகம் தேவையில்லை. நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலையும் இறைவனது பணியாக நினைத்து செய்யுங்கள்.

"நதியை கடக்கும் வரைதான் படகு அவசியம். அதன்பின்னர் படகின் அவசியம் தேவையில்லை. பசி எடுக்கும் வரைதான் உணவு தேவை. அதன்பின் உணவின் அவசியம் கிடையாது. ஆனால் நதியை கடக்க உதவிய படகுக்கும்,






பசியை போக்கிய உணவுக்கும் நன்றி சொல்லவேண்டும். அது மற்றவர் களுக்கும் உதவிடும் என்ற நன்றி உணர்வு கொள்ள வேண்டும். நாம் எந்த காரியத்திலும் தெய்வீக உணர்வு இருக்கவேண்டும். அப்போதுதான் ஆனந்தம் நிலையாகும். வேண்டாத வார்த்தை, வீணான வம்பு இவற்றிற்கு பதிலாக தெய்வ சிந்தனையில் ஈடுபாடு காட்டவேண்டும். நமக்கு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி பாடத்தைப் படிக்கவேண்டும். மற்றைய நேரங்களில் தெய்வ சிந்தனையில் ஈடுபாடு கொள்ளலாம். புனிதமான எண்ணங்களில் நேரத்தை செலவழித்தலும் ஒவ்வொரு வரது கடமையாக கொள்ள வேண்டும்.

எல்லா மனிதர்களிலும் மனித ஆற்றல், மிருக ஆற்றல், தெய்வீக ஆற்றல் போன்ற பல ஆற்றல்கள் உடையவரை நாம் காண்கிறோம். இவற்றில் எந்த எதிர்பார்ப்பும் இன்றி தமது கடமைகளை கட்டுப்பாடாகவும் பக்தியோடும் இருப்பவர்களே தெய்வீக குணமுடைய வர்களாவர். இவ்வாறான வர்களை காண்பதும் அரிதுதான், ஆயிரத்தில் ஒருவர்தான் இவ்வாறு காணப்படுவர். பகவான் எனக்கு கூறிய நெறிமுறைகளை கடைப்பிடித்து வாழ்பவர்களும் தெய்வீக அம்சம் கொண்டவராக தெய்வத்தின் ஆசியை பெற்றவர்களாக காணப்படுவர்.

கட்டுபாபாடு என்று கூறும்போது பகவான் கூறிய நெறிகளும் ஆன்மீகம், நன்னடத்தை, சேவை, அன்பு, சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகியவற்றிற்கு ஒவ்வொரு சாயி அன்பரும் கட்டுப்பட்டு நடப்பவர்களாக திகழவேண்டும். சுவாமியால் அருளப்பட்ட ஒன்பது நன்னடத்தை விதிகளும் அனைவராலும் அறியப்பட்ட ஒன்றாகும். அவற்றுள் தினமும், தியானம், ஜபம் செய்தல், வாரமொருமுறை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குடும்ப பஜனை செய்தல், குழந்தைகளை பால விகாஸ் நிகழ்வில் பங்குகொள்ள செய்தல், சாயி சமிதியினால் ஏற்பாடு செய்யும் சமூக சேவைகளில் பங்கேற்றல், மாதமொருமுறையாவது நகரசங்கீர்த்தனம் மற்றும் பஜனையில் பங்கேற்றல், சாயி இலக்கியங்களை படித்தல், பிறரை பற்றி குறிப்பாக அவர்கள் இல்லாதபோது குறை பேசாதிருத்தல், ஆசைகளுக்கு வரம்பிட்டு அதனால் ஏற்படும் சேமிப்பை சேவைப் பணிகளுக்கு செலவிடுதல், இவ்வாறான நன்னடத்தைகளுக்கு கட்டுப்பட்டு ஒழுகவேண்டும்.

இப்பிரபஞ்சத்தில் எவ்வளவோ உயிரினங்கள் இறைவனால் படைக்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் ஆசை என்பது இன்றியமையாத ஒன்றாகும். ஆனாலும் மனிதராக பிறப்பெடுத்த எமக்கு ஆசை என்பது அடங்காத ஒன்றாகும். எதைக் கொடுத்தாலும் திருப்தி யடையாத மனம் கொண்டவர்கள் மானிடர்கள். கொடுக்க கொடுக்க போதாது என்று செய்பவர்கள் அதிகமாக காணப்படுவார்கள். அவ்வளவு கொடுமையானது. ஆசை, பின்பு பயனாக கிடைப்பது எல்லாமே துன்பமாகத்தான் காணப்படும். இதனால்தான் பகவான் "ஆசைகளுக்கு வரம்பிடவேண்டும்" என்கிறார். ஒரு மனிதனுக்கும் மேலான சக்தி இறைசக்தி ஆகும். இந்த நம்பிக்கை எல்லோருக்கும் உருவாகவேண்டும். நாம் பிறந்த பயனை அடையவும் முன்னைய வினைகளில் இருந்து மீளவும் தெய்வீக உணர்வை பெறவும் இறை பக்தி, இறைவனுடைய பக்தி, இறை வனிடம் நம்பிக்கை போன்றன இன்றியமையாததாகும்.

இறைவனை அடைய இலகுவான வழி இறைவன்மீது அதிக பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருத்தல் ஆகும். பக்தர்களின் வகைகளிலே மூன்று வகையான பக்தர்களை காண்கிறோம். தன்னுள் மறைந்திருக்கும் ஆற்றலை அறியாமல் தன்வழியிலே பக்தி செலுத்துபவர் ஒரு வகை, பிரதி பயன்களை எதிர்பாராமல் பக்தி செலுத்துபவர் சிலர், சத்திய ரூபமான இறைவனை பிரார்த்தனை செய்து தனது விருப்பங்களை நிறைவேற்றி கொள்பவர் மற்றொரு வகையினர். இறைவன் என்பவன் ஒன்றே இறைவனை தனக்கு உள்ள எந்த வகையிலும் அனுபவிக்க மனிதனுக்கு உரிமை உண்டு எனலாம்.


இறைவன் பக்தனது இதயத்தை ஆட்சி செய்பவன் நாம் எங்கிருந்து அழைத்தாலும் காப்பதற்கு ஓடி வருபவன் என்பதால் இறைவன் மீது உண்மையான பக்தி இருக்கவேண்டும். இதனையே சுவாமி "பக்தன் எனப்படுபவன் இறைவன் உள்ளத்தை உருகச் செய்து, அவனிடம் இருந்து அதற்கு பிரதியான பக்தி என்னும் அருளைப் பெறவேண்டும்" என கூறுகின்றார்.

ஒருவர் அவருடைய சகல செயற்பாடுகளிலும் மிகுந்த புகழ் பெற்ற வராகவும், நன் மதிப்பை பெற்ற வராகவும் விளங்குகிறார் என்றால், அவருடைய தூய எண்ணங்களும் அவருடைய செயற் பாடுகளில் பக்தியும் தான் அவருடைய உயர்வுக்கு காரணம் எனலாம். நேரத்தை புனிதமாக செயற்படுத்துவதன்மூலம் இறை வனை திருப்தி அடையச் செய்யலாம். ஒருவருடைய குணத்தையும் அன்பையும் நல்லெண்ணத்தையும் தான் இறைவன் விரும்புகிறார்.

பகவான் நினைத்தால் பாலை வனமும் சோலை வனமாகும். அவர் வாழ்ந்த காலத்திலே வாழக் கிடைத்த வர்கள் நாமும் பாக்கியசாலிகள். அகங் காரம், ஆணவம், ஆசை போன்றவற்றை விலக்கி அன்பே இறைவன் அன்பை இதயத்தில் நிரப்புங்கள். ஓர் குறுகிய வட்டத்தினுள் இருந்த எம்மை பகவான் தனது போதனைகளாலும், அறிவுரை களாலும் எம்மை ஒரு படி மேல் உயர்த்தி ஒவ்வொருவரையும் மதிக்கவும், பிறருக்கு சேவை செய்யும் மனதை தந்த எங்கள் சாயி அன்னைக்கு என் உளமார்ந்த கோடி நமஸ்காரங்களை சமர்ப்பித்து இக் கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

ஜெய் சாயிராம்.
ஹர்ஷன்


2014





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாடு




பறவைகளும் மிருகங்களும் எவ்வகையான கல்வியையோ பகுத்தறிவையோ பெற்றிடவில்லை. ஆனால் அப்படியும் அவை ஒழுக்கம் நிரம்பிய கட்டுப்பாடுடைய வாழ்க்கையை நடத்தி வருகின்றன. ஆனால் மனிதனோ அனைத்து அறிவுத் திறனையும் கல்வியையும் பெற்றிருந்தும் கட்டுபாடு நிரம்பிய வாழ்வினை நடத்துவதில்லை. விதிகளும் ஒழுங்கு முறைகளும் இல்லாத நிலையில் மனிதத்தன்மை இருக்க இயலாது. கட்டுப்பாடு இல்லா விடில் மனித குலம் முழுமையும் மொத்தமாக அழிந்து விடும். ஒரு சமுதாயமோ அல்லது தேசமோ அல்லது அரசியல் அமைப்போ அல்லது இனமோ கட்டுப்பாடு இன்றி இருந்திட இயலாது. கட்டுப்பாடே மனிதன் மனிதனுடன் மனிதன் சமுதாயத்துடன் ஒரு சமுதாயம் மற்றொரு சமுதாயத்துடன் ஒற்றுமையை வளர்க்கிறது. ஆகவே, கட்டுப்பாடு தான் மனித வாழ்வின் உன்னத அடையாளம்.




கட்டுப்பாடு என்பது முதலில் ஒரு தனி மனிதனில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். ஒரு தனிமனிதன் தன்னை எவ்விதம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியு மெனில் முதலில் அவன் தனது ஐம் பொறிகளையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலமே. அதாவது மனிதன் தனது ஐம்பொறிகளையும் அவனுக்கு அடிமையாக்கி வைத்திருத்தல் வேண்டும்.

இதனால்தான் கண்ணன் கீதையில்,
''இந்தப் புலன்களை நம்பாதே! அவற்றால் அலைக்கழிக்கப்படாதே'' என்று அழுத்தமாக வலியுறுத்துகிறார்.

அறியாமை காரணமாக நாமும் எமது செயல்களையும் புலன்களுக்கு அடிமையாக இருக்க நாம் அனுமதிக்கின்றோம். நாம் துக்கத்திலிருந்து பற்றிலிருந்தும் விடுபட விரும்பினால் எமது ஐம்பொறிகளை கட்டுப்படுத்தியாக வேண்டும். இப்பொறிகளின் இயல்பை நாம் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும். வாழ்க்கைப் பயணத்தில் இந்த ஐம்பொறிகள் முக்கியமானவை. அதாவது நாம் அடைய வேண்டிய இடத்துக்கு அழைத்துச் செல்லும் தேர்க்குதிரைகள் போன்றவை. ஆனால் அந்தக் குதிரைகளை எமது முழுக் கட்டுப்பாட்டில் இருந்தால் தான் நாம் உரிய இடத்துக்கு பாதுகாப்பாகச் சேரமுடியும். கட்டுப்பாடில்லாமல் அவைகளை விட்டுவிட்டால் தேரும் நாமும் இடர் பாட்டுக்கு ஆளாக நேரிடும். எனவே நாம் எமது உரிய இடத்துக்கு பாதுகாப்பாகச் சேர வேண்டுமெனில் ஐம்பொறிகளாகிய குதிரைகளை எமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டும். ஏனெனில் நாம் இவ் ஐம் பொறிகளின் மூலம் அனுபவிக்கும் இன்பங்கள் அனைத்தும் இதயத்தில் நிலவும் உண்மையான இன்பத்தின் வெறும் பிரதிபலிப்புக்களே ஆகும்.

நாம் எமது கண்களை நல்லவற்றை காண்பதற்கும், காதுகளை நல்லவற்றை கேட்பதற்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூக்கு நல்லவற்றை நுகர்வதற்கும், நாக்கு நல்லவற்றை பேசுவதற்கும், தோல் நல்லவற்றை உணர்வதற்கும் இயன்ற வரை முயற்சிக்க வேண்டும். தீயவை எம்மை நாடும்போது இயன்றவரை தவிர்க்க வேண்டும். அதாவது இறைவன் இட்ட பணிக்கே ஐம்பொறிகளையும் பயன் படுத்த வேண்டும்.

அதன்பின் ஒவ்வொரு கருவியையும் அதன்தன் பணிக்கே எங்களால் பயன்படுத்த இயலும். இப்படிப்பட்ட கட்டுப்பாடான நடத்தையே எமக்கு எமது வாழ்க்கைக் குறிக்கோளை அடைய உதவும். உலகில் எண்ணற்ற பருப்பொருள்கள் உள்ளன. ஆனால் அவற்றுள் பெரும் பாலானவற்றுடன் எமது ஐம்பொறிகள் தொடர்பு கொள்ளாதபடிப் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் அவை எம்மில் அளவுக்கு அதிகமான ஆசைகளை உருவாக்கி விடுகின்றன. நாம் உலகில் அனுபவிக்கும் இன்பம், துன்பம் அனைத்துக்கும் ஆசையே காரணமாக அமைகிறது. நாம் எண்ணற்ற துயரடையக் காரணம் இன்பங்கள், மகிழ்ச்சிகள் புலன்களிலும் உலகப் பொருள்களிலும் உள்ளவை என்றும் நிலையானவை என்றும் தவறாக நினைப்பதாலே ஆகும். ஆனால் அவைகளோ தற்காலிகமானவை, நிலையற்றவை. எனவே நாம் எங்கள் மனதைப் புலன்களிலிருந்து திருப்பி இறைவன் மீது செலுத்துவதற்குரிய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும். அதாவது லௌகீக விஷயங்களில் மனதைச் செலுத்தாமல் யார் ஒருவர் இறைவன் மீது மனதைச் செலுத்துகின்றாரோ அவரே உண்மையான யோகி ஆவார்.

இதனால்தான் கண்ணன் கீதையில்,
"தனது ஆசைகளுக்கு அடிமையாகக்கூடிய ஒருவன் உலகம் முழுவதற்கும் அடிமையாகிறான். ஆசைகளை அடிமையாக்கும் ஒருவன் உலகம் முழுவதையும் அடிமையாக்குவான்" என்று கூறியிருக்கின்றார்.


ஆகவே, நாம் ஆசைகளை பெருக்கிக் கொள்வதில் ஆர்வம் காட்டாது எங்களிடம் உள்ளதைக் கொண்டு உள்ளம் நிறைவு பெறுவதே மிகச் சிறந்த கட்டுப்பாடு ஆகும். மனம் நிறைவடைய மனித இதயத்தை துவாரங்கள் மிக்க மூங்கில் கூடைக்கு ஒப்பிடலாம். அப்படிப்பட்ட மூங்கில் கூடையைப் பயன்படுத்தி கிணற்றில் நீர் இறைத்தால் அது மேலே வரும்போது நீர் முழுமையாகச் சிந்திவிடும். தாகத்தை தணிப்பதற்கு ஒரு துளிகூட அதில் இருக்காது. அதைப் போலவே நாமும் கட்டுப்பாடின்றி ஆசை பேராசைக் கிடையே இடிபடுவோமானால் ஆசைகளை அனுபவிப் பதற்குரிய வாய்ப்பு எங்களுக்கு கிட்டும் முன்பே எங்களது திருப்தி அனைத்தும் சிந்திச் சிதறிவிடும்.

ஒரு விளக்குக்கு ஒளியேற்ற விரும்பினால் விளக்கு, எண்ணை, திரி முதலியவை எமக்கு தேவைப்படும். பற்றின்மையை விளக்காகவும் பக்தியை எண்ணையாக கருதலாம். புலன் கட்டுப்பாட்டை திரிக்கு ஒப்பிடலாம். இம் மூன்று இயல்புகளை ஒன்று சேர்ப்பதன்மூலம் அகத்திலுள்ள ஆத்ம விளக்கை ஏற்றமுடியும்.

அனைத்துமான இறையுணர்வில் நிலைத்திருக்க மனிதன் தனது உந்துதல் நிலைத்திருக்க மனிதன் தனது உந்தல்களைக் கட்டுப்படுத்தி ஆசைகளைப் பண்படுத்தவேண்டும். அப்பொழுதுதான் ஐம்புலன்களை இறைவன் நமக்கு ஏன் அளித்திருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டவனுக்கே வாழ்க்கையின் ஆனந்தம் புரிபடுகிறது. ஆகவே நாமும் எமது புலன்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் எமது அகத்தில் ஆத்ம ஜோதியை ஏற்றுவோமாக!

ஜெய் சாயிராம்

செல்வி ஹம்சாயினி சுந்தரலிங்கம்
சத்திய சாயி சேவா நிறுவனம்,
யாழ்ப்பாணம்
(2014).





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரண சரணாகதி

இறைவனைத் தூய இதயத்துடனும் விசுவாசத்துடனும் நேசிக்கும் அன்பே பக்தியாகும். உயிர்களிடம் கருணை உள்ளவனாகவும் சுகத்தையும் துக்கத்தையும் சமனாகக் கருதுபவனும் மனம், புத்தி ஆகியவற்றை என்னிடம் சமர்ப்பித்து என்மீது அசையாத நம்பிக்கைகொண்டு என்னிடம் பூரண சரணாகதி அடைந்தவனே என்னுடைய உண்மையான பக்தன் எனச் சுவாமி கூறுகின்றார்.

அனைத்தும் இறைவனின் சங்கல்பமே என அனைத்தையும் இறைவனிடம் சமர்ப்பிக்கும் பூரண சரணாகதியே பக்தியின் உயர்ந்த நிலையாகும். இதனையே கிருஷ்ண பரமாத்மாவும் தன்னைச் சரணடைபவனைச் சகல பாவங்களில் இருந்தும் தான் விடுவிப்பதாகக் கீதையில் கூறுகிறார். எம்மை முழுமையாக இறைவனிடம் ஒப்படைக்கும் போது தான், இறைவன் எமது கவலைகளைப் பொறுப்பேற்பார்.

ஒருமுறை ஒரு பிராமணர் ஒரு ஆற்றைக் கடந்து கொண்டிருந்தார். அந்த ஆற்றிலே சிலர் துணி துவைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் பிராமணனின் தோளில் இருந்த புதிய பட்டுச் சால்வையைக் கண்டனர். உடனே அவர்கள் பிராமணனைச் சூழ்ந்து கொண்டு அப் பட்டுச் சால்வை தங்களிடம் கழுவுவதற்காகக் கொடுக்கப்பட்ட தென்றும் அதனைப் பிராமணன் திருடிவிட்டதாகக் கூறியபடி அப் பிராமணனை அடித்துத் துன்புறுத்தினர். அப்போது அந்தப் பிராமணன் நாராயணா.... நாராயணா..... என்று கண்ணீர் மல்க அழைத்தான். இதைக் கேட்டதும் வைகுண்டத்தில் இருந்த நாராயணர் தனது இருக்கையை விட்டு எழுந்து பிராமணனைக் காப்பாற்றச் செல்வதற்காக முன்னோக்கி அடிவைத்தார். ஆனால் உடனே நாராயணர் மீண்டும் தனது இருக்கையில் அமர்ந்தார். இதனை அவதானித்த இலட்சுமி மிக்க ஆச்சரியத்துடன் அச் செய்கைக்கான காரணம் என்ன எனக் கேட்டார் அதற்கு நாராயணர் "நான் முதலில் அந்த ஏழைப் பிராமணனைக் காப்பாற்ற நினைத்தேன். ஆனால் இப்போது அவனோ அவர்களின் அடிக்குப் பதிலடி கொடுக்கிறான். எனவே இப்போது அவனுக்கு எனது உதவி தேவையில்லை" எனப் பதிலளித்தார்.

எனவே நாம் எல்லாம் இறைவனே என்று சரணடையும்போதுதான் இறைவன் எம்மைக் காத்து உதவுகின்றார். இதனையே சுவாமி,

"நீ மனக்கவலை கொள்வதை நிறுத்து,
அனைத்தையும் என்னிடம் சமர்ப்பி,
நீ தவறான பாதைக்குச் செல்லும்போது
உன்னை என் கரங்களில் காவிச் செல்வேன்.
ஆனால் நீ முழுமையாக உன்னை
என்னிடம் ஒப்படைக்கும்போதுதான்
உனது பிரார்த்தனை பலனளிக்கும்
நீ பூரண சரணாகதி அடையத் தயாரானதும்
அனைத்தையம் நான் பொறுப்பேற்பேன்.
இதற்காகத் தான் நான் காத்துக்கொண்டிருக்கின்றேன்"
என்று கூறுகிறார்.
எனவே,
த்வமேவ மாதாச பிதா த்வமேவ
த்வமேவ பந்துஸ்ச ஸகா த்வமேவ
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ
த்வமேவ சர்வம் மம தேவ தேவ

ஒருவன் இறக்கும்போது அவனுடைய உலகியல் உடமைகள், வீட்டுவாசல்வரை தொடரும், உறவினர்கள் இடுகாடுவரை வருவார்கள். ஆனால், சத்குருவான இறைவன்தான் கடைசிவரை தொடர்ந்து வருவார். எனவே உண்மையான நண்பர் உறவினர், செல்வம், கல்வி அனைத்தும் இறைவன்தான். எனவே நாம் பூரண சரணாகதியின் மூலம் சாயியின் கருணையைப் பெற்று சாயி மாதாவின் அன்புக்கும் பேரளுக்கும் பாத்திரமாவோம்.

ஜெய் சாயிராம்.

செல்வி சர்வாண்ஜா செல்வக்குமார்
யாழ் நிலையம், (2014)

Advent of Love
SRI SATHYA SAI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவானின் அன்புக் கடிதம் (03.02.1967)

மதுசுதன்! எனது ஆசீர்வாதம். நீங்கள் பக்தியுடன் அனுப்பிய கடிதம் கிடைத்தது. எனக்கு மிகவும் மகிழ்ச்சி.


அன்பு மகனே! நாளுக்கு நாள் பிரசாந்தி நிலையத்திற்கு வரும் அடியார்கள் கூடிக்கொண்டே போவதால் எனக்கு கடிதம் எழுத முடியவில்லை. கடிதம் எழுதாவிட்டாலும் எனது கருணை எந்நேரமும் உங்களுடன் இருந்து பாதுகாக்கும். பக்தர்களின் ஆனந்தமே எனது உணவு. அவர்களின் உற்சாகமே எனது ஊஞ்சல். பக்தர்களின் ஆனந்தமே எனது முழுமையாகையால் அவர்களைத் துன்புற விடமாட்டேன். ஆனால் மனிதனோ உலகப் பிரச்சனை களை எதிர் கொள்ள முடியாத போது கடவுளையே குற்றம் சொல்கிறான்.

பகவானோ அன்பே மயம். சாந்தியே அவரது இயல்பு. பரவசமே அவரது நிலை. இப்படியான கடவுள் ஒருபோதும் கோபப்படமாட்டார். கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் அளவில்லா ஆசையேயாகும். பாண்டித்தியம், செல்வந்தம், உடற்பலமும், மன உறுதியும், அந்தஸ்தும் , கடவுளுக்குச் சமமானவை யல்ல. இந்தத் திறன்களெல்லாம் ஐஸ்வரியங்களெல்லாம் ஆண்டவனிடமிருந்தே எழுகின்றன. ஆத்மாவே மனிதரின் தன்னம்பிக்கை மூச்சாகும். தன்னம்பிக்கையில்லாதவன் அரக்கனுக்குச் சமன். "ஈஸ்வர் சர்வ பூதானம்" கடவுள் எங்குமுள்ளவர். மூச்சுள்ளவன் சிவன், மூச்சில்லாதவன் சவம். மூச்சு எவ்வளவு பவித்திரமானது.

அன்பு மகனே! ஐந்து தீயவைகளான கெட்டதைப் பார்ப்பது, கெட்டதைக் கேட்பது, கெட்டதைச் சொல்லுவது, கெட்டதை எண்ணுவது, கெட்டதைச் செய்வது ஆகியவை இல்லாததே பரமாத்மா ஒன்றின் இயல்பாகும்.

மனிதப் பிறவி அரிது. இதன்மூலமே ஒருவன் இறைவனை அடையலாம். பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் இந்த வரப்பிரசாதம் இல்லை. ஆகவே ஒருவன் இறைவனிடமிருந்து விலகிப் போனால் அதைப்போல துர்அதிஷ்டம் வேறொன்றுமில்லை. நீர் ஆசீர்வதிக்கப் பட்டுள்ளாய். எல்லோருக்கும் சுவாமி யிடமிருந்து கடிதம் கிடைக்காது. நீ முற் பிறவியில் செய்த புண்ணியமே இதற்குக் காரணம். சகல மகிழ்ச்சியும் துன்பமும், கதகளிப்பும், அதிஷ்டமும், கலையும் முகில்களேயாவன. இன்றிருக்கும் நாளை இராது இன்றில்லாவிட்டால் நாளைக்கு இருக்கும். இறைவனின் அருளிருந்தால் இதைப்போல் செல்வமில்லை.

உனது வாழ்வைப் புனிதமாக்கு எல்லோரும் தெய்வத்தின் உருவங்களே என்பதை மறவாதிருக்க வேண்டும். ஏனையவர்களின் செயலை நல்லது தீயது என்று கணிப்பிடவேண்டாம். கோபம், பேராசை, பொறாமை, பகைமை ஆகியவற்றை அகற்றி எல்லோரிலும் நல்லதையே அவதானி. இதைவிட




மேலான சாதனையில்லை.

பெற்றோர், பெரியோர்களை மதித்து கனம்பண்ணினால் ஆண்டவனின் கிருபை கிடைக்கும். பெற்றோரை மதிக்கா விட்டால் எவ்வாறு ஏனையவர்களை மதிக்க தெரியும். உடலைத் தந்த பெற்றோரை மதித்து ஆண்டவனின் கிருபையைப் பெறு. சாயியே உனது ஆனந்தம் வீட்டிலுள்ளவர்களுக்கு எனது ஆசியை அறிவிக்கவும்.

உனது சாயி

K.மதுசுதன் செற்றி என்பவருக்கு 1967இல் தெலுங்கில் எழுதிய கடிதம்

(தெலுங்கு கடிதம் மறுபக்கத்தில்).





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Bhagavan Sri Sathya Sai Baba

PRASHANTHI NILAYAM, S.O. (A.P.)

3-2-1967

మధుసూదన! అందుకో ఆశీర్వాదములు. [illegible]

[illegible]

[ప్రస్తుతం నాగర్ కర్నూలు శ్రీ సత్యసాయి సేవాసమితి కన్వీనర్‌కు సేవలందిస్తున్న శ్రీ కె. మధుసూదన్ శెట్టి గారికి తేదీ 3.2.1967న భగవాన్ బాబావారు వ్రాసిన లేఖ ఇది. భక్తులందరికీ ఉపయుక్తంగా ఉంటుందనే ఉద్దేశ్యంతో యథాతథంగా ప్రచురిస్తున్నాము.

Visiting card






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33 வருடங்களுக்கு முன்..... சத்தியத்தின் புதிய சகாப்தம்



நான் பிரசாந்தி நிலையத்தில் பஜனை மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டு பக்தர்கள் பாடும் இனிய கீதங்களைக் கேட்டுக் கொண்டும் மேடையின் மீது அமர்ந்து கொண்டிருக்கும் பாபாவைப் பார்த்துக் கொண்டுமிருந்தேன்.


திடீரென பாபாவின் தலைக்குமேல் வெண்புரவியின் மேல் அமர்ந்திருக்கும் ஓர் அழகான தோற்றம் தோன்றியது. அச் சமயத்தில் நான் அத் தோற்றத்தின் தத்துவத்தை அறிந்திருக்கவில்லை. பிறகு நான் யாரோ ஒருவரை இந்து சாஸ்திரத்தில் வெண் புரவியின் மேல் அமர்ந்திருக்கும் தோற்றத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறதா? எனக் கேட்டேன். கல்கி அவதாரம் வெண்புரவியின் மேல் செல்லுமென்றும் மக்கள் அதைத்தான் எதிர்நோக்கியிருக்கிறார்கள் என்றும் அவர் பதிலளித்தார்.

சமீபத்தில் ஜெய்தேவி என்ற ஓர் இளம் அமெரிக்கக் கல்லூரி மாணவி கல்கி அவதாரத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்தாள். ஆராய்ச்சியின் பலன் பாபாவின் வர்ணனைகளுக்கு ஒத்ததாக இருந்தது. என்னுடைய மனம் பாபாவின் தலைக்குமேல் தோன்றிக் கொண்டிருந்த கல்கியின் தோற்றத்தைத் திரும்பவும் நினைவு கூர்ந்தது. அவ்வாராய்ச்சியினால் கண்டுபிடிக்கப் பட்ட சில உண்மைகள் மகாபாரதத்தில் கலியுகத்தின் குணாதிசயங்களைப் பற்றிக் கீழ்க் கண்டவாறு விவரிக்கப்பட்டிருக்கின்றன.

நல்லொழுக்கச் சிதைவு, எங்கும் வெறி பரவியிருப்பது, அரசியல் வஞ்சகமும் அடக்குமுறையும், பஞ்சங்கள் போர்கள், ஆஸ்திகம் ஆன்மீகச் சிதைவு, அவமதிப்பு, குற்றங்கள் பரவுதல், குடும்பச் சண்டை, சமூகச் சச்சரவு, போட்டி, தீமையின் ஆதிக்கம், வேதாந்த உண்மைகளைப் பயிற்சி செய்வதில் தயக்கம், வேலையின்மை, அகதிகள் பிரச்சினைகள் ஒழுங்கீனம்.

ஆனால் இக் கலிகாலத்தில் நமக்கு நம்பிக்கை யளிப்பதற்குப் பூமியில் ஜோதியொன்று தோன்றும் என அவ் ஆராய்ச்சி கூறுகிறது. பாண்டவர்கள் வனவாசம் செய்தபொழுது மார்க்கண்டேயர் அவர்களிடம் தனக்கும் மகா விஷ்ணுவுக்கும் இடையே கீழ்க்கண்டவாறு சம்பாஷனை நடைபெற்றதாகச் சொன்னார் என்று விஷ்ணுபுராணத்தில் இருக்கிறது.

மகா விஷ்ணு கூறலானார் :
"பூமியில் தீய சக்திகள் பெருகும் பொழுது, அத் தீய சக்திகளை நிர்மூலமாக்கி சமாதானத்தை நிலைநாட்டி நேர்மையையும் நல்லொழுக்கத்தையும் பாதுகாப் பதற்காக சன்மார்க்கத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு தனிமனிதனின் குடும்பத்தில் நான் பிறப்பேன். தக்க தருணம் வரும்பொழுது நான் நினைத்தற்கரிய மானிட உருவம் தாங்குவேன். பாப யுகமான இக் கலியுகத்தில் நான் அவதரிப்பேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியாவில் உள்ள ஒரு குடும்பத்தில் பிறப்பேன்.

இந்த அவதாரம் பேராற்றல், பேரறிவு, பெருஞ்சக்தி படைத்ததாக இருக்கும். இந்த அவதாரத்திற்கு சங்கல்ப் பித்த உடனே வேண்டிய புறப்பொருள்கள் கிடைத்துவிடும். அவர் நல்லொழுக்கத்தின் வெற்றி வீரனாகத் திகழ்வார். மாறு பட்ட கருத்துக்களையுடைய
மக்கள் கூட்டத்தைக் கொண்ட உலகில் அவர் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவார்.

இந்த அவதாரி சத்தியத்தின் புதுயுகத்தை ஆரம்பித்துவைப்பார். இவர் ஆன்மீக எண்ணங் கொண்ட மக்களால் சூழப்பட்டிருப்பார். அவர்களால் பூஜிக்கப் படுவார். உலகம் முழுவதும் சுற்றுவார். பூமியில் உள்ள மக்கள் இவ் அவதார த்தின் ஒழுக்கத்தைப் பிரதிபலிப்பர். எங்கும் அமைதியும் ஆனந்தமும் இருக்கும்.

மக்கள் மறுபடியும் மதச் சடங்குகளைச் செய்ய ஆரம்பிப்பர். வேத பாடங்களைக் கற்பிக்க கல்வி நிலையங்கள் தோன்றும். ஒவ்வொரு இடத்திலும் ஆலயங்கள் மறுபடியும் தோன்றும். சத்திய சந்தர்களால் ஆச்சிர மங்கள் நிரம்பியிருக்கும். ஆட்சி செய்வோர் நல்லாட்சி புரிவர். அந்த அவதாரம் சிறந்த கீர்த்தியுடையதாக இருக்கும்."

விஷ்ணு புராணமும் கல்கி அவதாரத்தைப் பற்றி இதே விஷயங்களைக் கூறுகிறது. மேலும் அவர் உண்மையின் புதிய சகாப்தத்தை நிர்மாணிப்பத்தில் அஸ்டமா சித்திகளைக் கொண்டிருப்பார். அவருடைய பெற்றோர்கள் விஷ்ணு பக்தர்களாக இருப்பர். ஸ்ரீ கிருஷ்ணனை வழிபடும் மக்கள் வாழும் ஒரு சிறு கிராமத்தில் வாழ்வார்.






நாம் மேற்கண்டவைகளைப் படிக்கும் பொழுது ஆன்மீக யாத்திரை செய்யும்சந்தர்ப்பமுள்ள எப்பேறுபட்ட ஒரு யுகத்தில் வாழ்கிறோம் என்று உணருகிறோம். இந்த ஆகாயமே இறைவனின் சக்தியாலும் அன்பாலும் சூழ்ந்திருக்கிறது.

அவருடைய அருள் மறுபிறவியின் பந்தத்திலிருந்து நம்மை விடுவிக்கும். அவருடைய அருள் நோக்கால் கர்ம பலன்கள் போய்விடும். சரித்திரத்தின் இந்த யுகத்தில் நாம் பிறப்பதற்குப் புண்ணியம் செய்திருக்கிறோம். நாம் பூமியல் உயிருடன் வாழும் இறைவனின் சானித்தியத்தில் வாழ்கிறோம் என்று உணருவதன் மூலம் பெருமை பெற அது நம்மைப் பொருத்தமுள்ளவராக இருக்கச் செய்கிறது.

நம் இதயங்கள் மகிழவேண்டும். நம் குரல் அவருடைய நாமத்தை உச்சரிக்க வேண்டும். நாம் இப் பூவுலகில் தக்க காலத்தில் பிறந்திருக்கிறோம். பல காலமாக நாம் செய்த புண்ணியம் இப்பொழுது பலனளித்திருக்கிறது. நம்முடைய சிறு முயற்சிகளின் மூலம் ஆர்வத்துடன் போராடிய பிறகு நம்மால் முக்தியைப் பெறமுடியும்.


நாம் செய்யவேண்டியதெல்லாம் அவருடைய அன்பை இதயத்திலும் நாமத்தை நாவிலும் வைத்திருக்க வேண்டியதே. மற்றதனைத்தையும் அவர் செய்வார். அவருடைய நினைவு நம்முடைய இதயத்தையும் மனத்தையும் எப்படி நிரப்புகிறது? எல்லாத் திசைகளி லிருந்தும் மக்கள் அவருடைய புனித நாமத்தை ஜெபிப்பதால் ஆகாயம் சாயி சாயி சாயி சாயிபாபா என எதிரொலிக்கிறது.

நன்றி: தினக்குரல் 23.11.2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமை அதிகாரியா? மாமனிதனா?



பெரிய விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனத்தில் 70 விஞ்ஞானிகள் முக்கிய மான தொன்றைத் தீவிரமாக ஆராய்ச்சி செய்தார்கள். வேலைப் பழுவினால் விரக்தி ஏற்பட்டாலும் தலைவன் மேல் கொண்ட விசுவாசத்தினால் தொடர்ந்து அவர் கீழ் வேலை செய்தார்கள். ஒரு நாள் ஒரு விஞ்ஞானி தனது பிள்ளைகளைக் கண்காட்சிக்கு கூட்டிக்கொண்டு போவ தற்காக பிற்பகல் 5.30 மணிக்குப் போவ தற்கு அனுமதி கேட்டுப் பெற்றுக் கொண்டான்.

விஞ்ஞானி அந்தநாள் தீவிரமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டதனால் நேரத்தைக் கவனிக்க வில்லை. வேலை முடிந்ததும் நேரத்தைப் பார்த்தால் இரவு 8.30 மணியாகி விட்டது. அவரின் மேற்பார்வை யாளரும் அலுவலகத்தில் இல்லை. மிகவும் கவலையுடன் வீடு சென்றார். பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு போகவில்லையென்ற குற்றம் மனதை உறுத்தியது. வீட்டையடைந்ததும் மனைவியிடம் கோப்பி கொண்டுவரச் சொல்லி விட்டு பிள்ளைகள் எங்கே என்று கேட்டார். "தெரியாதா? உங்களின் மேற் பார்வையாளர் வந்து பிள்ளைகளைக் கண்காட்சிக்கு 5.15 மணிக்குக் கூட்டிப் போயுள்ளார்" என்று மனைவி சொன்னார்.

என்ன நடந்தது என்றால் பெரிய அதிகாரி 5.00 மணிக்குப் பார்த்த போது இவர் கடுமையாக ஆராய்ச்சியில் ஈடுபட்டாரென அறிந்து தானே போய்ப் பிள்ளைகளைக் கூட்டிப்போயுள்ளார்.

இச் செய்கை விஞ்ஞானி அதிகாரி மேல் வைத்த விசுவாசத்தைப் பலப் படுத்தியது.


இந்த மேலதிகாரியின் நல்ல மனதால் அவருக்கு கீழ் வேலை செய்யும் விஞ்ஞானிகள் நேரம் பாராது. களைப்பையும் பாராது வேலை செய்வார்கள்.

நிறுவனம் தும்பா என்னும் விண் ஆராய்ச்சி நிறுவனம். மேலதிகாரி யார் தெரியுமா? அவர்தான் மாமனிதன் கலாநிதி A.P.J.அப்துல் கலாம்.

**பிழை திருத்தம்**

**ஆகஸ்ட் - டிசம்பர் 2016 இதழில் வேதத்தின் மகிமை என்ற கட்டுரையின் ஆக்குனர் வேறு ஒருவரின் பெயரில் பிரசுரமாகி விட்டது. செல்வி சாள்ஸ் தனுசிகா, வட இந்து மகளிர் கல்லூரி என திருத்தம் செய்து கொள்ளவும். பிழையை மன்னித்துக் கொள்ளவும்.**

**- ஆசிரியர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாப்பளையில் புதிய சாயிநிலைய கட்டட திறப்புவிழா

வற்றாப்பளை பள்ளவெளியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தி.தங்கவேலாயுதம் அவர்கள் க.பொ.த உயர்தரப்படிப்பை முடித்து விட்டு வீட்டில் இருந்த காலத்தில் சுகவீனமுற்று இருந்த பொழுது தகப்பனாருடன் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு சென்று விட்டு பேருந்தில் வரும் போது திரு.நவரட்ணம் அவர்களை சந்தித்து கதைத்துக் கொள்ளும் போது அவர் மூலம் முள்ளியவளை சாயி நிலையத்திற்கு வந்து சாயி பகவானை தரிசிக்குமாறு அழைக்கப்பட்டார். அதனை தெய்வவாக்காக கருதி ஒரு வியாழக் கிழமை பஜனைக்கு வருவதாக கூறி அடுத்த வியாழக்கிழமையே பஜனையில் கலந்து கொண்டார். பகவானின் மீது அவருக்கு ஈர்ப்பு ஏற்படவே தொடர்ந்து வியாழக்கிழமைகளில் தவறாது சென்று பஜனைகளில் கலந்து கொண்டு மனநிறைவடைந்தார். அன்று முதல் சுவாமியின் சனாதனசாரதி உட்பட சாயி இலக்கியங்களை வாசிக்கும் பழக்கத் தினையும் ஏற்படுத்திக் கொண்டார். தான் பெற்ற இன்பத்தை ஏனையோரும் பெறவேண்டு மென்ற எண்ணத்தில் தன் நண்பர்கள் சிலரையும் ஆன்மீகப் பாதையில் ஈடுபடுத்திக் கொண்டார். இவருடன் தேவன், மங்களகுமார், கெங்காதேவி, தங்கம்மா, சறோ போன்றவர்களுடன் லலிதா, ஜெசி, நிலவரசி போன்ற இளைஞர்களும் கால் நடையாக முள்ளியவளை ஆச்சிரமத்திற்கு கால் நடையாக சென்று பஜனைகளில் ஈடுபட்டு வந்தனர். இது கிட்டத்திட்ட 1976 முதல் 1984 வரை இடம் பெற்றது.




இதன்பின் வற்றாப்பளையில் சாயி நிலையம் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் உருவானது. இதற்கு தேவன் அவர்களை சுவாமி கருவியாக்கி வற்றாப்பளை பாடசாலைக்கு அருகிலிருந்த காணியை அவரது தகப்பனாருடன் கதைத்து சாயி நிலையம் அமைப்பதற் கென வழங்கினார். வற்றாப்பளைக்கிராமத்தில் உள்ள அனைவரும் ஆன்மீக சிந்தனை கொண்டவர்களாக வேண்டுமென்ற சிந்தனையுடன் பஜனை நடாத்துவதற்கு சில அன்பர்களின் உதவியுடன் கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டு 1985 ஆம் ஆண்டு சுவாமியின் பிறந்த தினமன்று சுவாமியின் உருவப்படம் பிரதிஸ்டை செய்யப்பட்டு மங்களவாத்தியம் முழங்க நிலைய திறப்பு விழா இடம்பெற்றது. அன்று முதல் நிலையத்தின் ஆன்மீகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது. பக்தர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டு சென்றது. பகவானின் கொள்கையை பரப்ப வேண்டு மென்ற சிந்தனையில் அன்பர் தங்கவேலாயுதம் அவர்கள் இரவு பகல் பாராது தன் வாழ்க்கையை பகவானுக்காக அர்ப்பணித்தார். வீடு வீடாகச் சென்று சுவாமியை மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அத்தோடு மாமிசம் புசிப்பதையும் கைவிட்டு ஆன்மீக வாழ்க்கை வாழ உறுதிகொண்டார்.

தன் கல்விப்புலமையால் நிலைய வளாகத் தினுள்ளே சிறு கொட்டகை அமைத்து சமூகக்கல்வி, வரலாறு, இந்துநாகரீகம், அரசியல் போன்ற இலவச வகுப்புக்களையும் நடாத்தத் தொடங்கினார். இதனால் மாணவர்களின் வருகை அதிகரித்தது. வகுப்புக்களில் சுவாமியின் ஆன்மீக கருத்துக்களையும் சொல்லத் தவற வில்லை. இளைஞர்கள் அதிகரிக்க தொடங்கினர். பஜனை ஞாயிறு, வியாழக்கிழமைகளில் நடைபெற்றது. இல்ல பஜனைகளும் இடம்பெற தொடங்கியது. சத்சங்க வகுப்புகள் இடம்பெற தொடங்கியது. போயா தினத்தில் நகரசங்கீர்த்தனம் இடம்பெற்றது.

1987 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் நொத்தாரிசு அம்மாவின் வீட்டில் இடம்பெற்ற பஜனை மூலம் யாழ்ப்பாணம் சேதுகாவலன் அவர்களை சந்திக்கும் வாய்ப்பு தங்கவேலாயுதம் அவர்களுக்கு கிடைத்தது. அவரின் வேண்டுகோளின் பிரகாரம் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சாயி நிலையத்திற்கு ஒரு வியாழக்கிழமை வருகை தந்த போது ஞானசேகரம் ஐயாவை சந்திக்க முடிந்தது. அவர் மூலம் தாவடி மகேஸ்வரன், சாயி இல்லம் என்பவற்றிற்கும் செல்லும் வாய்ப்பை தங்கவேலாயுதம் அவர்கள் பெற்றார். இதன் பின் ஆன்மீக தாகம் மிக்க வற்றாப்பளை சாயி அன்பர்கள் தவறாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிற்றுக்கிழமைகளில் தாவடி சாயி இல்லத்திற்கு பஜனை சத்சங்கம் என்பவற்றிற்கு செல்லத் தொடங்கினர். பின்னர் ஐயா அவர்கள் வற்றாப்பளை சாயி நிலையத்திற்கும் வருகை தந்து சத்சங்கம், பஜனைகளிலும் கலந்து கொண்டார். வற்றாப்பளை சாயி நிலையத்தில் யாகம், திருநீற்று பதிக சாதனை, யோகர்சுவாமிகளின் நற்சிந்தனை பாடல்கள் என்பன ஞானசேகரம் ஐயா அவர்களால் நடாத்தப்பெற்றது.

ஒருமுறை சாயி நிலையத்தில் சிவராத்திரி நிகழ்வு நிறைவு பெற்ற பின் கும்பத்தில் சுவாமியின் தரிசனம் காணமுடிந்தது. அதே வேளை சாயி பக்தர்களின் வீடுகளிலும் அற்புதங்கள் நடைபெற்றது. இக்காலத்தில் யாழ்ப்பாணத்திலும் சுவாமியின் அற்புதங்கள் இடம் பெற்றன.

தங்கவேலாயுதம் அவர்கள் 1992 ஆம் ஆண்டு மாமூலையில் திருமணம் செய்து கொண்டதால் அவர் அங்கு தனது வீட்டில் திங்கட்கிழமையில் பஜனையை நடாத்தத் தொடங்கினார். அக்காலங்களில் தாமோதரம் பிள்ளை வாத்தியார் ஜெசிகுமார் ஆகியோரின் வழிகாட்டலில் வற்றாப்பளை நிலைய செயற்பாடுகள் இடம்பெற்றது. 1996 இல் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக வற்றாப்பளை நிலைய ஆன்மீக செயற்பாடுகள் குறைவடைய வற்றாப்பளை நிலையம் பராமரிப்பின்றி அழிவடைய 1999 ஆண்டு முதல் சாயி அன்பர் திருமதி.சி.மாலினி அவர்களின் வீட்டில் வியாழக்கிழமை தோறும் பஜனைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

2010 இறுதி யுத்தத்தில் பகவான் மீது அன்பும் நம்பிக்கையும் கொண்ட சாயி அன்பர்களின் உயிர்கள், உடமைகள் காப்பாற்றப்பட்டு எந்தவித சேதமுமின்றி சொந்த ஊர் திரும்பினார்கள். பின்னர் 2010 இல் மீளவும் சாயி அன்பர் திருமதி.சி.மாலினி அவர்களின் வீட்டில் வியாழக்கிழமையில் பஜனை இடம்பெற்றது. இந் நிலையில் நிரந்தர கட்டிடம் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் தங்கமணி ஆசிரியை மனதில் தோன்ற அவர் தனது காணியை அந்த கைங்கரியத்திற்காக மனமுவந் தார். 2011 ஆம் ஆண்டு தங்கமணி ஆசிரியர் அவர்களால் தற்போதய கட்டிடம் அமைந்துள்ள காணி அன்பளிப்புச் செய்யப்பட்டது. 2015 இல் 11 பேர் கொண்ட புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. குறித்த நிர்வாகத்தினரால் தண்ணீருற்று சாயி நிலைய அன்பர் திரு.இரகுநாதபிள்ளை அவர்களின் உதவியால் 24.1.2016 திகதியன்று தைப்பூச திரு நாளில் அத்திவாரம் இடப்பட்டு அத்திவார வேலை முடிவுற்ற போதிலும் சில மாதங்களாக தொடரப்படாமல் இருந்த கட்டிட வேலைகளுக்கு சாயி அன்பர் திரு.பிரபாகரன் அவர்களும் கொழும் பிலுள்ள இன்னுமொரு அன்பரின் உதவியுடனும் குறித்த காணியில் கட்டிடம் அமைக்கும் பணி மீதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு சில வெளிநாட்டு அன்பர்களின் உதவியுடன் அழகிய பிரார்த்தனை மண்டபம், அலுவலகம், நாராயண சேவை மண்டபம், சமயலறை என்பன அமைக்கப்பட்டு பகவானின் அன்னை ஈஸ்வரம்மா தினமான 6.5.2017 திகதியன்று திறந்து வைக்கப் பட்டு நிலைய செயற்பாடுகள் தொடரப்பட்டு வருகின்றது.

(நன்றி:6.5.2017 நிலைய திறப்புவிழா மலர்)

## நிறுவனச் செய்திகள்

### வடபிராந்தியம்

**மத்திய சபை நிர்வாகிகள் வருகை**

நவம்பர் 3, 4, 5 ஆம் திகதிகளில் வடபிராந்திய நிலையங்களின் தலை வர்கள் மற்றும் நிர்வாககிகளுடன் மத்திய சபை நிர்வாகிகள் சந்திப்பு ஒன்றை மேற் கொண்டார்கள்.

**சீர்திருத்தப்பாடசாலையில் ம.மே.கல்வி**

அச்சுவேலியில் அமைந்துள்ள சிறுவர் சீர்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருத்தப்பாடசாலையில் ஒவ்வொரு சனிக் கிழமையும் மனித மேம்பாட்டு கல்வி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றது. அத்தோடு சிறுவர்கள் விருப்புடன் அளவளாவி மனம் திறந்து பேசுகிறார்கள்.

**சேவாதள பயிற்சி முகாம்**

வடபிராந்திய சாயி நிலையங் களின் சேவாதள்களுக்கு அக்டோபர் 26, 27 திகதிகளில் சேவாதள் பயிற்சி முகாம் நடாத்தப்பட்டது.

**இன்பச் சோலையில் கிராம சேவை**

சங்கானை, மானிப்பாய், சித்தங்கேணி, வட்டுக்கோட்டை நிலையங் கள் கூட்டாக இணைந்து சங்கானை பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள இன்பச் சோலை எனும் கிராமத்தில் ஆன்மீகம், கல்வி, சேவை சார் செயற் பாடுகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

**வீடமைப்புச் சேவை**

பூம்புகார், கட்டுடை, செல்வபுரம், கொக்குவில், மந்திகை ஆகிய 5 இடங்களில் சிறிய வீடுகள் அமைத்து வழங்கப்பட்டுள்ளன.

**புற்றுநோயாளர் விடுதிச் சேவை**

யாழ்ப்பாணம், யாழ் மத்தி சாயி நிலையங்களால் தெல்லிப்பளை புற்று நோயாளர் விடுதியில் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் கஞ்சி, சூப், பாயாசம் வழங்கும் சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன

**மாதாந்த மகளிர் சாதனை**

வடபிராந்திய மகளிர்களால் மாதாந்தம் ஒவ்வொரு நிலையங்களில் மாதாந்த சாதனை, குடும்ப வளர்ச்சியில் மகளிரின் பங்கு என்பன தொடர்பில் கலந்துரையாடப்பட்டும் வருகிறது.

**கடற்கரையோர துப்பரவு பணி**

யாழ் பண்ணைக் கடல்கரையோரம் பாலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் போத்தல்களால்




சூழப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டமையால் அதனை துப்பரவு செய்யும் சேவை கடந்த 22.10.2017 காலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. 31 பேர் கலந்து கொண்டனர்.

**மாவிட்டபுர கந்தசாமி கோவிலில் ஆன்மீக சாதனை**

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் 22.10.2017 இல் மேற்கொண்ட ஆன்மீக சாதனை நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

**செல்வ புரம் - கிராம சேவை திட்டம்**

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள செல்வபுரம் கிராமம் 300 குடும்பங்களை கொண்டுள்ளது. இக்கிராமத்தில்

1. ஆன்மீகம்
2. கல்விச் சேவை
3. சேவை

ஆகிய முத்துறைகளிலும் கிராம மக்களோடு இணைந்து சில செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு அங்குள்ள கிராம மட்ட அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு ஜுன் மாதம் 16 ஆம் திகதி மனித மேம்பாட்டு கல்வி வகுப்புக்களை ஆரம்பிக்கப்பட்டன. இவ்வகுப்புக்களில் 70 மாணவர்கள் விருப்போடு கலந்து கொள்கிறார்கள். வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் இவ்வகுப்புகளில் பாலவிகாஸ் சிரேஷ்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டு ஒழுக்கமான நாளாந்த செயற்பாடுகளில் நல் மாற்றம் ஏற்பட உதவுகிறார்கள்.

மாதம் தோறும் நடைபெறுகின்ற குடும்பத் தலைவர்களின் கூட்டத்தில் 150 பேர் வரை கலந்து கொள்கிறார்கள். இதில் சாயிநிறுவனத்தை சேர்ந்தவர்கள். ஆன்மீகம், கல்வி, சுகாதாரம், சேமிப்பு ஆகியவை தொடர்பாக ஆலோசனை வழங்குகின்றனர்.

இங்கு வாழுகின்ற மக்களின் அவசிய தேவைகள் சில நிறைவு செய்யப்படுகின்றன.

1. ஐந்து குடும்பங்களுக்கு குடிநீர் பெற கைபம்பிகள் பொருத்தப்பட்டுள்ளது.
2. குடும்ப வருமானத்தைப் பெற ஓர் குடும்ப தலைவிக்கு துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டது.
3. 7 குடும்பங்கள் பயன்படுத்துவதற்கு பொதுக்கிணறு ஒன்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது.
4. மிக வசதியற்ற வசிக்க வீடற்ற குடும்பத்திற்கு 4.11.2017 அன்று ஓர் சிறிய வீடு அமைத்து வழங்கப்பட்டுள்ளது.
5. 70 குடும்பங்களிற்கு தென்னை, மா, பலா, மாதுளை என்பன வழங்கப்பட்டு 4.11.2017 திகதியன்று நடுகை செய்யப்பட்டுள்ளது.
6. மாதமொருமுறை ஆலயத்தில் பிள்ளைகள் குடும்பத் தவரோடு பிரார்த்தனைகளில் ஈடுபடுத்தப் படுகின்றனர்.
7. நவம்பர் 24 ஆம் திகதி மாணவர்கள், பெற்றோர் களோடு ஓர் ஆன்மீக ஊர்வலம் நடாத்தி மனித மேம்பாடுகளில் ஓர் விழிப்புணர்வினை ஏற்படுத்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அவதார பிரகடன தினத்தையொட்டி யாழ். பண்ணை கடற்கரை துப்பரவு செய்யும் சேவை



கட்டைக்காடு - கண்டாவளை கிராமத்தில் கிராம சேவை



மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் ஆன்மீக சாதனை




வற்றாப்பளை சாயி நிலைய புதிய மண்டபத் திறப்பு விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வற்றாப்பளை சாயி நிலையம் - வட மத்திய பிராந்தியம்



முகப்புப் பகுதி



பிரார்த்தனை மண்டபம்





MATHI COLOURS Nallur, 0212229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org